# காவேரி

OFFICE OF THE REGISTRAR
3 - JUN 1958
MADRAS
934
2-58




ஜூன்-'58

50 காசு

# பத்மினியின் தேக காந்தியோடு

## நீங்களும் மிளிரலாம்!

பாரத் ப்ரொடக்ஷன்ஸ்
'விக்ரமாதித்தன்' படத்
தில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
பத்மினி.



பரத நாட்டினரின் உள்ளத்தில் பத்மினி தலைசிறந்த நாட்டிய நடிகையாக இடம் பெற்றுள்ளது அவரது கலைத்திறனால் மட்டுமல்ல, அழகினால் கூடத்தான். பத்மினி போன்ற சினிமா அழகிகளுக்கு எப்படியோ அதேபோல உங்களுக்கும் மாசற்ற மேனியே மகத்தான செல்வம். அதனால்தான், அவர்கள் செய்வது போலவே நீங்களும் லக்ஸ் டாய்லெட் சோப் உபயோகித்து உங்கள் சருமத்தைப் பராமரிக்க வேண்டும். பேரழகி பத்மினி தந்துதவும் குறிப்பு இதோ: " மேனியழகின் பராமரிப்பிற்காக நான் உபயோகிக்கும் தூய வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மென்மையே மென்மை! " லக்ஸ் சோப்பின் மிருதுவான நுரையிலும், கொள்ளை கொள்ளும் நறுமணத்திலும் இன்பம் காண்கிறார் பத்மினி. நீங்களும் அவ்விதமே இன்புறலாம் — இன்றே லக்ஸ் சோப் உபயோகித்துப் பாருங்கள்!

தூய, வெண்மையான

## லக்ஸ் டாய்லெட் சோப்




சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 565-X 52 TM

# உண்மையான

# முதல்

# பரீட்சை


இன்று வரும் என்று நீங்கள் எப்பொழுதாகிலும் நம்பாத நாள் இதோ வந்துவிட்டது. இன்றே உங்கள் தனயனின் மெட்ரிகுலேஷன் பரீட்சை நாள்.

அவன் பெரியவனாக வளருவான். நீங்களும் உங்கள் உத்தியோகத்திலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ளுவீர்கள். ஓய்விற்குபபின் உங்கள் வருமானம் குறைந்துவிடும். அதை ஈடுசெய்ய ஏதாவது சேமித்து வைத்திருக்கிறீர்களா? இல்லை என்றால் செய்து கொள்ளுங்கள்.

அநேகர் ஒரு ''என்டௌமென்ட் பாலிஸி'' மூலம் அந்திய காலத்திற்கு பாதுகாப்புத் தேடிக்கொண்டுள்ளார்கள். இது ஒரு நீண்டகாலத்திட்டம். உதாரணமாக உங்கள் 30 வது வயதில் ரூ. 5000 க்கு ''இன்ஷ்யூர்'' செய்துக்கொண்டால் 25 வருட பாலிஸிமீது ஒரு மாதத் தவணைக்கு ரூ. 15 தான் கட்டவேண்டும்.

இப்படியாக நீங்கள் ஓய்வெடுத்துக்கொள்ளும் தருணத்தில், அதாவது 55 வது வயதில் ரூ. 5000க்குக் குறையாமல் உங்களுடைய உதவிக்குக் கிடைக்கும். அதற்கு முன்பு நீங்கள் இறைந்துவிட நேர்ந்தால் முழுத்தொகையும் உங்கள் வாரிசுக்கு உடன் கொடுக்கப்படும்.

ஆகையால் கூடியமட்டும் பணத்தை சேமித்து வையுங்கள் ரூ. 5 ஆனாலும் சரி 50 ஆனாலும் சரி ஒரு ''என்டௌமென்ட் பாலிஸி'' உங்களுடைய தள்ளாத வயதில் பெரிய உதவி அளிக்கும்.



**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

ஸென்ட்ரல் ஆபீஸ், ''ஜீவன்கேந்த்ரா'' ஜம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1,

## புதிதாக அமுலுக்கு வரும்

# மெட்ரிக் முறை



இந்தியாவில் புழக்கத்திலிருக்கும் அளவுகளிலும் எடைகளிலும் பொதுவான முறை பின்பற்றப்படவில்லை. சற்றேறக் குறைய 143 முறைகள் நடைமுறையிலிருக்கின்றன. பல வேறு முறைகள் இருப்பது எத்துக்களுக்கும் ஏமாற்றுகளுக்கும் இடமளிக்கிறது. ஏற்கனவே சதாம்ச நாணய முறை அமுலுக்கு வந்திருக்கிறது. ஆகையால் எடைகளையும் அளவுகளையும் மெட்ரிக் முறைப்படி ஒரேவகையாகக் கணக்கிடும் வழக்கம் ஏற்பட்டால் எல்லா வகைக்கும் அது சௌகரியமாக இருக்கும். 1956-ஆம் ஆண்டின் எடைகள் அளவுகள் தர நிர்ணயச்சட்டம், மெட்ரிக் முறையை அடிப்படையாகக் கொண்டே அடிப்படை அளவுகளை நிர்ணயித்திருக்கிறது. எடை-அளவு முறைகளில் ஏற்படும் இச் சீர்த்திருத்தம் பொது மக்களுக்குத் தொல்லை ஏற்படாத வகையில் மெதுவாகவே அமுல் நடத்தப்படும்.

நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியிலோ, வியாபாரத்திலோ மெட்ரிக் முறை அமுலுக்கு வந்த பிறகும் கூட, இப்போதுள்ள எடைகளும் அளவுகளும் முதல் மூன்று ஆண்டுகள் வரை கூடவே புழக்கத்திலிருக்கும்.

**மெட்ரிக் முறை**
**1958**
**அக்டோபரிலிருந்து**
**அமுலுக்கு வருகிறது.**

## புதிய மெட்ரிக் எடைகள்



எடைக் கணக்கீட்டில்
அடிப்படை அளவு
கிலோகிராம் = 1 சேர் 6 தோலா
(அல்லது 86 தோலா)
அல்லது 2 பவுண்டு 3 அவுன்ஸ்

**மற்ற அளவுகள்**

10 மில்லி கிராம் = 1 சென்டி கிராம்
10 சென்டி கிராம் = 1 டெசி கிராம்
10 டெசி கிராம் = 1 கிராம்
10 கிராம் = 1 டெகா கிராம்
10 டெகா கிராம் = 1 ஹெக்டா கிராம்
10 ஹெக்டா கிராம் = 1 கிலோ கிராம்

**பெருக்கங்கள்**

100 கிலோ கிராம் = 1 குயின்தல்
10 குயின்தல் அல்லது 1000 கிலோ கிராம் = 1 மெட்ரிக் டன்

1

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

# காவேரி

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| விளம்பி-வூ மலர் 17 | ஜூன்–1958 | வைகாசி இதழ் 10 |

| | | |
|---|---|---|
| காவேரிப் பிரவாகம் ... | ... | 4 |
| சுற்றுப் பிரயாணத் தபால் ... | கே. ஸ்ரீநிவாஸன் ... | 6 |
| கங்கைக் கரையில் ... | கல்பனா ... | 10 |
| கெடுத்தவன் கொடுத்தான் ... | ரா. வேங்கடசாமி ... | 17 |
| விஞ்ஞானத் துணுக்குகள் ... | நா. கி. நாகராசன் ... | 22 |
| பெண் மனம் ... | கே. எஸ். ராமானுஜம் ... | 25 |
| கதைக்காக அல்ல ... | பில்லூர் சுந்தரராமன் ... | 33 |
| பட்டணம் சுப்பிரமணிய அய்யர் ... | கீதப்பிரியா ... | 40 |
| மயிலாடும் பாறை ... | நா. பார்த்தசாரதி ... | 43 |
| மன அழுக்கு (அட்டைப்படக் கதை)... | மாயாவி ... | 54 |
| சுகலே ... | அ. ராம்கோபால் ... | 65 |
| தொழில் துணுக்குகள் ... | விசால்தேவ் ... | 78 |
| அஸ்தமனம் ... | அசேன்ராஜ் ... | 82 |
| சுடச்சுட! ... | திருமால் ... | 93 |
| சினிமா ... | நமது விசேஷ நிருபர் ... | 95 |

**குறிப்பு:** காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# காவேரி

| விளம்பி-ஆ | " சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" | வைகாசி |
|---|---|---|
| மலர் 17 | | இதழ் 10 |


## காவேரிப் பிரவாகம்

1941ம் ஆண்டிலே காவேரி தொண்டாற்றத் தோன்றியது. மக்களிடம் அதற்கு அபார வரவேற்பு கிட்டியது. மாதந்தோறும் அது வளர்ந்து வருகிறது. எனினும், அது நாடெங்கும் பாய்ந்திடினும், ஒவ்வொரு தமிழ் மக்கள் இல்லங்களிலும் பூஷணமாக அமைதல் வேண்டும் என்பது நமது அவா. அதற்கு ஏற்ப காவேரியை மாற்றிக் கொண்டு வருகிறோம்.

இம்முயற்சியில் கொஞ்சம் வெற்றி கிட்டியுள்ளது. காவேரி பாய்ந்து அறிவு வளம் பெருகாத வாசகசாலை, நூல் நிலையம், நடுத்தர குடும்பம் தமிழ் நாட்டிலும், தமிழ் மணம் வீசும் வடநாட்டு நகரங்களிலும், மலேயா, ஸிலோன் போன்ற கீழைநாடுகளிலும் இல்லை எனலாம். சாதாரண மக்களும் அதன் தெள்ளிய நீரை அள்ளிப் பருகவேண்டுமென்று பெரு முயற்சி எடுத்து வருகிறோம்.

வருகிற ஜூலை இதழிலிருந்து ஸ்ரீ ஏ. சுப்பையா எழுதும் சுவைமிகுந்த தொடர் கதை வெளிவருகிறது. அதனை தமிழ் மக்கள் மிகவும் ரசிப்பார்கள் என்பது திண்ணம்.

அடுத்த இதழிலிருந்து மற்றும் பல புதிய சுவைமிக்க அம்சங்கள் இணைக்கப் பெறும். அதனை படித்து ரசிப்பதோடு, காவேரி பிரவாகமெடுத்து எங்கும் தழைத்தோங்க ஆவன ஆலோசனைகளைக் கூறும் வாசகர்களுக்கு ஒரு பரிசு அளிக்கத் தீர்மானித்துள்ளோம். முக்கிய கடிதங்கள் காவேரி இதழ்களில் பிரசுரிக்கப்பெறும்.

ஆசிரியர்,

## புதிய தொடர் நாவல்

# ஏ. சுப்பையா

எழுதும்

# சிரித்த செந்தாமரை

**கருத்துக் குவியல்:**

துள்ளித் தெறிக்கும் பருவத்துப் பாவை. கள்ளங் கபடமில்லாத கன்னி, தெள்ளத் தெளிந்த தெப்பத்தில் உதித்த செந்தாமரை அவள். காதகன் ஒருவன் கண்ணில் பட்டாள், அவன் வாயில் பாலும் - தேனும் ஆனுள்.

கருத்தழிந்தாள்,
கயவனைக் கணவன் எனக் கருதினுள்,
அதனுல் கற்பழிந்தாள்,
கன்னித் தனத்தையும் இழந்துவிட்டாள்.

உள்ளத்தில் எழும்பிய புயலும், ஊரில் கிளம்பிய பூகம்பமும் அவளைச் சமுதாய சாகரத்தில் தூக்கியெறிந்தன. சுருவும், முதலையும், திமிங்கிலமும் அவளை உயிரோடு விழுங்குவதற்கு விரைந்தோடின,

சாவுக்கு அஞ்சாத அவள் சஞ்சலப்படவில்லை. உடலில் உயிர் இருக்கும் வரையில் போராடத் துணிந்தாள், போராடினுள், வெற்றியும் பெற்றுவிட்டாள்.

அந்த வெற்றியின் மகிழ்ச்சியில் செவ்விதழ் விரித்து ஒருமுறை சிரித்தது அச் செந்தாமரை!

**ஜூலை இதழில் ஆரம்பமாகிறது!**

# சுற்றுப் பிரயாணத் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

சென்ற மாதம் கடிதத்தை எழுதிமுடித்த பொழுது பிரதமர் நேரு பதவியிலிருந்து விலகுவாரா என்ற பிரச்னை பேச்சளவில் இருந்தது. பிரதமர் நேருவுக்கு மிகவும் சலிப்பு ஏற்பட்டுவிட்டது, அவருக்கு ஓய்வு அவசியம் என்பது அவர் வாயிலாக வரவில்லை, அவருடைய எதிரி குழுவில் கிளப்பி உயர்த்தப்பட்ட காற்ருடி. சென்ற மகா யுத்தத்தின்போதுதான் பிரசாரம் என்பது எல்லாவற்றிலும் பெரிய ஆயுதம் ஒரு பொய்யை ஆயிரம் தடவை திரும்பத் திரும்பச் சொன்னுல் அது நிஜமாகிவிடும் என்பதை ஹிட்லரின் வலது கையான டாக்டர் கோபல்ஸ் நிரூபித்தார். அந்த ஆயுதத்தை சுண்டைக்காயிலிருந்து சூரன்வரை இன்றுயாவரும் உபயோகிக்கப் பார்க்கிருர்கள். மத்திய சர்க்காரில் உள்ள வலதுசாரி கையாள்கள் கற்றுக்குட்டிகளைப் போல் பிரதமர் விஷயத்தில் நடந்துகொண்டதால்தான் அவர்கள் ஏவிய சக்ராயுதம் அவர்களையே துரத்த ஆரம்பித்துவிட்டது.

"எப்படி நீங்கள் பின்னுல் நடந்ததை அவ்வளவு சரியாக எதிர்பார்த்தீர்கள்?" என்று சிலர் என்னைக் கேட்டிருக்கிருர்கள். இதற்குப் பதில் சொல்வது சுலபம். காவேரியைப் படித்துவரும் நேயர்களுக்கு இம்மாதிரி ஹேஷ்யங்கள் புதிதல்ல. கொஞ்சம் அரசியல் ஞானமும், அரசியல்வாதிகளைப் பற்றிய அறிவும் இருந்தால் இவர் இதைச் செய்வார் என்பதைச் சொல்லுவது கஷ்டம் அல்ல. ருஷ்யாவில் அந்நாளில் உள்ள வெளிநாட்டு நிருபர்களுக்கு ஆப்த அதிகாரிகள் என்று யாரும் இருந்ததில்லை. அப்படியிருந்தும் அவர்கள் பல அரசியல் ஹேஷ்யங்கள் சொன்னுர்கள், அவைகளில் பல உண்மையாயின. அதேபோல் மத்திய சர்க்காரில் உள்ளவர்களைப்பற்றி சொல்வது கஷ்டம் அல்ல. பண்டித பந்த் வலதுசாரி ஆள் என்பது வெட்டவெளிச்சமான உண்மை. அவருடைய பிள்ளை முதல் மாப்பிள்ளைகள் வரை யாவரும் உத்தரப் பிரதேசத்து முதலாளிகளிடம் தொடர்பு உள்ளவர்கள். சிலர் சம்பளம் கூட வாங்குபவர்கள். அவருக்குத் தான் பிரதமர் ஆகவேண்டும் என்பது பல நாளைய ஆசை. இந்த ஆசைக்குத் தூபம் போடுபவர்கள் அவருடைய முதலாளி நண்பர்கள். ஆசையிருந்தது தாசில் செய்ய; ஆனுல்......

அதேபோல் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் மிகவும் கொழுத்த முதலாளி அனுதாபி. பம்பாயில் அவர் அடிக்கடி சென்று வந்தது முதலாளிகள் மாளிகைக்கு. அதை அவர் இன்றும் டில்லியில் செய்கிருர். அவருடைய குணத்துக்கு குற்றம் அவருடைய எதிரிகள்கூட கற்பித்ததில்லை. ஆனுல் அவர் முதலாளிகளின் நண்பர். அவருக்கு இரண்டாம் ஐந்து வருஷம் சோஷலிஸ சமுதாயத்தை நிறுவுவதில் அக்கரை இல்லை என்பதை அவருடைய ஆப்தர்கள்கூட ஒப்புக்கொள்ளுவார்கள்.

மத்திய மந்திரி சபையில் இன்று பண்டித நேரு இருப்பதைப்போல் என்றும் அவர் தனியாக இருந்ததில்லை. முன்னுளில் ரபி சாகிப் என்று பிரியமாக அழைக்கப்பட்டு வந்த ரபி அகமத்கித்வாய் கட்சியில் என்ன நடக்கிறது? யார் யாரைக் கவிழ்க்கப் பார்க்கிருர்கள் என்பதைக் கண்காணித்து வந்தார். அவருக்குப் பிறகு மௌலானு ஆசாத் கூட ஓரளவுக்கு பிரதமரின் வியவகாரங்களில் ஒரு கண் வைத்து வந்தார். இவர் இறந்தபிறகு பிரதமர் சிறகிழந்த பக்ஷிபோல் தனியராகிவிட்டார். இந்த சந்தர்ப்பத்தில்தான் பந்த் — மொரார்ஜி கிடுக்கித் தாக்குதல் ஆரம்பமாயிற்று.

நான் எதிர்பார்த்ததைப்போல் பிரதமர் நேரு "யாரோ சொல்கிருர்கள் என்பதற்காக நான் என்னுடைய கடமைகளை விட்டு விடவாவது?" என்ற மனப்பான்மையை மேற்கொண்டது நம்மைப் பிடித்த நல்ல அதிர்ஷ்டமே. இந்த நெருக்கடியில் உண்டான சுப சூசகம் ஒன்று மிகவும் சிலாகிக்க வேண்டிய விஷயம். தென்னிந்திய பார்லிமெண்டு அங்கத்தினர்கள்தான் முதன்

முதலில் நேரு விலகுவது என்பது நினைக்கக்கூட முடியாத விஷயம் என்று பிரேரணைகளை அ. இ. காங்கிரஸ் கமிட்டியில் பிரஸ்தாபித்தவர்கள். பிறகு பம்பாய், ஒரிஸ்ஸா முதலிய மாகாணத்து மெம்பர்களும் இதில் சேர்ந்துகொண்டார்களாம். ஸ்தாபன விஷயங்களில் சூரரான ஸ்ரீ எஸ். கே. படீல் பந்த்—மொரார்ஜி அச்சை எதிர்த்ததுதான் நேருவின் எதிரிகளை கலகலக்கச் செய்துவிட்டது. இந்த சம்பவத்தினுல் நிகழ்ந்த நன்மை ஒன்று மிகப் பெரியது. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் கண் வைத்துக்கொண்டு வலதுசாரியாட்களை கண்காணிக்க ஒருவர் இன்று பிரதமருக்கு ஆப்தராகிவிட்டார்.

"நேரு சிலகாலம் விலகினுல் என்ன ஆபத்து வந்துவிடுமாம்?" என்று சிலர் என்னைக் கேட்டிருக்கிருர்கள். இது நியாயமான கேள்விதான். நேருவிற்குப் பின் யார் என்ற பிரச்னை இருந்துவரும்பொழுது நேரு சில காலம் வெளியே இருந்தால் எப்படி மற்றவர்கள் நிர்வாகத்தை சமாளிக்கிருர்கள் என்பதைப் பார்த்திருக்கலாம். ஆனுல் இந்தப் பரீட்சை வேட்டையாடச் சென்றவர் துப்பாக்கியைக் காட்டில் உறையில் போட்டு மூடிவைத்து என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு ஒப்பாகும். சென்ற இரு வருஷங்களில் பண்டித பந்த் உத்தரப்பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கில் தனக்கு வேண்டிய அதிகாரிகளைக் தருவித்து மத்திய சர்க்காரில் புகுத்திவருகிருர். சமீபத்தில் நடந்த அவசர ஐ.ஏ.எஸ். பரீட்சையில் யோக்கியதாம்சம் காரணமாக சென்னைவாசிகளை ஏராளமாக பொறுக்கிவிடக்கூடாது, அவர்கள் தொகை எந்தக் காரணத்தைக்கொண்டும் 25 சதத்துக்கு மேற்படக்கூடாது என்று வற்புறுத்தி காரியத்தை சாதித்துக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. "தெள்ளிய தேனில் ஓர் சிறிது நஞ்சையும் சேர்த்தபின் தேன் ஆகுமோ?" ஆகவே ஆள் கொல்லிகள் என்று தெரிந்தபிறகும் எச்சரிக்கையாக இல்லாமலிருந்தால் அது யார் குற்றமாகும்? இதனுல்தான் பண்டிதர் சிறிது காலம்கூட பதவியிலிருந்து விலகக்கூடாது என்று தெரிந்தவர்கள் வற்புறுத்தியதன் காரணம். உதவிப் பிரதமர் என்ற ஹோதாவில் பண்டிதபந்த் ஆனுலும் சரி, அவர் சகா மொரார்ஜி ஆனுலும் சரி, தேசத்தைப் பாதிக்கக்கூடிய எவ்வித நடவடிக்கைகளையும் சிறிது காலத்திற்குள் எடுத்துவிட முடியாது. ஆனுல் பிரதமர் என்று ஒரு மாதத்துக்குப் பதவி வகித்தால்கூட பல குந்தகமான காரியங்களை இவர்கள் செய்யக்கூடும்.

* * *

சமீபப் புயலினுல் ஏதாவது நன்மை ஏற்படுமா என்ற கேள்வி எழுவது சகஜம். பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சியில் தான் நிகரில்லாதவர் என்பதை நிரூபித்த பிரதமர் அதையடுத்து வலதுசாரியாட்களை கலகலக்க வைப்பார் என்று எதிர்பார்க்கிறேன். ஏற்கனவே அவர் வங்காளப் பிரதமர் டாக்டர் ராயை தட்டி எழுப்பியிருக்கிருர். இனி பிரதி சனிக்கிழமைகளில் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அவர்களை சந்திப்பார்கள். வெளியே சங்கோஜ சுபாவம் உள்ளவர்கள் தனிமையில் காரியத்தை சாதிக்க வல்லவர்களாக இருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தைப் பிரதமர் நன்ருகப் பயன்படுத்திக்கொள்ளுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் மத்திய சர்க்காரில் மண்டியிருக்கும் பன்னுடைகளைப் பிய்த்து எறிந்தால் மரம் பிழைக்கும். ஏ. பி. ஜெயின், ஸ்ரீ ஸ்வரண் ஸிங், ஸ்ரீ ஜகஜீவன்ராம் போன்றவர்களை அவசியம் விலக்கவேண்டும். அவர்கள் சாதித்தது ஒன்றும் இல்லை என்பதுடன் இவர்கள் சூழ்ச்சிக்காரர்கள் என்பது பிரசித்தம். நாற்பது வயதுக்குக் குறைந்தவர்களை மந்திரி மண்டலத்தில் சேர்த்து அவர்களுக்கு அனுபவம் உண்டாக்குவது அவசியம்.

* * *

தேசத்தில் நிர்வாகம் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. அதை எப்படியாவது ஒழுங்குபடுத்த வேண்டும் என்று தினம் தினம் கேட்கிருேம். இந்த சீர்கேட்டைப் பல துறைகளில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு சமீபத்தில் கிடைத்தது. கோடை வந்தால் டில்லியிலிருந்து ஏராளமாக சென்னைவாசிகள் வெளியேறுவதால் ரயிலில் ஒரே அடிதடி ஏற்படுகிறது. இந்த அடிதடி முதல் வகுப்பையும் பாதிக்கிறது. நானும் பத்து நபர்களும் ஒரு குறிப்பிட்ட தினத்திற்கென்று முன்னுலேயே பெயரைப் பதிவு செய்து கொண்டதால் வடக்கு ரயில் நிர்வாகத்தில் ஒரு உபரி வண்டி போடுவார்கள் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். ஆனுல் புறப்படும்

தினத்தன்று வண்டி கிளம்ப ஒரு மணி இருக்கும்வரை யாதொரு தகவலும் கிடையாது. பொதுஜனத் தொடர்பு உள்ள அதிகாரிக்கே தெரியாது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன். சரி, ஸ்டேஷனில் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானமாக டில்லிக்கு சென்றேன். அங்கு ஸ்டேஷன் மாஸ்டர் முதல், முதல் வகுப்புப் பதிவு இன்ஸ்பெக்டர் வரை யாருக்கும் உபரி வண்டியைப்பற்றி ஒன்றும் தெரியாது. கிராண்ட் டிரங்க் வண்டி பிளாட்பாரத்தை அடைந்ததும்தான் ஒரு உபரி வண்டி கண்ணில் பட்டது. 16 பெயர்களில் ஆறு அல்லது ஏழு பேர்கள் தாங்களாகவே ஸ்டேஷனுக்கு வந்ததால் அவர்கள் அந்த உபரி வண்டியில், நான் உள்பட, ஏறிக்கொண்டார்கள். பாக்கி ஸ்தானங்கள் காலியாக சென்னைவரை வந்தன.

* * *

உபரி முதல் வகுப்பு வண்டியை குப்பைத் தொட்டியிலிருந்து பொறுக்கியிருக்க வேண்டும். ஒரு மின்சார விசிறியாவது வேலை செய்யவில்லை. கக்கூஸ் சில யுகங்களாக சுத்தம் செய்யப்படாமல் இருந்திருக்கவேண்டும். அதன் கதவைத் திறந்ததும் தஞ்சாவூர் ஸ்டேஷன் கக்கூஸ் ஞாபகம் வந்தது. தண்ணீர் நிரப்பும் தொட்டிகள் சுனைகள் மாதிரி தலையில் சொட்டிக் கொண்டேயிருந்தன.

* * *

என்னுடன் பிரயாணம் செய்தவர் ஒரு ரயில்வே அதிகாரி. தாழ்த்தப்பட்ட வகுப்பு ஊழியர்களைப்பற்றி இவர் ருசிகரமான தகவல்களைக் கொடுத்தார். இவர்கள் வேலையில் சோணகிரிகளாக இருப்பதுடன், மேல் அதிகாரிகள் கண்டித்தால் அவர்கள்பேரில் புகார் மனு எழுதுகிருர்களாம். சமீபத்தில் ஒரு கேசில் நடத்தை தவறியதற்காக கண்டிக்கப்பட்ட ஒருவர் புகார் செய்தாராம். அந்தக் கேஸில் மந்திரி ஜகஜீவன்ராம் அவருக்கு சாதகமாக தலையிட்டாராம்! எவ்வளவு காலம் இந்தத் தாழ்த்தப்பட்ட சலுகைகள் குறுக்கே நிற்கும்?


* * *

சென்னை ரேடியோ நிலையத்திலும் இதே மாதிரி புகார்களைப்பற்றி கேள்விப்பட்டேன். அதிக குமாஸ்தாக்கள் தேவையாக இருக்கும் இலாகாக்களில் உபரி உதவி கிடையாதாம். ஆனல் உபரியாக இருக்கும் இலாகாக்களில் அவர்கள் வேலையே செய்வதில்லையாம். வேலைக்காக ஆள்களா அல்லது ஆட்களுக்காக வேலையா? இன்று ஆட்களுக்கென்று வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ஸ்தானங்களுக்கு தேவை இருக்கிறதா என்பதை முதலில் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். பிறகு, முன்னுளில் இருந்ததைப்போல் இலாகா தலைமையதிகாரிகளுக்கு பூர்ண கண்காணிப்பு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். வேலையில் திறமைக் குறைவுக்காக நீக்கப்படும் ஊழியர்களுக்கு சலுகை எதுவும் காண்பிக்கக் கூடாது. இவைகளைச் செய்யாவிடில் எவ்வளவு பணம் செலவு செய்தால் என்ன? விழலுக்கு இறைத்த நீர்தான்.





ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.
L. 259A-X52 TM



# கங்கைக் கரையிலே

கன்னங்கரிய இருளில் நொங்கும் நுரையுமாகப் பிரவகித்துச் சென்ற கங்காதேவியைப் பார்த்துக்கொண்டு நின்றான் கீதகோவிந்தன்.

எழுந்து விழுந்து சென்ற அலைகளைப் போலவே அவன் உள்ளத்திலும் சிந்தனை அலைகள் கொந்தளித்து வீழ்ந்தன. தண்ணீர் அவன் காலடியில் வந்து வந்து முத்தமிட்டது. பின் பக்கம் அக்பர் பாதுஷாவின் அரண்மனை மாடங்களில் தீபச்சுடர்கள் ஒளிதெறிப்பது புலப்பட்டது. அரண்மனை நந்தவனத்தில் ஸ்தம்பங்களின் ஒளிவரிசை நீண்டு நின்றது.


ஒரு வருஷத்துக்கு முன்னால் அந்த நந்தவனத்தின் ஒரு ஓரத்து மண்டபத்தில் மழையை முன்னிட்டு அவன் ஒதுங்கினான். இன்றுபோலவே அன்றும் இருள் கவிந்துகொண்டிருந்தது. எதிரில் கங்காதேவி பொங்கி வழிந்துகொண்டிருந்தாள். அவனுடைய உள்ளத்திலும் உணர்ச்சி பொங்கியது.

இயற்கையிலேயே அவன் மகா சங்கீத மேதையாகையினால் சூழ்நிலையின் எதிரொலிபோல, வெண்கலத்தில் தங்கக் குச்சியினால் தட்டினது போல அவன் குரலில் சப்த ஸ்வரங்களும் எழுந்தன.

இசைப்பிரவாகம் மண்டபம் எங்கும் பொங்கிப் பரவி, மழையின் சப்தத்தையும் அடக்கியாள ஆரம்பித்தது. பாடினான்; பாடினான்; மெய்மறந்து இசையிலேயே இரண்டறக் கலந்துபோனான்.


“சபாஷ்” என்ற குரல் கேட்டு திடுக்கிட்டான். பார்த்தால் தூக்கி வாரிப்போட்டது. அவரை அவனுக்கா தெரியாது? யாரைப் பார்க்க வேண்டும், எவருடைய ஆஸ்தானத்தில் பாடகனாக வேண்டும் என்று தாபசுரம் கொண்டு ஆயிரத்தைந்நூறு மைல் நடந்து வந்தாரோ, அவரே எதிரில் நின்றார். ஆம்! அக்பர் பாதுஷாதான்!

நேற்றைக்கு அவர் பவனி செல்கையில், தான் அவரை நெருங்க முயற்சித்ததும், காவலாளிகள் தன்னை தடுத்து நிறுத்தியதும், அவன் நினைவில் வந்தன. அப்படிப்பட்டவரையா இப்போது இவ்வளவு அருகில் பார்க்கிறோம் என்ற திகைப்பினால் அவன் பேசக்கூட இயலாமல் வாயடைத்து நின்றான்.



அக்பர்ஷாவின் வலிய கரங்கள் அவனுடைய மெலிந்த தோட்களின் மீது மிக ஸ்வாதீனத்துடன் விழுந்தன. "அற்புதம், அற்புதம்! வாழ்நாளிலேயே நான் கேட்டறியாத சங்கீதம்!" என்னார் ஷா.

எட்டு வருஷ காலத்துக் கனவு இன்று அவனுக்கு நிறைவேறியதாக உணர்ந்தான். தென்னாட்டில் அவனுடைய சங்கீதத்தைக் குட்டி ராஜாக்கள் பாராட்டிய போதெல்லாம் "ஹூம்!



என்ன பிரயோசனம்? அக்பர் சக்கரவர்த்தியல்லவா பாராட்டவேண்டும்?" என்று அவன் உள்ளத்தில் ஏங்கியது உண்டு. இன்று அது எத்தனை அதிசயமான முறையில் நிறைவேறி விட்டது என்று நெஞ்சுருகிப் போனான்.

"உன் பெயர்?" ஷா கேட்டார்.

"கீதகோவிந்தன். தெற்கே சோழ நாடு!"

"நீ பாடினது?"

"கர்நாடக சங்கீதம்!"

"அப்படியா? என் தர்பாரில் கர்நாடக சங்கீத வித்வான் யாருமே இல்லை. நீ தயவு செய்து வந்து அந்த ஸ்தானத்தை அலங்கரிக்க வேண்டும்!"

தேசத்தை எல்லாம் ஒரு குடையின் கீழ் ஆளும் புவிச்சக்கரவர்த்தியா இப்படிப் பணிந்து விண்ணப்பித்துக் கொள்கிறார் என்று அவனால் நம்பவே முடியவில்லை.

"தங்கள் சித்தம், பிரபோ!" என்று பதில் சொன்னபோது அவனுடைய குரல் அப்படியே உருகிப்போய் விட்டது.

இதெல்லாம் நேற்று நடந்த மாதிரி இருக்கிறது! கனவோ என்றுகூட ஐயமாக இருக்கிறது! இருந்தாலும் அவன் வாழ்வில் நடந்த மகோன்னத நிகழ்ச்சிகளில் அதுவும் ஒன்று. அதை அவன் எப்படி மறக்க முடியும்!

* * *

காலடியில் கங்கை சலசலத்துக் கொண்டிருந்தாள். தண்ணீர் சில்லென்று அவன் விரலிடுக்கில் புகுந்து குறுகுறுத்தது. கங்கைத்தாய்!

அந்தத் தாயின் மடியில்—கரையில் தான் அவனும் — மாஸோவும் எத்தனையோ நாட்கள் இன்பக் கதைகள் பேசினார்கள். மாஸோ—

நினைப்பில் மாஸோ மிதந்து வந்தாள்.

கங்கமாதாதான் மாஸோவை அவனுக்குக் கொடுத்தாள். அலைகளிலே கடமாகத் தாங்கிவந்து மூழ்கி எழுந்தவனுடைய கையிலே மாஸோவைச் சேர்ப்பித்தாள்,

"நீ யார்" என்று கரை சேர்ந்ததும் அவன் கேட்டான்.

நீங்கள் யார்?" என்று கண்ணை திறந்ததும் அவள் கேட்டாள்.

"நான்? யாரோ ஒரு அனாதை!" என்று அவன் சோகப் புன்னகை செய்தான்.

"நானும் அனாதைதான்!" என்று அவளும் துக்கத்துடன் சொன்னாள்.

"உனக்கு நான் துணை; எனக்கு நீ துணை!" என்று இரண்டுபேரும் கைகோர்த்துக்கொண்டு வீடுநோக்கி புறப்பட்டார்கள்.

* * *

நெடிய பெருமுச்செறிந்தான் கீதகோவிந்தன். அந்த இருளிலும்கூட. தானும் மாஸோவும் கைகோர்த்துக்கொண்டு சென்ற அன்றைய காட்சி கனவுபோல தெளிவாகத் தெரிந்தது.

கங்கைக் கரையில் அவனுடைய வீட்டின் வெள்ளைச்சுவர் தூரத்தில் மங்கலாகப் புலனாகியது. நாலு நாளைக்குமுன் வரையில் அவன் அரண்மனையிலிருந்து வீடு திரும்பும்போது ஜன்னல் வழியாக மாஸோ ஏற்றிவைத்த விளக்குச் சுடர் அசைந்து ஆடி அவனை வரவேற்றுக்கொண்டிருந்தது.

இன்று மாஸோவும் இல்லை; சுடரும் இல்லை!

அந்த வீட்டில்தான் இரண்டுபேரும் நாலுமாத காலம் வசித்தார்கள். கை கோர்த்துக்கொண்டு முதன் முதலாக வீட்டில் அடி எடுத்து வைத்ததும் அவன் சொன்னான். "இதோ, பார், மாஸோ! ஒரு வருஷகாலம் பாதுஷாவின் அரண்மனையில் ஆஸ்தான வித்வானாக இருந்தபிறகுதான் இல்லறத்தைப்பற்றி நினைப்பது என்று பிரதிக்ஞை செய்திருக்கிறேன். இன்னும் ஐந்துமாத காலம் உன்னால் காத்திருக்க முடியாதா?" என்றான்.

"ஐந்து யுகம் வேண்டுமானாலும் நான் காத்திருப்பேன். உங்களைத் தவிர எனக்கு வேறு யார்?" என்றாள் மாஸோ.

மாஸோ தெய்வப் பெண்ணாக விளங்கினாள். அவனுடைய ஏழைக் குடிசையை ஒளி பெறச் செய்தாள். அவள் தினம் தினம் ஏற்றிவைத்த விளக்கு அவனுடைய ஆத்ம தீபமாக இருந்தது.

இன்று ஒளி தெரியவில்லை. அவனுடைய ஆத்ம தீபமும் அணையப்போவதன் முன்னறிவிப்பா, இது?

"ஆத்ம தீபம்!" இதை நினைத்ததும் நினைப்பு பின்னோக்கிச் சிறகடித்துப் பறந்தது.

அன்றொரு நாள் வழக்கத்திற்கு மாறாக கீதகோவிந்தன் அரண்மனையிலிருந்து சீக்கிரமே ஓடி வந்தான். வந்ததும் மாஸோவைத் தேடினான். அவள் தோட்டத்திலிருந்து பறித்த காய்கறிகளுடன் வரச் சற்று நேரமாகிவிட்டது. அதற்குள் அவளைக் காணவே ஓடிவந்த அவனுடைய மனம் சோர்ந்து உட்கார்ந்து விட்டான். மாஸோ வந்து "ஏன் உட்கார்ந்து விட்டீர்கள்?" என்று கேட்டபோது ஒரு நிமிஷம் பதில் சொல்லக்கூட மனசில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

பிறகு "ஆமாம்! கேள்வியைப் பார்! எவ்வளவு ஆவலாக உன்னைப் பார்க்க ஓடி வந்தேன். நடு சபையில் பைத்யம்போல ஓடி வந்ததற்கு சரியான தண்டனை!" என்றான்.

அவள் கல கலவென்று சிரித்தாள். அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "என்னைப் பார்ப்பதற்குத்தானு பாதி சபை நடக்கையில் ஓடிவந்தீர்கள்? மகாராஜா என்ன நினைத்துக் கொள்வார்? இனி இப்படிச் செய்யக்கூடாது, என்ன?" என்ருள்.

"என்னுல் அப்படி இருக்க முடியவில்லையே, மாஸோ!"

"அப்படியானுல் ஒரு காரியம் செய்யலாம். மேலண்டைச் சுவரில் ஒரு ஜன்னல் வைத்துவிடலாம். நான் அதனடியிலேயே உட்கார்ந்திருக்கிறேன். உங்களுக்கு வேண்டியபோது அரண்மனை மேன்மாடத்துக்கு வந்து பார்த்துக்கொள்ளுங்கள்" என்ருள் மாஸோ.

அப்படியே மேலண்டைச் சுவரை இடித்து அகல நீளத்தில் மூங்கில் ஜன்னல் ஒன்றை அமைத்தார்கள். பகல் பொழுதெல்லாம், கோவிந்தன் வெளியே போனபிறகு, மாஸோ அந்த ஜன்னலடியில் உட்கார்ந்து ராட்டையைச் சுழற்றிக் கொண்டிருப்பாள். இருட்டினதும் ஒரு விளக்கை ஏற்றிக்கொண்டுவந்து வைத்து அதில் உட்கார்ந்து கீதையை படிப்பாள். அரண்மனை மேல்மாடத்தில் இருந்து பார்த்தால் தந்தப் பதுமைபோல அவளைக் காணலாம்.

அரண்மனையிலிருந்து அவளையே பார்த்துக் கொண்டே வந்து ஜன்னலுக்கு அப்பால் அவன் நிற்பான். அவள் முகம் சிவக்க நிமிர்ந்து பார்த்து "என்ன பார்க்கிறீர்கள்?" என்பாள். "என் ஆத்ம தீபத்தைப் பார்க்கிறேன்!" என்று அவன் பெருமூச்செறிவான். அவள் சிரிப்பாள்.

இரண்டுபேரும் அன்றில் பறவைகளாக வாழ்ந்தார்கள். கங்காதீரம் வாய் திறந்து பேசுமானுல் கதை கதையாக அவர்கள் கதையை சொல்லும்!

இப்போது எங்கே அந்த தீபம்?

* * *

பெருமூச்செறிந்துகொண்டே கீதகோவிந்தன் கரையோரமாக வீட்டைநோக்கி நடந்தான். காலடியில் மணலும் தண்ணீரும் அணைத்துப்பிரிந்தன.

அரண்மனையில் எட்டுமணியை அறிவிக்கும் முரசம் அதிர்ந்தது. திடும் திடும் என்று திசை எங்கும் முழங்கியது. அதன் ஓசை வளையம் வளையமாகப் பெருகி, காதில் ரீங்காரமிட்டு, அறிவிலே சுழன்று, ஏறிப் பிழம்பாக மண்டைக்குள் வெடித்தபோது,—நினைப்பில் வேருெரு காட்சி மிதந்து வந்தது.

மாஸோ வந்து சேர்ந்த அடுத்த மாதம் இப்படித்தான் அரண்மனை முரசமும் அதிர்ந்து முழங்கியது. அது கால அறிவிப்பு அல்ல. வெற்றி முரசம். கீதகோவிந்தனின் மகத்தான வெற்றியை திக்கெட்டும் பறையறிவிக்கும் முரசொலி! ஆம்! அன்று அவன் சபையில் பிரமாதமான வெற்றி யடைந்திருந்தான்.

தான்ஸேனுடைய 'கஜல்'களினுல் எங்கே ஹிந்துஸ்தானி சங்கீத தேவதையின் துவஜம் நிகரற்றுப் பறந்துகொண்டிருந்ததோ, அந்த ஆஸ்தான மண்டபத்தில் கீதகோவிந்தன் அன்றைக்கு அந்த துவஜத்தை அறுத்து வீழ்த்தி, கர்நாடக இசையரசியின் தெய்வக் கொடியை ஏற்றினுன். கர்நாடக சங்கீதம் கீதகோவிந்தனுடைய மதுர கண்டத்திலிருந்து கிளம்பி மண்ணையும் விண்ணையும் நிறைத்தது.

மன்னர் அக்பரே மகிழ்ச்சியில் பலதடவை எகிறிக் குதித்து "வஹ்வா!" போட்டுவிட்டார் என்ருல் வேறு என்ன சொல்ல இருக்கிறது!

அவ்வளவுதான் சன்மானங்களும், பட்டாடைகளும், மலர்மாலைகளும் வந்து குவிந்துவிட்டன. "நீரே நமது ஆஸ்தான சிரோமணி!" என்று சொல்லி பாதுஷா கீதகோவிந்தனைக் கட்டிக் கொண்டுவிட்டார். "கர்நாடக இசைக் கடலில் இத்தனை அபூர்வ ராகமுத்துக்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டுக் கேட்டு வியந்து போனுர்.

'ஆஸ்தான சிரோமணி' என்று அன்று பட்டம் கிடைத்ததற்காகவே முரசம் அதிர்ந்தது.

* * *

கீதகோவிந்தனுடைய நாசியிலிருந்து ஏக்கம் சீறிக்கொண்டு வெளியேறியது. வானத்து நட்சத்திரங்களை அண்ணாந்து பார்த்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

தோட்டத்து வேலிக் கதவை தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து இருளில் நின்ருன். நினைவு மீண்டும் பின்னுல் திரும்பியது.

மாலையும் கழுத்துமாக சிரோமணிப் பட்டத்துடன் வந்த அன்றும் இதே கதவடியில்தான் நின்ருன். மாஸோ முன் கூட்டியே எப்படியோ செய்தியறிந்து மல்லிகை மாலை தொடுத்து வைத்திருந்தாள். அதை எடுத்துக் கொண்டு ஓடி வந்து அவன் கழுத்தில் போட்டு விட்டுப் பரவசமாக நின்ருள்.

"மாஸோ!" என்ருன் அவன்.

"கோவிந்த்!" என்ருள் அவள் நா தழதழக்க.

ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க உள்ளே உடனே ஓடினுள். பூஜை மாடத்து விக்ரகத்தின் காலடியில் விழ்ந்து வெகுநேரம் நன்றியைக் கண்ணீராக்கி உகுத்தாள்.

என்ன அன்பு? என்ன பவித்ர உள்ளம் மாஸோ! மாஸோ! என் கண்ணே! உன்னைப்

பிரிந்து எப்படி இந்த மண்ணுலகில் நாளை நீட்டிப்பேன்?

வீட்டுத் தாழ்வாரத்தில் வந்து நின்று கீத கோவிந்தன் எதிரில் தெரிந்த அரண்மனையைப் பார்த்தான். மாடவிளக்குகளை பணிப்பெண்கள் அணைத்துக் கொண்டிருந்தார்கள். கீழே முற்றமும், முற்றத்து தூங்கா விளக்குகளும் பளிச் சென்று தெரிந்தன.

நாலு நாட்களுக்கு முன்னால் அந்த முற்றத்தி லிருந்து அக்பர்ஷாவும் அவருடைய பரிவாரங் களும் வேட்டையாடக் கிளம்பினார்கள். கீத கோவிந்தன் பல்லக்கில் ஏறி உட்கார்ந்தான். பல் லக்கு கிளம்பும் சமயத்தில் மஞ்சள் திரையை விலக்கி வீட்டைப் பார்த்தான் மாஸோ தாழ் வாரத்தில் நின்று கைகளை ஆட்டிக்கொண்டிருந் தாள்.

அந்த வெண் சங்கை ஒத்த கை...! எத்தனை பணிவிடை செய்த கை அது?

நடுக்காட்டில் கூடாரம் போட்டுத் தங்கினார்கள். பகலெல்லாம் வேட்டை மும்முரமாக இருந்தது. இரவில் தீயை வளர்த்து சுற்றி உட்கார்ந்தார்கள்.

கூட்டத்திலும் கொம்மாளத்திலுமாக ஆலகால தீயைப்போல துவேஷத் தீ எழுந்துவிட்டது.

பார்க்கப்போனால் யார் மீதும் தவறு இல்லை. பாதுஷா முதலில் தான்ஸேனைத்தான் பாடச் சொன்னார். அருமையான கஜல்கள் ஜல்கல் லென்று கிளம்பி வனப் பிரதேசத்தில் பல்லா யிரம் அப்ஸர ஸ்திரீகளின் நடன ஒலிபோல் மயக் கத்தை ஏற்படுத்திற்று. வனத்தின் இருண்ட மூலை முடுக்குகளில் எல்லாம் யாரோ சிலர் கால் களில் கெஞ்சை தரித்து நடனம் புரிவதாக பிரமை தட்டிற்று.

அப்புறம் கீத கோவிந்தனைப் பாடச்சொன்னார் ஷா. கேட்க வேண்டுமா? ஹிந்தோளமும், சங் கராபரணமும், பைரவியும் நாத உருவில் ஜிவ் வென்று கிளம்பி செவிகளையும், இதயங்களையும் கிறுகிறுக்க வைத்தார்கள்; நெஞ்சில் படர்ந்து பரவசப் படுத்தினார்கள்; இதயத்தை எல்லாம் கரைத்து உருக்கினார்கள்.

"பிரமாதம், பிரமாதம்" என்று வழக்கமாக கீத கோவிந்தன் பாடியதும் கிடைக்கும் பாராட்டு தல்களே கொஞ்சம் அதிக உற்சாகத்துடன் கிடைத்தன. ஆனால் பாதுஷா சொன்ன ஒரு வார்த்தைதான் வினைக்கு வித்தூன்றி விட்டது.

"அற்புதமான ராகங்கள்; அற்புதமான ராகங் கள்!" என்றார் ஷா.

"இதெல்லாம் கர்நாடக இசையில் எல்லாரும் கையாளக்கூடிய சாதாரண ராகங்கள். இன்னும் அபூர்வ சக்தி படைத்த ராகங்கள் எவ்வளவோ இருக்கின்றன, கல்லைக்கரைக்கும் குண்டக்கிரியை, மழையை தருவிக்கும் மேகராகம்" என்று கீதகோவிந்தன் அடுக்கியபோது ஒரு இடை வெட்டு கடுமையாக விழுந்தது.

"வெறும் பிதற்றல்! வெறும் பிதற்றல்! கல்லை யாவது ராகம் கரைப்பதாவது..."

எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். தான்ஸே னுடைய கண்களில் தீயே எரிந்து நின்றது.

"தான்ஸேன்!"

"மகாராஜா! இந்தப் பிதற்றலை நம்புகிறீர்களா? நம்மை முட்டாளாக்குகிறான் கீதகோவிந்தன்! ஒப்புக்கொள்ள முடியாது!"

"யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளா விட்டாலும் அது உண்மை! ஷா ஆலம்! கல்லைக் கரைக்கும் கீதம் மட்டுமல்ல கர்நாடக சங்கீதம். தீயைப் பற்றி எரியச்செய்யும் தீபராகம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று கீதகோவிந் தன் கேட்டான்.

சபை ஸ்தம்பித்துக் கிடந்தது.

"கேட்டால் பயமாக இருக்கும். பாடினால் தீப் பிடிக்கும். திருவிடைமருதூர் சாலையில் என் முன் னால் தயிர் கூடையுடன் சென்ற பெண் ஒருத்தி தீபராகம் பாடினாள். அவள் சேலையில் குபீர் என்று தீப்பற்றியது கண்ணால் பார்த்தேன். உடனே மேகராகம் பாடி மழையைத் தருவித்து தீயை அணைத்தேன்!"

"ஹஹ்ஹஹ்ஹா!" என்று சிரித்தான் தான் ஸேன். "ஷா இன்ஷா!" கீதகோவிந்தனுக்கு உடனே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்றான்.

"பைத்யமா? எனக்கா? நான் நிரூபித்துக் காட்டு கிறேன்!"

"ஏற்பாடு செய்யுங்கள் ஷா இன்ஷா! இவர் தீப ராகம் பாடட்டும்; கேட்கலாம்!"

"ஆமாம்! அதையும் கேட்கலாம்!" என்றார், ஷா!

கோவிந்தனுடைய உள்ளம் திடுக்கிட்டது. பயங்கரமான சோதனைத் தீயில் தன்னைத் தான் ஸேன் தள்ளித் தீர்த்துவிட சதி செய்துவிட்ட தைக் கண்டு திடுக்கிட்டான்.

"பிரபோ ஐந்து நாள் அவகாசம் கொடுங்கள்!" என்றுகேட்டபோது அவனுடைய குரலே அவ னுக்குக் கேட்கவில்லை.

வேட்டைமுடிந்து இதே முற்றத்தில் பல்லக்கில் வந்து இறங்கினான், அவனே வேட்டையாடப் பட்ட பட்சிபோல! அவனுடைய முகத்தில் சொரத்தே இல்லை. "எனக்குக் கொஞ்சம் தலையை வலிக்கிறது, மாஸோ! கொஞ்சம் தூங்குகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் படுத்தான்.

காற்று ஜிலு ஜிலு வென்று தவழ்ந்து வந்து நெற்றியை தடவிற்று. அரண்மனை விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்து கொண்டே வந்தன. தூரத்தில் கங்கக்கரை மயானத்தில் ஏதோ ஒரு சிதையில் புதைந்த தீ ஜ்வாலையிட்டு எரிந்தது. "கீதகோவிந்தா! வா! வா!"— தீயின் நாக்குகள் தன்னையா அழைக்கின்றன?

நினைப்பு பழைய சம்பவத்தைத் தொடர்ந்தது.

வேட்டையிலிருந்து வந்த அன்று கீதகோவிந்தன் தூங்கவே இல்லை. ஐந்தாம் நாள் விடிந்ததும் அவன் தன் வாக்கை நிரூபிக்க வேண்டும். அதாவது தீபராகம் பாடி தன்னையே அர்ப்பணிக்க வேண்டும். தீபராகம் பாடுகையில் தன்னைச் சுற்றி காற்று உஷ்ணமாகி, தன் ஆடையில் தீப்பிடித்து தன்னையே விழுங்கத் தொடங்கும் என்பதை அவன் அறிவான். கீதத்தில் மெய்மறந்து போகும் அவனை எவர் மேகராகம் பாடி காப்பாற்றுவார்கள்? கர்நாடக சங்கீதத்தின் சத்யமான உபாசகன் எவன் இந்த ஆக்ராவில் இருக்கின்றான்? எவனுடைய சங்கீதத்துக்குக் கட்டுப்பட்டு மழைவரும்.

'முடியாது' என்று மறுத்து விட்டால்தான் என்ன? சீ! சீ! கர்நாடக சங்கீதத்தையே அல்லவா தாழ்வாக மதித்து, பரிகசிப்பார்கள்! யாரை ஆக்ராவின் ஆஸ்தான சிம்மாதனத்தில் அவன் ஏற்றி வைத்தானோ அந்த கர்நாடக் ராணியை புகழ்ச்சியிலிருந்து அவனே கீழே தள்ள முடியாது! நிச்சயமாக முடியாது.

ஆனால் மாஸோ! அவள் கதி? இன்னும் மூன்று மாதம், இரண்டு மாதம் என்று ஆசை கனவு கண்டு கொண்டிருப்பவளின் காதல்? ஐயோ! இப்படி நாற்சந்தியில் நிறுத்தி விட்டுப் போவதற்கா அந்தப் பேதைப் பெண்ணை ஆற்று வெள்ளத்திலிருந்து கரை சேர்த்தேன்? காதல் தீ மூட்டினேன்?

இரவு முழுவதும் இருமுனை போராட்டம்தான். அடிக்கடி எழுந்து வந்து நிச்சலனமாக தூங்கும் மாஸோவின் முகத்தையே பார்த்தான். "மாஸோ! வா! நாம் எங்காவது ஓடிப்போய்ப் பிழைத்துக் கொள்ளலாம். சங்கீதமுமாச்சு; மண்ணுங் கட்டியுமாச்சு!" என்று எழுப்பிக் கொண்டு கிளம்பி விடலாமா என்று தோன்றும். இன்னும் சில சமயம் "ஓடிப்போனால் நம் சங்கீதத்தைப் பற்றி எவ்வளவு கேவலமாக தேசமுழுவதும் பேசுவார்கள்!" என்று தோன்றும்.

நெடுநேரம் போராடிப்போராடி ஓய்ந்து போகும்போது மனது ஓர் முடிவுக்கு வந்து விட்டது. "ஆமாம்! மாஸோவை கங்கைக்கு


நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு

**ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்**

ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை

கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலை தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது



பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினல் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

**ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்**

தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14

போன்: 62899 தந்தி: "பிராணயாமம்" தாதர், பம்பாய்

அப்பால் நண்பன் ரகுவீர் வீட்டிற்கு அனுப்பி விடவேண்டும். தான் ஆத்மபரித்யாகம் செய்து விடவேண்டும்! மாஸோ இதை அறியக் கூடாது!"—

மறுநாள் கீதகோவிந்தன் தீர்மானத்தின் முதற்பகுதியை நிறைவேற்றினன். மாஸோ போகும்போது அவன் உள்ளம் எப்படித் துடித்தது? 'கண்ணே! நாம் சந்திப்பது இது தான் கடைசித்தடவை" என்று கதறிவிட எப்படி மெய்யும் வாயும் பதறிற்று?......

* * *

அந்தக் காட்சியை இப்போது நினைக்கையிலும் கீதகோவிந்தன் துக்கம் தாளாமல் வாய்விட்டு அழுதான். மாஸோ படுத்துக் கொள்ளும் கட்டிலில் விழுந்து 'மாஸோ! மாஸோ' என்று விம்மினன்; விம்மினன் ; விம்மிக் கொண்டே இருந்தான்.

பொழுது விடிந்தது.

தூக்கமின்மையினாலும் துக்கத்தினாலும் அவன் உடம்பு கொதித்தது. கங்கையில் அமிழ்ந்து நீராடினன். கரைசேர்ந்து மஞ்சள் ஆடைகளை எடுத்து அணிந்துகொண்டான். நெற்றியில் சந்தனமும் செங்குழம்பும் தரித்துக்கொண்டான். இத்தனை நாளும் மாஸோ எவரை இஷ்டதெய்வமாக ஏகாக்ர சிந்தையுடன் தியானித்து பூசித்து வந்தாளோ, அவர்முன்பு சென்று அமர்ந்தான்.

மனதில் திடம் அதிகமாகிக்கொண்டே வந்தது. சஞ்சலம் அடங்கியது; சலனம் நின்றது. தியாகத்திற்குத் தயாராகி விட்டான் கீதகோவிந்தன்.

* * *

உச்சிப் பொழுதிற்கு சற்றுமுன்னல் ஆரவார சப்தம் கேட்டு கீதகோவிந்தன் கண்விழித்தான்.

எதிரில், கொடியில், மாஸோவின் நீலப்புடவை கிடந்தது. காற்றில் அசைந்து "போய் வாருங்கள்" என்று விடைகொடுத்தது. சற்றும் சலனமின்றி, யந்திரத்தைப்போல வாசலை நோக்கி நடந்தான்.

வேலிக்கதவைச் சாத்திவிட்டு திரும்பிப் பார்க்கையில் கங்கைக்கரையெங்கும் நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் ஒரே தலைமயமாய்த் தெரிந்தது.

இரு பிரிவாக கூட்டம் பிரிந்து மரியாதையுடன் வழிவிட கீதகோவிந்தன் நடந்தான். கங்கைக் கரை ஆலமரத்தினடியில் அவன் வந்து சேர்ந்த போது அங்கே அக்பர்ஷா தமது பிரதான புருஷர்கள் சூழ ஆசனங்களில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

எதிரில், சின்னஞ்சிறு அலைகள் தெறித்துவிழும் கங்கா நதியில் மரக்கட்டைகளைத் தெப்பம்போல கட்டி அதை கயிற்றினல் மரத்து வேரில் பிணைத்திருந்தார்கள்.

ஷாஇன்ஷா அவனைப்பார்த்ததும் ஓடிவந்து தழுவிக்கொண்டார். நடக்கவிருந்த விபரீதத்தை அவர் உணரவில்லை என்றே தோன்றியது. தாமே அழைத்துச் சென்று கீதகோவிந்தனை கட்டுமரத்தில் ஏற்றி மாலையும் சூட்டினர்.

பிரகிருதி நிச்சலனத்துடன் ஸ்தம்பித்து நின்றது.

மரங்களின் இலைகளும் திகைத்துக் கிடந்தன.

ஆலமரத்து வாழ் குருவிகளின் விழிகளில் பீதி விழித்துப் பார்த்தது.

கீதகோவிந்தன் பாட ஆரம்பித்தான். நாத வெள்ளம் பெருக ஆரம்பித்தது. ஸ்வரத்துக்கு ஸ்வரம், கமகத்திற்கு கமகம், இனிமை இழைந்து இழைந்து,—உராய்ந்து உராய்ந்துகொண்டே வந்தது. கடைசியில் அவனுடைய இரத்த நாளங்களே இசையாக உருகிவரத் தொடங்கியது.

வர வர காற்று உஷ்ணமாகியது; சுரு சுரு வென்று உஷ்ணம் ஏறியது; அனல் பறந்தது; கட்டுமரத்தை வேருடன் பிணைத்த கயிறு பொசுங்கி அறுந்தது. அலைகள்,—கங்கையின் மெல்லிய கைகள்,—கோவிந்தன் நின்ற கட்டு மரத்தை நதியின் உட்பகுதிக்கு இழுத்துச் செல்லத் தொடங்கின.

கரையில் ஜன சமுத்திரம் பிரக்ஞையே இன்றி நின்றது. கனவிலே நிற்பதுபோல நடப்பதை ஊகிக்கவோ அறியவோ திறனிழந்து எல்லாரும் நின்றூர்கள்.

அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. கங்கையின் அக்கரையில் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு மாஸோ தோன்றினள். 'கோவிந்! கோவிந்' என்று அவள் கதறின சத்தம் காற்றில் மிதந்து வந்தது.

பார்த்துக்கொண்டிருக்கும்போதே நதியின் நடுவில், கட்டுமரத்தில், கீதகோவிந்தனுடைய ஆடைகளில் குபீர் என்று அக்னி படர்ந்து எழுந்தது.

இரண்டே விநாடிகள்தான்! தீயின் நாக்குகள் உயரே எழுந்து கீத கோவிந்தனையே மறைத்து விட்டன.

கீதம் நின்றது.

சிந்தனை சக்தியை அந்த நிமிஷம் திரும்பப் பெற்றவர்கள் கவனித்திருந்தால், கட்டுமரத்தில் தீ அணைந்து ஓர் எலும்புக்கூடு உலகின் பைத்தியக்காரத் துவேஷத்தைப் பார்த்து ஒரு கணம் சிரித்துவிட்டு மறுகணம் நதிநீரில் குப்புற விழுந்து மறைந்ததையும், அதே சமயம் எதிர் கரையில் மாஸோ வெள்ளத்தில் பாய்ந்ததையும் அவர்கள் கண்டிருக்கலாம். ○




# கெடுத்தவன் கொடுத்தான்!

ரா. வேங்கடசாமி

"மனமார கண்களைத் தானம் செய்ய எவன் முன் வருவான்?"

"பணம் எவ்வளவு கொடுத்தாலும், கண்களை இழந்துவிட்டு, எஞ்சியிருக்கும் நாட்களை குருடனாகவே கழிக்க கேவலம் பிச்சைக்காரன்கூட விரும்பமாட்டானே?"

"டாக்டர்! நீங்கள் வீண் முயற்சி எடுத்துக் கொள்கிறீர்கள். உங்கள் விளம்பரத்தைப் படிப்பவர்கள்கூட உங்களை பைத்தியக்காரராகவே மதிப்பார்கள். இதுவரை நல்ல பெயரோடும், புகழோடும் வாழ்ந்தோம். இப்போது எதிர்பாராத விதமாக கண்கள் குருடாகிவிட்டன. அதுகூட ஆண்டவன் கட்டளையோ என்னவோ என்று முடிவு செய்துகொண்டு பேசாமல் இருங்கள். உங்கள் எண்ணம், அதாவது உங்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு தன் கண்களைத் தர எவனாவது முன் வருவான் என்னும் ஆசை நிச்சயம் நிறைவேறாது!" என்றார் டாக்டர் ஆசீர்வாதம்.

டாக்டர் மோகன்ராவ் அதைக்கேட்டு அயர்ந்துவிடவில்லை. அதாவது ஒரு காரியம் செய்ய ஒருவன் முற்பட்டால், அதற்குப் பல தடைகள் இருப்பது இயற்கை அதோடு இல்லாமல், தோல்வி நிச்சயம் என்று அறிந்த பின்னும் அனுபவ வாயிலாக, அதை அடையும் வரை மனிதனும் திருப்தி அடைவதில்லை!

டாக்டர் மோகன் ராவ், அவ்வளவு சீக்கிரம் நம்பிக்கையை இழந்துவிடத் தயாராக இல்லை. ஒன்றல்ல... இரண்டல்ல, பத்தாயிரம் ரூபாய் தரத் தயார். அதற்குப் பதிலாக அவர் கேட்பது கண்களை! கண்களை தானம் செய்பவனோ ஏறக்குறைய நடுத்தர வயது உள்ளவனாக இருக்க வேண்டும்!

பணத் தேவையுள்ளவன் முன் வருவான். ஆனால் கண்களைக் கொடுத்துவிட்டு, பணத்தை அனுபவிப்பது எப்படி என்கிற எண்ணம் வரும்போது, அவன் நிச்சயமாக மாறாமல் இருக்க மாட்டான், பணம்! பணம்! பணம்!

அதைக்கொண்டு இவ்வுலகத்தையே விலைக்கு வாங்கிவிடலாம் என்று மோகன்ராவ் நினைத்தார். ஆனால்!

பிடிவாதமாக இருந்ததால், டாக்டர் ஆசீர்வாதம், மோகன்ராவுக்கு, உதவவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

"பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறேன், கண்களைக் கொடுங்கள்!" என்று விளம்பரம் போடவில்லை. "பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க உங்களுக்கு விருப்பமா? அப்படியானால் கீழே இருக்கும் விலாசத்திற்கு வாருங்கள்" என்றுதான் விளம்பரம் வந்தது பத்திரிகைகளில்!

ரூபாய் என்றவுடன் கூட்டம் வராமல் போகாது! ஆனால், வந்தவர்கள் காரணத்தைக் கேட்டு திடுக்கிட்டார்கள். சிலர் சிரித்தார்கள். பலர் டாக்டர் மோகன்ராவை கண்டபடி, இல்லை, இல்லை, வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டுப் போனார்கள். பலன், பூஜ்யம்.

டாக்டர் மோகன்ராவின் விருப்பத்தை, அதாவது அவருக்கு பார்வை கொடுக்க, எவனுமே முன்வரவில்லை.

"நான் என்ன செய்யட்டும் டாக்டர்? உங்களுக்கு உதவி செய்ய எனக்கிருக்கும் ஆசையை அளவிடவே முடியாது. ஆனால் கண்கள் கிடைக்காமல் ஒன்றுமே செய்யமுடியாதே!" — இது டாக்டர் ஆசீர்வாதம்!

"இறந்தவனின் கண்கள்" என்றால் இவ்வளவு நேரம் ஆயிரமாயிரம் கண்கள் கிடைத்திருக்கும். ஆனால் அவைகளினால் பயன் இல்லையே!

சமீபகாலம்வரை மிகவும் பிரபலமடைந்திருந்த கண் டாக்டர் மோகன் ராவ்...இப்போது தனக்குக் கண்கள் கிடைக்காமல்...பார்வை யிழந்துவிட்ட கண்களைப் பெறமுடியாமல் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார்!

எதிர்பாராதவிதமாக...அவர் பார்வையிழந்து விட்டார் என்று எல்லோரும் சொல்லிக்கொண்டதற்குப்பின்னால் ஒரு கதையே இருந்தது! அது சிலருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் பலருக்குத் தெரியாது. கண் டாக்டர் தானே, ஏதாவது பிசகு நடந்திருக்கும். அதன் பலனாக அவர் கண்களை இழந்துவிட்டிருக்கலாம் என்று சகஜமாக எல்லோரும் முடிவுக்கு வருவது இயற்கை!

2

நகரில் அப்போது பிரபலமாக இருந்த கண் டாக்டர்கள் இருவர்தான். ஒருவர் பெயர் டாக்டர் ஆசீர்வாதம். மற்றவர் மோகன்ராவ். ஒருவரால் முடியாதவேலை, மற்றவரால் நிச்சயம் முடியும். டாக்டர் ஆசீர்வாதம் செயற்கை கண்களை வைப்பதில் நிபுணர். டாக்டர் மோகன் ராவோ, பிறவிக் குருடர்களையும் தன்னுடைய முயற்சியின் பயனாக பார்வையாளர்களாக்குவார். அவர் விதிக்கும் கூலியோ அதிகமாகத்தான் இருக்கும். "குருடன், பார்வை பெறுவது என்பது லேசான காரியமா? அதனால் அதிகப் பணம் கொடுத்துதான் ஆகவேண்டும்" என்பார் அவர். அதற்கு பணக்காரர்களைத் தவிர வேறு யார் தகுதி உடையவர்களாக இருக்க முடியும்? ஆரம்பத்தில் பணம் கொடுத்தால்தான் வைத்தியம் என்ற மோகன் ராவின் கொள்கை டாக்டர் ஆசீர்வாதத்தின் சேர்க்கையினால் கொஞ்சம், கொஞ்சமாகத் தளர்ந்தது. அதனால் தொழில் அபிவிருத்தி மட்டும் அல்ல, பணமும் தாராளமாகவே கிடைத்தது மோகன்ராவுக்கு! கண்கள் சம்பந்தமாக வரும் சகல நோய்களுக்கும் மோகன்ராவ் திறமை வாய்ந்த ஒரு வைத்தியராக இருக்கிறார் என்றால், அது வெறும் புகழ் வார்த்தைகள் அல்ல! அவரால் முடியவில்லை என்றால் வேறு யாராலும் முடியாது. ஆம்! அவரை விட அனுபவத்தில் மூத்தவரான டாக்டர் ஆசீர்வாதமே, மோகன்ராவின் திறமையை ஒப்புக் கொண்டிருக்கிறார்!

புகழ் ஏணியின் உச்சியில், அமர்ந்து அமைதியாக வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த மோகன் ராவ் நிலை குலைய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது திடீரென்று. அவருக்கு உறு துணையாக இருந்த அவரது மனைவி கண்களை மூடிவிட்டாள். மனைவியின் பிரிவு சிலருடைய வாழ்க்கையில் புதிய திருப்பங்களை உண்டாக்கி விடுகிறது என்பது உண்மைதான்! தனக்கென வாரிசு இல்லை என்கிற காரணத்திற்காக மோகன் ராவ் திருமணம் செய்து கொள்ளவில்லை. வாரிசு இல்லாவிட்டால், சொத்துக்களை ஏதாவது தர்ம ஸ்தாபனத்திற்கு எழுதி வைத்துவிட்டால் போகிறது என்று சொந்தக்காரர்களுக்கு அவர் பதில் சொல்லிவிட்டார். இந்த வயதில் ஒருத்தியை மணந்துகொண்டு, அவள்பால் பாசத்தை யெல்லாம் திருப்பி, ஆனந்தமாக வாழ்க்கை நடத்த டாக்டர் மோகன்ராவ் விரும்பவில்லை. அதற்குத் தகுந்த துணையாக அமைந்திருந்தது. அவர் தொழிலில் காட்டிய ஊக்கம்.

இந்த சமயத்தில்தான், அவரிடம் தொழில் தெரிந்துகொள்ள வந்து சேர்ந்தான் டாக்டர் சந்திரன். "கண்கள் வியாதி" சம்பந்தமாக அவன் படித்துப் பாஸ் செய்திருந்தான் பிரத்தியேகமாக! அவன் தொழிலில் காட்டிய ஊக்கத்தையும், அக்கறையையும் வெகு சீக்கிரத்தில் மோகன்ராவ் புரிந்துகொண்டார். இதுவரை எவ்வளவோபேர், அவரிடம் வேலை பழகி இருந்தும், சந்திரனைப்போல் ஒரு திறமைசாலியை, பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை அவருக்கு!

தனக்குப் பின் ஒருவன் என்றால் அது சந்திரன் தான் என்பது மோகன்ராவ் தீர்மானித்து அநேக நாட்களாகின. அதனால் அவன்மீது அவர் அதிக அக்கரை செலுத்தியது வியப்புக்குரிய விஷயம். அல்ல.

அதே ஊரில் தொழில் நடத்திவந்த டாக்டர் சீதா, சந்திரனோடு வைத்தியக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவள். பழக்க தோஷத்தினாலோ, என்னவோ அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். "டாக்டர் சந்திரன்; கண் டாக்டர்" என்று போர்டு தனியாக தொங்கும் போதுதான் 'திருமணம்' என்று முடிவுகட்டி யிருந்தார்கள். மனம் ஒத்துப்போனவர்கள். சீதாவுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை என்றாலும், அவளுக்கும் பிரத்தியேக டிஸ்பென்ஸரி இருந்தது. சந்திரனைச் சந்திக்க அவள் அடிக்கடி மோகன் ராவின் "நர்சிங் ஹோ"முக்கு வருவது உண்டு. தனக்குத் தெரியாத பல விஷயங்களை, அனுபவஸ்தரான ராவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதும் உண்டு.

மனிதனின் மனம் இருக்கிறதே அது மிகவும் கெட்டது. ஒரு தடவை வீண் சந்தேகம் கொண்டு விட்டாலோ, அது லேசில் நல்ல நிலைமைக்குத் திரும்புவதில்லை. திருந்திவிட்டது என்றால், அதுவும் தற்காலிகமாகத்தான் இருக்கும்.

டாக்டர் சீதா, மோகன்ராவிடம் பழகுவது, சமயம் வந்தபோதெல்லாம் அவரைத் தூக்கி வைத்துப் பேசுவது, அவர் தனியாக நடத்தி வரும் சோக வாழ்க்கையைக் குறித்து அனுதாபப்படுவது ஆகியவை சந்திரனுக்கு சிறிதும் பிடிக்காத விஷயங்கள்.

இதைக் குறித்து அவன் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டால், அது கேலிக்குரிய விஷயமாகி விடுமே என்கிற பயமும் அவனுக்கு இருந்தது. இருந்தாலும் அவனால் பேசாமல் இருக்க முடியவில்லை.

சீதாவை ஜாடைமாடையாகக் கண்டிக்க ஆரம்பித்தான்.

"நீ என்னை ஏன் தேடிக்கொண்டு வருகிறாய்? நானாக உன் வீட்டுக்கு வந்துவிடுகிறேனே!"

"நீங்கள் ஒன்றும் சிரமப்படாதீர்கள். நான் உங்களைப் பார்ப்பதற்காக மட்டும் வரவில்லை. டாக்டர் மோகன்ராவிடம் சில சந்தேகங்கள் கேட்க வந்தேன்!" என்பாள் சீதா.

இதற்கு அவனால் என்ன பதில் சொல்ல முடியும்?

இந்த நேரத்தில்தானா, நாலுபேர், நான்கு விதமாக சீதாவைப்பற்றியும், மோகன்ராவைப் பற்றியும் பேசவேண்டும்.

மோகன்ராவ் கடைசியில் இரண்டாந்தாரமாகத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து விட்டார் என்றும், பெண் டாக்டர் சீதா தான் என்றும் பேசிக்கொண்டார்கள்.

இதில் எவ்வளவு உண்மையோ. அது வேறு விஷயம்!

ஆனால் சந்திரனுக்கு, மற்றவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் உண்மையென்றே தெரிந்தது.

அவன் கண்களில்தான் எல்லாமே விகற்பமாகத் தெரிகிறதே!




சீதாவை மணந்து கொண்டால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. டாக்டர் மோகன்ராவ் இருக்கும் இடத்தில், சந்திரன் தொழிலில் நல்லபெயர் எடுத்து சம்பாதிக்கவேண்டுமே!

தொழில் பொறாமை வந்துவிட்டால், அதன் முடிவே விபரீதமாகத்தான் இருக்கும்!

சந்திரன் தன் மனதில் இருந்ததை வெளியில் யாரிடமாவது சொல்லியிருந்தால், அவனுக்குப் பல நல்ல யோசனைகள் சொல்லி இருப்பார்கள், ஆனால் அவன்தான், தான் கொண்டுள்ள முடிவே மெத்த சரியானது என்று இருந்துவிட்டானே!

* * *

டாக்டர் சீதாவுக்கும், டாக்டர் சந்திரனுக்கும் மிகவும் ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது. நல்லவேளையாக சந்திரன் எதிர் பார்த்ததுபோல மோகன் ராவ், திருமணத்திற்கு வராமல் இருந்து விடவில்லை. அவன் மனம் போலவே எல்லோர் மனமும் கெட்டிருக்கும் என்று அவன் நினைத்தது எவ்வளவு தப்பு?

அப்போதும் அவனிடம் தொடர்ந்து அன்பு காட்டிய மோகன் ராவை அவன் சரியாகப்புரிந்து கொள்ளவே இல்லை!

சந்திரனின் கண் ஆஸ்பத்திரி 'ஏதோ' நடந்து கொண்டிருந்தது.

"கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விருத்தியாகும் ஆஸ்பத்திரி திறந்தவுடன் பிராக்டீஸ் நன்றாக நடக்கும் என்று எதிர்பார்க்கவே கூடாது. மேலும் இதே ஊரில் இன்னும் பிரபல டாக்டர் கள் இருவர் இருக்கிறார்கள்" என்று ஆறுதல் கூறும் சீதாவின் வார்த்தைகளை அவன் சிறிதும் எடுத்துக்கொள்ளவில்லை.

"ஒரு ஆபரேஷன் இருக்கிறது. கொஞ்சம் வந்து உதவி செய்துவிட்டுப் போ!" என்று மோகன்ராவ் கூப்பிடும்போது அவன் அவசியம் போய்த்தான் ஆகவேண்டும்.

அவர் 'நர்சிங் ஹோமில்' அப்போது இருக்கும் கூட்டத்தைப் பார்த்தால், அவனுக்கு ஏன் மன தில் கெட்ட எண்ணம் உதிக்காது? டாக்டர் ஆசீர்வாதம், பிரபலஸ்தர் என்றாலும் அவரைச் சரியான எதிரியாக சந்திரன் மதிக்கவில்லை.

அவன் எண்ணமெல்லாம்; மோகன்ராவின் தொழில் குறைந்தால் தான், தன் தொழில் வளரும் என்பதுதான்!

* * *

அளவுக்கு மீறிய வேலையின் காரணமாக மோகன்ராவின் கண்களில் ஏதோ கோளாறு. அதற்குப் பிரமாதமாக எதுவும் வைத்தியம் தேவையில்லை. கம்பௌண்டரிடம் சொல்லியிருந்தால், மருந்து ஊற்றிச் சரி செய் திருப்பான். அதற்குப்போய், "சந்திரனைக் கூட்டிவா" என்று அவர் சொல்ல, சந்திரனும் வந்துவிட்டான். அவன்மீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. மோகன்ராவ் சர்வ சாதாரணமாக ஒரு மருந்தின் பெயரைச் சொல்லி, "அதை எடுத்து நன்றாக என் கண்களில் விடு! நாளை சரி யாகிவிடும்" என்றார் படுக்கையில் கிடந்தபடியே.

மாலை நேரம். அறைக்குள் வெளிச்சம் போதிய அளவுக்கு இல்லை. விளக்கைப் போட்டுக்கொள்ளாமல் வேலை செய்வது மிகவும் தவறு! சந்திரன் துணிந்து விட்டான். அவன் கைகள் நடுங்குவதை கவனிக்க டாக்டர் மோகன் ராவ் கண்களைத் திறந்தா வைத்துக்கொண்டிருக் கிறார்?

'மள, மள' வென்று மருந்தை ஊற்றிவிட்டான் சந்திரன்.

கண்கள் எரிச்சல் கண்டபோதுதான், மோகன் ராவ் பதறியபடி கேட்டார்.

"என்ன மருந்தையப்பா கண்களில் ஊற் றினாய்?" என்று—"ஹா!" என்று சப்தம், அதை தொடர்ந்து "ஐயய்யோ, அம்மருந்தையல்லவா ஊற்றிவிட்டேன். கண்கள் குருடாகிவிடுமே" என்ற சந்திரனின் அலறல் சப்தம் கேட்டு உள்ளே நுழைந்த கம்பௌண்டர், சந்திரன் மயக்கமடைந்து விழுந்திருப்பதையும், மோகன் ராவ் துடித்துக்கொண்டு இருப்பதையும் தான் கண்டான்.

காலம் கடந்துவிட்டது! டாக்டர் மோகன்ராவ் குருடரானார்.

3

அப்போது சீதா கர்ப்பவதி. மோகன்ராவ் டிஸ்பென்ஸரியை கவனிக்காமல் விட்ட திலிருந்து டாக்டர் சந்திரனுக்கு நல்ல வரு மானம். மற்றவர்கள் யாருமே நடந்ததைக் குறித்து சந்தேகப்படவே இல்லை. அறியாமல் நடந்துவிட்ட விஷயம்! அதற்குப் போய் சந்தி ரன் எப்படி பொறுப்பாளியாவான்? மோகன் ராவ் முதற்கொண்டு டாக்டர் ஆசீர்வாதம் வரை, அதை எதிர்பாராத நிகழ்ச்சி என்றுதான் முடிவு கட்டிவிட்டார்கள். பற்றாக்குறைக்கு சந்திரன் தான் மோகன்ராவின் அருகிலேயே இருந்து உப சாரம் செய்துகொண்டிருக்கிறானே!

அவன் மனதில் கெட்ட எண்ணம் இருந்திருந் திருந்தால் மோகன் ராவின் முகத்தில் விழிக்கா மல் அல்லவா இருக்க வேண்டும் என்று மற்றவர் கள் நினைத்தார்கள். பாவம்! உண்மையறியா தவர்கள் அவர்கள்!

* * *

நாட்கள் வேகமாக உருண்டு மாதங்களை உருவாக்கின, அவைகளும் விருத்தியா யின! மோகன் ராவ் கண் இழந்தவராகவே

இருந்தார். பத்தாயிரம் இருபதாயிரம் ஆயிற்று! "எவ்வளவு கேட்டாலும் தருகிறேன்" என்றான் சந்திரன். ஆனால் யாரும் 'கண் தானம்' செய்ய முன் வரவே இல்லை. ஆசீர்வாதம் சொன்னது போல் இனி எந்த முயற்சியும் எடுக்காமல் பேசாமல் இருந்து விடலாம் என்று மோகன் ராவ் முடிவு செய்தார்.

"உம்! பிரபல கண் டாக்டர் குருடாக இருக்கிறார்" என்று தமக்கு தாமே சொல்லிப் பார்த்து சிரித்துக் கொண்டார் மோகன் ராவ். அவர் கதை அப்படியாகிவிட்டது!

*     *     *

டாக்டர் சீதாவுக்குப் பிறந்த ஆண் குழந்தை அழகாக இருந்தது. தகப்பனுக்கு தொழில் மேலும் விருத்தியாகும் என்று குழந்தையின் ஜாதகம் கூறியது. குழந்தை பிறந்து இரண்டு தினங்களுக்குப் பின்.

"இங்கே வந்து பார்த்தீர்களா?" என்ற சீதாவின் கதறலைக் கேட்டு சந்திரன் ஓடிப்போய் குழந்தையைப் பார்த்தான்.

குழந்தையின் கண்கள் திறந்திருந்தன. ஆனால் அதில் ஒளி இல்லை!

'திகீர்' என்றது சந்திரனுக்கு.

தன் வினை குழந்தையைத் தீண்டிவிட்டதா? ஒரு வாரத்தில் சரியாகிவிடும், இரண்டு வாரத்தில் சரியாகிவிடும் என்று பொறுத்திருந்து பார்த்ததெல்லாம் வீணாகியது.

குழந்தை குருடாகவே இருந்தது! இப்போது மட்டும் டாக்டர் மோகன்ராவ் இருந்திருந்தால்! விவரம் வெளியில் யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை, சீதாவைத் தேற்ற சந்திரனால் முடியவில்லை. "இப்படிப்பட்ட குழந்தைக்கு, குழந்தையே இல்லாமல் இருந்திருக்கலாமே!" என்று கதறினாள் அவள்.

தன்னுடைய தவறு, இப்படிப் பழி வாங்கி விட்டது என்று சொன்னாலாவது, அவள் ஆறுதல் அடைவாளோ என நினைத்து, சந்திரன் தான் செய்த செய்கையை அவளிடம் மெதுவாகச் சொன்னான்.

தன் மனைவி தன்னை மன்னித்துவிடக்கூடும் என்று அவன் நினைத்தது இயற்கை! ஆனால், இதென்ன? முழுவதும் கேட்டதும் இப்படிக் காளிபோல் சீறி விழுகிறாளே! விளைவு மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

4

"உண்மையைத்தான் சொல்லுகிறீர்களா? இவ்வளவு நாட்களுக்குப் பிறகு எனக்குக் கண் கொடுக்க வந்த புண்ணியவான் யார் டாக்டர்?" என்று மோகன்ராவ் ஆசீர்வாதத்தை வினவினார்.

"தன் பெயரை அந்த நபர் வெளியில் சொல்லக் கூடாது என்று என்னிடம் வாக்குறுதி பெற்றிருக்கிறார். அவருக்குப் பணம்கூட வேண்டாமாம்!" என்றார் ஆசீர்வாதம்.

மோகன்ராவுக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

"என்னது; பணமும் வேண்டாமா? அவர் மனிதப் பிறவியே அல்ல போலிருக்கிறதே. வாலிபன் என்கிறீர்கள்; அவர் வாழ்க்கையை ருசிக்க வேண்டாமா? எனக்காகத் தியாகம் செய்ய என்ன காரணம்? அவர் பெயர் என்ன? இதையெல்லாம் அறியாமல் நான் அவர் கண்களைப் பெற்றுக் கொள்வதற்கில்லை" என்றார் மோகன்ராவ்.

"எதையுமே அவர் சொல்லமாட்டாராம். உங்களுக்கு கண்கள் தானம் செய்து, அதன் மூலம் எத்தனையோ குருடர்களை குணப்படுத்த அவர் முயல்கிறார். அவர் குழந்தையும் பிறவிக் குருடாம். நீங்கள்தான் அதற்குப் பார்வை கொடுக்க வேண்டுமாம். அதுதான் அவர் உங்களிடம் எதிர்பார்க்கும் ஒரே உதவி! உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நான் சொல்லி அனுப்பி விடுகிறேன்" என்றார் ஆசீர்வாதம்.

பெயரைச் சொல்ல விரும்பாத பிறகு அதை வற்புறுத்திப் பயன் இல்லை. அதற்காக கண்களை பெறாமல் விடுவானேன்?

மோகன்ராவ் எவ்வளவோ கேட்டும், ஆசீர்வாதம் வாக்குறுதியை மீற மறுத்துவிட்டார்.

அதனால் மறு பேச்சின்றி மோகன்ராவ் ஆபரேஷனுக்குத் தயாராகிவிட்டார். அவர் மனதில் அப்போது ஒரே ஒரு எண்ணம்; தனக்கு கண் கொடுத்து உதவியவனின் குழந்தையை, எப்படியாவது உலகைப் பார்க்கும்படி செய்யவேண்டும். அதுவே அவரது வாழ்வின் லட்சியமாக அமைந்திருந்தது.

சரியாகப் பத்து தினங்களுக்குப் பிறகு, டாக்டர் மோகன்ராவ், தானம் பெற்ற கண்களின் மூலம் உலகைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பத்துமணிக்குக் குழந்தையை கொண்டு வரும்படி அவர் சொல்லி அனுப்பியிருந்தார். சொன்ன நேரத்திற்கு குழந்தையும் வந்தது தாயுடன்!

சீதாவைக் கண்டவுடன்தான் டாக்டர் மோகன்ராவுக்கு எல்லாமே புரிந்தது. சந்திரனை எங்கே காணோம் என்று சீதாவிடம் கேட்கவில்லை அவர்!

# விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

## புற்றுக்கு ரசாயன மருந்து

நோய்க்கிருமிகளை அழிக்கவல்ல ரசாயனப் பொருள்களில் 'சல்பா' மருந்துகள் முக்கியமானவை. அவை பல நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகின்றன. புற்றுநோயைக் குணப்படுத்தவல்ல ரசாயனப் பொருள் ஒன்றைக் கண்டுபிடிப்பதிலும் பலநாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களது முயற்சிக்கு வெற்றி கிட்டக்கூடும் என்ற நம்பிக்கை அண்மையில் நடந்த சோதனையொன்றால் ஏற்படுகிறது. பிள்ளைப் பேற்றுக்குப் பின் பெண்களுக்குக் கருப்பையில் ஒருவகைப் புற்றுநோய் தோன்றுகிறது. இந்நோய் கண்டு மிக மோசமான நிலையில் இருந்த 16 மாதருக்கு "மீதோடிரக்ஸேட்" என்னும் ரசாயனப் பொருளை மருந்தாகப் பயன்படுத்தியதில் 6 பேருக்கு நோய் நிலையாகக் குணமாயிற்று. வேறு 5 பேருக்கு நோய் குணமாகியது. ஆனால் மருந்தை நிறுத்தியதும் மீண்டும் தோன்றியது. இவர்கள் மீண்டும் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். இன்னும் மூவருக்கு அபிவிருத்தி இருந்தது. மற்ற இருவர் சிகிச்சையின்போதே இறந்துவிட்டார்கள். இம்மருந்தைக் கொண்டு மேலும் சோதனைகள் நடத்த முடிவு செய்திருக்கிறார்கள்.

## நல்ல வெயில்!

"இந்த வருஷம் உண்மையிலேயே வெயில் மிகக் கடுமையாகத்தான் இருக்கிறது" என்று ஒவ்வோர் ஆண்டும் நாம் அங்கலாய்க்கிறோம். கடந்த கோடையின் கொடுமையை ஓர் ஆண்டுவரை நினைவு வைத்திருக்க முடியாது என்பதுதான் இதற்குக் காரணம். வெப்பமானிகளைக்கொண்டு அளவிட்டால் வெப்பநிலையில் எவ்வித மாறுதலும் இராது. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக உலகெங்கும் செய்த அளவுகளிலிருந்து பார்த்தால் மொத்தத்தில் உலகம் சற்று சூடேறிவருகிறது என்றுதான் கொள்ளவேண்டும். 1900-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உலகத்தின் சராசரி வெப்பநிலை சுமார் 2 டிகிரி கூடியிருக்கிறது. இது நம் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் அளவு பெரிதல்ல. ஆகையால் இது விஞ்ஞான ஆராய்ச்சியாளர் மட்டுமே கவனிக்க வேண்டியதொரு உண்மை. இதற்கு மூன்று காரணங்களைக் கூறுகிறார்கள். உலகத்தில் தொழில் வளர்ச்சி அதிகமாய் விட்டது. தொழிற்சாலைகளில் இருந்து அதிகமான கரியமிலவாயு வெளிவருகிறது. காற்று மண்டலத்தில் உள்ள கரியமில வாயுவும், நீராவியும் புவியின் வெப்பம் வெளிவராது தடை செய்கின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் இவ்விரு பொருள்கள் புவியைச் சூடேற்றக் கூடும். இது முதற் கருத்து. இரண்டாவது கருத்துப்படி, சூரியனில் 80 ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் மாறுதல்களால் அது வெளிவிடும் வெப்பம் குறைவாகவும் கூடுதலாகவும் இருக்கும். மூன்றாம் கருத்துப்படி, உலகத்தின் எரிமலைகளிலிருந்து வெளிவரும் தூசு காற்று மண்டலத்தில் ஒரு போர்வைபோல் அமைந்து சூரிய வெப்பம் புவியிலிருந்து வெளியேறாது தடைசெய்கின்றது. காரணம் எதுவானாலும், இவ்வாண்டு சென்ற ஆண்டைவிட வெயில் அதிகம் என்பதில் கடுகளவு உண்மையிருக்கிறது.

## கவலையும் உடல்நிலையும்

உள்ளக் கிளர்ச்சியும், கவலையும் பலவகைகளில் உடல் நிலையைப் பாதிக்கக்கூடும் என்பதற்கு ஒவ்வொரு நாளும் புதுப்புதுச் சான்றுகள் வெளிவருகின்றன. ரத்தத்தில் உள்ள ரசாயனப் பொருள்களில் கொலஸ்டிரால் என்னும் பொருளும் ஒன்று. இது கொழுப்பையொத்த அமைப்புக் கொண்டது. இது சுத்த ரத்தக் குழாய்களைக் கடினமாக்கி இருதயக் கோளாறுகளுக்குக் காரணமாகிறது என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள். ஆகையால் ரத்தத்தில் இது அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது அவசியம். ஆனால் உள்ளத்தில் கிளர்ச்சியோ, கவலையோ ஏற்பட்டால் இதன் அளவு மிகக் கணிசமாக அதிகரிக்கிறது என்று கண்டிருக்கிறார்கள். கல்லூரி மாணவர் பலரைக்

கொண்டு சோதனை நடத்தினர்கள். தேர்வுக் காலத்தில் அவர்கள் அனைவர்க்கும் கவலையும், மனக்கிளர்ச்சியும் அதிகமாகவது இயற்கை. இச்சமயத்தில் அவர்கள் அனைவர்க்கும் ரத்தத்தில் இப்பொருளின் அளவு அதிக மாயிற்று. இயற்கையிலேயே எளிதில் மன அமைதியை இழக்கும் மாணவர்களுக்கு இது சாதாரண அளவைப் போல் இரு மடங்காகி விட்டது. இதனல் உடனடியாக உடல்நிலை எவ்வாறு மாறும் என்று தெரியவில்லை. ஆனல் தற்கால எந்திர நாகரிகத்தின் விளைவாகவும், இப்போதைய உலக நிலைமையிலும், சமூக அமைப்பிலும், மனக் கிளர்ச்சியும், கவலையும் இல்லாது தப்புவது அருமையிலும் அருமை. இந்நிலைமை மனிதனை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதற்கு இச்சோதனையும் ஓர் எடுத்துக் காட்டு. நாகரிக வளர்ச்சிக்கு மானிடன் தரும் விலைகளில் இதுவும் ஒன்று.

## தலையெழுத்தா, தலை யலையா?

"என்ன சார் செய்வது? அவன் தலையெழுத்து அப்படி இருக்கும்போது அவன் அப்படிச் செய்யாமல் இருப்பானு?" என்று பொதுவாகக கூறுகிருேம். ஆனல் இதை விட "அவன் தலை அலை அப்படி" என்று கூறுவதுதான் பொருத்தமானது என்று தற்கால மருத்துவ ஆராய்ச்சி கூறுகிறது! ஒருவனது கையெழுத்திலிருந்து அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடிகிறது. அதனல்தான் கையெழுத்து என்பது நீதி மன்றத்தில் முக்கியமான சான்ருகக் கருதப் படுகிறது. அதைப் போலவே ஒருவனது மூளையில் தோன்றும் மின்சார அலைகளின் தன்மை அவனுக்கே சிறப்பானது என்று தெரிகிறது. ஓய்வான நிலையில் ஒருவனை இருத்தி, அவன் ஆழ்ந்த சிந்தனையிலோ, கவலையுடனே இல்லாத சமயத்தில் மின்சாரக் கருவிகளின் உதவியால் மூளையில் தோன்றும் மின்னலைகளைப் பதிவு செய்கிருர்கள். அவ்வாறு செய்தால் ஒவ்வொரு மூளையும் அதற்கே சிறப்பான அலைகளை வெளிவிடுகிறது. கையெழுத்தைப் பார்த்து அதிலிருந்து ஒருவனது குண விசேஷங்களைக் கூற முடியும் என்று கூறுகிருர்கள். இது வெறும் புரட்டு என்று வாதிப்போரும் உண்டு. இது எப்படி ஆயினும் மூளையலைகளை ஆராய்ந்து ஒருவனது உள்ளக் கிடக்கைகளையும், கவலை அச்சம் முதலியவற்றின் தன்மையையும், கோளாறுகளையும் ஆராய்ந்தறிய முடியுமாம். இதற்கு மனநூலில் விசேஷப் பயிற்சி தேவை. ஆனல் இவ்வலைகளைத் தற்காலக் கணக்கியல் எந்திரங்களின் உதவியால் எளிதில் ஆராயலாம். ஆகையால் இம்முறையில் உள்ளச் சோதனை செய்யும் முறை எளிதாகும் என்று எதிர்பார்க்கிருர்கள். இதைத் தவிர இம்முறையால் களைப்பு, சோர்வு முதலிய வினைவுகளையும், மருந்துகளால் மூளை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதையும் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிய முடியும்.

## புதுவகை வானெலி

பகைவர்களுக்குத் தெரியாத வகையில் ஓரிடத்திலிருந்து இன்னெென்றிற்குச் செய்தி அனுப்பும் முறை ஒன்றை அமெரிக்க ராணுவத்தினர் கண்டுபிடித்திருக்கிருர்கள். ஒளியானது அலைவடிவானது. பலவேறு நிற ஒளியில் சிவப்பு ஒளியின் அலைகள் நீளமானவை. அவற்றைவிட நீளமான ஒளி அலைகளும் உண்டு. அவை அகச் சிவப்பு அலைகள் (Infra-red Rays) எனப்படும். அவை கண்ணுக்குப் புலனுகா. வெப்ப அலைகள் இத்தகையவை. ஓரிடத்தில் மைக்ரோபோனின் உதவியால் ஒலியை மின்சார அலைகளாக மாற்றுவார்கள். இம்மின்னலைகள் அகச்சிவப்பு அலைகளைத் தோற்றுவிக்கும். இவ்வலைகள் இன்னெரு இடத்தைஅடைந்து ஒரு கருவியில் மீண்டும் மின்னலைகளாக மாறும். இவ்வலைகள் அதே ஒலியைத் தோற்றுவிக்கும். சாதாரண ரேடியோ அலைகளில் செய்தி அனுப்பினல் பகைவர்கள் அதைக் கண்டுகொள்ள வாய்ப்பு இருக்கும். ஆனல் இம்முறையிலோ பகைவன் அகச் சிவப்பு அலைகள் வெளியாகின்றன என்பதை முன்னரே தெரிந்துகொண்டு அவை வரும் திசையில் கருவியை அமைத்தாலொழிய செய்தி அவனுக்குக் கிடைக்க வழியில்லை. சற்றுத் தொலைவுக்கு ஒன்ருக வலிவூட்டும் கருவிகள் பலவற்றை அமைத்து இம்முறையில் பல நூறுமைல் செய்தி அனுப்பமுடியும். இம்முறையில் எவ்வளவு செலவாகும் என்று தெரியவில்லை.


## உணவில் நஞ்சு

நஞ்சு கலந்த உணவை உண்ட துணை ராணுவத்தினர் மாண்ட கோர விபத்து நாட்டையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. உணவுப் பொருள்களைத் தயாரிப்பதிலும், அவற்றை ஓரிடத்திலிருந்து இன்னெென்றுக்கு அனுப்புவதிலும், அவற்றைச் சமைத்துப்

பரிமாறுவதிலும் நமது நாட்டில் எத்தகைய கவனமும் செலுத்துவதில்லை. பெயரளவில் சில சட்ட திட்டங்கள் இருந்தாலும் நாம் அவற்றை பொருட்படுத்துவதில்லை. ஆகையால் எப்போதோ ஒரு விபத்து நேருவது வியப்பல்ல. இத்தகைய கோர சம்பவங்கள் இன்னும் அதிகமாக நிகழாமல் இருப்பது தான் வியத்தற்குரியது. இவ்வளவு அபாயத்தையும் தப்பிப் பிழைத்திருக்கும் நமது ஆயுள் கெட்டியானதுதான். மேற்கூறிய அபாயத்தையும், கலப்பட மன்னர்களின் கைவரிசையையும் தவிர வேறொரு வகை அபாயத்தையும் நாம் சில சமயங்களில் சமாளிக்க நேரலாம். உணவுத்தானியங்கள் முதலியவற்றைப் பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பதற்காகச் சில ரசாயனப் பொருள்களை அவற்றின் மேல் தெளிக்கிறார்கள். கடுமையான சோதனைகள் செய்து, ஒரு ரசாயனப் பொருள் மனிதருக்கும், ஆடு, மாடுகளுக்கும் தீங்கு விளைவிக்காது என்று கண்டபின்னரே அதைப் பூச்சிக் கொல்லியாகப் பயன்படுத்தத் துணிகிறார்கள். ஆயினும் சோதனைகளில் தெரியாத அபாயம் சில சமயங்களில் பின்னர் விபரீத வகையில் வெளியாகிறது. 'பாராதிரான்' என்பது ஒரு ரசாயன பூச்சிக்கொல்லி. பழத்தோட்டங்களில் பழங்களையும், மரங்களையும் பாதுகாப்பதற்காக இப்பொருளைத் தெளிக்கிறார்கள். இத்தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் காலப்போக்கில் நோய்வாய்ப்படுவது கண்டார்கள். இதன் காரணத்தைத் தெரிந்து அறியும் பொருட்டு ஆறாண்டுக் காலம் சோதனை நடத்தியதில் பூச்சிக் கொல்லித் தூள் மேலே படுவதால் காலப் போக்கில் அவர்களது ரத்தம் கெட்டு அவர்களுக்கு நோய் வருவது கண்டார்கள். இத்தகைய கோளாறுகள் மற்ற பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதாலும் ஏற்படலாம். இது பற்றிய ஆராய்ச்சிகளை யார் செய்யப் போகிறார்கள்.

## பெருகும் மக்கட் தொகை

உலக மக்கட் தொகை பற்றிய சில விவரங்களை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சமூகவியற்பிரிவு வெளியிட்டிருக்கிறது. பின் தங்கிய நாடுகள் எனக்கருதும் பகுதிகளில் மக்கட் தொகை அமோகமாகப் பெருகி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் உலக மக்கட் தொகை பாரதத்தின் மொத்த மக்கட் தொகையில் சுமார் அரைப்பங்கு, அதாவது 17 கோடி, பெருகியிருக்கிறது! இது ஆண்டுக்கு 1·7 சதவிகிதம் ஆகிறது. இவ்விதம் 1950-ம் ஆண்டின் விகிதத்தைப் போல் இருமடங்கு. பிற்போக்கு நாடுகளில் எப்போதும் ஜனன விகிதமும் மரண விகிதமும் அதிகம். அதனால் அங்கெல்லாம் மக்கட் தொகைப் பெருக்கம் அவ்வளவாக இல்லாமல் இருந்தது. ஆனால் சென்ற போருக்குப் பின் உலகில் முன்னைவிடச் சுகாதார வசதிகள் பெருகிவருகின்றன. அதனால் மக்கட் தொகை பெருகுகிறது. ஆசியநாடுகளைவிடச் சுகாதார வசதிகள் மிகுதியான மத்திய, தென் அமெரிக்க நாடுகளில் மக்கட் தொகை 3 சத விகிதம் பெருகுகிறது. இது வரை எக்காலத்திலும் எந்நாட்டிலும் இவ்வளவு அதிகமாக மக்கள் பெருகியதில்லை! ஐரோப்பாவில் ஜன நெருக்கமும், பெருக்கமும் மிகுதியான நாடு இத்தாலி. அங்கே கூட அண்மையில் கருத்தடை இயக்கம் வலுவடைந்து பெருக்க விகிதம் குறைந்துவிட்டது. ஜப்பானில் ஜனப் பெருக்கம் எப்போதும் பெரும் பிரச்னையாக இருந்துவந்திருக்கிறது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளாக அங்கே ஜனக் குறைப்பு இயக்கம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. கருத்தடைப் பிரசாரம் நடக்கிறது. கரு அழிப்பும், செயற்கை முறையில் மலடாக்குதலும் சட்ட விரோதமானவை யல்ல என்று ஆயிற்று. இந்த நடவடிக்கைகளின் பயனாக அங்கே இப்போது ஜனப் பெருக்கம் பிரான்ஸ் நாட்டைவிடக் குறைந்துவிட்டது. ஐரோப்பாவிலேயே மக்கட் தொகைப் பெருக்கம் குறைவான நாடு அது! ஜப்பானியர் அந்நாட்டினரையும் குடும்பக் கட்டுப்பாட்டில் மீறிவிட்டார்கள்! அவர்கள் மனம் வைத்தால் சாதிக்காதது உண்டா?



"களுக், களுக்......களுக், களுக்" களங்கமற்ற சிரிப்பு. உண்மை இன்பத்தின் இனிய ஒலி. மனித இதயத்தின் மகிழ்ச்சிக் கூவல்.

கோடை காலம். வாசல் வராந்தாவில், பரந்த வானவெளியைப் பார்த்த வண்ணம், படுத்திருந்த ராஜாமணிக்கு இந்தச் சத்தம் கொஞ்சம், நஞ்சம் இருந்த நித்திரையையும் அடியோடு போக்கிவிட்டது. வானத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மின்மினி நட்சத்திரங்களும் தன்னைப் பார்த்து பரிகசித்துக் கண் சிமிட்டி நகைப்பதாகவே தோன்றிற்று.

அன்று மாலைதான் தன் காரியாலய விஷயமாக சர்க்கரை ஆலைக்குப் பெயர் போன நிஜாம் நகருக்கு வந்து சேர்ந்தான். சென்னையிலிருந்து




# பெண் மனம்

கே. எஸ். ராமாநுஜம்

இரண்டுநாட்கள் முன்புதான் ஹைதராபாத்திற்கும் ஆகாய விமானமூலம் வந்தான். ஆபீஸ் காரியமாகவே பிரயாணம் நேர்ந்திருந்ததெனினும் இம்முறை அவன் மனைவியும் பிடிவாதமாக அவனுடன் ஹைதராபாத்திற்கு வந்திருந்தாள். அவளையும் நிஜாம்நகருக்கு அழைத்துப்போவதற்கு முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்தான். அவ்வாறே தன் காலஞ்சென்ற தகப்பனாரின் ஆப்த நண்பர்–சர்க்கரை ஆலையில் ஒரு நடுத்தர அதிகாரி பஞ்சாபகேச அய்யருக்கும் எழுதியிருந்தான். அவர் அந்த ஆலை ஆரம்பித்த நாள் முதற்கொண்டு வேலை பார்த்து வருபவர். நிஜாம் நகர் ஹைதராபாத்திலிருந்து 80 மைல் தூரம்தான் என்றாலும், அந்தக் கோடை வெயிலில் பஸ்ஸிலோ, அங்குள்ள மீட்டர் கேஜ் ரயிலிலோ வந்தால் தன் பழங்கால ஆப்த நண்பரின் பிள்ளையும் அவன் இளம் மனைவியும் சிரமப்படுவார்களோ என்று எண்ணி சர்க்கரை ஆலையின் காரை ஹைதராபாத்திற்கே அனுப்பி அன்புடன் அழைத்துவர ஏற்பாடு செய்திருந்தார் அவர். அவருக்கு அவசர வேலை இருந்ததால் தானே போய் அழைத்துவர இயலாமற் போயிற்று. 5 மணிக்கு வருவதாக இருந்த கார் 7 மணிக்கே நிஜாம் நகரைச் சேர்ந்தது. சிறிய வீடுதான். வாசலில் தயாராகக் காத்திருந்தார் பஞ்சாபகேச அய்யர் "வாப்பா, வா. உன் அகமுடையாள் எங்கே?" என்று ஆவலுடன் கேட்டார். "அவளும் வர மிகவும் ஆவலாகத்தான் இருந்தாள் மாமா. நிஜாம்நகர் போகவேண்டுமென்று நான் திட்டம் போட்ட அன்றிலிருந்தே அவளும் மூட்டை கட்ட ஆரம்பித்து விட்டாள். ஆனால், திடீரென்று நேற்று மாலையிலிருந்து தலை கனத்துக் கொண்டு இன்று காலையிலும் அவள் ஒரு மாதிரியாகவே இருந்தாள். காரில் 80 மைல் இந்த வெயில் காலத்தில் தாங்காதென்று ஹைதராபாதில் உள்ள அவள் சிநேகிதி ஒருவள் பிடிவாதமாகத் தடுத்து அவளைக் கிளம்பாமல் நிறுத்தி விட்டாள். 'இதொன்றும் பிரமாதமில்லை. என் மாமனாரின் நண்பரும் அவர் குடும்பத்தினரும் வருத்தப்படக் கூடாது,' என்று எவ்வளவோ சொல்லியும் அவள் சிநேகிதி சுலோசனா கேட்கவேயில்லை மாமா," என்று விட்டுக்கொடுக்காமல் பேசியிருந்தான். அவன் விஷயம் அவனுக்கல்லவோ தெரியும். எப்படிப்பட்ட பொய் சொன்னான்! என்பதை நினைத்தாலே மனதில் பெரிய பதட்டம் ஏற்பட்டு அவன் உள்ளம் வேதனையடைந்தது. சென்னையிலிருந்து வரும்போதே அவன் தன் மனைவி சரோஜாவிடம் தான் நிஜாம்

நகர் போகவேண்டுமெனவும் அவளும் அங்கு வருவதாயிருந்தால்தான் தன்னுடன் வரலாமெனச் சொல்லியிருந்தான். அவள் தன் சுபாவ குணத்தில் ஒரு மாதிரியான மௌனம் சாதித்திருந்தாள். ஹைதராபாத்தில் தன் பள்ளிக்கூட சிநேகிதி சுலோசனாவிற்கு கடிதம் போட்டிருந்தாள். அவள் கணவனுக்கு ஒரு சிகரெட் கம்பெனியில் வேலை. ஹைதராபாத் விமான நிலையத்தில் அவர்கள் இவர்களை எதிர் நோக்கி வந்திருக்கவில்லை! தன் மனைவி பெரிதாய் போற்றிச் சொன்ன சிநேகிதி உபசாரம் இவ்வளவுதானா என்றும் பரிகசிக்க முயன்றிருந்தான். ஆனாலும் எப்போதும்போல் தன்னுடனே பிறந்து பூரண வளர்ச்சி அடைந்திருந்த அதிகார தோரணையுடன் "ஆமாம் எல்லோருக்கும் நமக்குள்ளதைப்போல் சௌகரியமிருக்கிறதா என்ன? சுலோவின் கணவனுக்கு என்ன இடைஞ்சலோ. அவர்களிடமோ கார் இல்லை. இந்தக் காலத்தில் பஸ்ஸையும், டாக்ஸியையும் நம்பி விமான நிலையத்திற்கு சரியான சமயத்தில் வந்து சேரமுடிகிறதா!" என்று அவனை மடக்கியிருந்தாள். தானே முன்னேற்பாடுடன் செய்திருந்த அஜந்தா ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மாலையில் அவர்களைப் பார்க்க தன் மனைவியின் சிநேகிதி சுலோசனாவும் அவள் கணவனும் வந்தபோது 'பிரயாணம் நன்றாயிருந்ததா', என்று மிகவும் சாதாரணமாகக் கேட்டார்களே ஒழிய தாங்கள் விமான நிலையத்திற்கு வரவேண்டுமென நினைத்ததாகவே தெரியப்படுத்தவில்லை.

சுலோவும், அவள் கணவனும், தன்னையும் தன் மனைவியையும், தங்கள் வீட்டிற்குக் கூப்பிடுவதற்குப் பதிலாக ஹோட்டலிலேயே தன்னுடனும் தன் மனைவியுடனும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, சரோஜாவும், சுலோவும் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி தன் செலவிலேயே சினிமாவும் பார்த்துவிட்டு அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டனர். இதெல்லாம் ராஜாமணிக்குப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும் மறுநாள் காலை சுலோ மட்டும் வந்து எங்கோ ஷாப்பிங் போவதாக தன் மனைவியை அழைத்துக்கொண்டு போனபோது ராஜாமணி அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

நிஜாம் நகரில் தான் செய்யவேண்டிய பொருப்பான வியாபார வேலையைப் பற்றியே கவலைப்பட்டுக்கொண்டு அதற்கான விபரங்களை மனதில் எண்ணியவாறு இருந்ததாலேயே வேறு ஒரு எண்ணத்திற்கும் அப்போது இடமிருக்கவில்லை. நிஜாம் நகருக்கு பகல் 2½ மணிக்குக் கிளம்புவதாக இருந்தது. 2 மணிக்கே பஞ்சாபகேச அய்யர் ஏற்பாடு செய்திருந்த சர்க்கரை ஆலையின் கார் வந்துவிட்டது. சரோஜா மிகவும் சாவதானமாக 2 மணிக்கே சுலோ சகிதமாக வந்தாள். வெளியே காரைப் பார்த்திருந்ததனால் வந்தவுடனேயே ராஜாமணியிடம், "நீங்கள் மட்டும் நிஜாம் நகருக்கு போய்விட்டு முடிந்த சீக்கிரம் வந்து விடுங்கள். சுலோ என்னை நிறைய இடங்களுக்கு அழைத்துப் போவதாகச் சொல்கிறாள்" என்றாள். "அது சரி; பஞ்சாபகேச அய்யர் அப்பாவின் ஆப்த நண்பர். நீயும் வருகிறாயென்றுதானே அவ்வளவு தொலைவிருந்து காரை அனுப்பியிருக்கிறார்" என்று ராஜாமணி சொன்னதற்கு அவள் "நிஜாம் நகரில் ஒன்றும் இல்லை என்று சுலோ சொல்கிறாள். நாமோ சென்னைக்கு சனிக்கிழமை போவதாக இருக்கிறோம். இன்று செவ்வாய்க்கிழமை. கொஞ்சநாளே இருக்கிறது. பார்ப்பதற்கும், வாங்குவதற்கும், இங்கு நிறைய, நிறைய இருக்கிறதாம். நான் வரமுடியாது; என்னை வீணாகத் தொந்தரவு படுத்தாதீர்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். அதற்கு மேல் அவனால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. நன்றாகப் படித்துப் பாஸ் செய்ததிலோ, முக்கியமான இஞ்ஜினீரிங் கம்பெனியில் நல்லதொரு வேலை பார்ப்பதிலோ ராஜாமணிக்கு ஒரு குறையும் இல்லைதான். இருந்தாலும் பணக்கார இடத்துப் பெண்ணை—பல காரணங்களினாலும்—கலியாணம் செய்துகொண்டதற்கு இதையெல்லாம் அனுபவித்துத்தானாக வேண்டுமென்று கலியாணமான ஒரு சில மாதங்களுக்குள்ளேயே தெரிந்துகொண்டான். பெண் சுமார்தான். படிப்பும் பத்தாவதுவரைதான். இருந்தாலும் எவ்வளவு அகம்பாவம்! ஆனால் அவள் தகப்பனார் திருப்பூரில் ஆலை ஒன்றுக்கு மானேஜராக வேலை பார்த்து நிறைய சம்பாதித்திருந்தவர். நிறைய சீருடன் கலியாணத்தைத் தடபுடலாகச் செய்து, மாப்பிள்ளைக்கு நல்லதொரு காரும் வாங்கிக் கொடுக்கிறேன் என்று பெண்ணின் தகப்பனார் தஞ்சாவூரிலுள்ள தங்கள் சிறிய வீட்டுக்குப் பெரியதொரு புதுக்காரில் வந்து பிள்ளை கேட்டு அப்படிச் சொன்னபோது தன் தகப்பனாரும் தாயாரும் அசந்தே போய்விட்டனர்.

பெண்ணைப் பார்க்கப் போனபோது அவர்களுக்கோ, ராஜாமணிக்கோ பெண் பிடித்ததென்றோ, அந்த சம்பந்தம் மிகவும் திருப்தியாயிற்றென்றோ சொல்லமுடியாது. அதைத் தெரிந்துகொண்டுதானோ என்னவோ, மிகவும் சுவாதீனமாக "ராஜாமணிக்கு சென்னையில் பெரிய கம்பெனியில் வேலைக் கிடைத்துவிட்டதாமே. எல்லாம் சரோவின் அதிர்ஷ்டம்தான். சரோவை நாங்கள் வளர்த்து வந்திருக்கும் விதம் இப்பக்கமெல்லாம் தெரியும். அவளுக்குச் சென்னையில் ஒருவிதமான அசௌகரியமும் இருக்கக்கூடாதென்று சொல்லி எங்கள் கம்பெனியின் சென்னை நிர்வாகஸ்தர் மூலம் மாம்பலத்தில் புதிதாகக் கட்டி முடித்திருந்த அழகானதொரு பங்களாவை ஐந்தாயிரம் ரூபாய் அதிகமாகக் கொடுத்து 50000 ரூபாய்க்கு அவள் பேரிலேயே வாங்கிவிட்டேன்" என்று சரோஜாவின் தகப்பனார் தாராளமாகச் சொன்னபோது, ராஜாமணியின் தகப்பனாரும் தாயாரும் அசந்தே போய்விட்டனர். 22 வயது நிரம்பாத ராஜாமணிக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல், குனிந்த கழுத்து

# கோடை காலத்துக்கேற்ற குளிர்ந்த பானங்கள்

ஆரோக்கியமானவை ! ருசி மிக்கவை !! சத்து நிறைந்தவை !!!

## ஸ்குவாஷ்கள் 777 பிராண்ட் கிரஷ்கள்

சாத்துக்குடி, ஆப்பிள், ஆரஞ்சு, மாதுளை, நன்னாரி, எலுமிச்சை, மாம்பழம் இவைகளைக் கொண்ட குளிர்ந்த நல்ல சுவையுள்ள சத்து நிறைந்த பழரசத் தயாரிப்புகள். வற்றல்கள், ஊறுகாய், பவுடர்கள் மற்றும் அப்பளாம் முதலியவைகளும் கிடைக்கும்.

இந்திய சர்க்காரின் ஆதரவுபெற்ற பழத்தயாரிப்புகள்



மேலே காணும் படம் சென்னை ராஜாஜி ஹாலில், 1957-ஆம் டிசம்பர்-மீ நடைபெற்ற 15-வது உலக சைவஉணவு ஆதரவு மகாநாடு (15th World Vegetarian Congress) விழாவை ஒட்டி ஸ்ரீ கணேஷ்ராம் & கம்பெனியார் ஏற்பாடு செய்த கண்காட்சியில் எடுக்கப்பட்டது. கண்காட்சிக்கு விஜயம் செய்த முக்கிய பிரமுகர்களை இந்தப் படத்தில் காணலாம்

1. வலமிருந்து இடமாக மேன்மை தங்கிய மைசூர் கவர்னர் (மகாநாட்டை துவக்கி வைத்தவர்)
2. ஸ்ரீ சி. சுப்ரமண்யம், கல்வி மந்திரி, சென்னை அரசாங்கம்.
3. புதுடில்லி மத்திய உணவு, விவசாய மந்திரி சபையின் தெற்கு பிராந்திய மார்க்கட்டிங் டெவலப்மெண்ட் ஆபீஸர் ஸ்ரீ J. K. ஜகத்யானி.
4. இடது கோடியில் ஸ்ரீ நாராயணசாமி அய்யர், புரோப்ரைட்டர், ஸ்ரீ கணேஷ் ராம் & கோ & ஸ்ரீராமபவன் ஹோட்டல், (சென்னை கார்ப்பரேஷனிடமிருந்து ரோலிங்ஷீல்ட் பரிசு பெற்றவர்) ஸ்டாலுக்கு விஜயம் செய்த முக்கிய பிரமுகர்களுக்கு ஸ்குவாஷ்களை பற்றி விளக்கி கூறுகிறார்.

தயாரிப்பாளர்கள் :

## ஸ்ரீ கணேஷ் ராம் அண்ட் கம்பெனி

46, தம்புசெட்டித் தெரு :: மதராஸ் — 1



நிமிராமல் வெட்கத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். தஞ்சாவூர் திரும்பும்போது தன் தாயார் தகப்பனார் பேசிக்கொண்ட பேச்சிலிருந்தே அவர்கள் சரோஜாவைத் தனக்கு திருமணம் முடிக்க முடிவு செய்து விட்டதை அறிந்துகொண்டான். அன்று மாலையே சென்னைக்குக் கிளம்பிப் போய் வேலையை ஒப்புக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் ஊர் திரும்பியவுடன் தன் சாமான்களைக் கட்டுவதில் முனைந்திருந்தான்.

அப்போதுதான் அவன் தாயார்-தகப்பனாருக்கும், அன்று அங்கு வந்த அவன் ஒன்றுவிட்ட அத்தைக்கும் நடந்த பேச்சு வார்த்தை அவன் காதில் விழுந்தது. அவள் "இதோ பாருங்கோ, எங்களுக்கு ஒன்றும் பணம் காசு இல்லை யென்பது உண்மைதான். அவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் குடும்ப பாரத்தை நடத்தி வருகிறார். எங்களுக்கு எவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும் இதுவரை உங்களை ஒரு காசு கேட்டதில்லை. ஏதோ ஈசுவர சங்கல்பப்படி எங்களுக்கு நாலும் பெண்களாகப் பிறந்து விட்டது. மூத்தவள் விஜயாவிற்கு வரும் தைக்கு 16 வயதாகப்போகிறது. மன்னார்குடிப் பள்ளிக்கூடத்தில் அவள்தான் முதலாவதாக இருக்கிறாள், ராஜ்யத்திற்கே முதல்வதாகத் தேருவாள் என்று அவள் வாத்தியார் சொல்கிறார். வரும் வருஷம் பத்தாவது முடிக்கிறாள். கண்ணுக்கோ கிளியாட்டம் இருக்கிறாள். பல இடத்திலும் கேட்டுவிட்டோம். முறைப் பிள்ளையை வைத்துக்கொண்டு என்றெல்லாம் சொல்லிச் சொல்லி சால்ஜாப்பு சொல்லி விடுகிறார்கள். எங்களுக்குள்ள குறையெல்லாம் வருமானம் சரியாக இல்லாமலிருப்பதும் சொத்து இல்லாததும் கடன் ரூ. 3500 இருப்பதும்தான். நம் ராஜாவிற்கு வேலையாகி விட்டதென்று கேள்விப்பட்டதும் ஓடோடியும் வந்தேன். அவர் வருவதற்கு சங்கோஜப்பட்டார். பெத்தமனம் அல்லவா. நான் ராஜாவைப் பார்த்து பல வருஷங்கள் ஆகிவிட்டது என்றாலும் ஏதோ எனக்கு ஸ்வதந்திரம் இருப்பதாக நினைத்து வந்து விட்டேன். நீங்கள் எப்படியாவது பெரிய மனது பண்ணி இதற்குச் சம்மதிக்க வேண்டும்", என்று முடித்தாள். அப்பாவோ அம்மாவோ கொஞ்சமும் விட்டுக்கொடுக்கவில்லை. ராஜாமணி திருமண ஏற்பாட்டை முடிவு செய்து விட்டதாகத் தெரிவித்ததோடல்லாமல், அவன் முன் தினமே சென்னைக்குக் கிளம்பிப் போய் விட்டதாக வேறு பொய் சொல்லி வைத்தனர். மிகவும் வருத்தத்துடன் அத்தை போய்ச் சேர்ந்தாள்.

இதெல்லாவற்றையும் கேட்ட அவனுக்கு அப்போது அந்த விஷயம் ஒரு புதிராகவே இருந்தது. பல நாட்கள் அந்த அத்தையின் படபடப்பான உணர்ச்சிப்பேச்சு அவன் மனதில் எதிரொலி செய்துகொண்டுதான் இருந்தது. ராஜாமணியும் அதற்கு முன்பு தன் அத்தையையோ, அவள் கணவரையோ மற்ற குடும்பத்தினரையோ, சரியாகப் பார்த்ததேயில்லை. பிறகு நடந்தேறிய அவன் கலியாணத்திற்கும் அவர்கள் ஒருவரும் வரவில்லை. கலியாணத்திற்குப் பிறகு மாமனார் உதவியால் வெளிநாட்டிற்குப் போய் அங்குள்ள தன் கம்பெனியின் தலைமைக் காரியாலயத்திலேயே இரண்டு வருஷங்கள் வேலை செய்து அதிக அனுபவஸ்தனாய்த் திரும்பி வந்திருந்தான். அவன் வெளிநாடு போயிருந்தபோது ஒரு கார்விபத்திற்கு ஆளாகி அவன் அப்பாவும் அம்மாவும் இறந்துவிட்டிருந்தனர். அப்பாவின் கடிதங்களைப் புரட்டிப் பார்த்தபோதே பஞ்சாபகேச அய்யரைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தான். அதனாலேயே நிஜாம் நகரில் முக்கிய காரியம் வந்தபோது அவருக்கு முன்கூட்டி எழுதமுடிந்திருந்தது. அவரையும் அவன் பார்த்ததில்லை. ஆனால் அவர் தன் தகப்பனாருக்கு எழுதியிருந்த சில கடிதங்களிலிருந்து, அவருடைய மனைவி நோய் வாய்ப்பட்டவள் என்பதை அறிந்துகொண்டிருந்தாள். நிஜாம் நகர் வந்து அவர் வீட்டில் காப்பி குடித்து, அவருடன் வாசலில் உட்கார்ந்தபோது காரியத்தில் குறியாயிருந்த அவன் மிகவும் கடமையுணர்ச்சி யுடையவன்போல் "மாமா, மாமிக்கு மிகவும் உடம்பு என்று அப்பாவிற்கு நீங்கள் எழுதியிருந்த உங்கள் கடிதங்களிலிருந்து தெரிந்துகொண்டிருக்கிறேன். இப்போது எப்படி இருக்கிறது" என்றான்.

இதைக் காதில் போட்டுக்கொள்ள இஷ்டப்படாதவர்போல் அவர் பதிலுக்கு, "ராஜாமணி உன் வேலை விஷயமாகப் பேசி என்ன செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொள்ளலாம். இந்த ஊரில் தண்ணீர்க் கால்வாய்களின் அமைப்பே பிரமாதம். இப்படிக் கொஞ்ச தூரம் போய்வரலாமா? அதோடு மாலை வேளையில் கால்வாயில் குளிப்பது வெகு திருப்தியாக இருக்கும்" என்று பேச்சைத் திருப்பினார். அவர்கள் வெளியே போய்விட்டு இரவு 9 மணிக்கு வீடு திரும்புவதற்குள் அவன் அறிந்துகொண்டிருந்த விஷயம் அவனுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை அளித்திருந்தது. பஞ்சாபகேச அய்யர் நிஜாம் நகருக்கு 20 வருஷங்களுக்கு முன் வந்தார். அதற்கு முன்பே அவருக்கு மணமாகியிருந்தது. மணமாகி இரண்டு வருஷங்களுக்கெல்லாம் ஒருவிதமான 'இரத்தமின்மை' வியாதியும் அதனால் மனோவியாதியும் அவர் மனைவியைப் பீடித்து விட்டது. நிஜாம் நகர் நல்ல இடம். உடம்பு தேறும் என்று நண்பர்கள் சொன்னதாலேயே அங்கு வேலை ஆரம்பிக்

கும்போது கிடைத்த வேலையை ஒப்புக்கொண்டு வந்தார்.

கொஞ்சம் குணம் கண்டதென்றாலும், அவருக்கும் அவர் மனைவிக்கும் அவ்வூர் ரொம்பவும் பிடித்துவிட்டது. ஏதோ, ஈசுவர சங்கல்பமென காலத்தைப் பொறுமையுடன், நம்பிக்கையுடன், போக்க ஆரம்பித்தார்கள். பஞ்சாபகேச அய்யரோ அநேகமாக சமயலும் செய்து குடும்பத்தை நடத்தவேண்டியிருந்தது. காலை 4 மணிக்கே எழுந்து மனைவிக்கு எல்லாவிதமான சிசுருஷைகளும் செய்து, சமயலும் செய்து தானும் உணவருந்தி மனைவிக்கும் அளித்துவிட்டு ஆபீசுக்குப் போவார். ஆபீஸ் முடிந்தவுடன் நேரே வீடு வந்து மறுபடியும் எல்லா வேலைகளையும் மிகவும் பொறுமையாக கவனித்துவிட்டு, படுத்துக் கொள்வார் இவ்விதமான மிகப் பெரும் ஆற்றலுக்கு தன் மனதை மிகத் திடமாகவும், அறிந்ததாகவும் வைத்திருந்தார். வியாதியால் பீடிக்கப்பட்ட மனைவியிடம் அவர்காட்டும் அன்பைப் பற்றிபெருமையுடன் உணராத ஒரு ஆன்மாகூடக் கிடையாது அந்த ஊரில். அவர் மனைவியின் மனம் போகும் போக்கை அவரால் உணர முடியாமல் போயிற்று. தன்னை நொந்து கொள்வாள். பலவிதமாகவும் வருத்தப்பட்டவாறு இருப்பாள். நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் அவர் ஆபீஸிலிருந்து எப்போதும் போல் வீடு வந்தார். என்றுமில்லாத விதத்தில் குதூகலமாக இருந்தாள் அவர் மனைவி. "நான் ஒன்று சொல்லப் போகிறேன். நீங்கள் 'சரி' என்று சத்தியம் செய்வதாக இருந்தால்தான் சொல்வேன்" என்று பீடிகை போட்டாள். "உனக்கு இல்லையென்று சொல்வேனு, உன் மனதிற்கு சந்தோஷம் கொடுத்து உன்னை மறுபடியும் திடகாத்திரமாக ஆக்குவதுதானே என் விருப்பமெல்லாம்" என்று பதிலளித்தார். "முடியவே முடியாது. சத்தியம்-சத்தியம்-சத்தியம் என்று மும்முறை வாய்விட்டுச் சொன்னால்தான் நான் சொல்லுவேன்" என்றாள்.

"அப்படியானல் சத்தியம், சத்தியம், சத்தியம்" என்று வாக்களித்தார்.

"எப்படியாவது நீங்கள் மறுமுறை எனக்காக மணம் செய்துகொள்ளவேண்டும். நான் இருக்கும்போதே இதைச் செய்து முடித்து நம் வீட்டிலும் லக்ஷ்மீ கடாக்ஷமாக சில குழந்தைகளின் ஒலி கேட்கவேண்டும்" என்றாள்.



அவருக்கு இது ஒரு பேரிடியாக இருந்தது. இருந்தாலும் அதை அவர் அலக்ஷியப்படுத்த விரும்பவில்லை. மனதில் பாரத்துடன் மௌனம் சாதித்து தன் வேலைகளைக் கவனிக்கலானார். மாதங்கள் பல கழிந்து போயின. ஒருநாள் மாலை பஞ்சாபகேச அய்யர் வீடு திரும்பியபோது பெட்டியைத் தன் மனைவி அமுக்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். "என்ன விஷயம்" என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தார்.

மன்னார்குடியிலுள்ள என் ஒன்றுவிட்ட தங்கை நம்மை அங்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறாள். ஒரு நல்ல பெண் இருக்கிறாளாம். அவளுக்குப் பெண்ணை ரொம்பவும் பிடித்திருக்கிறதாம். உங்களுக்குக் கொடுப்பதைப் பற்றி அவள் பெற்றோருக்கு மிகவும் சம்மதமாம். பெண்ணிற்கு உங்கள் படத்தைக் காண்பித்து வயதையும்—மற்ற விபரங்களையும்—என்னைப் பற்றியும்கூட,—விபரமாகச் சொல்லிக் கேட்டாய்விட்டதாம். அவளுக்கும் மிகச் சம்மதமாம். உடனே போக வேண்டும்" என்று பரபரப்புடன் ஒரே மூச்சில் சொல்லிமுடித்தாள். அவள் பிடிவாதமாக இருந்ததால் ஆலை மானேஜரை உடனே போய்ப் பார்த்து மறுநாளையே ஊர் போக ஏற்பாடு செய்துகொண்டார்.

நான்காவது நாள் மன்னார்குடி சேர்ந்தார்கள். அங்கு சேர்ந்த அன்று மாலையிலேயே பெண் பார்க்கப் போனார்கள். இவர் முன் கூட்டியே கண்டிப்புப் படுத்தியிருந்ததனால் பெண் வீட்டில் எல்லோரும் மிகவும் சகஜமாகவும், அமைதியுடனும் நடந்துகொண்டார்கள். மிகவும் அன்புடன் எதிர்கொண்டழைத்த பெண்ணின் தகப்பனார், தன் மனைவி, பெண் இருவரும் உட்கார்ந்திருந்த கூடத்திற்கு அழைத்துப்போய் உட்காரவைத்தார். பொதுவாக கொஞ்ச நேரம் அளவளாவிய பிறகு பஞ்சாபகேச அய்யர் நிதானமான குரலில் பெண்ணின் தகப்பனாரிடம் "ஸார், நீங்களும் உங்கள் மனைவியும் என் மனைவியை உள்ளே அழைத்துப் போங்கள். ஒரு சில நிமிஷங்கள் உங்கள் பெண்ணுடன் தனிமையில் பேச விரும்புகிறேன்" என்றார்.

அவர்கள் புரிந்து கொண்டவர்களாய் உடனேயே உள்ளே போய்விட்டார்கள். பஞ்சாபகேசய்யர் 18 வயதே நிரம்பிய, அழகே உருவான அப் பெண்ணிடம் "இதோ பாரம்மா. எனக்கு உன் அப்பாவின் வயது. என்னை நீ உங்கள் வறுமையினால் மணம் புரிந்து கொள்ளச் சம்மதிப்பதாகவே நினைக்கிறேன். உன் அப்பாவிடமும் சொல்லி விடுகிறேன். உனக்காக எவ்வளவு செலவானாலும் அதற்கு நான் பொறுப்பு. உன்னை உனக்குப் பிடித்த பையனுக்கு மணம் செய்து வைக்க நானும் முயற்சிக்கிறேன். சிலநாள் பொறுமையுடன் இரு. வறுமை இவ்வளவு கொடியது என்பதை நிஜமா பாதிலேயே 18 வருஷங்கள் கழித்துவிட்ட என்னால் அறிய முடியவில்லை. அங்கிருந்து வந்து உன்மனதைப் புண்படுத்தியதற்கு என்னை மன்னித்துவிடு" என்றார். அதற்கு அவள் ஸ்பஷ்டமான குரலில், "அப்படியொன்றும் இல்லை. உங்களைப்பற்றியும், அக்காவின் உடல் நிலையைப்பற்றியும், மற்ற சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும், அக்கா விபரமாக தன் ஒன்றுவிட்ட தங்கைக்கு எழுதியிருந்தாள். அந்த மாமிக்கு படிக்கத் தெரியாது. நான்தான் படித்துக் காண்பித்தேன். நானாகவேதான் அவளையும் சம்மதிக்கவைத்து என் அப்பா அம்மாவையும் சம்மதிக்க வைத்து அக்காவிற்கு என்னைப்பற்றி வற்புறுத்தி எழுதச் சொன்னேன். நீங்கள் என்னைக் கலியாணம் செய்துகொள்வதனால் என் வேண்டுகோளுக்கு இணங்கியவர்களாகிறீர்கள். உங்களுக்கும், அக்காவிற்கும் உறுதுணையாயிருப்பதென்று முடிவு செய்துவிட்டேன். உங்கள் செல்வாக்கு மூலம் என் மூன்று தங்கைகளுக்கும் கலியாணம் செய்துவிட்டால் என் பெற்றோர்களுக்கு அதுவே நான் செய்யும் உபகாரம். என்னை வேண்டாமென்று சொல்லாதீர்கள். நீங்கள் அப்படிச் சொன்னால் என்னை இவ்வுலகில் நாளை ஒருவரும் பார்க்க முடியாது." என்று சொன்னாள். அவள் குரலில் திடசித்தம் தொனித்தது. தயக்கமோ, சந்தேகமோ இருக்கவேயில்லை. பஞ்சாபகேச அய்யர் மறுபடியும் தன் மனைவியின் உடல்நிலைபற்றிச் சொல்லிப் பார்த்தார். அதற்கும் அவள் அசையவில்லை. வேறு வழியின்றி ஈசுவரன்பேரில் பாரத்தைப் போட்டு ஒத்துக்கொண்டார். மன்னார்குடி கோவில் சன்னிதியில் சிறிதும் ஆடம்பரமன்றி, முதல் மனைவி யாவருக்கும் முன்னே நின்று வாழ்த்த, இரண்டாம் திருமணத்தை முடித்துக் கொண்டு நிஜாம் நகர் திரும்பினார். மணம் முடிந்து வந்தாலும் 20 வயது நிரம்பாத அச் சிறுமியை மனைவியாக நடத்த அவர் மனது இடம் அளிக்கவில்லை. ஒரு வருஷம் பற்றற்றவராகவே இருந்தார். ஆனால்,

சிறிய மனைவியோ, மிகவும் களிப்பாக, தன் கடமைகளையும், கணவனையும், அக்காவையும் கவனித்துக் கொண்டு கலகலப்பாக வீட்டை வைத்துக் கொண்டு பொறுமையுடன் இருந்தாள். அவள் வந்ததிலிருந்து அவள் சிசுருஷையால் பெரிய மனைவியின் உடலும் குணமடைந்து வந்தது. பெரிய-சிறிய மனைவிகளின் ஒன்றுபட்ட கண்டிப்பான பொதுத் தூண்டுதலின் பேரிலேயே மறுபடியும் கிரஹஸ்தராக ஒரு வருஷம் முன்பே வாழ ஆரம்பித்தார். இவ்வளவும் ராஜாமணிக்கு சொல்லி முடித்தார், பஞ்சாபகேச அய்யர்.

"மன்னார்குடியில் யார்வீடோ" என்று கேட்டு வைத்தான் ராஜாமணி.

பெயரைச் சொன்னபோது ராஜாமணிக்கு தலையே கிறுகிறுத்தது. தன் அத்தையின் கணவர் பெயர்தான் என்று வாசகர்கள் ஊகிப்பது கடினமல்ல. தன் அத்தையின் கணவர் வேண்டுமென்றே ராஜாமணியின் தகப்பனருக்கும்—அவளுக்கும் உள்ள உறவை பஞ்சாபகேச அய்யரிடம் சொல்லாமலிருந்திருக்கிறார்



இப்பொழுது எங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது!
மாடர்ன் தியேட்டர்ஸ்...
பெற்ற மகனை விற்ற அன்னை
BALU BROS
S.S.ராஜேந்திரன் • இலங்கேஸ்வரன் மனோகர் • சகாதேவன் • பண்டரிபாய் •
விஜயகுமாரி • A.கருணாநிதி • முத்துலக்ஷ்மி • ராஜாமணி • மாஸ்டர் கோபால் • பேபி சசிகலா
நடனம் ஹெலன்

என்றுமட்டும் அவனால் ஊகித்துக்கொள்ள முடிந்தது ஆனால் அந்த எண்ணத்திலும் அவனை பஞ்சாபகேச அய்யர் வெகு நேரம் தனித்துவிட்டிருக்கவில்லை. "ராஜாமணி, நீயும் உன் மனைவியும் இங்கு வருகிறீர்கள் என்று சொல்லி, உங்கப்பாவும்–நானும் எவ்வளவு பெரிய நண்பர்களாக இருந்தோம், என்ற விபரத்தை உன் கடிதம் வந்த அன்று வீட்டில் சொல்லிக் கொண்டிருந்தேன். விஜயா அப்போதுதான் உங்களுக்கும்–தங்களுக்குமுள்ள உறவு சம்பந்தம் பற்றிச் சொன்னாள். எனக்கு இந்தக் கலியாணமாவதற்கு 4 மாதங்கள் முன்புதான் உன் அப்பாவும் அம்மாவும் இறந்து போனதால் இந்த சம்பந்தம்பற்றி தெரிந்து கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பமே இல்லாமற் போயிற்று. இதையெல்லாம் என்னவென்று சொல்வது" என்று சொல்லி முடித்தார்.


குளித்துவிட்டு வீடு திரும்பினார்கள். சாப்பிட உட்கார்ந்தபோது எங்கிருந்தோ அவனுக்கே சுபாவமான வெட்கம் ராஜாமணியைத் தலை நிமிர வொட்டாமல் அடித்துவிட்டது. விஜயாதான் உணவைப் பரிமாறினாள் என்றாலும், தன் அத்தை பெண்ணின் முகத்தைப் பார்க்க நேரிடாமலேயே அவன் சாப்பிட்டு எழுந்தான். அவளும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. பஞ்சாபகேச அய்யரும் அசந்தர்ப்பமாக ஒரு வார்த்தையும் பேசி நிசப்தத்தைக் கலைக்கவில்லை. அந்த நிலையில்தான் வெளியே தனக்கென்று போட்டிருந்த கட்டிலில் தூக்கமில்லாமல் படுத்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் போராடிக் கொண்டிருந்த எண்ணங்களையே கலைத்தது அந்த களுக், களுக், களுக் என்ற சப்தம். "ஏன்னா! நம்ம விஜயாவிற்கு சீக்கிரமே குழந்தை பிறக்குமா" இந்தக் கேள்வி ராஜாமணியின் காதில் மெல்லெனக் கேட்டது.

"நமக்கு என்று சொல்லுங்கள் அக்கா", இது இன்னமும் மெல்லியதாகக் கேட்டது. விரைவாகவே மறுபடியும் "களுக், களுக், களுக்" என்ற கூட்டுச் சிரிப்போசை!

ராஜாமணி ஆச்சரியக் கடலில் மூழ்கியவனாய், பல மனப்போராட்டங்களுடன் நித்திரா தேவியைத் தழுவினான்.

காலையில் பல் துலக்கிவிட்டு வராந்தாவிலுள்ள நாற்காலியில் பஞ்சாபகேசய்யருடன் பேச ஆரம்பித்தவாறே உட்கார்ந்துகொண்டு சில நிமிஷங்கள் கழிந்திராது. கையில் காப்பி டம்ளருடன் அங்கு வந்த விஜயா கொஞ்சமும் கலக்கமோ, சங்கோஜமோ இல்லாமல் "மாமா, நீங்கள் இப்படி சரோஜாவை ஹைதராபாத்திலேயே விட்டு விட்டு வர நேரிடும் என்று தெரிந்திருந்தால், நானும் அக்காவும் ஹைதராபாத்திற்கே வந்து அவளைப் பார்த்து வந்திருப்போமே. அவளைப் பார்க்கவேண்டுமென்று ஆவலோடு துடித்துக் கொண்டிருந்தோம்" என்றாள். ராஜாமணி மழுப்பியவாறே "வரமுடியாமல் அவளும் மிகவும் வருத்தப்பட்டாள்" என்றான். அன்று ராஜாமணிக்கு நிஜாம் நகரில் வந்தவேலை பஞ்சாபகேசய்யர் உதவியால் சுமுகமாக முடிந்தது. காரை அவசரமாக மானேஜர் எடுத்துப்போய்விட்டதால் பஞ்சாபகேச அய்யர் உபயோகத்திற்குக் கொடுக்க இயலாததை வருத்தத்துடன் தெரிவிப்பதாக, அவருக்கு கடைசி நிமிஷத்தில் செய்தி வந்தது. இதனால் பஞ்சாபகேச அய்யரும், அவர் இருமனைவிமார்களும் ராஜாமணியுடன் ஹைதராபாத் போவது தடைப்பட்டு, அவன் மட்டும் ரயிலில் கிளம்பினான். நிஜாம் நகரை விட்டு பெருமூச்சு விட்டவாறே ஹைதராபாதை நோக்கி ரயில் கிளம்பியபோது, ராஜாமணியும் பெரியதொரு பெருமூச்சு விட்டான் என்றால் மிகையாகுமா? ●


குழந்தைகளின் வயிற்றுவலிகளை துரிதமாக சமனம் செய்வது



க்ரைப்பானில்

(க்ரைப் மிக்ஸ்சர்)

ஒரு 'டல்ஸஸனல்' காரர்களின் தயாரிப்பு

TA.

# அழகுக்காக அல்ல



பில்லூர் சுந்தரராமன்

அப்பாவிடமிருந்து வந்த கடிதத்தை மறுபடியும் ஒருமுறைப் படித்தேன். 'கடபுடா' வாக்கியங்களாக இல்லாவிடினும், அவர் எழுதியிருந்த விஷயங்களைப் படித்ததும், சிரிப்புத்தான் வந்தது எனக்கு. 'எவ்வளவு ஆத்திரத்துடன் எழுதியிருக்கிருர்' என்பதை நினைத்தபோது, 'உம்' மென்று பெருமூச்சு விடத்தான் முடிந்தது என்னல். வேறு என்ன செய்வது?

'...ஊரில் எனக்குத் தலைகாட்டவே முடியவில்லை; ஊர் முழுவதும் இதைப் பற்றித்தான் பேச்சு. நம் குடும்ப மானம் 'கப்பல் ஏருமல்' இருக்கவேண்டுமானல், நீ இன்றைக்கே இதை எழுதுவதை நிறுத்திவிடவேண்டும். ஒவ்வொரு கதையிலும் அந்தப் பெண்ணுடைய பெயரையே போட்டுப் போட்டு......இங்கே, என்னுடைய நிலைமைதான் மிகவும் கஷ்டமாகிக்கொண்டு வருகிறது. 'உன்னல்தான் அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் கூட ஆகவில்லை' என்றுவேறு பேசிக் கொள்ளுகிருர்கள். இந்தப் பொல்லாப்பெல்லாம் நமக்கு எதற்கு?......இன்னும் பதினைந்து நாட்களில், யாரோ ஒரு பையன், அவளைப் 'பெண் பார்க்க' வருகிருனும். ஒருவழியாக, அவள் இந்த ஊரிலிருந்து போய்விட்டால், நீ அப்புறம் எப்படி வேண்டுமானலும் எழுதிக் கொள்......'

நீண்டு கிடந்த அந்தக் கடிதம், எனக்குச் சிரிப்பைத்தான் மூட்டியது. யாரை மறக்கக் கூடாது என்பதற்காக எழுதத் தொடங்கினேனே, அவளை மறப்பதற்காகவே — அவள் வேறு எவனுக்காவது கழுத்தை நீட்டுவதற்காகவே — நான் கதை எழுதுவதை நிறுத்திக்கொள்ளவேண்டுமாம்! எப்படி இருக்கிறது?

ஊர் என்ன வேண்டுமானலும் சொல்லிக்கொள்ளட்டும்; அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஊரார் நினைத்தால் புகழ்வார்கள்; நினைத்தால் தூற்றுவார்கள். அவர்களின் இலக்குக்கு நானும், என் பூமாவும்தான அகப்பட்டோம்?

ஊருக்குப் போனேன்; பூமாவைச் சந்தித்தேன்; அன்பு மலர்ந்தது; காதலாக மாறியது. பின், அது முறிந்ததும் வெறியாகி... ஆம், அந்த வெறியின் அடிப்படையில் நான் செய்துவரும் இந்தத் துணிகரச் செயலில் வெற்றி பெற்ருல்தான் வாழ்வு! என் பூமா கிடைப்பாள்! இல்லையேல்...... எல்லாமே பாழ்!

கடிதத்தை மடித்துப் பைக்குள் வைத்துக் கொண்டேன். அப்பா! பூமாவின் அந்தக் கிண்கிணி நாதக் குரல், என் காதுகளில் இன்னமும் ஒலித்துக்கொண்டிருக்கிறதே! வண்டுபோல் சுழலும் கண்களால் வெட்டி

வீழ்த்துவாளே! பட்டுக் கன்னத்தில் தன் சுட்டு விரலைப் பதியவைத்துக்கொண்டு 'ஹும்' என்று கேட்பது போல், நமட்டுச் சிரிப்புச் சிரிப்பாளே! ஒன்றுகூட என் மனதைவிட்டு அகலவேயில்லையே! நான் என்ன செய்வது?

2

வீட்டிற்குள் நுழையப்போன என்னை உள்ளேயிருந்து வந்த அந்த கானம் தடுத்து நிறுத்தி, மெய்மறக்கச் செய்துவிட்டது. 'என் தங்கை யோகமா, இவ்வளவு நன்ருகப் பாடுகிருள்?' என்று எண்ணி வியந்தவன், நாலைந்து விளுடிகளிலேயே அது யோகம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டேன். பின் வேறு யார்?

லாடம் அடித்த பூட்ஸுகளின் மிடுக்குச் சத்தத்துடன் தாழ்வாரத்தில் ஏறினேன். அவ்வளவுதான், 'பட்'டென்று தந்தி அறுந்த வீணையாக, கீதம் நின்றது. புதுப் புடவைச் சரசரக்க, அவள் எழுந்து நின்ருள்.

ஒரே ஒரு நிமிடம்! பெட்டியை வைத்துக்கொண்டு நின்ற என்னைக் கண்டதும், வியப்பால் குத்திட்டு நின்ற அவள் கண்கள் விரிந்தன; உடல் 'வெடவெட'வென்று நடுங்கியது. நடுங்கும் கரங்களால், புடவைத் தலைப்பை நெரடிக்கொண்டே, சமையலறைக்குள் ஓடிவிட்டாள் அவள். அப்பா! அந்தக் கணநேரப் பார்வை......

அம்மா, பரக்கப் பரக்க ஓடிவந்தாள். 'எங்கேடி பூமா, நிஜமாவா?' என்று கத்திக்கொண்டே வந்தவள், நான் நிற்பதைக் கண்டதும், சிலையாகிவிட்டாள். ஆமாம், பட்டணத்திலிருந்து வருபவன், அதுவும் ஐந்து வருடங்கள் கழித்து, 'உத்தியோக புருஷ'ஞகப் பிறந்த ஊருக்கு வருபவன்—ஒரு கடிதம்கூடப் போடாமல் வந்து நின்ருல் திகைக்க மாட்டார்களா, என்ன?

"என்னடா இது, ஒரு கடுதாசுகூடப் போடாம?...... நீ பாட்டுக்கு 'திடுதிப்'னு வந்து நிக்கறயே? பூமா வந்து சொன்னபோது நம்பவேயில்லை, நான். வா, சட்டையைக் கழட்டு."

நான் சட்டையைக் கழற்றி மாட்டினேன். "ஆமாம், யோகம் எங்கேம்மா? அப்பா எங்கே போயிருக்கார்? ஏழெட்டுப் படிக்குப் பொம்மை இருந்ததே, என்ன நாலே நாலு படி வெச்சிருக்கே?" என்றவாறே, கொலு பொம்மைகளை நோட்டம் விட்டேன். 'அவளோ', என்னை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள்.

ஐந்து வருடங்கள் கழித்து மகனைப் பார்த்த பூரிப்போ என்னவோ, அம்மாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஏற இறங்க, என்னையே திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஒருக்கால் இளைத்து விட்டிருப்பேனு?' என்று சந்தேகம் வந்து விட்டது. அம்மாவும் அதைக் கேட்டே விட்டாள்; "ஏண்டா இப்படித் துரும்பா இளைச்சுட்டே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லையம்மா; எல்லாம் பழையபடித்தான் இருக்கேன்" என்று நானும் 'ஏதோ' கூறிவிட்டுச் சிரித்தேன்.

அவள் இன்னமும் என்னை அப்படியே விழுங்கிவிடுபவள் போலத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள், பக்கத்து வீடுகளில் 'சுண்டல்' வாங்கப் போயிருந்த யோகம் வந்துவிட்டாள்; எங்கோ வெளியில் போயிருந்த அப்பாவும் வந்துவிட்டார். எல்லாருமே என்னைச் சூழ்ந்துகொண்டுவிட்டார்கள்.

"ஏண்டா, ஒரு கடுதாசு போடக் கூடாதோ?" "ஏன் அண்ணு, இப்படிக் கடுதாசுகூடப் போடாமல், இராத்திரி எட்டு மணிக்கு வந்து குதிச்சிருக்கே?" 'இந்த வண்டிக்குக் கிளம்பி வரேன்'னு ஒரே ஒரு வரி 'கிறுக்கி'ப் போட்டிருந்தேனு, மாயவரத்துக்கே வந்திருப்பேனே! உடம்பு ஒண்ணுமில்லையேடா? எத்தனை நாள் அண்ணு, லீவு?"

நான் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொன்னேன். பதில் சொல்லி முடித்து விட்டு, நிமிர்ந்து திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெண், தூண் மறைவில் நின்றபடி, இன்னமும் என்னையே பார்த்துக் கொண்டுதான் நின்ருள்!

"பூமா, எங்க அண்ணுடி, ஞாபகம் இருக்கோ உனக்கு?"

அவள்—பூமா, தலையாட்டினுள். அப்பா! அசைந்தாடியது அந்த ஜிமிக்கிகளின் ஒய்யாரம்!

"நான் போய்ட்டு வரேண்டி, யோகம். நாழியாயிடுத்து; அம்மா தேடுவாள்."



'உம், சரி' என்று சுண்டலை எடுத்துக் கொடுத்து, பூமாவை அனுப்பிவைத்தாள் யோகம். எனக்கோ, வந்த உடனேயே 'பளா'ரென்று யோகத்துக்கு 'ஒன்று' கொடுத்துவிடலாம் போல இருந்தது!

3

ஒரு வாரம் ஓடிவிட்டது.

அம்மாவையும், அப்பாவையும் பார்க்க வந்த நான், அவர்களை மறந்துவிட்டேன். 'அண்ணா, அண்ணா' என்று நொடிக்கு நூறுதரம் கூப்பிடும் யோகத்தை மறந்துவிட்டேன். ஏன், எல்லாவற்றையுமே மறந்துவிட்டேன். என் சிந்தனையில் — இதயத்தில் நின்றவள், பூமா ஒருத்திதான்!

எதிர் வீட்டிலிருந்த அவள் தினந்தினம் எங்கள் வீட்டுக்கு வருவாள். தன்னை யொத்த தோழியொருத்தி—என் தங்கை—இருக்கும்போது கேட்கவா வேண்டும்? ஒரு தரம் உப்புக் கடன் வாங்குவாள்; இன்னொரு தரம், 'உப்பில்லையாம்; காபிப்பொடியாம்' என்று 'தவறி' வருவாள். ஏண்டி யோகம், 'தூக்கிய திருவடி...'ங்கிற சங்கராபரணக் கீர்த்தனை உனக்கு முழுக்கத் தெரியுமாடி?' என்று கேட்டுக்கொண்டே வருவாள். 'ஆமாம், 'ஸாரஸமுகி'க்கு ராகம் என்ன?' என்று 'திடீர்க் கேள்வி' போடுவாள். 'எல்லாம் எனக்காகத்தான்' என்று அறிவுறுத்தியது, அவள் விழிக் கோணப் பார்வை!

சரஸ்வதி பூஜைக்கு முதல் நாள்.

"சுந்தர்! நான் நடுத்தெரு லீலாம்பாள் மாமியாத்துக்கு யோகத்தோடு போய்ட்டு, வெத்திலை-பாக்கு வாங்கிண்டு வந்துடறேன்; யாராவது வந்தால், கொஞ்சம் இருக்கச் சொல்லு" என்று கூறிவிட்டுப் போய் விட்டாள் அம்மா.

அப்பாவும் எங்கோ வெளியில் போயிருந்தார்.

தனிமை!

என் மனத் திரையில் பூமா நிழலாடினாள். நான் வீட்டிற்குள் நுழைந்ததும்—நுழையாததுமாக நின்றபோது விரிந்த அவள் கண்ணழகு, என்னைச் சித்திரவதை செய்தது. 'மாமி, மாமி' என்று அபாயமில்லாமல் அபயக்குரல் எழுப்பும் அவள்... அவள் ஏன் என்னை அப்படிப் பார்க்கிறாள்? 'புதுசா ஏதாவது கதை எழுதியிருக்காராடி, உங்க அண்ணா?' என்று யோகத்தைக் கேட்டாளாமே, எதற்காகக் கேட்டாள்? ... அவளைப் பார்த்துவிட்டாலே, என் நெஞ்சும், மார்பும் ஏன் இப்படி 'திக் திக்'கென்று அடித்துக்கொள்கின்றன?......

"மாமி......"

உண்மையில், இப்போதுதான் நான் நடுங்கிவிட்டேன். யாருக்காக, யாரை நினைத்து, அந்த நிலையில் என்னை மறந்துகொண்டிருந்தேனோ, அவளுடைய குரல்!

"மாமி!" — 'விடுவிடு'வென்று சமையலறைக்குள் போய்விட்டு, உதட்டைப் பிதுக்கிக்கொண்டே ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள் பூமா. அந்த மாதுளை இதழ்களுக்கு அவ்வளவு சிவப்புக்கூட உண்டா?

"அம்மா இல்லை; உக்காருங்கோ; வந்துடுவா"—நான்தான் சொன்னேன். என் குரல் நடுங்கியது எனக்கே தெரிந்தது.

அவள் எங்கோ மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது; உம், பேசு; 'சட்'டென்று பேசித் தொலைத்துவிடு' என்று மனம் அடித்துக்கொண்டது. இருந்தாலும் பயம்!

"என்னை ஞாபகமிருக்கா, உங்...உங்... உனக்கு?" — எப்படியோ கேட்டுவிட்டேன், தட்டுத் தடுமாறிக்கொண்டு.

"உம்"

"உம்னா?"

"ஞாபகமிருக்கு"

"என் கதையெல்லாம் படிப்பியா?"

"உம்"

"நன்னா இருக்கா?"

"உம்"

"எந்தக் கதை ரொம்ப நன்னா இருந்தது?"

"............"

"ஒண்ணுமே நன்னாயில்லையா?"

"...வந்து...அந்த ஊமைப் பொண்ணு கதை...ரொம்ப நன்னா...எனக்குக் கடைசியிலே அழுகையே வந்துடுத்து."

"உம், அப்புறம்?"

"...ம்... புதுசா, ஏதாவது எழுதியிருக்கேளா?"

"எழுதியிருக்கேன்; நாளைக்கு எடுத்துத் தரேன்."

"லீவு எத்தனை நாளைக்கு?"

"ஒரு மாசம்."

வாசலில் அம்மாவின் குரல் கேட்டது. "வாயேண்டி தங்கம், உள்ளே வந்துட்டுப்

போயேன்" என்று யாரையோ அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். நான் திகைத்துத் திணறிவிட்டேன்.

என்ன ஆச்சரியம்! ஒன்றுமே அறியாத பச்சைக் குழந்தைபோல், 'என்ன மாமி, இப்பத்தான் வருப்போலேயா?' என்று அம்மாவையே எதிர்கொண்டழைக்கப் போய்விட்டாள் பூமா.

ஆமாம், பெண்களுக்கே இந்த மாதிரி விஷயங்களில் அலாதி துணிச்சல்தான்!

## 4

நான் பூமாவை மனமாறக் காதலித்தேன். 'அவளும் காதலித்தாளா, என்பதுதான் தெரியவில்லை. அந்தப் பார்வையில் போதை தவழ்ந்தது; அவள் பேசினாள்; பேச்சில் தேன் சொட்டியது; அவள் சிரித்தாள்; சிரிப்பில் 'கிண்கிணி' நாதம் எழுந்தது. அவள் நொடித்தாள்—அந்த நொடிப்பில் நான்—என்னை மறந்துவிட்டேன். இத்தனையும் காதல்தானா?

அதைத் தெரிந்துகொள்ளத் துடித்தேன். பட்டணத்து ஆர்வம், பேயாட்டம் ஆடியது. கதைகளுக்காக—கதைகளின் காதலர்களுக்காக இந்தப் பேனா கையாண்ட முறைகள், ஒன்றுகூட உண்மை வாழ்வுக்கு ஒவ்வாதா, என்ன? எத்தனை கடிதங்கள் எழுதி, எத்தனை காதலர்களைச் சேர்த்தும், பிரித்தும் வேடிக்கை பார்த்திருக்கிறேன். எல்லாம் கற்பனை! வெறும் கற்பனை! கற்பனைகள் தான்!

கடிதம் எழுதி, அவளிடம் எப்படிக் கொடுப்பது? அது வேறு யாரிடமாவது சிக்கிக்கொண்டு............

பின்?

அந்த வழி ஒன்றுதான் சரியானதாகப் பட்டது எனக்கு. ஒரு பத்திரிகையை—என் கதை வரைந்திருந்ததை எடுத்தேன்.—அதில், காதல் சொட்டச் சொட்ட எழுதப் பட்டிருந்த ஒரு பாராவைத் தேடிப் பிடித்தேன். ஒவ்வொரு வரியையும் கீழே கோடிட்டேன். அந்தப் பக்கத்தை மட்டும் உள்பக்கமாக மடக்கி வைத்து..... ...

அவள், ஒருநாள், ஒருவருமில்லாத நேரத்தில், படிப்பதற்கு புத்தகம் கேட்ட போது, அந்தப் பத்திரிகையைக் கொடுத்து விட்டேன்.

அடுத்த ஒருமணி நேரத்தில், எங்கள் வீடு திமிலோகப் பட்டது. அப்பா பதறினார்; அம்மா திகைத்தாள்; யோகம் அழுதே விட்டாள்.

எதிர்வீட்டுக் கோபாலையர்—பூமாவின் தந்தை—ரௌத்ராகாரமாக வந்தார். அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்த அப்பாவைக் கூப்பிட்டு, "பார்த்தீரா ஐயா, நன்னா இருக்கா இது? படிச்ச பையனுக்கு அழகா இது?" என்று கேட்டுக்கொண்டே, புத்தகத்தை வீசித் திண்ணைமீது எறிந்தார்.

அப்பா எடுத்துப் பார்த்தார்; நான் மடித்துக்கொடுத்த பக்கம்!

"ஓய்! உங்க பையன் பட்டணத்துக்கு போய்ட்டு வந்திருக்கலாம்; அதைப்பத்தி எங்களுக்கு கவலையில்லை. எங்ககிட்டே வாலை ஆட்டினால் ஒட்ட நறுக்கிவிடுவேன் நறுக்கி. ஆமாம். 'ஏதோ புஸ்தகம் வாங்கிண்டு வந்தாளே குழந்தை'ன்னு பார்த்தேன். இந்தக் 'கன்னா-பின்னா மேட்டரை' 'அண்டர்லைன்' பண்ணியிருக்கான். கீழே 'குழந்தை' பேரைவேறு போட்டுட்டு, 'சுந்தர், சுந்தர்'னு கிறுக்கி வெச்சிருக்கானே!........ .. ஊருக்கு வந்தவன், யோக்கியமா திரும்பிப் போய்விடுவானென்று பார்த்தேன்; உம், 'பட்டணத்துக் கிறுக்கு' ரொம்ப ஏறிடுத்துப்போலிருக்கு............"

நானும் இத்தனையையும் கேட்டுக் கொண்டுதான் நின்றேன்.

"என்னடா சுந்தர், என்ன இது?" அதட்டினார் அப்பா. அவர் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. கொஞ்ச நேரம் போனால் அழுதே விடுவாரோ என்றுகூடத் தோன்றியது.

"அது ஒண்ணுமில்லை, அப்பா; கதைக்காக 'ப்ளாட்' அண்டர்லைன் பண்ணி வெச்சிருக்கேன். இந்த மனுஷன் கண்ணை மூடிண்டு .........."

கோபாலையர், கை, கால்களெல்லாம் பதறித் துடித்துப் புத்தகத்தைப் பிரித்தார்; "என்னய்யா, என்ன 'ப்ளாட்' இதுலே? 'அவன் சிரித்தான்; அவள் சிரித்தாள்; இருவர் சிரிப்பிடையேயும் காதல்போதை

தவழ்ந்துவந்தது. அவன் கேட்டான் காதல் என்ருல் என்ன?'-அவள் சொன் ஞள்: 'காதல் என்பது ...........'—என்ன ஐயா, அளக்கிறே? உம்ம கதையிலிருந்தே நீர் 'ப்ளாட்' எடுத்து வெச்சுக்கப்போ றீரோ?......இப்படி, ஏதாவது சொல்லித் தப்பிச்சுடலாம்னு........."

எனக்கு ஆத்திரம் வந்துவிட்டது; கத்தி னேன்.

"சும்மா நிறுத்தையா, தெரியும்? என் னமோ, உம்ம பெண்தான் அப்படியே 'அப்சரஸ்'னு நினைப்போ?"

எதிர்வீட்டு ஜன்னலில் 'அவள்' நின்று கொண்டிருந்தாள். இந்த வார்த்தைகள், அவள் காதுகளில் மட்டும் வீழ்ந்திருந் தால் ..........?

அதற்குப் பிறகு, இரண்டு நாட்கள்தான் அவ்வூரிலிருந்தேன். ஒரே அமர்க்களம்! 'பட்டணத்துக்காலி' 'ரொம்பத் தேறிட் டாண்டா நேத்திக்கு'ச் 'சலாங்குடு' அடிச் சவன், இன்னிக்கு இப்படி......... ' யென் றெல்லாம், பேச்சுமயம்! அப்பாவுக்கும், அம்மாவுக்கும் 'நான் அங்கிருந்து கிளம்பி விட்டால் போதும்' என்ருகிவிட்டது!

புறப்படும்போது யோகம் மட்டும் வந்து சொன்ஞள்: 'அண்ணு, நான் பூமாவை அரச குளத்துலே பார்த்தேன், 'ஹோ' என்று அழுதுவிட்டாள். 'அவள் அப்பா சொன்னதை மனசிலே வெச்சிக்க வேண் டாம்'னு உன்னிடம் சொல்லச் சொன்ஞ..."

சொல்லிக்கொள்ளட்டும்!

என் காதல் முறிந்துவிட்டது; அந்த முறி வில் ஓர் அலாதி வெறி தோன்றிவிட்டது என்பது எனக்கு மட்டும்தானே தெரியும்?

ஆம், கடைசியில், அந்த ஒரு திட்டம் தான், அந்த வெறியின்-தணியாத வேட் கையின் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்க உதவும்!

ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டேன். தினமும் நாலைந்து கதைகள் வீதம், நிறைய எழுதிச் சேர்த்துக்கொண்டேன். ஒவ் வொரு கதையிலும் 'நான்' என்றே ஆரம் பித்து, எதிர்வீட்டுப் பூமாவைக்கொண்டு வந்து, அவள் என்னைக் காதலித்த விதத் தையோ, அவளை என் மனைவியாகவோ, சகோதரியாகவே, தாயாகவோ—எப்படி யெல்லாமோ எழுதினேன். ஒவ்வொன் றையும் புதுப்புதுக் கோணத்தில் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிக்கொண்டிருந் தேன். நான் வேலை பார்த்துவந்த வாரப் பத்திரிகையிலும் வாராவாரம் ஓரிரண்டு கதைகள் வீதம் எழுதித் தள்ளிக்கொண் டிருந்தேன்.

அத்தனையிலும் நான்; பில்லூர்; மேலத் தெரு; எதிர் வீட்டு கோபாலையர்; அவர் பெண் பூமா—காதல், கல்யாணம், சண்டை இப்படியே எழுதினேன். ஏதோ ஒரு வெறி! அப்பாவுக்கு ஒரு பிரதி அனுப்பி னேன்; என் நண்பன் முத்துவுக்கு ஒவ் வொரு பிரதி அனுப்பினேன். பூமாவின் வீட்டில், 'நைஸாக'க் கொடுக்கச் சொல்லி வாங்கச் செய்தேன். ஆமாம், முத்துவுக்கு என் 'விஷயம்' கொஞ்சம் கொஞ்சம் தெரி யும். நானே அவனுக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

பிறகுதான் அப்பாவிடமிருந்து ஒரு கடி தம் வந்தது. 'அந்தப் பூமாவின் பெயரை உபயோகப் படுத்தாதே; ஊரில் தப்பாக நினைக்கிருர்கள்' என்று. ஊரில் இன்னும் சிலர்கூட எழுதியிருந்தனர். ஏன், கோபா லையரே, 'என்னதான் 'கற்பனை' என்று போட்டுக்கொண்டாலும், இவ்வளவு அப் பட்டமாக பிறர் வாழ்க்கைக்கு இடைஞ்ச லாக எழுதக்கூடாது. இந்தப் பெயரை இனிமேலும் உபயோகப் படுத்தமாட்டாய் என்று நம்புகிறேன்' என்று எழுதி யிருந் தார்.

நான் ஒன்றுக்குமே மசியவில்லை!

அப்போதுதான், மறுபடியும் அப்பாவிட மிருந்து அந்தக் கடிதம் வந்தது:

(5)

'...சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்த படி, பூமாவைப் 'பார்க்க' முந்தா நாள் யாரோ ஒரு பையன் வந்தான். கையில் நீ கதை எழுதியிருந்த புஸ்தகத்தோடு வந்தா னும். வந்தவன், உன் பெயரையும் அந்த எதிர் வீட்டுப் பூமாவையும் பிணைச்சு. என்னவெல்லாமோ 'கயிறு' விட்டு விட்டுப் போயிருக்கிருன். நீ அவளைக் காதலிக்கிற தாகவும், அப்படி இப்படின்னெல்லாம் எழுதியிருப்பதைப் பார்த்துவிட்டு, அவன்

சந்தேகப்பட்டானும். கீழத் தெருவிலே யாரோ ரெண்டுபேரை விசாரிச்சிருக்கான். கோபாலையருக்கு வேண்டாதவா ரெண்டு பேர் சேர்ந்து, 'ஆமாம், அது நிஜம்தான்'னு 'ஆமாஞ்சாமி' போட்டிருக்கா. எத்தனையோ பத்திரிகைகளில் அவன் இதே மாதிரிப் பார்த்திருக்கானும். அவன் கோபித்துக் கொண்டு, ஊரையே ஒரு கலக்கு கலக்கி விட்டுப் போய்விட்டான். 'இதை நாலு பேரிடம் சொல்லவேண்டும்; சேச்சே, ரொம்ப அவமானம்' என்று குதித்தானும்.

அந்தப் பெண் பூமா, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத்தான் நிற்கிறது. பாவம், கோபாலையருக்குக் கூட சத்து இறங்கிவிட்டது. நீ உடனே வந்து சேரு. உன்னுடன் சில முக்கிய விஷயங்கள் பேசவேண்டும். பூமாவை உனக்குப் பிடித்திருந்தால் மேற்கொண்டு ஏற்பாடெல்லாம் பண்ணிப்பிடறேன். கோபாலையருக்கும், 'இப்படியே பெண் கல்யாணம் நின்று விட்டா என்ன பண்றது?' என்று பயம் வந்துடுத்துப் போலிருக்கு; அவரே கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார். என்றைக்குப் புறப்படுகிருய்?...'

அடுத்த இரண்டு தினங்களில் நான் பில்லூருக்குப் போய்விட்டேன். எதற்காக, யாரை வைத்துக்கொண்டு சிருஷ்டித்தேனே அவள் என் கைக்கு அகப்பட்டு விட்டாள். ஆமாம், நிச்சயதார்த்தம் செய்துவிட்டார்கள். 'காலிப் பயல்' என்ற முணு முணுத்த உதடுகளே, என்னை மாப்பிள்ளையாக ஏற்றுக்கொண்டு விட்டன.

ஊரே இதைக்கண்டு ஆச்சரியப்படத்தான் செய்தது.

"அண்ணு, அந்த ஆசாமி, அப்படிச் சொல்லிவிட்டுப் போனுரோ, இந்தக் கல்யாணம் நடக்கிறதோ! இல்லேன்னு..." என்று இழுத்தாள் யோகம்.

நான் சிரித்துக்கொண்டே சொன்னேன்:

"யாரு? பூமாவைப் பெண் பார்க்க வந்தானே; அவனு? அவனும் நானும் ரெண்டு பேராக ஒரே அறையிலேதான் இருக்கோம். பூமாவைப் பெண் பார்க்க வரச்சொல்லி அவன் அம்மாகிட்டே யிருந்து 'லெட்டர்' வந்தது. அவன் என்னை மாப்பிள்ளைத் தோழனு கூப்பிட்டபோது தான், பூரா விஷயத்தையும் சொன்னேன். அம்மாவிடமும் சொல்லி, ஒரு தினுசா ஏற்பாடு பண்ணிப்பிட்டான். ஆமாம், அவன் தயார் பண்ணின நாடகம்தான் இது!"

"என்ன?" என்று இறைந்து கத்தினுள் யோகம், "அண்ணு, பட்டணம் போய் பெரிய ஆளா போயிட்டே நீ!"

"ஆமாம், பெரிய ஆளேதான். வாழ்க்கைக்கு வேண்டிய பூமா, கற்பனை பூமாவாகவே மறைந்துவிட வேண்டியிருந்த நிலையில், சண்டை போட்டு, கதை பூமாவையே 'வாழ்க்கை பூமா' வாக அடைவதென்றுல் சாமானியமா, என்ன?"

பூமா எனும் சிருஷ்டி, கதைக்காக அல்ல!



# பட்டணம் சுப்பிரமணிய அய்யர்

**கீதப்பிரியா**

**க**ர்நாடக சங்கீதத்திற்கு தமது காலத்தில் ஒரு புதிய பாணியை ஏற்படுத்தியவர் ஸ்ரீ பட்டணம் சுப்பிரமணிய அய்யர் அவர்களாகும்! அவருடைய மத்யகால பிர்க்காக்களும், குண்டு குண்டான ரவை ஜாதிகளும், அடுக்கு அடுக்காக ஸ்வரம் பாடும் அழகும், நாபிகமலத்திலிருந்து எழும்பும் நாதமும் மிகப் பிரசித்தியுள்ளவைகள்!

## சங்கீதப் பயிற்சி

பட்டணம் சுப்பிரமண்ய அய்யரவர்களுடைய முன்னோர்கள் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அவர் அந்தணருள் அஷ்டஸகஸ்ரமென்னும் வகுப்பைச் சேர்ந்தவர். அவரது பாட்டனராகிய சங்கீத வித்வ சிம்மம் பரதம் பஞ்சநத சாஸ்திரிகள் என்பவர் தஞ்சாவூரில் சரபோஜி அரசர் பரிபாலனம் செய்துவந்த காலத்தில் ராஜாங்கத்தில் அரண்மனை வித்வானாக விளங்கியவர். சரபோஜி அரசரின் காலத்திற்குப் பின்வந்த பஞ்சநத சாஸ்திரிகளின் குமாரரான வைத்தியநாதய்யர் என்பவருக்குத்தான் பட்டணம் சுப்பிரமணிய அய்யர் புத்திரராய் தோன்றினர். ஐயரவர்கள் தமது இளம் பருவத்திலேயே பெற்றோர்களை இழந்ததனால் தனது அத்தை சிவப்பிரிய அம்மாளின் குமாரி மீனாக்ஷி அம்மாளுடன் விஷ்ணுபுரத்தில் ஸ்திரவாசமாக இருந்துவந்தார். அங்கிருக்கும்பொழுதே அவர் தமது பாட்டனாரின் தமையன் குமாரரான பரதம் கணபதி சாஸ்திரிகளிடம் சங்கீதத்தைக் கொஞ்ச காலம் கற்றுக்கொண்டார். பிறகு கொத்த வாசல் வேங்கடராமையரிடம் சங்கீதப் பயிற்சி பெற்றார்.

## 'கவன' சக்தி

ஐயரவர்கள் இளமையிலேயே சங்கீதத்தைப் பயின்று மேலும் மேலும் சங்கீதத்திலேயே அளவில்லாத பிரியமுண்டாகி, தமது ஊக்கம் குறையாமல் பிரதிதினமும் தனக்குப் பாடமான தியாகய்யரவர்களின் கிருதிகளைப் பாடிவந்தார். தியாகய்யரின் நேர் சிஷ்யர்களில் ஒருவராகிய மகர்நோம்புச்சாவடி வேங்கடசுப்பையர் ஐயரவர்களின் திறமையை மெச்சி தனக்கு தெரிந்தவற்றை சொல்லிக்கொடுத்தார். ஐயரவர்களுக்கு சிறிது காலத்திற்குள்ளாகவே தனது ஊக்கத்தினாலும், இடைவிடா உழைப்பினாலும் பாட்டுக்களை கவனம் செய்யும் சக்தி ஏற்பட்டது. அவருடைய கவனம் செய்யும் அபார சக்தியை வெளியிட ஒரு சமயமும் கிடைத்தது.

## பொடிப் பாட்டு!

ஐயரவர்கள் வேங்கடசுப்பையரிடம் குருகுலவாசம் செய்யும்பொழுது, குருவுடன் ஒரு குக்கிராமத்தில் தங்கும்படியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு வேங்கடசுப்பையருக்கு மூக்குப்பொடி தட்டிப்போக, பைத்தியம் பிடித்தவரைப்போல தனது சிஷ்யர்களின்மேல் சினந்து சீறிச்சீறி விழுந்தார். ஒரு சிஷ்யன் பொடிவாங்க கடை தேடி ஓடினான். அந்தக் குக்கிராமத்திலே மூக்குப்பொடி கிடைக்கவில்லை. ஐயரவர்கள் இவைகள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டே ஆழ்ந்த யோசனையில் இருந்தார். அவருக்கு திடீரென்று பொடியைப்பற்றி ஒரு பாட்டு அமைத்துப் பாடவேண்டுமென்று தோன்றியது. உடனே ஒரு பாட்டைக் கவனம் செய்து தமக்குள்ளேயே பாடி ஒத்திகை பார்த்துக் கொண்டார். அவரது குரு வேங்கடசுப்பையர் வந்தவுடன் 'சாவேரி' ராகத்தை அரை மணி நேரம் கந்தர்வ கானமாய் ஆலாபித்து தாம் கவனம் செய்த "தூமபத்ர தூளி தொரகுனா" என்ற பாட்டைப் பாடி நிரவல், ஸ்வர கல்பனைகள் முதலியவைகளை சரிவரச் செய்து முடித்தார். அதை வேங்கடசுப்பையர் கேட்டதும் மகிழ்ச்சியடைந்து, கவனம் செய்யும் சக்தியைச் சாதாரணமாக உபயோகியாது நல்ல வழியில் ஆண்டவனைக் குறித்து பாட்டுகளைக் கவனம் செய்யும்படி அனுக்ரகித்தார்!

## அகார ஸாதகம்

ஐயரவர்கள் ஸ்ரீ தியாகய்யரின் கீர்த்தனைகளில் சுமார் முப்பதுக்குக் குறையாமல்

பாடிய பிறகுதான் போஜனம் செய்வது வழக்கம். அவர் ஒரு வாரத்தில் சில குறித்த நாட்களில் பல்லவி, ஸ்வரம், மற்றும் சில நாட்களில் தானம், வர்ணங்கள் பாடுவது என்று ஒரு திட்டம் ஏற்படுத்திக்கொண்டு பாடிவந்தார். இந்த சமயத்தில் பிரபல சங்கீத வித்வானுகிய கோயமுத்தூர் ராகவய்யரின் பாட்டைக் கேட்க அவருக்கு சந்தர்ப்பம் வாய்த்தது! ராகவய்யர் அக்காலத்தில் பிரசித்திபெற்ற சங்கீத வித்வான்! திருவாங்கூர் ஆஸ்தான வித்வானுகிய ராகவய்யர் அநேக வித்வான்களுடன் நேருக்கு நேர் போட்டி போட்டு கீர்த்தி பெற்றவர். அவருடைய பாட்டானது விசேஷமுள்ள கனத்துடனும் நாபி கமலத்திலிருந்து எழும்பும் கம்பீர நாத த்வனியுடனும் கூடியதாக இருந்தது. அத்தகைய சங்கீதத்தை ஐயரவர்கள் கேட்டவுடன் மிகவும் மனம் பூரித்து தானும் அம்மாதிரியே பாடவேண்டுமென்று ஆவல் கொண்டார். "பாடினுல் அவரைப்போல் பாடவேண்டும், இல்லாவிடில் பிராணனை விட்டுவிடவேண்டும்" என்று அவர் மனதில் உறுதி செய்து கொண்டார். இதன் பின்னர் அவர் விஷ்ணுபுரத்திலுள்ள 'கச்சுக்கட்டு' என்ற ஊருக்கு வந்து அதிதீவிரமாக சாதகம் செய்யத் துவக்கினர். அக்கிராமத்தின் அருகில் ஓடும் 'அரிச்சந்திர' நதியில் நல்ல குளிர் காலத்தில் விடியற்காலையில் நதியின் ஜலத்தில் உட்கார்ந்துகொண்டு 'அகார ஸாதகம்' வருஷக் கணக்காய்ச் செய்தார்.

ஒவ்வொரு இரவும் சந்திரிகை கிளம்பியதும் பாட ஆரம்பிப்பதும், சந்திரிகை ஆனவுடன் பாட்டை முடிப்பதுமாக ஐயரவர்கள் சாதகம் செய்து வரலானர். மூன்று நாழிகை நிலா இருந்தால் அன்று மூன்று நாழிகை நேரம் சாதகம் செய்வார். பூர்ண சந்திரிகை (பௌர்ணமி) யன்று இரவு முழுவதும் சாதகம் செய்வார். இப்படியாக அவர் விடா முயற்சியுடன் சாதகம் செய்து வந்தார். எப்பொழுதும் அவர் மனதில் கோயமுத்தூர் ராகவய்யர் பாடிய மாதிரியே பாடவேண்டும் என்ற எண்ணம் இருந்துகொண்டே வந்தது. சிற்சில சமயங்களில் சரியான்படி பிர்க்காக்கள் வராதபொழுது தனது தலையை கம்பத்தில் மோதிக்கொள்வார்! உணவும் உட்கொள்ளார். இறுதியாக அவரது சலியாத உழைப்பினுல் கோயமுத்தூர் ராகவய்யர் எப்படிப் பாடினுரோ அதே மாதிரி பாடும் வல்லமையை அடைந்தார்.

## பட்டணத்திலே!

ஐயரவர்கள் சென்னைக்கு விஜயம் செய்து கச்சேரி செய்தார். அநேக வருஷங்களாக உழைத்த பின் செய்த கச்சேரியாதலால் மிகவும் உயர்தரமாயும் ரசிகர்களின் உள்ளத்தை ஒருங்கே கவருவதாயும் இருந்தது. அதை வேறு எந்த கச்சேரியுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதபடி அவ்வளவு கர்ண சிராவியமாக இருந்தது. அதைக் கேட்டு மகிழ்ச்சி அடையாதவர்களே இல்லை என்றே தான் சொல்லவேண்டும். "அவரைச் சாதாரண கிராமாந்தர சுப்பிரமணிய ஐயர் இல்லை, பட்டணம் சுப்பிரமணிய ஐயர்" என்று ரசிகர்கள் வாயாரப் புகழ்ந்தனர். அன்று முதற்கொண்டு அவர் "பட்டணம் சுப்பிரமணிய அய்யர்" என்று பெயர் வழங்கப் பெற்ருர்.

## சென்ற இடமெல்லாம் சிறப்பு!

ஐயரவர்களின் கச்சேரிக்கு திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் பிடிலும், துக்காராம் மிருதங்கமும் வாசித்திருக்கிருர்கள். சென்னையில் அவர் செய்த கச்சேரிகளின் பயனுக அவர் பெயர் எங்கும் பிரசித்தியடைந்தது. எல்லா சமஸ்தானங்களிலிருந்தும் அழைப்புக் கடிதங்கள் அவருக்கு வந்தன. ஐயரவர்களும் மைசூர், திருவாங்கூர், விஜயநகரம், ராமநாதபுரம் முதலிய சமஸ்தானங்களில் பாடி, நன்கு கௌரவிக்கப் பெற்ருர். விலையுயர்ந்த சால்வைகள், தோடாக்கள் முதலிய சன்மானங்கள் கொடுக்கப்பட்டன.

## மூன்றுநாள் கச்சேரி!

மைசூர் அரண்மனையிலே ஐயரவர்களின் கச்சேரி நடைபெற்றது. தமது சாதக உழைப்பின் பயனுக அன்று அவர் கச்சேரி மிகவும் அத்தியாச்சரியமாக இருந்தது. அவருடைய மத்யகால பிருக்காக்களும், அடுக்கு அடுக்கான ஸ்வரம் பாடும் அழகும் கேட்பதற்கு மிகவும் இனிமையாயிருந்தன. ஐயரவர்கள் பொடிபோடும் வழக்கம் உடையவராதலால் அவருக்கு சட்டென்று பொடி தட்டுப்பட்டது. அவர் பொடிக்காக மடியைத் தடவினர். இதை குறிப்பாக அறிந்த மகாராஜா வைரம் பதித்த தமது தங்கப் பொடிடப்பியை எடுத்து ஐயரவர்களிடம் சன்மானமாக கொடுத்தருளினர். ஐயரவர்கள் அதிக உற்சாகமடைந்து "பியாகடை" ராகத்தை வெகு அருமையாக

அன்று முழுதும் ஆலாபனை செய்தார். பின்னர் இரண்டாம் நாள் கச்சேரியில் தானம் வகையறுக்களையும், மூன்றாம் நாள் கச்சேரியில் பல்லவி, ஸ்வரம் முதலியவைகளையும் அழகுபெறப் பாடி தமது கச்சேரியை முடித்தார். மகாராஜா மிகவும் மகிழ்ச்சியடைந்து விலையுயர்ந்த சன்மானங்களை கொடுத்து வருஷாசலமாக ரூபாய் ஆயிரமும் வழங்கி வந்தார்.

ஐயரவர்களிடம் சங்கீதம் கற்றுக்கொண்டு புகழ்பெற்றவர்கள் பலர். பூச்சி ஸ்ரீனிவாசய்யங்கார், நாராயணசாமி ஐயர், பாலக்காடு பரமேசுரய்யர், வீணை தனம், பொப்பிலி விச்வநாத சாஸ்திரி முதலியோராவர். ஐயரவர்கள் தனது சிஷ்யர்களிடத்தில் தனியாக அபிமானம் வைத்து அவரவர் சாரீரத்திற்குத் தகுந்ததுபோல சங்கீதத்தை சொல்லித் தருவார்.

## அழியாத செல்வம்!

ஐயரவர்கள் சங்கீதத்தைப் பாடுவதில் எவ்வளவு பிரசித்தி பெற்றிருந்தாரோ அதேபோல கவனம் செய்வதிலும் பிரசித்திப் பெற்று விளங்கினர். அவர் ஸ்ரீதியாகய்யர் செய்திருப்பது போலவே உயர்ந்த முறையில் தான வர்ணங்களையும், கீர்த்தனைகளையும் கவனம் செய்திருக்கிறார். அவருடைய கீர்த்தனைகளில் சில மத்யமகால நடைகள் பொருந்தியதாகவும், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷதரின் கீர்த்தனைகளைப்போல அநேக கீர்த்தனைகள் ஆரம்பத்திலேயே சவுக்ககாலமாயும், சரணங்களில் மத்யகாலமாகவும் மிக அழகாக செய்திருக்கிறார். ஐயரவர்கள் செய்த வர்ணங்கள், கீர்த்தனைகள் யாவும் ஸ்ரீவெங்கடேசப் பெருமானுக்கே அர்ப்பணமாக இருப்பதாலும், அந்தக் கீர்த்தனைகள் பரந்தாமனின் அனுக்ரகம் பெற்றிருப்பதாலும், எப்படி ஸ்ரீதியாகய்யருடைய கீர்த்தனைகள் இப்பூவுலகில் என்றுமழியாமல் எல்லோராலும் பாடப்பெற்று வருகின்றனவோ, அம்மாதிரியே ஐயரவர்களுடைய கீர்த்தனைகளும் எல்லோராலும் பாடப்பெற்று அழியாத செல்வமாக விளங்கி வருகின்றன! ○




ஆயுர்வேதாஸ்ரமம் (ப்ரைவேட்) லிமிடெட் மதராஸ்-17.




சென்ற இதழ் தொடர்ச்சி

## 4. பின்பனி காலம்

மறுநாளிலிருந்து சதா அவரைச் சுற்றிக் கொண்டிருந்த அந்தப் பழைய பளிஞன் எங்கும் காணப்படவில்லை. வில்லியும், முத்தையாவும் காணுமல் போனதற்கும், அவனுடைய மறைவுக்கும் ஏதோ ஒருவகையில் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. தன் மேலுள்ள பழியைத் தீர்த்துக்கொள்வதற்காக அவனே குழந்தைகளை தூக்கிக்கொண்டுபோய் ஏதாவது செய்திருக்கலாமென நினைத்தார். தேவர் தம் நினைப்பை வில்ஸனிடம் கூறியபோது அவரும் அப்படியே இருக்கலாமென்று சொல்லவே அந்தச் சந்தேகம் உறுதிப்பட்டது. உடனே சிருமேனித் தேவரும், வில்ஸன்உட் துரையும் போடி சர்க்கிள் போலீஸ் இலாகாவிற்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பினர். தாங்களாகவே ஆட்களை அனுப்பியும், நேரடியாகச் சென்றும் மலையில் பளிஞர்கள் வசிக்கும் இடங்களிலெல்லாம் தேடியும் பார்த்தனர். ஒரு பயனும் விளையவில்லை.

'முத்தையா' போய்விட்டானே என்ற ஏக்கத்தில் தேவரின் மனைவி இரண்டு மூன்று நாட்கள் சாப்பிடவே இல்லை. அழுது அழுது கண் வறண்டுவிட்டது. வில்லியை இழந்துவிட்ட துயரம் திருமதி வில்ஸனுக்கு இதைவிட அதிகமாகவே இருந்தது. இரண்டு குடும்பங்களிலும் எதனுலும் போக்கமுடியாத ஒரு சோகப் பின்னலை உண்டாக்கிவிட்டது இந்த எதிர்பாராத நிகழ்ச்சி. வில்ஸனுக்கும், தேவருக்கும் நேரடிப் பேச்சு நின்றுபோகும்படியான மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது.

"உங்கள் பெண்ணேடு விளையாடக் கிளம்பியிராவிட்டால் என் பையனுக்கு இந்தக்கதி நேர்ந்திருக்காது." என்ருர் தேவர்.

"உங்களுக்கும் அந்தப் பளிஞனுக்கும் இருந்த பகையினுல் ஒரு பாவமுமறியாத என் பெண்ணையும் பறிகொடுக்க வேண்டியதாகிவிட்டது"—என்று வில்ஸன் கோபமாக பதில் சொன்னர். பேச்சு வளர்ந்தது. முடிவில் இருவருமே ஒருவரோடொருவர் பேசுவதை நிறுத்திக்கொண்டு விட்டனர். ஆண்பிள்ளைகளுக்குள் ஏற்பட்ட இந்த முறிவு இருவீட்டுப் பெண்களின் நட்பிலும் கூடப் பிரதிபலித்துவிட்டது. வில்லி இல்லாமல் வில்ஸனின் வீடும், முத்தையா இல்லாமல் தேவரின் வீடும் வெறிச்சோடிப்போய்விட்டது. நாட்களும், நம்பிக்கையும் சிறிது சிறிதாகத் தேய்ந்துகொண்டே வந்தன.

உலகமெனும் குடை இராட்டினத்தில் காலமெனும் நங்கை பின்பனிக்கால எல்லையிற் சுழன்ருள். புத்தம் புதுத் தளிர்கள் தாவரங்களின் மேனியில் பசுமை மெருகிட்டன. கொன்றை மலர் கொத்துக் கொத்தாகப் பூத்தது. வாகை நெற்றுக்கள் காற்றில் கலகலத்துத் தாளமிட்டன. மாமரம் மறு காய்ப்புக்காகப் பூக்கலாயிற்று.

காணுமற்போன வில்லியும், முத்தையாவும், என்ன ஆனுர்களென்றே இதுவரை தெரியவில்லை. நம்ப முடியாதனவும், நம்ப முடிந்தனவுமாகப்

பல வதந்திகள் கிளம்பின. பளிஞன் தனக்கிருந்த ஆத்திரத்தில் அந்த இரண்டு குழந்தைகளையும் இரகசியமாகக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சிலர் கூறினர். 'மலைப் பகுதியில் யாரும் சென்று காண்பதற்கு அசாத்தியமான குகையில் ஒரு பாவமுமறியாத குழந்தைகளைக் கட்டிப் போட்டுத் துன்புறுத்துகிறான்' என்று வேறு சிலர் சொன்னார்கள். 'குழந்தைகளை அந்தப் பளிஞன் எடுத்துக் கொண்டு போனதாக நினைப்பதே தவறு. காட்டு விலங்குகளில் எதனாலாவது ஆபத்துக்காளாகி இறந்திருக்க வேண்டும்' என்று மற்றும் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். எல்லாம் ஒரே குழப்பமாக இருந்ததே ஒழியத் தெளிவாக எதுவும் விளங்கவில்லை. இரண்டு மாத அவகாசத்தில் எஸ்டேட் வேலையை முடித்துக் கொண்டு பெரியகுளத்திற்குத் திரும்பலாமென்று கருதியிருந்த தேவர் பையன் காணாமற் போனதால் மேலும் அங்கேயே தங்க நேர்ந்துவிட்டது. குழந்தையைக் கண்டு பிடிக்காமல் போவதில்லை, என்று மனதில் உறுதியான பிடிவாதம் விழுந்துவிட்டது. 'வில்ஸன் உட்' குடும்பத்தோடு லண்டனுக்குப் போயிருந்தார். லில்லியை இழந்த கவலையை மாற்றிக்கொள்ளச் சிறிது காலம் தாய்நாட்டிற்குப் போய் இருந்து விட்டு வரவேண்டும் போலிருந்தது அவருக்கு. பக்கத்து பங்களா ஆள் பழக்கமில்லாமல் போகவே வளமான மலைமுழுவதும் திடீரென்று பாலைவனமாகிவிட்டது போல் தேவருக்கும் அவர் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு பிரமை ஏற்பட்டிருந்தது. அந்த நிலையில் பின்பனிக்காலத்தின் முன்னிரவில் ஒரு வியக்கத்தக்க பயங்கரமான சம்பவம் திருமேனித் தேவரைத் தேடிவந்தது.

சாதாரணமாக ஒவ்வொரு நாள் இரவும் படுக்கப் போவதற்கு முன் பங்களாவைச் சுற்றிச் சரி பார்ப்பது தேவரின் வழக்கம். அன்றும் பத்துமணிக்குப் பின்பு மேஸ்திரியையும் உடன் கூட்டிக் கொண்டு சுற்றிப் பார்க்கக் கிளம்பினார் அவர். வாயிற்புறம் திரும்பிச் சென்றதுமே "ஐயா! அதோ காம்பவுண்டு கேட்டுக்குப் பக்கத்தில் யாரோ நிற்கிறாற் போலத் தெரிகிறதே? பாருங்கள்!"— என்று பரபரப்புடன் வாயிற்பக்கமாகச் சுட்டிக் காட்டினான் மேஸ்திரி.

"ஆமாம்! யாரோ ஆள் நிற்கிறாற் போலத்தான் தெரிகிறது. வா சொல்கிறேன். பக்கத்தில் போய்ப் பார்த்துவிடலாம்."

தேவர் மேஸ்திரியோடு இருளில் அந்த ஆள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு வேகமாகச் சென்றார். அவர்கள் வருவதைக் கண்டபின்பும் அந்த உருவம் ஓட எத்தனிக்கவில்லை. மேஸ்திரி தன் கையிலிருந்த விளக்கை அதன்முகத்திற்கு நேரே தூக்கிப் பிடித்தான். இருட்டில் ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்த அந்த முரட்டு உருவத்தின் முகத்தைப் பார்த்ததும், "அட! பாவி...... நீயா? உன் கழுத்தை நெறித்துக் கொல்லாவிட்டால் என்பெயர் திருமேனித் தேவரில்லை"— என்று அதன்மேல் குபீரென்று



பாய்ந்துவிட்டார் தேவர். அந்த ஆள் வேறு யாரும் இல்லை. பழைய மலைப் பளிஞன் தான்!

திருமேனித்தேவரின் வலுவான பிடியில் சிக்கித் திணறிக்கொண்டே, "ஐயோ! சாமீ...... உங்களுக்கு ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லிவிட்டுப்போக வந்திருக்கிறேன். என்னைக் கொன்றுவிடாதீர்கள். உங்கள் குழந்தைகள் அங்கே அந்த பில்லிசூனியக்காரனிடம் மாட்டிக் கொண்டு விட்டன"...... என்று மூச்சுத்திணறக் கத்தினான்.

"என்ன சொல்கிறாய்? எங்கே என் குழந்தைகள்? யார் அந்தப் பில்லிசூனியக்காரன்?"– என்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டே அவன் கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த தம் கைகளை எடுத்தார் தேவர்.

## 5. இளவேனிற்காலம்

நடந்ததை ஒளிக்காமல் முற்றிலும் தேவரிடம் கூறிவிட்டான் அவன். திருமேனித் தேவரைப் பழிவாங்கவேண்டுமென்ற ஆத்திரமும், குரோதமும் அவனிடமிருந்து எப்படி நீங்கினவென்று ஆச்சரியமாயிருந்தது மேஸ்திரிக்கு. அவன் கூறியதிலிருந்து கீழ்க்கண்ட விவரங்கள் தெரியலாயின,

அந்த மலைப்பளிஞன் பழிவாங்கும் எண்ணத்தினால் தூண்டப்பட்டுத் தானே குழந்தைகளைத் தூக்கிச் சென்றதை அவன் ஒப்புக் கொண்டான். ஆனால் தன் மகனைக் கொன்றதாகப் பழிதீர்த்துக்கொள்ளும் எண்ணத்தோடு தூக்கி வந்த குழந்தைகளைத் துன்புறுத்த நினைக்கும்போதெல்லாம் 'வேண்டாம்! அப்படிச் செய்யாதே. பொறு.' என்று ஏதோ ஒரு கருணைக் குரல் அவனிடமிருந்து எழுந்து அவனையே தடுத்துக் கொண்டிருந்தது. ஆத்மாவின் கட்டளையான அந்தக் குரலை மீற முடியாத அவன் குழந்தைகளைத் தன்னோடு வைத்து வளர்த்துக்கொண்டு வந்தான். தேவர் வசிக்கும் எஸ்டேட் மலைப் பகுதிகளில் சுற்றிக்கொண்டிருந்தால் தப்பித் தவறி எங்கேயாவது அவர் கண்களில் தென்பட்டு அகப்பட்டு விடுவோமோ என்று பயந்து கும்பக்கரை மலைச்சாரலை ஒட்டி அமைந்திருக்கும் மயிலாடும் பாறை என்ற இடத்திற்குப் போய்க் குழந்தைகளோடு மறைந்து வசிக்கலானான்.



மயிலாடும் பாறைக்கு அருகிலுள்ள மலைக்குகை ஒன்று அவனுக்கு அபயமளித்தது.

தாய் தந்தையரிடமிருந்து பிரிக்கப்பட்ட லில்லியும் முத்தையாவும் காட்டுமிராண்டிப் பளிஞனைக் கண்டு பயந்தும் அவனோடு பழகக் கூசியும் சில நாட்கள் அடம் பிடித்தார்கள். நாளடைவில் பழக்க மிகுதியினாலும், அந்தப் பளிஞன் தங்களைத் துன்புறுத்தாமல் அன்போடு பழகியதாலும் அவர்களுக்கும் அவனிடம் ஒரு ஒட்டுதல் ஏற்பட்டுவிட்டது. பெற்ற தந்தையிடம் பழகுவது போல் அவனிடம் பாசத்தோடு பழகத் தொடங்கிவிட்டார்கள். அவனைப்போலவே காட்டுமிராண்டித்தனமான பழக்க வழக்கங்களை அவர்களும் படித்துக்கொண்டு விட்டார்கள். கொல்ல வேண்டுமென்று பிடித்துவந்த குழந்தைகளைத் தன் சொந்த மக்களைப் பேணி வளர்ப்பதுபோல் கண்ணும் கருத்துமாக வளர்த்துக் கொண்டிருந்தான் அவன். தனக்குத் தெரியாமலே தன் மனதை மாற்றிவிட்ட கருணையின் விந்தையை எண்ணும் போது அவனுக்கே வியப்பாக இருக்கும். இப்போது லில்லியையும், முத்தையாவையும் யாராவது பார்த்தால் நாகரிகம் தெரிந்த நாட்டுக் குடும்பத்துக் குழந்தைகளென்று நம்பவே முடியாது. அசல் பளிஞர் சாதிக் குழந்தைகளைப் போல மாறிவிட்டனர். காலமும், பழக்கமும் சூழ்நிலையும் அவர்களிடம் உண்டாக்கிய மாறுதல் அது.

அந்த வருடம் பங்குனி, சித்திரை மாதத்தில் பெரியகுளம், போடி பகுதிகளில் ஒரு புரளி உண்டாகிப் பரவிற்று. எல்லோரும் அதைப் புரளியென்று சொன்னாலும் அதில் கொஞ்சம் உண்மையும் இருந்தது. 'பிள்ளை பிடிக்கிறவர்கள்' என்ற பெயரில் ஒரு கொடுமையான கூட்டம் ஊரில் மறைமுகமாகச் சுற்றிக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் சிறு குழந்தைகளைக் கவர்ந்து கொண்டுபோய் ஏதோ பலி கொடுக்கிறார்கள் என்றும் ஒரு பரபரப்பான சமாசாரம் எங்கும் பரவிக் கலவரம் உண்டாக்கியிருந்தது. பொய்யோ உண்மையோ ஊரார் வாயில் வந்தபடி பிள்ளை பிடிக்கிறவர்களைப்பற்றிய கொடுமையான பேச்சுக்களைப் பரிமாறிக் கொண்டனர். பிள்ளை பிடிப்பவர்கள் நரமாமிசம் புசிப்பவர்கள் என்றுகூடச் சிலர் ஒரு சரட்டைத் திரித்து விட்டிருந்தனர்.

செந்தாமரை விரிய, தேமாங் கொழுந்து ஒழுக அசோகு மடலவிழ, எங்கும் இளவெயில் காய்ந்து கொண்டிருந்த வேனிற் காலத்தின் தொடக்கத்தில் அந்த வட்டாரம் முழுவதும் பிள்ளை பிடிப்பவனைப்பற்றிய செய்தி முழங்கிப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

ஒரு நாள் காட்டில் சுள்ளி பொறுக்குவதற்குப் போயிருந்த லில்லியும், முத்தையாவும், பிள்ளை பிடிப்பவர் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பில்லி சூனியக்காரன் கையில் சிக்கிக்கொண்டனர். அவன் அவர்களை ஒரு பெரிய கோணிச் சாக்கில் போட்டு மூட்டைபோலக் கட்டித் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டான். இதை மறைந்திருந்து பார்த்திருந்த வேறோர் பளிஞன் மூலம் குழந்தைகளை வைத்துக் காப்பாற்றி வந்த பளிஞனுக்கு இச்செய்தி தெரிந்துவிட்டது. பில்லி சூனியக்காரன் குழந்தைகளைக் கோடைக்கானலுக்கு சமீபத்திலிருக்கும் சண்பகனூர் மலைக்குக் கொண்டு போவதாக உளவறிந்துகொண்டான் பளிஞன். குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவதென்று தெரியாமல் தவித்தான் அந்த படிப்பறிவில்லாத காட்டு மனிதன். போலீஸ் உதவியை நாடலாமென்றால் தன்னைப் போன்றவனால் அது முடியாதென்ற அவநம்பிக்கை அவனைத் தடுத்தது.

முடிவில் பகையையும், பழியையும் மறந்து திருமேனித் தேவரிடமே போய்ச் சரணாகதி அடைந்துவிடுவதென்று தீர்மானித்தான் அவன். உரிமை உடையவரிடம் கூறிவிட்டால் அவர் தன்னை மன்னிப்பதோடு குழந்தைகளை மீட்பதற்கான முயற்சிகளையும் செய்யாலாமென்ற நம்பிக்கையோடு ஓடிவந்திருந்தான் பளிஞன்.

* * *

இருளில் பங்களா காம்பவுண்டின் 'கேட்' அருகே நின்றுகொண்டு அவன் கூறிய இந்த விபரங்களைக் கேட்டபோது, 'உண்மையைத்தான் கேட்கிறோமா அல்லது ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறோமா?' என்று சந்தேகம் வந்து விட்டது திருமேனித் தேவருக்கும் மேஸ்திரிக்கும். இன்னொரு குரூரமான சந்தேகம்கூட அவர்களுக்கு உண்டாகிவிட்டது. "இப்படி ஒரு பொய்க் கதையை ஜோடித்து இருட்டில் எங்கேயாவது தனி இடத்திற்கு அழைத்துச்சென்று பழிவாங்க எண்ணுகிறானோ இந்தப் பளிஞன்?" என்று பயந்தனர். அவனை அரட்டி மிரட்டிக் கேட்டதில் "அப்படி ஒரு கெட்ட எண்ணமும் எனக்கு இல்லை சாமீ!" என்று கெஞ்சிக் குழைந்தான், வந்தது வரட்டும் அவனோடுகூடப் போயே பார்த்துவிடுவதென்று உடனே ஷெட்டிலிருந்து ஜீப்பை எடுத்துக் கொண்டு சண்பகனூருக்குக் கிளம்பினர். பெரியகுளம் வழியே சுற்றி வளைத்துப்போக நேரமாகுமென்று தோன்றியதால் குரங்கணியிலிருந்து மூணாறு டாப் ஸ்டேஷனுக்குப் போகும் மலை ரஸ்தா வழியே இரவென்றும் பாராமல் ஜீப்பில் புறப்பட்டு விட்டனர்.

## 6. முதுவேனிற்காலம்.

கோடைக்கானல் சண்பகனூர் பகுதிகளில் பதினைந்து நாட்கள் மூலை முடுக்கு விடாமல் சுற்றியும் குழந்தைகளைப் பற்றியோ, அவற்றைப் பிடித்துக் கொண்டுவந்த பில்லி சூனியக்காரனைப்பற்றியோ ஒரு துப்பும் துலங்கவில்லை. தேவர் மறுபடியும் போலீஸில் ரிப்போர்ட் செய்தார். "ஐயா! நீங்கள் ஊருக்குப் போகலாம். இந்த மலைத்தொடரில் எனக்குத் தெரியாத இடமில்லை. எங்கே தேடினாலும் எப்படித் தேடினாலும் உங்கள் குழந்தைகளை அந்த

# அடுத்தடுத்த வீட்டில் வசிப்பவர்கள்தாம் . . . ஆனாலும்

## ஆளுக்கு ஆள் தொலைதூரம்

அடுத்தடுத்த வீட்டில் வசிக்கும் இவ்விருவர், தோற்றத்திலும் உடையிலும் ஒருவரையொருவர் ஒத்திருப்பதுபோலத் தோன்றலாம். எனினும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராசி. மனோநிலையில் அவர்கள் துருவத்திற்கு துருவமாக மாறுபட்டவர்களாக இருக்கக்கூடும்.

அடுத்தடுத்து வாழும் மக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது ஒரு ஸ்வாரஸ்யமான காரியம். ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியிலுள்ள நாங்கள், நவீன விஞ்ஞான சாதனமாகிய விற்பனைத் துறை ஆராய்ச்சியின் மூலம் பொதுமக்களின் தேவைகள், இலட்சியங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாவற்றையும் ஆராய்கிறோம். மேன்மேலும் உங்களை அறிந்து கொள்வதற்கும், உங்கள் ரஸனைக்கும் வருவாய்க்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற சாமான்களை தயாரிப்பதற்கும் அவை வழிகாட்டுகின்றன. மேற்கூறிய வழிகளில் நீங்கள் எமக்கு இடைவிடாது ஆலோசனை வழங்கி வருகிறீர்கள், வழிகாட்டுகிறீர்கள்—என்ன இருந்தாலும் நாங்கள் உற்பத்தி நிகழ்த்திவருவதே உங்களுக்காகத்தானே!

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HINDUSTAN LEVER LIMITED — THE SEAL OF QUALITY



HLL. 10-X52 TM

அயோக்கியனிடமிருந்து மீட்டு உங்களிடம் ஒப்படைக்க முயல்கிறேன். இனி என் ஆயுட்காலம் முழுவதும் இதற்காகச் செலவழிக்க வேண்டுமானாலும் தயங்கமாட்டேன். அன்றொருநாள் என் மகனை நீங்கள் கொல்ல நேர்ந்தது. இன்று நான் உங்களிடம் அந்த பகையைப் பாராட்டவில்லை. காரணம்? வில்லியும், முத்தையாவும் கூட என் குழந்தைகளைப் போலவே என் உணர்வில் இடம் பெற்று விட்டார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக நான் எந்தப் பெரிய காரியத்தையும் செய்யத் தயங்கமாட்டேன்' நீங்கள் கவலைப் படாதீர்கள்."—என்று உள்ளமுருகத் திருமேனித் தேவரிடம் வேண்டிக்கொண்டான்; நாட்டு மனிதர்களிடம் இல்லாத அன்பையெல்லாம் தன் மனத்தில் நிரப்பி வைத்துக் கொண்டிருந்த அந்தக் காட்டு மனிதன்.

தேவரும் மேஸ்திரியும் அந்த அற்புத மனிதனின் அன்பை வியந்துகொண்டே ஊர் திரும்பினர். அவர்கள் போனபின் நேரமெல்லாம் மலைகளிலும் காடுகளிலும் ஒரு அணு இடம் விடாமல் அலைந்தான் பளிஞன். பிள்ளை பிடிக்கும் கொடியவனைக் காண இயலவில்லை; பிள்ளைகளையும் காணமுடியவில்லை. வாழ்க்கையில் சில பெரிய விஷயங்களைப் பற்றிய மர்மம் விளங்குவதற்குப் பல ஆண்டுகள் பொறுமையோடு காத்திருக்கவேண்டியிருக்கிறது. சில பெரிய கொள்கைகளை நிறுவுவதற்காகப் பெரியவர்கள் சில யுகங்கள் காத்திருப்பதைவிட இது அதிசயமா என்ன? வில்லியையும், முத்தையாவையும், அவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதாகச் சபதம் செய்திருந்த மலைப்பளிஞனையும், பற்றிய முழு விவரங்களும் தெரிவதற்கு எத்தனை வருடங்கள் திருமேனித் தேவர் காத்திருக்க நேர்ந்தது தெரியுமா? பதினைந்து ஆண்டுகள்! எவ்வளவு பெரிய கால இடைவெளி? இதற்குள் உலகத்தில் தான் எத்தனை மாறுதல்கள்? வில்லியின் தகப்பனாகிய 'வில்ஸன் உட்' துரை காலமாகிவிட்டார். மூத்த மகள் மேரியும் திருமதி 'உட்டும்' எஸ்டேட்டுகளை விற்றுவிட்டுத் தாய் நாட்டிற்கே திரும்பிச் சென்றுவிட்டனர். சாகிறவரை வில்ஸன் உட்டுக்கும் தேவருக்கும் பேச்சுவார்த்தை இல்லை.

* * *

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தாரும் ஆண்டு, ஏப்ரல் மாதம், கடுங்கோடை முதுவேனிற் காலத்து வெப்பம் 'உலகத்தைப் பொசுக்கி நீராக்கி விடுவேன்'—என்பது போல் வறுத்து எடுத்துக்கொண்டிருந்தது. இத்தகைய கோடையில் மலை வாசஸ்தலங்களுக்கு ஏற்படுகிற கிராக்கிக்குச் சொல்லவா வேண்டும்?

கோடைக்கானலில் கூட்டம் நிலை கொள்ளமுடியாமல் கூடியிருந்த சமயம். அப்போது திருமேனித் தேவரும் குடும்ப சகிதம் கோடைக்கானலில் போய்த் தங்கியிருந்தார். 'பில்லர் ராக்ஸ்'—மலைக்குப் போகிற வழியில் ஆப்ஸர்வேடரிக்கு (வானிலை ஆராய்ச்சி நிலையம்) அருகில் ஒரு பெரிய பங்களாவை ஒரு மாதத்திற்கு வாடகை பேசித் தங்கியிருந்தது தேவரின் குடும்பம். ஓய்வுக்காக வந்து தங்கியிருக்கிற ஊரில், பத்திரிகை படிப்பது, சினிமாவுக்குப் போவது, ஆகிய இவைகளைத் தவிர வேறு என்ன பொழுது போக்கு இருக்க முடியும்?

அன்று காலையில் வந்த தினசரிப் பத்திரிகையில் 'தேவைக் கலம்'—தொடங்கி 'இன்னாரால் இன்ன பிரஸ்ஸில் அச்சிடப் பட்டது'—என்ற கடைசி அம்சம் வரை படித்து விடுவதென்ற நோக்கத்துடன் உட்கார்ந்தார் தேவர். எடுத்த எடுப்பிலேயே அவருடைய பார்வையில் புகைப் படங்களோடு கூடிய அந்த விளம்பரம் பட்டது. அருகருகே பிரசுரிக்கப்பட்டிருந்த ஆண்—பெண் ஜோடியான அந்தப் படங்களின் மேல் தற்செயலாகச் சென்ற அவர் பார்வை அப்படியே நிலைத்தது. உற்றுப்பார்த்தார். கீழே எழுதியிருந்ததை ஆவலோடு படித்தார்.

"இந்தப் படங்களில் இருக்கும் இளைஞனும், யுவதியும், 1942-ம் வருஷத்தில் சிறு வயதாக இருக்கும்போது மலைப்பளிஞன் ஒருவனால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள். அந்தப் பளிஞன் இவர்களை எங்களிடம் அடைக்கலமாகக் கொடுக்கும்போது சாகுந்தறுவாயில் இருந்ததனால் 'குழந்தைகள் அவன் பெற்றவை அல்ல' என்ற ஒரே ஒரு உண்மையைத் தவிர வேறெதையும் நாங்கள் அவனிடமிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை. காட்டுமிராண்டிகளாக எங்களிடம் சேர்க்கப்பட்ட இக்குழந்தைகளை வளர்த்துப் படிப்பும் நாகரிகமும் உண்டாக்கி இதுவரை காப்பாற்றியிருக்கிறோம். இவர்களுக்கு நாங்களாக வைத்த பெயர்களாவன: ரோஸி, ஜான்ஸன். முன்பு இவர்களுக்கு என்ன பெயர் என்பதை எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. இருவரில் ரோஸி பிறவியிலேயே ஆங்கிலக் குழந்தை என்றும், ஜான்ஸன் இந்திய இனங்களில் ஒன்றைச் சேர்ந்தவனென்றும், சந்தேகிக்கிறோம். இதுவரைஎங்களால் ஆதரிக்கப் பெற்ற இவர்கள் இருவரது விருப்பத்தின்படி நாளை இங்குள்ள சண்பகனூர் அர்ச்—மரியன்னை—மாதா கோவிலில் இருவருக்கும் காதல் திருமணம் நடைபெறும். இந்த நல்ல நாளில் இவர்களின் பெற்றோர் எங்கு இருந்தாலும் இந்த விளம்பரத்தையே அழைப்பாகக் கொண்டு உரிய சான்றுகளுடன் இங்கே வரக்கோருகிறோம்"

இங்ஙனம்,

ரெவரண்ட் ஜேம்ஸ் ஜாய்ஸ்,

தலைவர், மேரி மாதா மிஷின் கல்லூரி,

செண்பகனூர்,—கோடைக்கானல்.

பி.கு.—மற்ற விவரங்களை நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.



படித்து முடித்ததும் திருமேனித் தேவரின் விழிகளில் ஆவல் பொங்கியது. மறுபடியும், மறுபடியும் அந்தப் படங்களையே பார்த்தார். பத்திரிகையை மடித் தெறிந்துவிட்டு உடனே சண்பகனூருக்குக் கிளம்பினார். வீட்டில் யாரிடமும் இன்ன இடத்திற்கு போகிறேனென்று சொல்லிக்கொள்ளக்கூடத் தோன்றவில்லை அவருக்கு.

* * *

சண்பகனூரை அடைந்த தேவர் ஜாய்ஸைக் கண்டு யாவுங் கூறினார். ஒரே நோக்கத்துடன் உயர்ந்து எழுந்த குறிக்கோளைப் போல் விளங்கிய பெருமாள் மலையின் ஒற்றைச் சிகரத்தைப் பார்த்துக்கொண்டே புன்முறுவல் பூத்தார் ஜாய்ஸ் பாதிரியார். அவருக்கு எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருந்த திருமேனித் தேவரின் முகபாவத்தில் பரபரப்பு நிலவியது. ஜாய்ஸின் சாந்தம் தவழும் அந்தச் சிரிப்பு ஏசுநாதரே இன்னொரு பிறவி எடுத்துவந்து சிரிப்பதுபோல் இருந்தது.

"சார்! நீங்கள் என்னை நம்புங்கள். பத்திரிகையில் விளம்பரத்தைப் படித்ததும் பதறி ஓடி வருகின்றேன். 'முத்தையா'–என் மகன் 'வில்லி' 'வில்ஸன் உட்'துரையின் இளைய மகள்........."–என்று ஆவேசத்தோடு பேசினார் தேவர்.

"நம்புகிறேன். நம்பமாட்டேன் என்று சொல்லவில்லையே? ஆனால் உங்கள் குழந்தைகளை உயிருடன் மீட்பதற்காக எந்த மனிதன் இரத்தத்தைச் சிந்திப் போரிட்டானோ அவனைப் பற்றி நீங்கள் ஒரு வார்த்தைகூட விசாரிக்கவில்லையே! அதை எண்ணித்தான் சிரிக்கிறேன்."—என்றார் பாதிரியார்.

"வெகுநாட்களாகப் பிரிந்துவிட்ட குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆத்திரத்தில் அதைப்பற்றி கேட்க மறந்துவிட்டேன். தயவு செய்து சொல்லுங்கள்."—என்றார் தேவர்.

"நீங்கள் கேட்காவிட்டாலும் நான் சொல்வதாகத்தான் இருந்தேன். அந்தப் புனிதமான மனிதனை என்போன்றவர்களால் என்றும் மறக்கவே முடியாது. அப்படிப்பட்ட மனிதனின் மூலம் கடவுளின் கோடானு கோடி அம்சங்களில் ஒன்று இவ்வுலகில் பிறவியெடுப்பதாக நான் நம்புகிறேன்"— என்ற பூர்வ பீடிகையுடன் சமது கணீரென்ற குரலில் அதைக் கூறத் தொடங்கினார் பாதிரியார்.

* * *

பல ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் வருஷக் கடைசியில் நானும் இந்த மிஷின்

கல்லூரியைச் சேர்ந்த சக ஆசிரியர்கள் சிலரும் கும்பக்கரைக்கு உல்லாசப் பிரயாணமாகச் சென்றிருந்தோம். கும்பக்கரையில் நான்கு நாட்கள் முகாமிட்டிருந்தோம். மலைப் பகுதியிலுள்ள பல அருவிகளையும், சுனைகளையும், இயற்கைக் காட்சிகளையும் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம்.

அங்கு வந்த மூன்றாவது நாள் மாலை அருகிலுள்ள ஒரு அதிசயமான இடத்திற்குச் சென்றோம். இங்கொன்றும் அங்கொன்றுமாகக் குகைகளும், முடுக்குகளும் நிறைந்த ஒரு பெரிய மலைப்பாறையில் அணிவகுத்து நிறுத்திவைத்து யாரோ வேண்டுமென்றே ஆடச் சொன்னது போல் ஏராளமான மயில்கள் தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தன. உயரமாகவும், செங்குத்தாகவும் இருந்த அந்தப் பாறையின் மேல் மிக அருகே மேகங்கள் தொங்குவது போலிருந்த சிறப்பால் அங்கே இயற்கையாகவே எப்போதும் இந்த மயில்களின் கூட்டத்தைக் காணலாமென்று தெரிந்து கொண்டோம். அதனாலேயே அந்த இடத்திற்கு மயிலாடும் பாறை என்ற பெயரும் ஏற்பட்டிருந்தது. மனோரம்மியமான அந்த மாலை நேரத்தில் நீலமலைச் சிகரங்களுக்கும், வெண்மேகங்களுக்கும் இடையே கூட்டம் கூட்டமாக இளம் பெண்கள் நடனமாடுவது போல் அழகிய மயில்கள் பைந்தோகை விரித்தாடும் அழகைக் கண்ணாரக் கண்டு கொண்டே குகைகளின் வழியே பாறைகளைத் தாண்டி நடந்து கொண்டிருந்தோம். நாங்கள் பத்துப் பன்னிரண்டு பேருக்கு மேல் இருப்போம். திடீரென்று ஒரு பாறை இடுக்கிலிருந்து இரண்டு மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் ஒலியும், இரண்டு குழந்தைகள் பயத்தினால் வீறிட்டலறும் ஓசையும் கேட்டன. சப்தம் தெளிவாகவும், மிக அருகிலும் கேட்டதே ஒழிய அந்த இடத்திற்கு எப்படிப் போவதென்று எங்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்த காட்சியையும பார்க்க முடியவில்லை. சுற்றி வளைத்துக் கற்பாறைகளில் ஏறி இறங்கி அந்தப் பாறை இடுக்கை நாங்கள் அடைவதற்குள் காரியம் கை மிஞ்சி விட்டது. மகாபயங்கரமான காட்சியை நாங்கள் அங்கே கண்டோம். பிசாசு போன்ற தோற்றத்தையும், பூதாகாரமான உடம்பையும் உடைய மனிதன் ஒருவன் யாரோ ஒரு கிழட்டு மலைப்பளிஞனைக் கீழே தள்ளிக் கத்தியினால் குத்திக் கொண்டிருந்தான். அவன் மந்திரவாதிகளைப் போல எலும்பு மாலையும், இரண்டு முன்னங்கைகளிலும் கறுப்பு இரட்சைக் கயிறுமாகப் பார்ப்பதற்குக் குலை நடுங்கும் காட்சியைத் தந்தான்.

இன்னொரு மூலையில் ஆணும் பெண்ணுமாக ஐந்தாறு வயதுக் குழந்தைகள் இரண்டுபிரண்டு வீறிட்டுக் கொண்டிருந்தன. கிழவனைக் குத்தித் தள்ளிய பிசாசு மனிதன் அந்தக் குழந்தைகளை ஒரு கோணிப் பையை விரித்து அதில் கட்ட முயன்றான். 'சரி! இவன் ஏதோ அநியாயம் செய்யப் போகிறான். இனியும் சும்மா பார்த்துக் கொண்டு நிற்பது கூடாதென்று நானும் என்னிடமிருந்த ஆட்களும் துணிந்து பாறை இடுக்கில் குதித்தோம். கூட்டமாக எங்கள் பத்துப் பன்னிரண்டு பேரைக் கண்டதும் அந்த முரடன் ஓடமுயன்றான். நாங்கள் பிடிக்கத் துரத்தினோம். மலைவழிகளிலுள்ள நெளிவு சுளிவுகளை நன்றாகத் தெரிந்து கொண்டிருந்த அந்தக் கொலைகாரப் பிசாசு எப்படியோ தப்பி ஓடிவிட்டது. நல்லவேளை. அந்தக் குழந்தைகளை ஒரு ஆபத்துக்கும் உள்ளாக்காமல் காப்பாற்றி விட்டோம். குத்துப்பட்டுக் கீழே விழுந்திருந்த மலைப்பளிஞன் சாகுந்தறுவாயிலிருந்தான். தளர்ந்து துவண்ட கையை மெல்லத் தூக்கி என்னைத் தன் பக்கத்தில் வருமாறு சைகை செய்தான். நான் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அவன் சமீபத்தில் சென்றேன். அந்தக் குழந்தைகளும் பார்ப்பதற்குக் காட்டுப் பளிஞர் இனத்தைச் சேர்ந்தவை போலத்தான் இருந்தன.

"ஐயா! இந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகத் தான் நான் இவ்வளவு பாடும்பட்டேன். நல்ல காலமாக நீங்கள் வந்து உதவினீர்கள். இல்லையானால் அந்தப் பில்லி சூன்யக்காரப் படுபாவி இந்தச் சிறுபிள்ளைகளைக் கொண்டு போயிருப்பான்" என்று தளர்ந்து ஒடுங்கிய குரலில் கூறினான் பளிஞன்.

"இவர்கள் உன் மக்களா?" என்று அவனைக் கேட்டேன் நான். 'இல்லை' என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிவிட்டு, அந்தக் குழந்தைகளைச் சுட்டிக் காட்டி என்னைப் பார்த்துக் கை கூப்பினான் அவன். 'இவர்களைக் காப்பாற்றி ஆளாக்கி உரியவர்களிடம் சேருங்கள்' என்று என்னைக் கெஞ்சுவது போலிருந்தது அவனது அந்திம காலத்துப் பார்வை. சிறிது நேரத்திற்குப் பின் அந்தப் பளிஞன் கிடந்த இடத்தில் அவன் சடலம்தான் கிடந்தது. இதுதான் ரோஸியும், ஜான்ஸனும், எங்களுக்குக் கிடைத்த கதை"

* *

ஜாய்ஸ் பாதிரியார் இதைக் கூறி முடித்துவிட்டு எதிரே உட்கார்ந்திருந்த தேவரைப் பார்த்தார். அவருடைய கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. சிறுபிள்ளைபோல் கேவிக்கேவி அழுது கொண்டிருந்தார் வலுவான மனதை உடைய திருமேனித் தேவர்.

"கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள். இனிமேல் அழுது என்ன பயன்? நாளைக் காலை

யில் திருமணம் முடிந்ததும் 'ரோஸியையும்—ஜான்ஸனையும்' நீங்கள் அழைத்துப் போகலாம்" என்றார் பாதிரியார்.

"பாதிரியாரே! அந்தப் பளிஞனுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்'—என்றது போல் என்னை முற்றிலும் புதிய முறையில் பழி வாங்கி விட்டானே அவன்?"— என்று விம்மினார் தேவர்.

"குப்பையிலே அபூர்வமாக முளைக்கும் கொடி முல்லை போல உலகத்தில் எங்காவது ஒரு நல்ல மனிதன் உண்டாகிக் கொண்டுதான் இருக்கிறான்"—என்றார் ஜாய்ஸ். அவர் வேறென்ன தான் பதில் சொல்ல முடியும்?

* * *

இந்த விநோதமான சம்பவங்களின் உண்மையை எல்லாம் அன்று அந்தக் கார் காலத்து இரவில் கும்பக்கரை அருவியின் பாறையில் உட்கார்ந்து கேட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை. நான் அவரைக் கேட்டேன் "அப்படியானால் இன்று காரில் வந்தவர்கள்?"

"லில்லியும், முத்தையாவும் தான்! அதாவது இப்போது ரோஸி-ஜான்ஸன்" என்றார் தேவர்.

"உங்கள் மகன் வெள்ளைக்காரர் மாதிரியே இருக்கிறானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"எங்கள் குடும்பத்தில் எல்லோருமே நல்ல சிவப்புத்தான்." என்றார் திருமேனித்தேவர். அன்று மாலை அந்த மழை இரவில் என்னை ஏன் அவ்வளவு வற்புறுத்திக் கும்பக் கரைக்கு அழைத்து வந்தார் என்ற விவரம், மறுநாள் காலையில்தான் எனக்குத் தெரிந்தது. என்ன விந்தை நிறைந்த உலகம் இது? ஒவ்வொரு மனித வாழ்விலும் எத்தனை அந்தரங்க மர்மங்கள் புதைந்திருக்கின்றன.

வருடந்தோறும் அந்தப் பளிஞன் இறந்த நாளில், மயிலாடும் பாறையில் அந்த இடத்திற்கு வந்து மாலை சூட்டிப் பிரார்த்தித்து விட்டுப் போவது லில்லி, முத்தையா வழக்கமாம். மறு நாள் அதிகாலையிலேயே தேவர், நான், லில்லி, முத்தையா நால்வரும் ரோஜா மாலைகள் சகிதம் மயிலாடும் பாறைக்குச் சென்றோம். கும்பக் கரை ரெஸ்ட் ஹவுஸிலிருந்து அது மிகச் சமீபத்திலேயே இருந்தது.

பளிஞனால் காப்பாற்றப்பட்ட அந்தத் தம்பதிகள் அவன் இறந்த பாறைமேல் மாலையைச் சூட்டிவிட்டு வணங்கினர். அப்போது நான் மேலே பாறையின் பரப்பை நிமிர்ந்து அண்ணாந்து பார்த்தேன்.

மலைச் சாரலின் மேகக் குடைகளுக்குக் கீழே எண்ணற்ற இளமயில்கள் எழில் நிறைந்த தங்கள் நீலப்பசுந்தோகைகளை விரித்து, அதன் பெரிய கண்கள் மின்னிடக் கவலையின்றி ஆடிக் கொண்டிருந்தன.

முற்றும்.


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | |
|---|---|---|---|---|
| | ரூ. | நயா பைசா | ரூ. | நயா பைசா |
| ஒரு வருஷம் | 6 | 00 | 7 | 50 |
| அரை வருஷம் | 3 | 00 | 3 | 75 |
| தனிப் பிரதி | 0 | 50 | 0 | 62 |



# கண்ணம்மா— என் மருமகள்

பள்ளிக்கூட விடுமுறை விட்டு என் மருமகள் கண்ணம்மா எங்கள் வீட்டுக்கு வந்ததுமுதல், வீடே அடையாளந் தெரியாமல் மாறிவிட்டது. சதா ஓடாக உழைக்கும் நிலை இனி எனக்குக் கிடையாது. எல்லாக் காரியமும் இமைப் பொழுதில் நடந்துவிடுகிறது; நானும் அவளை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.



துணி துவைப்பதை எடுத்துக் கொள்ளலாமே—சாமான்யமான விஷயந்தான், ஆனால் சலவை செய்யும் சோப் சுத்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று கண்ணம்மா சொன்ன போது நான் அதிசயித்தேன்.

அவள் சொன்னாள்:

S. 255A-X52 TM



"சுத்தமான சோப் வெளுக்கும் அழகுக்கு எதுவும் ஈடாகாது; அது கொள்ளை கொள்ளையாய் நுரை கொழிக்குமே—நுரையென்றால், துணிகளையோ கைகளையோ பாதிக்காத சுகமான நுரை!"

ஸன்லைட் சோப்பை எடுத்துவந்து, துணிமீது இலேசாகத் தேய்த்தாள், அவ்வளவுதான், சட்டென்று கொழித்துக் கொண்ட அபரிமிதமான நுரையை நீங்கள் பார்க்க வேண்டுமே! அடுத்தபடி, அடித்துத் துவைப்பதற்கான மட்டையொன்றை நான் எடுத்து நீட்டியதும் அவள், "இது எதற்கு அத்தை. ஸன்லைட் சலவை என்றால் அடித்துத் துவைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கில்லை என்று அர்த்தம். சிறிது சோப்பினால் இலேசாகத் தேய்த்து விட்டாலே போதும், உடனே கிளம்புகிற ஏராளமான நுரையில் தாமாகவே துணிகள் பளிச்சென்று வெளுத்து விடும்" என்றாள்.

பளிச்சென்று, சுத்தமாக ஆகிவிட்ட துணிகளைப் பார்த்ததும், ஈரம் உலர்வதற்குள் அப்படியே உடுத்திக்கொண்டுவிடலாமா என்ற பரபரப்பு எனக்கு. புகழ்ச்சிக்காக சொல்லவில்லை, கண்ணம்மா கெட்டிக்காரி!




ஸன்லைட் அவ்வளவு பளிச்சென்று, வெண்மையாக வெளுப்பதற்கு அவள் கூறும் காரணம், நூலிழைகளில் பதுங்கியிருக்கும் எல்லா அழுக்குகளையும் அறவே அகற்றிவிடக்கூடிய சக்தி ஸன்லைட்டின் செழிப்பான நுரைக்கு உண்டு என்பதுதான்.

இதெல்லாம் சரிதான்; குடித்தனப் பொறுப்பைத் தாங்கும் எனக்குத் தோன்றிய சிறு சம்சயம் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு வைத்தேன்: "அது சரிதான், என் தங்கமே, ஆனால் ஸன்லைட் விலை அதிகமாச்சே!"

நகைத்தவண்ணம் கண்ணம்மா சொன்னாள், "போங்க அத்தை. நீங்களாக ஏதாவது கற்பனை செய்துகொண்டு..."

கண்கொட்டாமல் நான் வியந்த நிலையில், அவள் விவரித்தாள்: "ஒரே ஒரு வில்லை ஸன்லைட் சோப் ஒரு மூட்டை துணிகளுக்கு பதில் சொல்லும் அத்தை. பார்க்கப்போனால், ஸன்லைட் சோப்பால் சலவை செய்வது எவ்வளவோ சிக்கனம்!"



ஸன்லைட் சோப்பில் என்னை வசீகரித்த மற்றொரு அம்சம், அதன் வாசனை. தும்பைப் பூவுக்கு நறுமணமூட்டியதுபோல, சலவையான துணிகளைச் சுற்றிலும் தூய்மையின் ஜோதி வியாபித்திருக்கும். மேலும், சலவை செய்த கைகளுக்கு ஸன்லைட் நுரை மென்மையும் மழமழப்பும் அளிக்கும்.

புடவை, ரவிக்கை, துண்டு, துப்பட்டா, என் கணவரின் வேஷ்டி, சட்டை, குழந்தைகளின் துணிகள்—ஆக மொத்தம் சிறிதும் பெரிதுமாக வீட்டுத் துணிமணிகள் எல்லாவற்றிற்கும் உகந்த சலவை சோப் ஸன்லைட்டைத் தவிர வேறில்லை என்பதை எனக்கு நன்குணர்த்தியது கண்ணம்மாவின் வரவு. துணிகளை ஸன்லைட் பளிச்சென்று, சுத்தமாக வெளுத்து விடுவதைப் புகழ்வதா, அல்லது ஒரு பெரிய துணிக் குவியலை ஒரே ஒரு ஸன்லைட் வில்லை வெளுத்து விடும் ஆற்றலை போற்றுவதா என்ற வியப்பு எனக்கு. மொத்தத்தில் எங்களுக்குப் பணம் மிச்சமாவதோடு, உடுத்துவதற்கு சுத்தமான துணிகளும் கிடைக்கின்றன.




ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்

S. 255B-X52 TM

அட்டைப்படக் கதை

# மன அழகு

**மாயாவி**

இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு நான் "சமந்தரக் கோடுகள்" என்ற தலைப்புடன் ஒரு கதை எழுதினேன். சமந்தரக் கோடுகள் என்றால் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆங்கிலத்தில் "பாரெலல் லைன்ஸ்" எனப்படும் அவை, ஒன்றை ஒன்று தொட்டுக்கொள்ளாது, ஆனால் ஒரே போக்கில் செல்லும் வெவ்வேறு கோடுகள். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டதுதான் என் கதை. அதில் ஒரு பேராசிரியர் வருகிறார். அவர் தமது மாணவி ஒருத்தியைக் காதலிக்கிறார். ஆனால் தனது ஆசிரியர் தன்னைவிடத் தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர் என்பதால் அந்த மாணவி அவரை மணக்க மறுத்து விடுகிறாள். இதனால் மனம் உடைந்த பேராசிரியர் சுற்றுப் பிரயாணம் சென்று மனவருத்தத்தை மாற்றிக் கொண்டு ஊர் திரும்பிக்கொண்டிருக்கிறார். வழியில் ரெயிலில், அவருடைய கல்லூரியில் புதிதாகச் சேர வந்துகொண்டிருந்த மாணவி ஒருத்தி அவருக்கு அறிமுகமாகிறாள். அவருடன் பேசிக் கொண்டிருந்த போது, அவள் தம்மைவிடத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவள் என்பதும், விரைவில் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்வில் ஈடுபடுவதே அவளுடைய நோக்கம் என்பதும் பேராசிரியருக்குத் தெரியவருகின்றன. 'சரி, இவள் நிச்சயமாக நம்மை மணக்க மறுக்கமாட்டாள்' என்ற உறுதியுடன் அவர் தமது கோரிக்கையை மெல்ல அப்பெண்ணிடம் வெளியிடுகிறார். ஆனால் பேராசிரியர் தன்னைவிட உயர்ந்த வகுப்பில் பிறந்தவர் என்பதால் இந்தப் பெண் அவரை மணக்க இணங்கவில்லை. இவ்விரு பெண்களும், வெவ்வேறு காரணத்துடன் தம்மை மணக்க மறுத்தாலும், அவர்களுடைய மனப்போக்கு சமந்தரக் கோடுகளைப்போல் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பதை உணர்ந்து கொள்ளுகிறார் அந்தப் பேராசிரியர்.

இதுதான் கதை. இது வெளிவந்து கிட்டத்தட்ட இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. அக்கதையைக்கூட நான் அநேகமாக மறந்துவிட்டேன். ஆனால் சமீபத்தில் ஒருநாள், திருக்குற்றாலத்தில் தங்கியிருந்த யாரோ ஒரு யுவதியிடமிருந்து எனக்கு ஒரு கடிதமும், கதையும், என் கதை வெளியான ஒரு பத்திரிகாலயத்தின் வழியே வந்தன. அந்தக் கடிதத்தை அப்படியே கீழே தருகிறேன்.

'ஹில்ஸ்' பங்களா,
குற்றாலம், தென்காசி வழி,
7—4—1958.

அன்புள்ள கதாசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

சமீபத்தில், நீங்கள் எழுதிய "சமந்தரக் கோடுகள்" என்ற கதையைப் பழைய பத்திரிகை ஒன்றில் படித்தேன். அதில் 'பெண்களுக்குச் சமரச மனப்பான்மை கிடையாது; காதலில்கூட உயர்வு–தாழ்வுகளைப் புகுத்திப் பார்ப்பவர்கள் அவர்கள்' என்று தொனிக்கும்படியாக எழுதியிருக்கிறீர்கள். அதைப் படித்த போது எனக்கு மிகுந்த ஆத்திரம் உண்டாயிற்று. அந்த ஆத்திரத்தில் எழுதப்பட்ட கதையும் கடிதமும்தாம் இவை. நீங்கள் எந்த அநுபவத்தைக்கொண்டு உங்களுடைய "சமந்தரக் கோடு"களைச் சிருஷ்டித்தீர்களோ, அது எனக்குத் தெரியாது; ஆனால் என்னுடைய பிரத்யக்ஷ அநுபவம் அதற்கு நேர் எதிரிடையானது. அதைத்தான் இத்துடன் இணைத்துள்ள கதை சித்தரிக்கிறது.

நான் 'எழுத்தாளி' அல்ல. ஆனால் உங்களுடைய "சமந்தரக் கோடு"களில் கொடுக்கப்பட்டிருந்த சம்பவங்களும், என் வாழ்க்கையில் நிகழ்ந்த அநுபவங் களும் இரு சமந்தரக் கோடுகளாகவே வந்ததால், உங்கள் கதையின் நடையைப் பின்பற்றியே என் அநுபவத்தைக் கதை யாக வனைந்து அனுப்பியிருக்கிறேன். நீங்கள் நேர்மையுடையவர்களானால் உங்களுடைய "சமந்தரக் கோடு"களில் பெண்களைக் குறைபாடு உள்ளவர்களாக சித்தரித்துவிட்டதற்குப் பிராயச்சித்தமாக இந்தக் கதையை ஏதாவது பத்திரிகைக்கு அனுப்பிப் பிரசுரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்மூலம் வாசகர்களின் மனதில் படிந்துள்ள அழுக்கைப் போக்க வேண்டும்.

இப்படிக்கு,
உங்கள்மீது
அடங்காச் சினம் கொண்டிருக்கும்
சகோதரி ...............

பி. கு.—தய்வு செய்து, கதையை என் பெயரில் பிரசுரிக்க வேண்டாம். யாருடைய பெயரையாவது இட்டுப் பிரசுரியுங்கள். கண்டவர் பெயரை இழுத்துப் போட்டுவிட்டு அவதிப்படத் தயாராக இல்லை என்று நீங்கள் கருதுவதானால், இதோ நானே ஒரு பெயர் தருகிறேன். எஸ். சாம்பசிவம் என்ற பெயரைப் போட்டுக் கொள்ளுங்கள். அது என் சமையற்காரனின் பெயர்தான். அவன் தன் பெயரை உபயோகித்துக் கொள்ளுவதை ஆட்சேபிக்க மாட்டான் என்பதையும் உறுதி கூறுகிறேன்.

கடிதத்தைப் படித்ததும் நான் மிகவும் விசனமுற்றேன். ஏனென்றால் பெண்களைக் குறைப்படுத்தும் நோக்கத்தோடு நான் என் கதையை எழுதவேயில்லை. அல்லது அந்தக் கதையில் பெண்கள் எல்லோரும் இப்படிப்பட்டவர்கள்தாம் என்ற கருத்து தொனித்ததாகவும் எனக்குத் தோன்றவில்லை. ஆகையால், இந்தப் பெண்மணிக்குமட்டும் இப்படித் தோன்றுவானேன் என்ற கேள்வி உடனே என்னிடம் எழுந்தது. சரி; இவருடைய கதையைப் படித்துப் பார்த்தால், ஒருகால் விவரம் தெரியலாமென்று அதைப் படிக்கலானேன்.

* * *

ஓடையில் தண்ணீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. நான் தங்கியிருந்த பங்களாவுக்குச் சிறிது தூரத்துக்கு அப்பால் ஓடிக்கொண்டிருந்தது அந்த ஓடை. அதன் நீரில் பாதங்களை நனைத்தவாறு கரையிலிருந்த ஒரு கல்லின்மீது அமர்ந்திருந்தேன்.

என்னைச் சுற்றிலும், உடலுக்கும் உள்ளத்துக்கும் உவப்பூட்டும் குற்றாலத்தின் இயற்கை அழகு கொஞ்சிற்று. இளம் தென்றல் மேலே மலையின் வானுற ஓங்கிய மரங்களில் தவழ்ந்து, அருகில் 'சோ'வென்று கொட்டிக்கொண்டிருந்த அருவி நீருடன் கலந்து, என்மீது பன்னீர் தெளித்துச் சென்றுகொண்டிருந்தது. ஆனால் அந்த இயற்கையின் எழில் காட்சியும், இளம் தென்றலின் இன்பக் காற்றும் என்னைச் சிறிதுகூடக் கவரவில்லை. என்னை அச்சமயம் அந்த ஓடைநீர்தான் கவர்ந்திருந்தது.

ஆம், ஓடைநீர். அந்த நீரிலே சிறிதும் பெரிதுமாகப் பல மீன்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அவை சிறு குழந்தைகள் மிட்டாயைச் சுவைப்பதுபோல் என்பாதங்களைச் சுவைத்துக் கொண்டிருந்தன. அந்த வேடிக்கையை நான் கூச்சமும் குறுகுறுப்பும் கலந்த ஒருவித உணர்ச்சியுடன் கண் இமைக்காது நோக்கிக் கொண்டிருந்தேன். 'எதற்காக இவை வெண் சங்குபோன்ற என் பாதங்களைச் சுவைக்கின்றன' என்று நான் முதலில் ஆச்சரியப்பட்டேன். ஆனால் சிறிது சிந்தித்துப் பார்த்த பிறகு எனக்கு அதன் ரகசியம் புலனாயிற்று. என் கால்களில் எங்கோ சிறிது அழுக்கு ஒட்டிக்கொண்டு இருந்திருக்க வேண்டும்; அதைப்புசிக்கத்தான் மீன்கள் அடிபிடி போட்டுக்கொண்டு மொய்த்துக்கொண்டிருந்தன.

மீன்களின் இச்செயல், என் பாட்டு வாத்தியார் அடிக்கடி கூறும் வேதாந்த தத்துவம் ஒன்றை எனக்கு நினைவூட்டிற்று. அவர் சொல்லுவார். "வீணா! இந்த உலகத்தில் அழுக்கில்லாத மனிதர்களே கிடையாது. ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமான அழுக்குப் பற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு மனிதனுவது தன்னிடம் படிந்துள்ள அழுக்கைத் தானாக உணருவதில்லை. அதைப் பிறர்தான் அவனுக்கு எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது!"

பாட்டு வாத்தியாரின் கூற்றுக்கு நானே அத்தாட்சி. ஆம்; சற்றுமுன் தோலைப் பிய்த்துவிடும்படியாகக் கொட்டிய அருவியில் இரண்டு மணிநேரம் நின்று, அரைக் கட்டி நறுமண சோப்பையும் தேய்த்து நன்றாகக் குளித்துவிட்டு வந்திருந்த நான், என்னிடம் இன்னும் அழுக்கு ஒட்டிக்கொண்டிருக்கும் என்று நினைத்தேனா? நினைத்துத்தான் இருப்பேனா? யதேச்சையாக இந்த மீன்கள் என் பாதங்களைச் சுவைத்ததால்தானே அது எனக்குத் தெரிய வந்தது!

ரம்பா நடன கலா மண்டலியின் பிரதம நடன நட்சத்திரமாகப் பணியாற்றி வந்த நான் இரண்டு மாதங்களுக்கு முன் அந்த வேலையை

உதறிவிட்டு இந்தக் குற்றாலத்தை நோக்கி ஓடி வந்ததே இம்மாதிரி ஒரு அழுக்கின் காரணமாகத் தான். ஆனால் அந்த அழுக்கு என்னைப் பற்றியிருந்த அழுக்கு அல்ல; இன்னொருவரின் அழுக்கு என் வாழ்வுக்கு இழுக்காக வந்து என்னை விரட்டிற்று. குற்றாலத்துக்கு வந்தபோது நாள் வாழ்க்கையிலேயே விரக்தி கொண்டவளாக வந்தேன். 'நாம் ஏன் இன்னும் உயிர் வாழ வேண்டும்? யாருக்காக வாழவேண்டும்?' என்ற கேள்விதான் அச்சமயம் என் உள்ளத்துக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்தது.

ஆனால் இவ்வூரின் இதமான சூழ்நிலையும், இன்பம் ததும்பும் இதன் சாரலும் என் உள்ளக் கொதிப்பை விரைவில் ஆற்றிவிட்டன. "வீணா! நீ வாழவேண்டியவள். உன் உண்மையான வாழ்வே இனித்தான் ஆரம்பமாகவேண்டும்" என்பதை அவை எனக்கு உணர்த்தின.

உண்மையான வாழ்வு! ஆமாம்; நான் இது வரை வாழ்ந்து வந்த வாழ்வு, வாழப்போகிறோம் என்று கனவு கண்டு வந்த வாழ்வு பொய் வாழ்வென்பதை அந்த நாகலிங்கமும் அவருடைய மகனும் நிரூபித்து விட்ட பின்னர், என் உண்மையான வாழ்வு இனித்தானே ஆரம்பமாக வேண்டும்?

நாகலிங்கம்! சீ! அந்த மனிதரைப்பற்றி இந்தச் சமயத்திலா நினைப்பது?

மீன்கள் இப்படி விழுந்து விழுந்து அழுக்கைப் புசிப்பதைப் பார்க்கும்போது என் மனசில் வேறொரு வேடிக்கையான எண்ணமும் எழுகிறது. இவை மட்டும் மனிதரின் உடலில் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்கைப் புசித்து அவர்களைச் சுத்தப்படுத்தி விடுவதுபோல், அவர்களுடைய உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் அழுக்கையும் புசித்துச் சுத்தப்படுத்தி விடக் கூடியவைகளாக இருக்கக்கூடாதா?

அப்படி மட்டும் இருந்தால், இப்பொழுதே சென்னைக்குப் பறந்துசென்று அந்த நாகலிங்கத்தைப் பிடித்து இழுத்துவந்து இந்த ஓடையில் நன்றாக அமுக்கி அவருடைய மன அழுக்கைப் போக்கியிருக்கலாமே.

அடாடா! அந்த மனிதர் இவ்வளவு கேவலமான அழுக்கை மனசிலே சுமந்து கொண்டிருப்பவர் என்பது மட்டும் எனக்கு முன்பே தெரிந்திருந்தால்...?

தெரிந்திருந்தால், நான் அவருடைய மகன் ஜெய்காந்திடம் மனசைச் செலுத்தியே இருக்க மாட்டேன். ஜெய்காந்தை நான் முதல் தடவையாகச் சந்தித்தபோது, ஆஹா! என்ன வசீகரமான உருவம்! எவ்வளவு களங்கமற்ற தோற்றம்!" என்று மெய்மறந்து நின்றேன். அந்த மெய் மறப்பினால்தான் போலும், பாட்டு வாத்தியார் என் மனசிலே உரையேற்றி வைத்திருந்த அந்தத் தத்துவம் "உலகில் அழுக்கில்லாத மனிதரே இருக்க முடியாது" என்ற அந்த அநுபவ மொழி எனக்குத் தோன்றாமலே போய்விட்டது.

எனக்குத் தோன்றாமல் போய்விட்டால் என்ன? அதுதான் சமயம் வந்தபோது தானாக வெளியாகி விட்டதே!

அந்த நாகலிங்கம்; அவரைப் பற்றி நினைக்கவே கூடாது என்றாலும் நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது. "கலை வளர்ச்சிக்காக உயிர், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்திருப்பவர்; கலைஞர்களுக்காக எதையும் தியாகம் செய்யக்கூடியவர்" என்றெல்லாம் புகழப்பட்டு வந்த அந்த மனிதர் அன்று கூறிய வார்த்தைகள் "வீணா! நீ என் மகனைக் காதலிக்கிறாயா? நன்றாகக் காதலி அம்மா. ஆயுள் உள்ள அளவும் வேண்டுமானாலும் காதலித்துக்கொண்டே இரு. ஆனால் கலியாணம் என்ற பேச்சை மட்டும் எடுத்துவிடாதே. ஏனென்றால், அவன் மனைவியாகும் அளவுக்கு நீ பெயரும் புகழும் பெற்றிருக்கவில்லையே!"

பெயரும், புகழும், அவை மாத்திரம் கடை வீதியில் கிட்டும் பொருள்களாக இருந்தால், அப்பா எனக்கு வைத்துப்போயிருக்கும் ஆஸ்தி முழுவதையும் கொடுத்தேனும் அவற்றை வாங்கி வந்திருப்பேன். அல்லது, மனிதர் கீழ்த் தளத்திலிருந்து மேல் தளத்துக்குப்போக சிரமப்பட்டு படிப்படியாக ஏறிக்கொண்டிராமல், நொடியில் 'லிப்'டில் போய் விடுகிறார்களே, அதுபோல் இதற்கும் ஒரு 'லிப்'டாவது இருந்து தொலைத்திருக்கக்கூடாதா?

நாகலிங்கத்தின் இந்த வார்த்தைகளால் அதிர்ந்த நான், அருகில் நின்றுகொண்டிருந்த ஜெய்காந்தின் களங்கமற்ற முகத்தை நோக்கினேன், அப்பாவைப்போல் பிள்ளையும் அழுக்குப் படிந்தவராக இருக்கமாட்டார் என்ற உறுதியுடன். ஆனால் சென்ற மூன்று வருஷங்களாக, நாள்தோறும் என் பதியாக வேடம் தரித்து மேடைமீது ஆடிவந்த அவர், அந்த ஆட்டம் முடிவுற்றதும் வேற்று மனிதர் ஆகிவிடுவது போலவே இப்பொழுதும் ஆகிவிட்டார். அவர் சொன்னார்: "ஐயையோ! இது என்ன வீணா, பெரிய குண்டாகத் தூக்கிப்போடுகிறாய்? நீ இப்படிப்பட்ட நினைவோடு என்னுடன் பழகி வந்தாய் என்பது முன்பே தெரிந்திருந்தால்.........?"

முன்பே தெரிந்திருந்தால்......?

ஆம்; எனக்கும், இவர்கள் அப்பாவும் பிள்ளையும், இம்மாதிரி ஒரு அழுக்கை உள்ளுக்குள்ளே புதைத்துக் கொண்டிருப்பவர்கள் என்பது முன்பே தெரிந்திருந்தால்......? அது தெரியும்படியாகவா நடந்துகொண்டு வந்தனர் அவ்விருவரும்? அதிலும் அந்த ஜெய்காந்த்—அவர்தானே என் மனசில் காதல் விதையையே ஊன்றினார்? என்னை அவருடைய வசீகரத் தோற்றம் முதல் பார்வையிலேயே கவர்ந்துவிட்டது என்னவோ



உண்மைதான்; ஆயினும் நான கண்ணை மூடிக்கொண்டு அவர்மீது உடனே காதல் கொண்டு விடவில்லை: அந்த வயிற்றெரிச்சலைக் கொஞ்சம் கேளுங்கள்.

அப்பா இருந்தவரை, "அம்மா வீணா! எனக்கு வயதாகிக்கொண்டு வருகிறது. நான் திடீரென்று ஒருநாள் கண்களை மூடிவிட்டால் உன்னைப் பாது காப்பவர் யாரும் இல்லை. ஆகையால் காலா காலத்தில் நீ ஒருவனைக் கைபிடித்துவிட்டால் நான் நிம்மதியாகச் சாவேன்" என்று என்னை நச்சரித்துக்கொண்டே இருப்பார். ஆனால் என்னை அப்பொழுது கலைப்பித்து பலமாகப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. என்னுடைய சங்கீதப் பயிற்சி அச்சமயம் முடியும் தருவாயில் இருந்தது. 'கலியாணம் செய்துகொண்டு விட்டால், நாம் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்டுவரும் கலையைக் குடும்பப் பொறுப்பு வந்து மூடிக் குடத்தினுள் விளக்காக்கிவிடும்; ஆகையால் சில காலமாவது நாம் அப்பியசித்த சங்கீதத்தை உலகுக்கு வழங்கிவிட்டுத்தான் மணவினையில் ஈடுபடவேண்டும்' என்று அப்பாவின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் இருந்து வந்தேன். கடைசியில் அவர் அந்த மனக்குறையுடனே காலமானார்.

அவர் இறந்த சில மாதங்களுக்கெல்லாம் இந்த நாகலிங்கத்தின் ரம்பா நடன கலா மண்டலி எங்கள் ஊரில் நடன நிகழ்ச்சிகளை நடத்த முகாமிட்டது என் பாட்டு வாத்தியாருக்கு அந்த நாகலிங்கத்தை முன்பே பழக்கமுண்டாம். "உனக்கு வேண்டுமானால் நாகலிங்கத்தின் மண்டலியில் பதம் பாடும் வேலை வாங்கித் தருகிறேன் வீணு; போகிறாயா?" என்று அவர் ஒரு நாள் என்னைக் கேட்டார். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? 'சரி' என்று ஒப்புக்கொண்டு ரம்பா நடன கலா மண்டலியில் சேர்ந்தேன்.

ஆனால் பாடிப் பிழைக்க வந்த என்னை ஆடிப் பிழைப்பவளாக்கிவிட்டார் ஜெய்காந்த். ஆரம்பம் முதலே என்னிடம் நெருங்கிப் பழகிவந்த அவர் ஒருநாள், "வீணு! உனக்குச் சிறந்த நடனக்காரியாவதற்குத் தேவையான உடலமைப்பும், இளமையும், முகவெட்டும் இருக்கின்றன. நீ ஏன் நாட்டியம் கற்றுக்கொள்ளக் கூடாது?" என்று கேட்டார்.

"இந்த வயசுக்கு மேல் நடனக் கலையைக் கற்றுக்கொள்ள என் உடல் வணங்குமா ஜெய்காந்த்? ஒருகால் வணங்கினாலும், அந்தச் சிரம சாத்தியமான பணியை மேற்கொள்ள எந்த நடன ஆசிரியர்தான் முன்வரப் போகிறார்?" என்றேன் நான்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம் வீணு; அதற்கெல்லாம் நான் ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு, நான் சரியென்று சொல்லுவதற்குள்ளாகவே தன் தந்தையிடம் சிபாரிசு செய்து எனது நடனப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தாரே அந்த மனிதர், அது எதற்காக? இல்லை; எதற்காக என்று கேட்கிறேன்.

போகட்டும்; அதையாவது, என் அழகோடு கலையும் சேர்ந்தால் தங்கள் நடன மண்டலிக்கு மேலும் புகழ் கிட்டும் என்பதற்காகச் செய்தார் என்று வைத்துக்கொண்டாலும், நான் வெறும் கத்துக்குட்டியாக மேடையேறித் தத்துப் பித்தென்று ஆடி வந்தபோது. "இந்த நடன ஆசிரியரிடம் பயிற்சி பெற்று நீ முன்னேறுவதற்குள் சப்தகோடி காலம் ஆகிவிடும்போல் இருக்கிறது. இனி நானே உனக்குப் பயிற்சி அளிக்கிறேன்" என்று கூறிக்கொண்டு, இரவெல்லாம் கண் விழித்து மேடையில் ஆடிச் சோர்ந்திருந்த போதிலும், அச் சோர்வு நீங்க உறங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டிய பகல் வேளையில் என் ஜாகைக்கு வந்து எனக்குப் பிரத்தியேகப் பயிற்சி அளிக்க ஆரம்பித்தாரே, அதுதான் எதற்காக? இல்லை; எதற்காக என்று கேட்கிறேன்.

சரி; அதையும், என்னைத் தங்கள் மண்டலியின் பிரதான நடனக்காரியாக்கிவிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் செய்தார் என்று எடுத்துக் கொண்டாலும், அந்த இரண்டு வருஷப் பயிற்சிக் காலம் முழுவதும், என் மனசிலே காதல் நினைவு கிளர்ந்தெழும் வண்ணம் ஏன் பழகினார்? ஏன் என்னை எப்பொழுதும் விழுங்கிவிடுவதுபோல் பார்த்துக்கொண்டிருந்தார்? ஏன் என்னிடம் பூடகமாகப் பேசியும், சமிக்ஞையாக நடந்துகொண்டும் வந்தார்? இல்லை; ஏன் இப்படியெல்லாம் செய்து வந்தார் என்று கேட்கிறேன்.

கட்டிளங்காளையான மணமாகாத இளைஞன் ஒருவன் இவ்வாறு ஒரு கன்னிப் பெண்ணிடம் பழகி வந்தால், அந்தப் பெண் அதைக் காதலின் அடையாளமாகக் கருதாமல் வேறு என்னவென்றுதான் கருத முடியும்? அப்படியிருந்தும் கூட, சந்தேகத்தைத் தெளிவு செய்துகொள்ள நான் அவரிடம் ஒருநாள் கூடமாகக் கேட்டேன்: "ஜெய்காந்த்: நீங்கள் இப்படி என்னிடம் அளவு மீறி அக்கறை காட்டுவது உங்கள் அப்பாவுக்குப் பிடிக்குமா என்பதை ஆலோசித்துப் பார்த்துக் கொண்டீர்களா?"

அடேயப்பா! இதை நான் கூறியதும் அவருக்கு வந்த கோபம்! "என் அப்பாவைப்பற்றி உனக்குத் தெரியாது வீணு. அவர் கலைக்காகத் தமது உயிரையே அர்ப்பணித்திருப்பவர், கலைஞர்களுக்காக எதையும் தத்தம் செய்யக் கூடியவர். அவரைப்பற்றி இனி ஒருபோதும் என் காது கேட்க இப்படித் தாழ்வாகப் பேசாதே" என்று என்னை அடிக்கவே வந்துவிட்டாரே!

அவர்தான் போகட்டும்; அந்தக் கிழட்டு நாகலிங்கமாவது, பெயரும் புகழும் பெற்ற தமது மணமாகாத மகன், பெயரும் புகழும் பெறாத ஒரு கன்னிப் பெண்ணுடன் அத்துமீறிப் பழகிக் கொண்டிருந்ததைக் கண்டு விழிப்புடனிருக்க வேண்டாமா? அன்று நாங்கள் அப்படிப் பழகி வந்தபோதெல்லாம் ஆனந்தத்தோடு பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இன்று என் மனசில் காதல் கனிந்து பயன் எய்த முயன்றபோது அதைத் தமது உயர்வு-தாழ்வு என்ற அணுகுண்டால் தகர்த்து எறிந்துவிட்டாரே!

இதையெல்லாம் கண்டபோது என்னால் ஒரே ஒருவித முடிவுக்குத்தான் வரமுடிந்தது. அதாவது, பாட்டு வாத்தியார் கூறியதுபோல், உலகத்தில் அழுக்கு இல்லாத மனிதரே கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அழுக்கு. அந்த அழுக்கு இருப்பதை.........

பிறகு என்ன? கட்டி வந்த காதல் கோட்டை தரை மட்டமானதும், நான் ரம்பா நடன மண்டலிக்கே முழுக்குப் போட்டு விட்டேன். அந்த நாகலிங்கத்துக்கும், அவருடைய பெயரும் புகழும் பெற்ற மகனுக்கும் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, உடைந்த மனசை ஒட்டவைக்க இந்தக் குற்றாலத்துக்கு வந்து சேர்ந்தேன்.

* * *

என் வாழ்வில் ஏற்பட்ட இந்த இருட்டைப் போல் அப்பொழுது வானமும் திடீரென்று இருண்டது. மறு விநாடி சட-சடவென்று மழை தூற்ற ஆரம்பித்துவிட்டது. இந்தக் குற்றாலத்துப் பருவநிலையே விசித்திரந்தான். இங்கே

எப்பொழுது மழைபெய்யும்; எப்பொழுது வெயில் அடிக்கும் என்று சொல்லவே முடியாது. நான் அவசரமாக எழுந்து பங்களாவை நோக்கி ஓடினேன். ஓடிக்கொண்டிருந்தபோதே நினைத்துக் கொண்டேன்! இப்படி இந்த ஊரின் பருவநிலை நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுவதுபோல் மனிதர்களின் மன நிலையும் மாறக் கூடியதாக இருக்கக் கூடாதா? அப்படி இருந்தால், என் உள்ளத்தைக் கவர்ந்த ஜெய்காந்த் மனமாற்றம் அடைந்து என்னைத் தேடி வர ஒரு வாய்ப்பாவது ஏற்படுமே!"

உடனே எனக்கு இதற்கு எதிரான எண்ணம் ஒன்றும் முளைத்தது. "என்ன பைத்தியக்கார ஆலோசனை! மனிதரின் மனநிலை நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுவதாக இருந்துவிட்டால், அதன் காரணமாக ஜெய்காந்த் மனம் மாறி என்னை மணந்து கொண்டாலும், மீண்டும் மனநிலை மாறி என்னை உதறிவிட்டுப் போவதும் சாத்தியந் தானே?"

சட-சடவென்று தூற்றிய மழை, நான் சிறிது தூரம் போவதற்குள்ளாகவே நின்றுவிட்டது. மறு நிமிஷம் சுளீரென்று வெயில் அடிக்கவும் ஆரம்பித்து விட்டது. சட்; என்ன பருவநிலை இது? மன நிம்மதிக்காக தனிமையை நாடி இந்த ஓடைக் கரைக்கு வந்தேன்; நான் எதிர்பார்த்த தனிமை கிடைத்தது; மனசைக் கட்டவிழ்த்து விட்டேன். அதற்குள் என்னை விரட்டுவதற்கு என்று இந்த நிமிஷநேரமழை வந்து தொலைத்து விட்டதே! பங்களாவுக்குப் போவோமா அல்லது ஓடைக் கரைக்கே திரும்பிச் செல்வோமா என்று நான் ஆலோசித்துக் கொண்டிருந்தபோது -

"நீங்களா? எங்கே இப்படித் தனியாக?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தேன்.

அவர்தான்; காலையில் என்னைச் சந்தித்த அதே மனிதர்!

ஆம்; இன்று காலையில் பல் விளக்கியதும், சமையற்காரன் சாம்புவைக் காபி தயாரித்துக் கொண்டுவரச் சொல்லிவிட்டு, பங்களாவின் வெளித் தாழ்வாரத்திலிருந்த ஸோபா ஒன்றில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது வாடகை மோட்டார் ஒன்று 'விர்' ரென்று பறந்து வந்து 'போர்ட்டிகோ'வில் நின்றது. அதிலிருந்து இறங்கிய மனிதரைக் கண்டதும் "ஜெய்காந்த்!" என்ற சந்தோஷக் கூச்சல் என் உதட்டின் நுனிவரை வந்துவிட்டது. ஆனால் நல்ல வேளை! அதற்குள் வந்த மனிதர் முந்திக்கொண்டு விட்டார். "'தி ஃபால்ஸ்' பங்களா இதுதானா அம்மா?" என்று அவர் கேட்டார்.

அந்தக் குரல்மட்டும் மாறுபட்டு இருந்திராவிட்டால், "மனம் திரும்பி வந்து விட்டீர்களா ஜெய்காந்த்?" என்று நான் அந்த அந்நியரின் நெஞ்சில் முகத்தைப் புதைத்துக்கூட இருப்பேன் ஆமாம்; தத்ரூபம் ஜெய்காந்தேதான். அதே எலுமிச்சம்பழ மேனி; பெண் சாயல் ததும்பும் முகம்; எடுப்பான கூரிய நாசி; காதுவரை நீண்டிருந்த மச்சக் கண்கள்; நீண்ட கைகளும், கால்களும் கொண்ட நெடிய உருவம். உருவத்தில் மட்டுந்தானா ஒற்றுமை இருந்தது? ஆடை அணிகளில்கூட. ஜெய்காந்தைப்போலவே முழுக்கை ஸில்க் ஜிப்பா; அரையில் தூய மஸ்லின் வேட்டி; கழுத்தை மாலையாக சுற்றிக்கொண்டு, விசிறி மடிப்பு மடிக்கப்பட்ட மயில்கண் பட்டு அங்கவஸ்திரம்; கழுத்திலே மைனர் செயின்; இடக் கையில் ரிஸ்ட் வாட்சும் தங்கச் சங்கிலியும்; விரல்களிலெல்லாம் மோதிரங்கள். இவைதாம் போகட்டுமென்றால், சிகையைக்கூட அல்லவா அவரைப்போல் பிடரிவரை வளர்த்துவிட்டுக் கொண்டிருந்தார்; ஒருவேளை நாடக நடிகராக இருப்பாரோ?

"அம்மா! உங்களைத்தான் கேட்டேன்" என்று அவர் என்னை உசுப்பும் வரை நான் நானாகவே இல்லை. "என்ன? என்ன கேட்டீர்கள்?" என்று தடுமாறினேன்.

"இல்லை; 'தி ஃபால்ஸ்' பங்களாதானா இது என்று கேட்டேன்" என்றார் அவர்.

"இது இல்லை; அடுத்தது" என்றேன் இன்னும் தடுமாற்றம் தீராமல்.

"மன்னிக்கவேண்டும். 'வடக்கு வரிசையில் கிழக்கேயிருந்து ஏழாவது பங்களா' என்றான் கடைவீதியில் ஒருவன். சரியாக எண்ணிக் கொண்டு வந்ததாகத்தான் நினைவு, தவறிவிட்டேன் போலிருக்கிறது. சிரமத்துக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு ஜெய்காந்தின் பிரதிபிம்பமான அந்த மனிதர் போய்விட்டார்.

அவர் போய்விட்டால் என்ன? அவருடைய வருகை கிளப்பிவிட்ட நினைவு என் மனசில் தங்கி விட்டதே!

சாம்பு காபி கொண்டுவந்தபோது, 'டிரே'யில் இரண்டு கோப்பைகள் இருந்தன. "அடடா! அதற்குள் போய்விட்டாரா? அவசரம் அவசரமாகத் தயாரித்து வந்தேனே" என்றான் அவன்.

"யாரைச் சொல்லுகிறாய் சாம்பு?"

"நந்தகுமாரை; சற்றுமுன் உங்களுடன் பேசிக் கொண்டிருந்தாரே, அவரைத்தான்"

"யார் இந்த நந்தகுமார், சாம்பு?"

சாம்பு என்னை ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டே, "உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டான்.

"தெரியாது; 'தி ஃபால்ஸ்' பங்களா இதுதானா என்று கேட்டுக்கொண்டு வந்தார்; அடுத்தது என்று கூறி அனுப்பினேன்."

"இருக்கட்டுமே; இருந்தாலும் சக தொழிலாளியின் பெயரைக்கூடவா கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்?"

சக தொழிலாளி! அந்த வார்த்தையைக் கேட்டதுமே என் மனசில் ஒருவித வெறுப்பு

எழுந்துவிட்டது. அது என்னவோ, ஜெய்காந்த் என் காதலை நிராகரித்த பிறகு எனக்கு ஆண் வர்க்கத்திடமே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அந்த வெறுப்பு அவரைப் போலவே உருவ அமைப்புப் பெற்ற இந்த நந்த குமாரும் ஒரு நடனக்காரர்தான் என்று அறிந்ததும் பன்மடங்காகிவிட்டது. நான் அவரைப்பற்றிப் பிறகு ஒன்றும் விசாரிக்க விரும்பவில்லை. ஆனால் என் மனநிலையைப் புரிந்து கொள்ளாத சாம்பு "நந்த குமாருக்கு நீங்கள் யாரென்று தெரியாது போலிருக்கிறது; அதனால்தான் போய்விட்டார். ஆனால் அடுத்த பங்களாவில்தானே தங்கியிருக்கிறார். விரைவில் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு பார்க்க ஓடி வருவார், பாருங்கள்" என்று என்னென்னவோ உளறிவிட்டுப் போய்ச்சேர்ந்தான்.

முக்கியமாக அந்த நந்த குமாரின் சந்திப்பைத் தவிர்க்கத்தான் நான் உடனே குளிக்கக் கிளம்பி விட்டேன். குளித்துவிட்டு வந்து சாப்பாட்டை முடித்துக்கொண்டதும் இந்த ஓடைக் கரைக்கு ஓடி வந்துவிட்டேன்.

ஆனால் இது என்ன? காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் விடாது என்பதுபோல், நான் பார்க்க விரும்பாத மனிதர் இதோ என் எதிரே வந்து நிற்கிறாரே!

மனசுக்குள்ளே நந்தகுமார்மீது எத்தனை தான் வெறுப்பு இருந்தாலும், மரியாதை என்று ஒன்று இருக்கிறதல்லவா? அதற்காக நான் அவரிடம் பேசியாக வேண்டியதாயிற்று. "சும்மாதான் இப்படி அந்த ஓடைவரைப் போகலாமென்று போனேன்; மழை வந்து விட்டது; திரும்பிக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"அடடா! நனைந்துவிட்டீர்களே?" ஆண்கள் தான் பெண்களிடம் எவ்வளவு அக்கரை கொண்டவர்கள்போல் நடிக்கிறார்கள்?

"இல்லை; அவ்வளவாக நனையவில்லை. மழை தான் நிமிஷ நேரம் தூறிவிட்டு நின்றுவிட்டதே. இந்தக் குற்றாலத்தில் இவ்வளவு குறைவான நனைச்சலைப் பொருட்படுத்தினால் நடக்குமா? சரி, நான் வருகிறேன்."

நான் பேச்சை நீடிக்க விரும்பவில்லை; புறப்பட்டு விட்டேன். ஆனால் அந்த மனிதர் என்னை விட்டால்தானே. "ஒரு நிமிஷம் அம்மா" என்று அவர் என்னை நிறுத்தினார். "காலையில் நீங்கள் யாரென்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. சற்று முன்புதான் நீங்கள் ரம்பா நடன கலா மண்டலியின் பிரதம நாட்டியமணி வீணாதேவி என்பதைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் எப்பொழுது குற்றாலத்துக்கு வந்தீர்கள்?" என்று கேட்டார்.

"இரண்டு மாதங்களாகின்றன"

"இரண்டு மாதங்களாகிவிட்டனவா? அப்படியானால் சீக்கிரம் திரும்பிச் சென்று விடுவீர்கள். நல்லவேளையாக அதற்குள் உங்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததே. அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இவன் எதற்காக நம்மை சந்தித்ததற்கு மகிழ்ச்சியடைய வேண்டும் என்று நினைக்காதீர்கள். இனம் இனத்தைச் சாரும் என்றவாறு நானும் ஒரு நாட்டியக்காரன்தான். நந்தகுமார் என்று பெயர்."

"அப்படியா? சந்தோஷம்." நான் மனமறிந்து பொய்தான் சொன்னேன். என்ன செய்வது? மரியாதை என்பது சில சமயங்களில் நம்மை அப்படிச் செய்யச் செய்து விடுகிறதே! பொய்யைச் சொல்லிவிட்டு, "நமஸ்காரம்: வரட்டுமா?" என்று நான் கிளம்பத் தயாரானேன்.

ஆனால் அந்த மனிதர் என்ன, என்னை அட்டையாகப் பற்றிக்கொள்ளத் தீர்மானித்து விட்டாரா? "வாருங்களேன்; என் பங்களாவுக்குப் போகலாம். என் அழைப்பை வித்தியாசமாகக் கருதாதீர்கள். உங்களையும் மிஸ்டர் ஜெய்காந்தையும் குருவாக வணங்கிவரும் ஏகலைவன் நான். ஆகையால் உங்கள் சிஷ்யனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு என் பங்களாவில் உங்கள் பாததுளி படச்செய்ய வேண்டும்."

உறுதி நிறைந்திருந்த என் மனதிலே சட்டென ஒரு சலனத்தை ஏற்படுத்திற்று இந்தச் செய்தி. இவர் நம்மைக் குருவாக கருதி வருபவர் என்றால்...? நம் அளவு புகழ் பெற்றவரில்லை என்றால்...?

அதைப் பருவ ஏக்கம் என்றோ, பெண் மனத்தின் பித்து என்றோ, அல்லது வேறு எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். ஆனால் நான் சொல்வது இதுதான்: இந்தச் சலனம் நிச்சயமாக என் உறுதியிலிருந்தே உதித்தது தான். ஆம், என் அந்த மன உறுதி என்றைக்கு உயர்வு-தாழ்வு அழுக்கின் காரணமாக என் முதற் காதல் நசுக்குண்டதோ அன்றே தோன்றிய உறுதி அது: "இனி நாம் காதல் கொள்ளுவதானால் ஒரு போதும் நமக்கு உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களிடம் மனசைச் செலுத்தலாகாது: நம்மை விடத் தாழ்ந்த இடந்தான் நமக்கு லாயக்கு!"

இந்த நினைவுதான், வெறுப்புக்கொண்டிருந்த நந்தகுமாரிடம் எனக்குச் சட்டென்று விருப்பு ஏற்படச் செய்தது. அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றி பங்களாவுக்குச் செல்லத் தூண்டிற்று.

ஆனால் அவருடைய பங்களாவிலே நுழைந்து நடு ஹாலிலிருந்த ஸோபாவில் அமர்ந்துகொண்டதும் என் மனதின் சலனத்திலே சட்டென்று ஒரு சரிவு என்ன முட்டாள்தனம்! அல்ஷரைப் போல் நான் அவசரத் தீர்மானங்கள் செய்கிறேனே; அவர் ஒருகால்...?

என்னை உட்காரச் செய்துவிட்டு உள்ளே சென்ற நந்தகுமார் ஒரு வேலைக்காரனுடன் திரும்பி வந்தார். அவன் கையில் வெள்ளிக் கூசா ஒன்று இருந்தது. என் சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்

கொண்டு, சம்பாஷணையை ஆரம்பித்தேன். "காபி ஒன்றும் வேண்டாம் மிஸ்டர் நந்தகுமார்."

"அப்படிச் சொல்லக்கூடாது அம்மா; நீங்கள் என் குரு. உங்களை வீட்டுக்கு அழைத்துப் பெரிய விருந்தே நடத்தக் கடமைப்பட்டவன் நான், ஆனால் இங்கே சில நாட்களே தங்க இருப்பதால் சமையற்காரன் யாரையும் அழைத்துவரவில்லை. ஹோட்டலிலே சாப்பிட்டுக் கொள்ளலாமென்று......"

நான் அவரை இடைமறித்தேன். "ஏன் மிஸ்டர் நந்தகுமார், நீங்கள் உங்கள் மனைவி-குழந்தைகளை அழைத்துவரவில்லை? குற்றாலத்து சீஸனைக் குடும்பத்துடன் அநுபவித்தால்தான் குஷி என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"மனைவி-குழந்தைகளா!" நந்தகுமார் சிரித்தார்; "அதெல்லாம் எனக்கு இனித்தான் ஏற்பட வேண்டும் அம்மா."

என் சந்தேகம் தீர்ந்தது: சலனத்தின் சரிவு நிறைந்தது. அது மீண்டும் குதி போட்டது. 'ம்...... தொடரு சம்பாஷணையை. தெரிந்து கொள்ளவேண்டிய விவரங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்' என்று என்னை விரட்டிற்று.

"அப்படியா? நீங்கள் மணமாகாதவரா? ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை நந்தகுமார்? ஒருக்கால் சில நாட்டியக்காரர்களைப்போல், கலியாணம் செய்துகொண்டால் உடலின் கட்டுக் கோப்புக் குலைந்துவிடும் என்று அசட்டுத்தனமாக நினைக்கிறீர்களோ?"

"அப்படி ஒன்றும் இல்லை. உண்மையில் என் கலியாணம் கிட்டத்தட்ட நிச்சயங்கூட ஆகிவிட்டது; இடையே......?"

குதிபோட்ட என் சலனம் குப்புற விழுந்தது. "இடையே?" என்று ஏமாந்த என் உள்ளம் ஏக்கத்துடன் கேட்டது.

"ஒரு எதிர்பாராத நிகழ்ச்சிவந்து அந்தக் கலியாணத்தை நிறுத்திவிட்டது."

அப்பாடா! இப்பொழுதுதான் எனக்குச் சரியாக மூச்சு வந்தது. "அது என்ன அப்படி ஒரு நிகழ்ச்சி, கலியாணத்தையே நிறுத்திவிடும்படி?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை; என்னைக் காதலித்த பெண் ஒரு பெரிய பணக்காரரின் மகள்."

"அதற்காக? ஒரு சாதாரண நாட்டியக்காரரை நான் மணந்துகொள்ளுவதா என்று கடைசி நிமிஷத்தில் உங்களை நிராகரித்துவிட்டாளா?"

"இல்லை; அவள் கடைசிவரை என்னை நிராகரிக்கவே இல்லை; ஆனால் அவளுடைய அப்பாதான்......"

'இந்த அப்பாக்களே காதலுக்குச் சத்துருக்களோ?' என்று நான் வியந்துகொண்டே, "அவருடைய அப்பா என்ன செய்தார்?" என்று விசாரித்தேன்.

"அவர் ரங்கூனில் இருந்தார். இந்தப் பெண் இங்கே தன் அத்தையுடன் தங்கிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். எங்கள் காதல் முற்றி, கலியாணம் செய்துகொள்ளும் தீர்மானத்துக்கு வந்ததும், அவள் தந்தைக்கு விவரத்தை அறிவித்தாள். அவர் அடுத்தக் கப்பலில் புறப்பட்டு வந்து........."

"போயும் போயும் ஒரு நாட்டியக்காரனையா நீ மணந்துகொள்வது என்று பெண்ணை தடுத்து விட்டாராக்கும்?"

"அப்படிச் செய்திருந்தால்கூடப் பரவாயில்லையே. ஆனால் அவர் அக் கலியாணத்தின் மூலம் என்னைச் சிறையில் அடைக்கப் பார்த்தார்"

"என்ன? சிறையிலா? எப்படி? எதற்காக?"

நந்தகுமார் லேசாக முறுவலித்தார். "கற்சுவர்களும், இரும்புக் கபாடமும் பொருத்தப்பட்ட அரசாங்கச் சிறையில் அல்ல அம்மா; அந்தஸ்துச் சிறையில்."

"அந்தஸ்துச் சிறையா? அப்படியென்றால்?"

"உங்களுக்கு விளங்கவில்லையா? அவர் என்னை நாட்டியத்தொழிலையே விட்டுவிடச் சொன்னார். அதாவது அவருடைய சொத்தை நம்பி வாழச் சொன்னார்."

"ஆமாம்; அது நல்லதுதானே உங்களுக்கு?"

"நல்லதா? நன்றாகச் சொன்னீர்களே. அவருடைய சொத்தை நம்பி வாழ்க்கை நடத்தினால், அச்சொத்துக்கும், அதற்கு அதிபதியான அவருடைய மகளுக்கும் நான் அடிமையாகி விடமாட்டேனா? தவிர, நான் நாட்டியக் கலையையே என் ஜீவிய லட்சியமாகக் கொண்டிருப்பவன். அதை விடச்சொன்னதற்குப் பதிலாக, என்னை உயிரையே விடச்சொல்லியிருந்தால்கூட விட்டிருப்பேன்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? நான் என்னைக் காதலித்த பெண்ணின் முகத்தை நோக்கினேன். 'அப்பா சொல்லுகிறபடி செய்துவிடுங்கள் நந்தகுமார்; பிறகு நாம் சந்தோஷமாக இருக்கலாம்' என்று அவளும் கூறிவிட்டாள். 'சரிதான் அம்மா; உனக்கும், உன் அப்பாவுக்கும், உங்கள் சொத்துக்களுக்கும் ஒரு பெரிய நமஸ்காரம்' என்று கூறிவிட்டு வந்து விட்டேன்."

"அப்படியென்றால் உங்களுக்குப் பெண் குலத்தின் மீதே வெறுப்பு ஏற்பட்டிருக்கும்" என்று நான் அவருடைய உள்ளத்தை ஆழம் பார்த்தேன்.

"அப்படி ஒன்றும் இல்லை, எதற்காக நான் பெண் குலத்தையே வெறுக்க வேண்டும்? யாரோ ஒரு பணக்காரப் பெண், யாரோ ஒரு நாட்டியக்காரனைக் காதலித்து, அவன் தன் தொழிலைவிட மறுத்ததற்காக அவனை நிராகரித்தாளென்றால், உலகத்துப் பெண்கள் எல்லோருமே அப்படி

தான் என்று எடைகட்டி விடுவதா? நான் அவ்வளவு குறுகிய உள்ளம் படைத்தவனல்ல. ஆனால், அநுபவத்துக்குப் பிறகு ஒரு தீர்மானம் மட்டும் செய்து கொண்டேன். இனிமேல் நாம் மனம் பதிப்பதாயிருந்தால், நம் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்ணிடமே மனம் பதிக்க வேண்டும் என்பதுதான் என் தீர்மானம்."

இதைக் கேட்டதும் என் சலனம் குதித்த குதிரையைக் கூறிமுடியாது. "இதோ வீணா, உன் லட்சியத்துக்கேற்ற மணாளன். உயர்வு-தாழ்வு என்ற அழுக்கினால் உன்னை நிராகரித்த அந்த ஜெய்காந்தின் முகத்தில் கரியைப் பூச, இப்பொழுதே இந்த நந்தகுமாரை மணந்து, 'ஐயா பெரியவரே! உமது பெயரையும் புகழையும் நீரே கட்டிக் கொண்டு அழும்; எனக்கு வேண்டிய மணாளன் உமது உருவிலே கிடைத்து விட்டார். அதிலும் அவர் உம்மைப் போலவே ஒரு நாட்டியக்காரர்' என்று இடித்துக் காட்ட வேண்டாமா? அவிழ்த்துவிடு உன் மனசில் இருப்பதை" என்று என்னை அது ஊக்கிற்று.

நான் உடனே என் கதை முழுவதையும் நந்தகுமாருக்குக் கூறினேன். அவரை மணக்கச் சித்தமாக இருப்பதையும் விவரித்தேன்.

அதைக் கேட்டதும் அவரிடமிருந்து ஒரு நெடுமூச்சுப் பிரிந்தது. 'அப்பா! கடைசியாக நாம் நினைத்தே இராத அளவு அந்தஸ்துள்ள, ஆனால் நமது தீர்மானப்படி நாட்டியக் காரியாகவே உள்ள ஒருத்தி நமக்குக் கிடைத்து விட்டாள்' என்று அவர் விட்ட பெருமூச்சுத் தானே அது.

"என்ன சொல்லுகிறீர்கள் மிஸ்டர் நந்தகுமார்? என்று நான் கேட்டேன்.

அவர் பதில் பேச வாயெடுத்தார். ஆனால் அச்சமயத்தில், பூசை வேளையில் கரடியாக அங்கே புகுந்தான், காபி வாங்கச் சென்றிருந்த வேலைக்காரன்.

நந்தகுமார் காபிக் கூசாவை வாங்கிக் கொண்டு அவனை அனுப்பிவிட்டு, இரண்டு டம்ளர்களில் காபியை நிரப்பினார். ஒன்றை என்னிடம் தந்துவிட்டு, மற்றொன்றைத் தாம் எடுத்துக் கொண்டு, "முதலில் காபியைச் சாப்பிடுங்கள்; சொல்லுகிறேன்" என்றார்.

சாதாரணமாக ஹோட்டல் காபியை விஷமாக வெறுக்கும் எனக்கு, அன்று அந்தக் காபி அமிர்தமாக இனித்தது. காபியைக் குடித்து விட்டு, "சரி சொல்லுங்கள்" என்றேன்.

நந்தகுமார் தொண்டையைக் கனைத்துக்கொண்டார். "உங்கள் விருப்பத்தைக் கேட்க என் உள்ளம் பூரிக்கிறது; ஆனாலும்......"

"ஆனாலும் என்ன நந்தகுமார்?"

"நான் எதற்காக அந்தப் பெண்ணை மணந்து கொள்ள மறுத்தேனோ, அதுதானே உங்கள் விஷயத்திலும் நிகழப் போகிறது."

"இல்லை; இல்லவே இல்லை" என்று நான் அவசரமாகக் குறுக்கிட்டேன்; "நான் ஒருபோதும் உங்களை நாட்டியத் தொழிலை விட்டுவிடுமாறு கூறமாட்டேன். மாறாக நாம் இருவரும் ஜோடி சேர்ந்து கலையுடன் காதலையும் வளர்க்கவேண்டும் என்பதுதான் என் விருப்பம்."

"அதைச் சொல்லவில்லை அம்மா; ஆனால் என்னைவிடப் பெயரும் புகழும் பெற்றுள்ள உங்களுக்குக் கணவனாகி விட்டாலும், அந்தஸ்தில் என்னவோ உங்களுக்குக் கீழ்ப்பட்டவனாகத் தானே இருக்கவேண்டும்."

"நந்தகுமார்!" என்று அலறினேன் நான்.


"என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் அம்மா. என்னைவிட அந்தஸ்தில் உயர்ந்த ஒருத்தியை நான் ஒருபோதும் மணந்துகொள்ளமாட்டேன்!"

அந்தஸ்து! அந்தஸ்தா அது? இல்லை; அழுக்கு!

நந்தகுமாரின் பங்களாவைவிட்டு வெளியே வந்தபோது என் காதுகளில் பாட்டு வாத்தியாரின் அமுத மொழிகள் ஒலித்துக்கொண்டிருந்தன. "இந்த உலகில் அழுக்கு இல்லாத மனிதரே கிடையாது; ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமான அழுக்கு......!"

* * *

குற்றாலத்துச் சகோதரியின் இந்தக் கதை கிட்டத்தட்ட என் "சமாந்தரக் கோடுகள்" கதையைப்போலவே இருந்தது. அதில் இரண்டு பெண்கள் வெவ்வேறு காரணத்தோடு, ஆனால் ஒரே அடிப்படை நோக்கினால் ஓர் ஆணை நிராகரித்தார்கள்; இக்கதையில் அது தலைகீழாக மாறிப் போயிருந்தது. ஆயினும் அந்தச் சகோதரிக்கு என்மீது கோபம் ஏற்பட்டதன் காரணத்தை இப்பொழுது என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆம், என் கதையைப் படித்ததும் அவருடைய மனசிலே படிந்த அழுக்குத்தான் கோபத்துக்குக் காரணம். நான் கற்பனையாக வனைந்திருந்த கதைக்கு மாறாக, ஆண்கள் தாம் சமரச மனப்பான்மை அற்றவர்கள் என்பது அவளுடைய அநுபவமாகிவிடவே அச் சோதரி என் மீது கோபம் கொண்டுவிட்டாள். அவளுடைய கோபத்தை ஆற்றும் பொருட்டேனும் இந்தக் கதையை ஏதாவது பத்திரிகைக்கு அனுப்பிப் பிரசுரிக்கச் செய்யத்தான் வேண்டும். ஏனென்றால், என்னதான் நான் ஒரு சாரரைத் தாக்கும் நோக்கத்தோடு என் "சமாந்தரக் கோடு"களை எழுதவில்லையென்றாலும், இப்பொழுது அந்தப் பெண்ணுக்குத் தோன்றியிருப்பதுபோல், இன்னும் எத்தனை வாசகர்களின் மனசில் அக்கதை அத்தகைய அழுக்கை ஏற்படுத்தியிருக்கிறதோ, யார் கண்டார்கள்? ஆகையால் அந்த



" அக்கூட்டத்திலும், பாலுவை கண்டுபிடிப்பதில்
உனக்கு சிரமமிருக்காது. அவன் மட்டுமே,
தனது ஆடைகளை




# டினேபால்

கொண்டு கண்ணைப்-
பறிக்கும் வெண்மையாக
வைத்திருக்கிறுன் "

டினேபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.

தயாரிப்பவர்கள் :
ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி வாடி, பரோடா
ஏக விநியோகஸ்தர்கள்.
ஸுஹ்ருட் கெய்கி ட்ரேடிங் பிரைவேட் லிமிடெட்,
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்

சிறிதளவு டினேபால் வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

SISTA'S-SG-45-TAM

அழுக்கை இந்தக் கதையின் மூலம் களைய வேண்டியதும் நமது கடமையாகும் என்று நான் தீர்மானித்தேன். ஆனால்—

இது நடந்த மறுநாள், என் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று தந்தி வரவே நான் அடித்துப் புடைத்துக்கொண்டு ஊர் செல்ல நேரிட்டது. என் தந்தைக்கு வாத நோய் உண்டு. அது தான் அவரைப் படுக்கையில் கிடத்தியிருந்தது. ஆங்கில வைத்தியம் அவருடைய நோயை குணமாக்காமல் போகவே, மலையாள வைத்தியம் செய்யத் தீர்மானித்தோம். எங்கள் ஊர் குற்றாலத்துக்கு அருகில் உள்ள ஒரு கிராமம். குற்றாலத்தில் பிரசித்த மலையாள வைத்தியர் ஒருவரின் ஆயுர்வேத வைத்தியசாலை இருந்தது. அங்குதான் என் தந்தைக்குச் சிகிச்சை நடந்தது. இங்கிலீஷ் வைத்தியத்துக்கு மசியாத அந்த நோய், ஆயுர்வேத வைத்தியத்துக்கு அடி பணிந்துவிட்டது. ஒரு வாரத்தில் என் தந்தை பூர்ண குணமடைந்து விட்டார். அவர் குணமடைந்த பின்புதான் நான் சுயநிலை அடைந்தேன்.

சுயநிலை அடைந்ததும் எனக்கு, குற்றாலத்திலேயே என்மீது கோபங்கொண்டுள்ள பெண் மணி இருப்பது நினைவுக்கு வந்தது. அவளைச் சந்தித்து, விரைவில் அவளுடைய கதையைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறிச் சமாதானம் செய்துவிட்டு வரலாமென்று ஒருநாள் 'ஹில்ஸ்' பங்களாவை நோக்கிச் சென்றேன்.

பங்களாவின் வெளித் தாழ்வாரத்தில், கிட்டத்தட்ட அறுபது வயது மதிக்கத்தக்க தலை நரைத்த கிழவர் ஒருவர் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். அவரிடம், "ஸார்! வீணா அம்மாள் இங்கேதானே தங்கியிருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

அவர் ஒரு கணம் என்னைத் தலையிலிருந்து கால் வரை உற்று நோக்கிவிட்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"நான் பம்பாயிலிருந்து வருகிறேன்."

அவருடைய முகத்தில் திடீரென்று ஒரு மலர்ச்சி. "மிஸ்டர்..........தானே?"

"ஆமாம்."

"அடடா என்ன பாக்கியம்! என்ன பாக்கியம்! உட்காருங்கள்; உட்காருங்கள்."

'இவர் யாராக இருக்கும்? இவரைப்பற்றி வீணாவின் கதையில் எதுவும் குறிப்பிடப் பட்டிருக்கவில்லையே?' என்று ஆலோசித்தவனாக அவர் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

"எப்பொழுது வந்தீர்கள்? என் கதை கிடைத்ததா?"

நான் திடுக்கிட்டேன். "என்ன? உங்கள் கதையா?"

கிழவரின் முகத்தில் அசடு வழிந்தது. என்னைக் கண்ட சந்தோஷத்தில் வெளியிடக் கூடாததை வெளியிட்டு விட்டார் என்பதை அவருடைய முகபாவம் காட்டிற்று.

"ஹி...ஹி...இல்லை; அது வந்து..." என்று அவர் தடுமாறினார்.

"விஷயத்தைச் சொல்லுங்கள் தாத்தா."

கிழவர் ஆயிரம் மன்னிப்புக் கேட்டுவிட்டு அறிவித்த விஷயம் இதுதான்: அவருடைய பெயர் தான் எஸ் சாம்பசிவம். அவர் ஒரு ரிடையர்டு ஆபீஸர். பிள்ளை குட்டி, பிக்கல் பிடுங்கல் இல்லாத தனிக்கட்டை. சம்பாதித்திருந்த பணத்தைக்கொண்டு கடைசி காலத்தைக் குற்றாலத்தில் கழிக்கலாமென்று, இங்கே ஒரு பங்களா வாங்கிக் கொண்டு நான்கைந்து வருஷங்களாக வசித்து வருபவர். பொழுது போவதற்காக எல்லாப் பத்திரிகைகளையும் வாங்கிப் படித்து வந்த அவருக்கு தாமும் கதை எழுத வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. எத்தனையோ கதைகள் எழுதி அனுப்பினார், ஆனால் ஒன்றுகூட பிரசுரமாகவில்லை. தம்முடைய பெயரில் ஒரு கதையாவது பத்திரிகையில் வெளிவராவிட்டால் நெஞ்சு வேகாது என்று தோன்றிவிட்டது அவருக்கு. அடிக்கடி எழுதி வரும் எழுத்தாளர்களின் கதையைக் 'காப்பி' அடித்து எழுதினால் பிரசுரமாகிவிடும் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் குட்டு விரைவில் வெளியாகிவிடும் என்பதும் அதனால் தமக்கு அவமானந்தான் அதிகமாக ஏற்படும் என்பதும் அவருடைய புத்தியில் படாமல் போய்விடவில்லை. என்ன செய்வது என்று பல நாட்கள் மண்டையை உடைத்துக்கொண்ட பிறகு அவருடைய மூளையில் உதித்த தந்திரந்தான் எனக்கு எழுதி அனுப்பிய கதையும், கடிதமும். கதையை அப்படியே காப்பி அடிக்காமல், நடையை மட்டும் எடுத்து கையாண்டுகொண்டு ஆண் பெண் பாத்திரங்களின் மனப்போக்கை நோ மாறுக்கி, "உங்கள் கதை தவறான கருத்தை பிரசாரம் செய்வதால், அதற்கு எதிராக இதை பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று தம்மை அக் கதையில் வரும் பெண் பாத்திரமாகக்கொண்டு, கதையையும் கடிதத்தையும் எனக்கு அனுப்பிவிட்டார். எப்படி வேடிக்கை பார்த்தீர்களா?

"சரி, விஷயந்தான் வெளியாகிவிட்டதே, நீங்கள் ஏன் இப்பொழுது இதையெல்லாம் உங்கள் பெயரில் வெளியிட்டிருக்கிறீர்கள்?" என்று நீங்கள் கேட்கலாம்.

ஆமாம் ஸ்வாமி; நான் இதையெல்லாம் வெளியிடாவிட்டால், எப்படியாவது தங்கள் பெயரில் ஒரு கதை வெளியாகிவிடவேண்டும் என்ற அழுக்கு, தலை நரைத்த கிழவர்களைக்கூடப் பற்றிக்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? ●

# சுகலை

அ. ராம்கோபால்

அடுத்தடுத்து வந்த வீரர்கள் கொண்டு வந்த செய்தி அங்கு கூடியிருந்த அத்தனை பேர் முகத்திலும் சிந்தனை ரேகையைப் படரவிட்டது. சதானந்தரின் ஆசிரமத்தில் பாதுகாப்புக்காகவோ அல்லது காவலுக்காகவோ வீரர்கள் யாரும் நிறுத்தப்படவில்லை. ஏனெனில் அது முற்றிலும் நிர் அபாய மான இடம். ஆசிரமமாகையால் அங்கு சோழப்படையின் திருஷ்டி திரும்பாது எனப் பூரணமாக எவ்வியும், இருங்கோவேளிரும் நம்பினர். இதனாலேயே அங்கு சுகலையையும் நக்கன்னையையும் அனுப்பிவைத்தனர். பாதுகாப்புக்காக தங்கள் வீரர்கள் யாரையும் அங்கு அனுப்பிவைக்கவில்லை. இதனால் சோழப்படை முற்றுகை இட்டதும் எவ்வித எதிர்ப்புமின்றி ஆசிரமவாசிகள் அத்தனைபேரும் சரணடைந்திருப்பர். சுகலைமட்டுமின்றி, நக்கன்னையும் அதற்குள்ளாக எதிரிகள் வசமாகி இருக்கலாம். தங்கள் பெண் எதிரி வசமாவதாவது? இது எவ்வளவு அவமானகரமான செய்தி? வீர உள்ளம் படைத்த எவ்விக்கும், இருங்கோவேளிருக்கும் இதைச் சிந்திக்கச் சிந்திக்கக் கோபம் கொதித்தெழுந்தது.

"வீரர்களே! வீறுகொண்டு கிளம்புங்கள்! எதிரியை முறியடிப்போம்! இளவரசியை சிறை மீட்போம்! சோழ ராஜகுமாரியை சிறைபிடித்துத் திரும்புவோம்! கிளம்புங்கள்! கிளம்புங்கள்!" என வீராவேசத்துடன் கர்ஜித்தான் எவ்வி. தங்களை புன்னனின் வீரர்கள் சூழ்ந்து நிற்கிறார்கள். அவர்களுடன் முதலில் போராடி வெற்றி தோல்வியை தீர்மானித்த பிறகே சோழப்படைமீது பாயவேண்டிய நிலை தனக்கிருக்கிறது என்பதைக் கூட மறந்து விட்டான் எவ்வி உணர்ச்சி வேகத்தில்.

"எவ்வி! பதறாதே! நடந்தது நடந்து விட்டது. பதறிப் பிரயோசனமில்லை. நம்மை இப்பொழுது புன்னனின் ஆட்கள் சூழ்ந்துகொண்டு நிற்கிறார்கள்; அவர்களை முதலில் நாம் முறியடித்தாக வேண்டும், அப்பொழுதுதான் நக்கன்னையை மீட்பதில் நாம் கவனம் செலுத்த முடியும்" என்றார் இருங்கோ. அப்பொழுதுதான் எவ்விக்கு பிரத்யட்ச நிலை புரிய ஆரம்பித்தது.

"எவ்வி! புறப்படு! இனி தாமதம் வேண்டாம். முதலில் புன்னனைத் தாக்கு! முறியடி! அந்த அற்பனை இங்கே கைதியாகக் கொண்டு வந்து நிறுத்து!" எனக் கர்ஜித்தார் இருங்கோ. பஞ்சாக நரைத்துப்போன அவர் தாடியும், மீசையும் கோபத்தில் படபடத்தன.

எவ்வியும் 'ஜிவ்' வென்று புறப்பட்டான் தன் புரவியை நோக்கி. படைவீரர்கள் கிளம்ப ஆயத்தமாக நின்றனர்.

"நில்லுங்கள்! நில்லுங்கள்! அனாவசிய இரத்தக் களரி வேண்டாம்!" என அதுவரை மௌனியாக எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த ஜமதக்னி முனிவர் உரக்கக் கத்தினார். சதானந்தர் எதுவும் பேசவில்லை. இதற்குள் ஆசிரமத்தில் தன் சிஷ்யர்களும் மற்றவர்களும் என்னவானார்களோ எனச் சிந்தனை ஓட்டியபடி நின்றிருந்தார் அவர்.

தன் புரவியில் ஏறப்போன எவ்வி முனிவரின் கம்பீரமான குரல் கேட்டுத் தயங்கித் திரும்பினான். அச்சமயம் ஒரு யுவனும், யுவதியும் அங்கு வந்து சேர்ந்தனர். யுவன் மாலவன். யுவதி சுருளி என்பதைத் தெரிந்துகொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை. மாலவன் புன்னனின் தூதுவனாக ஏற்கனவேயே அவனிடம் வந்து போனவன். சுருளி சுகலையோடு அவனிடம் கைதியாக இருந்தவள். புன்னனுக்கும் மிகவும் வேண்டியவள் என்பது அவனுக்குத் தெரியும். அவர்களிருவரும் சேர்ந்து அங்கு வருவதானால் அதில் ஏதோ தனி விசேடம் இருக்கத்தானே வேண்டும்.

குதிரை ஏறப்போன எவ்வி மாலவனையும் சுருளியையும் பார்த்தபடியே நின்றான். அவர்களைக் கண்ட இருங்கோவும் எதுவும் புரியாமல் ஸ்தம்பித்து நின்றார். இருங்கோவுக்கருகே தன் குருநாதர் நிற்பதைக்கண்ட மாலவன் முதலில் திடுக்கிட்டுத் திகைத்துப்போனான். அவரைத் திடும்

என அங்கே சந்திக்க நேரிடும் என்பதை முற்றிலும் அவன் எதிர்பார்த்தவனல்ல. முனிவருக்கும் அப்படித்தான். அந்த இக்கட்டான சூழ்நிலையில் அந்த இடத்தில் மாலவனைச் சந்திக்கக்கூடும் என அவரும் கனவிலும் கருதியவரல்ல. அவன் வஞ்சி மாநகரில் இருப்பதாகவே அவர் நினைத்திருந்தார். திடீரென அவன் அங்கு அதுவும் ஒரு யுவதியின் துணையுடன் தோன்றவே முனிவருக்கும் திக்கென்றுதானிருந்தது.

மாலவன் முனிவரின் பக்கமாக விரைந்து சென்று மிகுந்த பயபக்தியுடன் "குருதேவா!" எனக் கூறிக் கைகூப்பி வணங்கி நின்றான். முனிவர் தம் கரம் உயர்த்தி அவனை ஆசீர்வதித்தார். மாலவன் வணங்குவதைக் கவனித்த சுருளியும் முனிவரைத் தாழ்ந்து வணங்கினாள். அவளையும் முனிவர் தன் கைதூக்கி ஆசீர்வதித்தார்.

"குருதேவா! தாங்கள் எப்பொழுது இங்கே வந்தீர்கள்? மாதவன் எங்கே இருக்கிறான்? அவனைப் பார்த்தீர்களா?" எனக் கேட்டான் மாலவன் உணர்ச்சியும் ஆவலும் பொங்க. அவன் மனம் அங்கிருந்து ஆசிரம கால வாழ்வுக்குத் தாவி அங்கே சஞ்சரிக்கத் தொடங்கியது. அவன் அங்கு எதற்காக வந்தான், அங்கு நிலவிய நெருக்கடியான சுற்றுச் சார்பில், சகலத்தையும் மறந்துவிட்ட நிலையை அடைந்தானவன். மாதவனைப் பற்றி முனிவரிடம் மாலவன் பிரஸ்தாபித்ததைக் கேட்ட சுருளிக்கும் சிந்தனைகள் வேறு பக்கமாகச் சுழல ஆரம்பித்தன. தான் வந்த காரியத்தை அவளும் மறந்தே போனாள். இதை முனிவர் கவனிக்கத் தவறவில்லை.

"நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? முற்றுகைப் படையைத் தாண்டி உங்களால் எப்படி வர முடிந்தது?" எனக் கேட்டார் முனிவர். அப்பொழுதுதான் அவர்களிருவருக்கும் தாங்கள் வந்த காரியம் நினைவுக்கு வந்தது.

* * *

புன்னன் தன் ஆட்கள், ஆனைகள் சகிதம் புறப்பட்டு வந்தபோது வழியில் மாலவனும், சுருளியும் சந்தித்தார்களல்லவா? சுகலையை விடுவிக்க மறுத்ததற்காக எவ்வியின் மீது போருக்காகவே புன்னன் அவ்விதம் புறப்பட்டிருப்பதாகத் தெரிந்து கொண்ட சுருளி புன்னனோடு பலவாறாக வாதாடினாள். சுகலையை விடுவிக்க மறுத்ததற்காக போருக்கு கிளம்புவது முறையல்ல. இரு தரப்பிலும் அனாவசியமாக உயிர்ச்சேதம் ஏற்படும். போரில் எத்தனை பேர் மடிகிறார்களோ அத்தனை பேரையும் கொன்று குவித்து பலி வாங்கிய பாவம் புன்னனின் தலையிலேயே சுமரும்.— இவ்விதம் அவனைத் தடுத்து பேசினாள் சுருளி. மாலவனும் அவளுக்கு ஆதரவாகப் போரைத் தவிர்க்கும்படி எடுத்துச் சொன்னான். அவர்கள் கூற்று புன்னனுக்கும் சரி என்றே பட்டது. ஆனால் அவன் எதிர் வாதம் செய்தான். சுகலை சதிவேலைக்காரியல்ல. துப்புத் துலக்க வரவில்லை எவ்வியைப்பற்றியோ அவன் ஆட்களைப் பற்றியோ அவள் கேள்வி பட்டதுகூட இல்லை. தன் பாதுகாப்பில் தன் ஆட்கள் துணை வர வஞ்சிமா நகர் திரும்பிக் கொண்டிருந்த அவளை வேண்டுமென்றே வழி மறித்து எவ்வி கைது செய்தது எவ்விதத்திலும் நியாயமாகாது. தன் பாதுகாப்பிலுள்ள ஒரு பெண்ணை தெரிந்திருந்தும் வேண்டுமென்றே வழிமறித்துக் கைது செய்து போவதென்றால் அது தன்னை அவமானப் படுத்தியது போன்றதேயாகும். மாலவனை தூதனுப்பி விவரங்களை எடுத்துச் சொல்லிய பிறகும் அவன் மறுப்பதென்றால் அது அவன் இறுமாப்பையே காட்டுகிறது. மனிதனுக்கு தன் மானம்தான் பெரிது. மானம் காற்றில் பறக்கும் போது உயிர் பெரிதல்ல. வேறு எதுவும் பெரிதல்ல—இவ்விதம் பேசினான் புன்னன். இப்படிப் பேசும் ஒருவனோடு எப்படி எதிர் வாதாடுவது? என்ன சமாதானம் சொல்லுவது? ஆனாலும் சுருளி குறுக்குக் கேள்விகள் கிளப்பவே செய்தாள்.

"போருக்குப் போனால் போன மானம் திரும்பி வந்துவிடுமா?" சுருளியின் கேள்வி இது.

"போருக்குப் போனால் போனமானம் திரும்பி வராதுதான். நான் போருக்குப் போகவில்லையே. சுகலையை விடுவித்துக்கொண்டு வரத்தானே நான் போகிறேன்; சுகலையை விடுவித்தால் எனக்கும் எங்கள் குடிக்கும் ஏற்பட்டுள்ள அவமானம் துடைக்கப்பட்டுவிடும். இதற்காகவே நான் புறப்பட்டிருக்கிறேன். புன்னன் போரை வெறுப்பவன். அவன் யார் மீதும் தாக்குதல் தொடுக்கமாட்டான். எவ்வியின் ஆட்களை என் ஆட்கள் யாரும் தாக்கமாட்டார்கள். ஆனால் தங்களை எவ்வியின் ஆட்கள் தாக்கினால் பாதுகாப்புக்காக எதிர் தாக்குதல் நடத்தவே செய்வார்கள்" என்றான் புன்னன்.

"போருக்குப் போகவில்லை என்றால் இத்தனை யானைகள் எதற்கு? பாதுகாப்புக்காகவா இத்தனை யானைகள்?"

"சுகலையைக் கடத்த முயற்சி நடக்கலாம். இதர்காக முன் எச்சரிக்கையாக எவ்வியின் குடியிருப்பைச் சுற்றி வளைத்துக் கொள்ள வேண்டும். இதற்காகவே இந்த யானைகள் எல்லாம், போருக்காக அல்ல." சுகலை ஏற்கனவேயே கடத்தப் பட்டுவிட்டாள் என்ற செய்தி புன்னனுக்குத் தெரியாது. சுருளிக்குக்கூட தெரியாது. அவள்தான் சுகலையைக் கடத்துவதற்கு முன்பாகவே குளிக்கப் புறப்பட்டுவந்துவிட்டாளே.

சுருளியின் மூளை சுருசுருப்பாக வேலை செய்யத் தொடங்கியது. சுகலையைத் தான் கடத்திவந்துவிட்டால் என்ன? கட்டுக்காவல்தான் எதுவுமில்லையே. ஆனால் சுகலை இதற்குச் சம்மதிக்க மாட்டாளே. என்ன செய்வது? சுகதன்

அவளைத் தேடி வந்து காத்திருப்பதாகச் சொன்னால் என்ன? தானாக நம் பின்னே புறப்பட்டு ஓடோடி வந்து விடுவாள். போர் தவிர்க்கப் பட்டு விடும். வீணாக இரத்தக்களரி ஏற்படாது. பகைமையும் ஏற்படாது. இதற்காக ஒரு சிறு பொய் சொன்னால் என்ன? இவ்விதம் சுருளியின் இளம் மனதில் சிந்தனைகள் ஓடின.

"இதற்கு எதற்காக இத்தனை ஆர்ப்பாட்டங்கள் எல்லாம்? சுகலையைக் கூட்டி வந்து விடுகிறேன் நான்." என்றாள் சுருளி. அவள் வார்த்தையை அவனால் நம்பமுடியவில்லை. சுகலையை எவ்விதம் அவள் அழைத்துவரமுடியும்? இது நடக்கக்கூடிய காரியமல்ல என நினைத்தான் புன்னன்.

"சுகலையை உன்னால் எப்படிக் கூட்டிவர முடியும்? எனக்கேட்டான் புன்னன்.

"எப்படியோ நான் கூட்டிவந்து விடுகிறேன். சுருளி மனது வைத்தால் அதுவும் நடக்கும், அதற்கு மேலும் நடக்கும். உங்களுக்கு துளியும் சந்தேகம் வேண்டாம்" என உறுதியாகச் சொன்னாள் சுருளி.

இதைக்கேட்ட புன்னனுக்கு சந்தேகம் ஒன்று முட்டியது.

"நீ கூட்டிவந்துவிட்டால் அவர்கள் சும்மா இருந்துவிடுவார்களா? சண்டைக்கு வந்தால்?" என்றான்.

"சண்டைக்கு வருவதாவது? சுகலையோ நானோ இங்கிருந்தால்தானே சண்டைக்கு வருவார்கள்?"

"இங்கே இல்லாது எங்கே போகப் போகிறீர்கள்?"

"எங்கா! எங்கள் இருப்பிடம் தேடிப் போகிறோம். எங்களுக்காக நீங்கள் மண்டையை உடைத்துக்கொண்டு நிற்க வேண்டாம்." என்றாள் சுருளி. அப்பொழுது கரகர என மேற்கு வானில் கதிரவன் மறைந்தான். எங்கும் இருள் விரிய ஆரம்பித்தது.

"எங்கும் இருள் பரவ ஆரம்பித்துவிட்டதே எப்பொழுது சுகலையை கடத்திவரப் போகிறாய்?" எனக் கேட்டான் புன்னன்.

"இரவு நேரம்தான் இதுபோன்ற காரியங்களுக்கு ஏற்றது, நாங்கள் இப்பொழுதே புறப்படுகிறோம். நடுயாமத்திற்கு சற்றுமுன்பாகவே சுகலையோடு நாங்கள் இங்கே திரும்பிவிடமுடியுமென நினைக்கிறோம். அதுவரை நீங்கள் இங்கேயே பாடி இறங்கி இருங்கள்" என்றாள் சுருளி. புன்னனும் இதற்குச் சம்மதித்தான். சமாதானப் பிரியனவன். அநாவசிய இரத்தக் களரி வேண்டாம் என்பதே அவன் எண்ணமும்.

புன்னனின் உத்தரவுக்கிணங்க அவன் ஆட்கள் அவ்விடத்திலேயே பாடி இறங்கினர். அவ்விடமும் பாடி இறங்க மிக வசதியாக இருந்தது.

புன்னனை வணங்கி விடைபெற்றாள் சுருளி. தனக்குத் துணையாக மாலவனைமட்டும் வரும்படி வேண்டினாள். அவன் அதற்கு மறுக்கவில்லை. புன்னனை அவனும் வணங்கி விடைபெற்று அவளோடு புறப்பட்டான். இருவரும் புறப்பட்டபோது எங்கும் லேசாக இருள் படர்ந்திருந்தது. ஆனால் எவ்வியின் இருப்பிடத்தில் சுகலையை காவல் வைத்திருந்த இடத்தை அவர்கள் அடைந்தபோதோ நல்ல மையிருட்டு, பொழுது விழுந்து ஐந்தாறு நாழிகைக்குமேல் ஆகிவிட்டிருந்தது. அங்கு சுற்றி எல்லா இடங்களிலும் எவ்வியின் வீரர்கள் வழக்கத்துக்கு மாறாக காவல் நின்றனர். சுடர்விட்டெரிந்த தீவத்திகளின் ஒளியில் அவர்கள் கைகளில் பிடித்திருந்த ஈட்டிகள் பளபளத்தன. சுகலை காவல் வைக்கப்பட்டிருந்த அறை முன்பும் பல வீரர்கள் ஆயுதபாணிகளாகக் காவல் நின்றனர். அந்நிலையில் சுகலையை எப்படிக் கடத்திச் செல்வது? பேசாமல் வந்த வழியே திரும்புவதைத் தவிர வேறு ஒன்றும் அவர்களுக்கு அப்பொழுது புலப்படவில்லை.

வந்த வழியே சிறிது தூரம் திரும்பி நடந்த போது சுருளிக்கு சிந்தனை ஓடத் தொடங்கியது. சுகலையை கடத்திவருவது சாத்தியப்படவில்லை என புன்னனிடம் போய் சொன்னால் என்ன ஆகும்? அதுதான் போகிறது. அவ்வளவு நிச்சயமாக அவனிடம் சொல்லிவந்து இப்பொழுது போய் கைவிரிப்பது நமக்கு அவமானமில்லையா? இவ்விதம் சிந்தனை ஓட்டம் திரும்பியது சுருளிக்கு. அவள் நட்ட நடுகாட்டில் அப்படியே உட்கார்ந்து விட்டாள். என்ன செய்வதென்று அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. மாலவனை அவள் ஆலோசனை கேட்டாள். வெகு நேரம் வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு அவர்களிருவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். அடுத்த நாள் அதிகாலையில் நேரே எவ்வியிடம் தூது போவது. அவனிடம் எல்லாவற்றையும் விவரமாக எடுத்துரைப்பது. அவன் ஏற்றுக் கொள்ள மறுத்தால் தோல்விச் செய்தி தாங்கிப் புன்னனிடம் திரும்புவதில்லை. போருக்குத் தாங்களே முதற்பலியாகிவிடுவது. இதுவே அவர்கள் தீர்மானம்.

* * *

தாங்கள் வந்த காரியத்தைச் சுருக்கமாகத் தன் குருதேவரிடம் எடுத்துச் சொன்னான் மாலவன். முனிவர் அருகே நின்றிருந்த இருங்கோவேளிர் காதுகளிலும் அவன் சொன்னவை விழவே செய்தன. சதானந்தரும் எல்லாவற்றையும் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டு தானிருந்தார்.

"மாலவா! உன் முயற்சியை மெச்சுகிறேன். ஆனால் சுகலை இங்கு இல்லையே. அவர் பாதுகாப்பாக என் ஆசிரமத்திலிருந்தார். சோழப் படைகள் இப்பொழுது ஆசிரமத்தை சுற்றி வளைத்து நிற்பதாகச் சற்று முன்புதான் தகவல் வந்தது" என்றார் சதானந்தர். இதைக் கேட்ட

மாலவனுக்கு திகீர் என்றது. சுருளிக்கும் அப்படித்தானிருந்தது. அவர்களிவரும் இவ்விதம் காரியம் நடந்திருக்கும் என நினைத்துப் பார்த்தது கூட கிடையாது.

"மாலவா! புன்னன் முற்றுகை இட வேண்டுமானல் சோழப்படையைத் தான் இனி முற்றுகையிட வேண்டும்." என்ருர் இருங்கோ.

புன்னன் முற்றுகையிட்ட விஷயம் மாலவனுக்கோ சுருளிக்கோ தெரியாது. சொல்லிச் சென்றபடி நடுயாமத்துக்குள் அவர்களிருவரும் சுகலேயோடு திரும்பாது போகவே ஏதோ விபரீதம் நடந்திருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தான் புன்னன். இதனுல் முன்ஜாக்கிரதை நடவடிக்கையாக உடனே சுற்றி வளைக்கும்படி கட்டளையிட்டான் தன் ஆட்களுக்கு. அவன் உத்தரவுப்படியே இரவுக்கிரவாக சுற்றி வளைக்கும் காரியத்தைத் தொடங்கி விடிவதற்குள் முற்றுகையை பூரணமாக்கிவிட்டனர் அவன் ஆட்கள்.

இருங்கோ கூறுவதன் பொருளைப் புரிந்து கொண்டான் மாலவன். ஆனல் அவன் மனம் எங்கெங்கோ தாவியது. சோழப்படை கையில் சுகலே சிக்கினுல் அவர்கள் அவளை உறையூர் கொண்டுபோவார்கள். அங்கேதான் சுகதன் இருப்பார். ஒருவேளை அவர் சுகலேயைத் தேடிக் வஞ்சிமாநகர் போயிருந்தால்?—போனுல்தான் என்ன? அவருக்கு உடனே தகவல் போகிறது. போய் கூட்டி வந்துவிட்டுப் போகிருர். மாலவனின் சிந்தனைகள் இவ்விதமாக ஓடியது. ஆகையால் சோழப் படைகள் சுகலேயைச் சுற்றி வளைத்துக் கொண்டதைப்பற்றி அவன் மனதில் அரும்பிய கவலே கரையத் தொடங்கியது. அச்சமயம் திடும் என சதானந்தர் இருங்கோ விடம் விடைபெற்று அங்கிருந்து கிளம்பினர். முனிவரும் அவரோடு புறப்பட்டார். மாலவன் முனிவரைத் தொடர்ந்தான். சுருளி மாலவனைத் தொடர்ந்தாள். அவளை தன்பின்னே தொடர்ந்து வர அனுமதிப்பதா வேண்டாம் எனத் தடுப்பதா? எப்படித்தான் அவளைத் தடுப்பது? என்ன கூறித்தடுப்பது. ஒன்றும் புரியாமல் அவன் மனம் தடுமாறியது. அச்சமயம் இருங்கோ அவன் உதவிக்கு வந்தார்.

"குருதேவா! மாலவன் இங்கிருக்கட்டும். அவனுல் ஒரு முக்கிய காரியமாகவேண்டியிருக்கிறது. இன்னும் சில நாழிகையில் அவனை அனுப்பிவைக்கிறேன்" என்ருர் இருங்கோ முனிவரை நோக்கி. முனிவரும் அதற்கு இசைந்தார் மறுக்கவில்லே. மாலவன் தங்கவேண்டியதாகிவிட்டது. சுருளியும் அவனேடு தங்கி விட்டாள்.

புன்னனுக்கும் இருங்கோவுக்கும் எவ்விதமான பகைமையும் கிடையாது. சுகலேயின் காரணமாகவே புன்னன் போருக்குப் புறப்பட்டு வந்தான். சுகலேயை காரணம் காட்டி மாலவன் சுருளி, இவர்களின் உதவியுடன் புன்னனைச் சுலபமாக சோழப்படையின்மீது ஏவிவிடலாம். இதன்மூலம் சத்துருவாக வந்த புன்னனை மித்ருவாக மாற்றி சுலபமாக வெற்றிக்கு வழிவகுத்துக் கொண்டுவிடலாம். உதவிக்கு பாண்டியர், எயினர் படைகளைக்கூட எதிர்பார்த்து நிற்க வேண்டி அவசியம் இல்லாது போய்விடும். இவ்விதம் திட்டமிட்டது இருங்கோவின் மனம். இதற்காகவே முனிவர் பின் போகப்புறப்பட்ட மாலவனையும், சுருளியையும் தன்னேடு நிறுத்திக் கொண்டார் இருங்கோ. பாண்டியரின் பெரும் படையும், எயினரின் படையும் இருங்கோவுக்கு உதவியாக புறப்பட்டுவந்து கொண்டிருப்பதாகச் சற்றுமுன்புதான் தகவல் வந்தது. இதனுல் வெற்றி தனதே என்னும் எண்ணம் இருங்கோவின் உள்ளத்தில் சுருதி கூட்டியது.

## 39

பிரமாண்டமான பர்வதம் ஒன்றின் மடியில் அழகாக அமைந்திருந்த சதானந்தரின் ஆசிரமத்திற்கு அருகே கப்பும் கிளேயுமாக படர்ந்து வளர்ந்திருந்தது ஒரு ஆம்ர விருட்சம். அதைச் சுற்றிலும் பசுமையான புல்வெளி. காலே இளம் பரிதி பளிச்சென புல்வெளி எங்கும் தன் பொன் ஒளியை பரவ விட்டிருந்தது.

ஆம்ர விருட்சத்தின் அடியில் புலித்தோலும் மான் தோலும் ஆசனமாக விரிக்கப்பட்டிருந்தன. மான் தோல் ஒன்றில் ஜமதக்னி அமர்ந்திருந்தார். அவர் அருகே வெவ்வேறு ஆசனங்களில் சதானந்தர், சோழ மகாமந்திரி பராந்தகர், இருங்கோ வேளிர், புன்னன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

அவர்களுக்குச் சற்று விலகி சுகதன், மாதவன் மாலவன், சதானந்தரின் சிஷ்யர்கள், சுருளியின் தந்தையான கடம்பன் முதவியவர்கள் உட்கார்ந்திருந்தனர். மற்ருெரு பக்கமாக சுகலே, சுருளி நக்கன்னை மூவரும் அமர்ந்திருந்தனர்.

*   *   *

சுகலேயை விடுவிக்கவேண்டுமென உறையூரிலிருந்து கட்டளை எதுவும் வரவில்லே. அவள் இருங்கோவேளிரிடம் கைதியாக இருப்பதும் உறையூருக்குத் தெரியாது. எவ்வியோடு போருக்குப் புறப்பட்டு வந்த சோழப் படையோடு வந்த சோழ ஒற்றர்கள் எதிரியின் படை நிலேகளைப்பற்றித் தகவல் சேகரிக்கும் நோக்குடன் மேற்கு மலேக் காடுகளில் புகுந்தார்கள் அல்லவா? சுகலே சதானந்தர் ஆசிரமத்திற்குக் கடத்தப்பட்டபோது அவர்களில் இருவர் இதைக் கவனித்து விட்டனர். இத்தனை பாதுகாப்போடு ஒரு துறவிப் பெண்ணை எங்கே அழைத்துப் போகிருர்கள்? ஏன் அழைத்துப் போகிருர்கள் என அவர்கள் மனதில் சந்தேகம் அரும்பியது. பின் தொடர்ந்தனர். காட்டுக் குடிகள் போன்ற வேடத்துடன் எவ்வியின் வீரன் ஒருவனை அணுகி அவனேடு நேசம் கொண்டாடி ஐம்பது வராகன் பொற்காசு கொடுத்து விவரங்களைத் தெரிந்து கொண்டு விட்டனர். சோழச் சேனுபதி



# அவர்
# 'ஸான்பொரைஸ்ட்'
# அடையாளமுள்ள
# துணி மட்டும்
# வாங்கியிருந்தால்...

உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கிப்போகும் தொல்லையை ஒழியுங்கள்! நீங்கள் பருத்தித் துணியோ அல்லது ரெடிமேட் உடைகளோ வாங்கும் பொழுது, அவைகளில் 'ஸான்பொரைஸ்ட்' ('*Sanforized*') அடையாளமிருக்கிறதாவென கவனிக்கத் தவருதீர்கள். இந்த அடையாளமிடப்பட்ட துணிகளில் தைய்த்த உடைகள் அநேக சலவைகளுக்குப் பிறகும் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!

**லேபிலில் 'ஸான்பொரைஸ்ட்' அடையாளம் இருந்தால் உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது!**

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ., இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கம்பெனியின், சுருங்காது என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அநுமதிக்கப்படுகிறது.

விபரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ்,
95, மெரீன் டிரைவ், பம்பாய்-2

சுகதனின் நாயகி சுகலே என்பதையும் அவள் எதிரிகளிடம் கைதியாக இருப்பதையும் ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட சோழப் படைத் தலைவன் திடுக்கிட்டுப்போனன். தங்கள் சேனபதியின் மனைவி எதிரிகளிடம் கைதியாக இருப்பது பெரும் அவமானமாகப்பட்டது சோழப் படை தலைவனுக்கு. உடனே அவன் உறையூருக்குத் தகவல் போக்கினன். உறையூரிலிருந்து உத்தரவு வரும் வரை காத்திருக்க அவகாசமுமில்லை. அது உசிதமுமில்லை என்று தோன்றியதால் தன் வீரர்களோடு கலந்தாலோசித்து தானே திடீரென ஒரு முடிவுக்கு வந்தான் சோழப் படைத் தலைவன். அதன் பயனுகவே சோழ வீரர்கள் திடும் என அன்றிரவே சதானந்தரின் ஆசிரமத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். எதிர்ப்பு எதுவுமே இல்லாததால் சுகலையை தங்கள் முகாமுக்குச் சுலபமாகக் கொண்டுவந்து விட்டனர். சுகலையோடு நக்கன்னையும் சோழ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டாள். சதானந்தரின் சிஷ்யர் யாரையும் அவர்கள் எதுவும் செய்யவில்லை. எப்பொழுதும் போல் ஆசிரமத்திலேயே இருக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டுவிட்டனர்.

சோழப் படைகளைச் சுற்றிவளைக்கும்படி புன்னனை தூண்டுவது தனக்குச் சாத்தியப்படாது, தன் குருநாதரின் அனுமதியும் கட்டளையும் அதற்கு அவசியம். அவரைக் கலந்துகொள்ளாமல் தான் எதுவும் செய்வது முறையாகாது—இவ்விதம் மாலவன் இருங்கோவிடம் தன் நிலையை நயமாக எடுத்துக்கூறி அவர் விருப்பத்திற்கு இணங்க மறுத்துவிட்டான். இருங்கோ என்ன சொல்லியும் அவன் கேட்பதாக இல்லை. அவர் விருப்பத்துக்குத்தான் இணங்கினுல் சுகலைக்காக நடக்கவிருந்த ரத்தக்களரியைவிட அது பயங்கரமானதாக இருக்கும். சுகலையும் பல புதிய சங்கடங்களுக்குள்ளாக நேரிடும் என நினைத்தானவன். இருங்கோவின் விருப்பத்திற்கு அவன் இணங்க மறுத்ததற்கு உண்மை காரணம் இதுவே.

ஆனுல் மாலவன் மறுத்ததோடு இருங்கோ தன் முயற்சியை நிறுத்திவிடவில்லை. ராஜதந்திரத்துறையில் நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்ற அவர் மூளை பலமாக வேலைசெய்யத் தொடங்கியது அதன் பயனுக எவ்வியே நேராக புன்னனைப்போய் சந்தித்தான். வெற்றி கிட்டியது. புன்னன் நல்ல புத்தி கூர்மையுள்ளவனேயானுலும் எவ்வி போட்ட தூபத்தில் அவனுக்கு சினமே சீறி எழுந்தது. தான் செய்யவிருந்த காரியத்தைத்தான் சோழ படை செய்திருக்கிறது என்பது அவன் புத்தியில் படவில்லை. கோபவெறியில் அவன் திடும் என தவருன முடிவு ஒன்றுக்கு வந்துவிட்டான். அதன் பயனுக புன்னனின் வீரர்களும் எவ்வியின் வீரர்களும் ஒன்று சேர்ந்து சோழப் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டுவிட்டனர்.

சோழப்படையை முற்றுகையிடுவதில் புன்னனின் ஆட்களும் கலந்து கொண்டுள்ளனர், தன்னை விடுவிக்கும் நோக்குடனேயே எவ்வியின் வீரர்களோடு அவர்கள் கைகோர்த்து நிற்கிறுர்கள் என்பதை சோழ வீரர்கள் மூலம் கேள்விப்பட்ட சுகலை திடுக்கிட்டுப்போனுள்: புன்னன் காட்டுக் குடியாக இருந்தபோதிலும் மிகவும் நல்லவன். நேர்மையானவன் என்பது அவளுக்கு நன்கு தெரியும். தன்னை விடுவிக்கும் நோக்குடன் இருங்கோவிடம் மாலவனை அவன் தூதனுப்பிய விஷயமும் அதற்கு இருங்கோ இணங்க மறுத்ததும் நக்கன்னை மூலம் அவளுக்கு ஏற்கனவேயே தெரியும். தன்னை சதானந்தர் ஆசிரமத்திற்கு கடத்தியதற்குக் காரணம் சோழப் படை தாக்குதலை மட்டும் எதிர்பார்த்தல்ல, புன்னனின் தாக்குதலையும் எதிர்பார்த்தே என்பதை ஆசிரமம் வந்த பிறகு நக்கன்னை வாயிலாக அவள் கேள்விப்பட்டிருந்தாள். ஆகையால் தன் விடுதலையை நோக்கமாகக்கொண்டு புன்னன் சோழப் படையை முற்றுகை யிட்டிருப்பது விஷயம் புரியாத காரணமே தவிர வேருக இருக்க முடியாது. அவனுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லவேண்டும். அப்படி எடுத்துச் சொன்னுல் அவன் தன் முற்றுகையை விலக்கிக்கொண்டு விடுவான். தனக்காக அனுவசியமாக பச்சை உள்ளம் படைத்த காட்டுக் குடிகள் பலியாக வேண்டாம் என நினைத்தாள் சுகலை. ஆகையால் புன்னனின் ஆட்களும் முற்றுகையில் கலந்து கொண்டிருக்கிறுர்கள் எனக் கேள்வி பட்டதும் சுகலையின் மனம் படாதபாடு பட்டது. தன் சுகவீனத்தையும் அவள் பொருட்படுத்தவில்லை. நேரே சோழப் படை தலைவனிடம் சென்றுள். விஷயத்தை அவனிடம் புரியும்படி விளக்கிச் சொன்னுள். தான் புன்னனிடம் தூது சென்று அனுவசியமாகத் தனக்காக அப்பாவி உயிர்கள் பலியாவதை தடுத்தாகவேண்டும் என்றுள்.

சுகதனையும் சோழ ராஜ குமாரியையும் தூக்கி வர துணிவான முயற்சியொன்றில் எவ்வியின் வீரர்கள் இறங்கினுர்கள் அல்லவா? இதற்குப் பதிலுக்குப்பதிலாக எவ்வியையும் அவன் தங்கை நக்கன்னையையும் கைது செய்து இருங்கோவேளோடு தன்முன் கொண்டு வந்து நிறுத்தவேண்டும் என்பது சோழமன்னனின் கண்டிப்பான கட்டளை. இதனுல் இருங்கோவேளிடம் எக்காரணம் பற்றியும் தன் வீரன் எவனையும் தூதனுப்ப சோழப்படைத்தலைவன் இணங்குவதென்பது சாத்தியமில்லாதிருந்தது. இருங்கோவேளிற்கு துணையாக வந்துள்ள புன்னனின் வீரர்கள் உண்மையில் சுகலையை விடுவிக்கும் நோக்குடன் வந்தவர்கள் என்பதை சுகலையின் வாயிலாகக் கேள்விப்பட்ட சோழப் படைத்தலைவனுக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. தங்களோடு நண்பர்களாக இருக்க வேண்டிய நற்பண்புள்ள காட்டுக்குடிகள் தவறுதலாக தங்கள் உயிர்களை ஏன் பலியிட்டுக்கொள்ள வேண்டும்: சோழ சேனபதியின் மனைவியின் விடுதலைக்காக தங்கள் உயிரையே தியாகம் செய்யத் துணிந்து வந்துள்ள அந்த உத்தம காட்டுமக்களை சோழப்படையே தாக்கி அழிப்ப

தாவது! – சுகலே விஷயத்தை விளக்கிச் சொன்ன போது சோழப்படைத்தலைவன் நிலைமையை புரிந்துகொண்டான். சுகலேயின் விருப்பப்படி தன் வீரர்கள் சிலர் துணையுடன் அவளை புன்ன னிடம் அனுப்பிவைத்தான். தடை எதுவும் சொல்லவில்லை.

வீரர்கள் துணைவர வெண்புரவி ஒன்றின்மீது அமர்ந்து தூரத்தே சுகலே வரும்போதே புன்ன னும் அவன் வீரர்களும் அவளை அடையாளம் புரிந்துகொண்டனர். தங்கள் படைநிலையை நோக்கி அவள் வருவதைககண்ட அவர்களுக்கு வியப்பும் திகைப்பும் தாளவில்லை. புன்னனின் வீரர்கள் அனைவரும் அவளை நன்கு அறிவர். அவளை விடுவிக்கும் நோக்குடன்தான் தாங்கள் எல்லாம் ஆயுதந்தாங்கி நிற்பதும் அவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆகையால் அவர்கள் யாரும் சுகலேயை தடுக்கவில்லை. மலர்ந்த முகத் துடனேயே வரவேற்றனர்.

புன்னன் நின்றிருந்த இடத்தை அடைந்ததும் சுகலே தன் புரவியை விட்டிறங்கி அவனை வணங் கினாள். அவளோடு வந்த சோழ வீரர்களும் வணங்கினர். புன்னன் அவர்களை புன்முறுவ லோடு வரவேற்றான்.

"நீங்கள் கூடவா போருக்குப் புறப்பட்டு வந்து விட்டீர்கள்? படை, போர் என்பதெல்லாம் உங்களுக்கு வெகுதூரம் என்றல்லவா நான் நினைத்திருந்தேன்" என்றாள் சுகலே. முதன் முதலாக அவனைச் சந்தித்த போது அவள் மனதில் அவனைப்பற்றி இதே கருத்துத்தான் பதிந்தது. அதையே இப்பொழுது அவள் அவனிடம் எடுத்துச் சொன்னாள்.

அவள் கூறியதைக் கேட்ட புன்னனுக்கு உள் ளத்தில் யாரோ பளீரென சவுக்கால் அடித்தது போன்றதோர் உணர்ச்சி உண்டாயிற்று.

"நான் போருக்குப் புறப்பட்டு வரவில்லையே. உங்களை எதிரிகள் கையிலிருந்து விடுதலே செய்ய வல்லவா வந்தேன்" என்றான் புன்னன்.

"யார் எதிரி? இருங்கோவின் ஆட்கள் உங் களுக்கு எதிரியா? இல்லை சோழ வீரர்கள் உங்களுக்கு எதிரியா? எனக்குத்தான் அவர்கள் எதிரியா?" என்றாள் சுகலே.

"எதிரி இல்லாவிட்டாலும் உங்களை அவர்கள் காவலில் வைக்கவில்லையா? காவலில் வைத்தால் எதிரிதானே'' என்றான் புன்னன்.

"ஒருவன் தோட்டத்தில் மற்றவன் தெரியாமல் புகுந்து திருடுகிறான். தோட்டக்காரன் திருடனை கண்டு பிடித்து அவனைக் கட்டிக் காவலில் வைக் கிறான். இதனால் திருடன் தோட்டக்காரனை தன் எதிரியாகப் பாவிக்கலாமா? அப்படியும் என்னையாரும் கட்டுக் காவலில் வைக்க வில்லையே?'' என்றாள் சுகலே. சுகலேயை எவ்வி கட்டுக்காவலில் வைத்திருக்கவில்லை என சுருளி தன்னிடம் சொன்னது அப்பொழுது புன்னனுக்கு ஞாபகம் வந்தது. சுகலேயின் வாதத்தில் நியாயமிருப்பதாக அவன் மனதில் படஆரம்பித்தது. அவன் பதில் எதுவும் பேச வில்லை.

"ஆண்டவன் சித்தப்படியே எல்லாம் நடக்கிறது. அவன் இசைவின்றி அணுவும் அசைவதில்லை. இது உங்களுக்குத் தெரியு மல்லவா? நான் கட்டுக்காவலில் இருக்கவேண்டும் எனத் தெய்வசித்தமிருந்தால்தான் நான் கட்டுக் காவலில் இருப்பேன். இல்லாவிடில் இருக்க மாட்டேன். தெய்வசித்தம் நான் கட்டுக்காவலில் இருக்கவேண்டுமென இருக்கும்போது மனித சித்தம் என்னை கட்டுக்காவலிலிருந்து விடுவித்து விடமுடியாது. நான் கட்டுக்காவலில் இருக்கக் கூடாது எனத் தெய்வசித்தமிருக்கும்போது என்னை மனித சித்தம் எதுவும் கட்டுக்காவலில் வைத்துவிடமுடியாது." என்றாள் சுகலே.

"நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஆனால் ஆற்று வெள்ளம் ஒரு மனிதனை அடித்துக் கொண்டு போகிறது. தெய்வசித்த மிருக்கிறது அப்படி. அதனால்தான் ஆற்று வெள்ளத்தோடு போகிறான் என வேடிக்கை பார்க்கலாமா? பார்க் கத்தான் முடிகிறதா? பார்ப்பதுதான் நல்லதா?" என்றான் புன்னன்.

"அது வேறு விஷயம். இது வேறு விஷயம் அங்கே ஒரு மனிதன் உயிருக்கு ஆபத்து இருக் கிறது. ஆகையால் அவனை எப்படியும் காப் பாற்றித்தான் ஆகவேண்டும். இங்கே அப்படி இல்லையே. என் உயிருக்கு ஒரு ஆபத்துமில்லையே. ஒரு பாவமுமறியாத உங்கள் காட்டு குடிகளின் உயிருக்கல்லவா ஆபத்து வந்திருக்கிறது. அவர் களை அல்லவா நீங்கள் காப்பாற்றவேண்டும். அவர்கள் அனியாயமாக இறந்துபோனால் அவர் கள் பெண்டாட்டி பிள்ளைகள் என்ன பாடு படு வார்கள்? அவர்கள் உங்களையும் என்னையும் அல் லவா சபிப்பார்கள். அத்தனை அப்பாவி உயிர்களை அனாவசியமாக பலியிட்ட பாவம் உங்களையும் என் னையுமல்லவா வந்து சுற்றும்? அதுதான் போகட் டும். நான் சோழ சேனாபதிக்குரியவள் தானே? இதற்காகத்தானே எவ்வியின் ஆட்கள் என்னை வழிமறித்துக் கூட்டி வந்தார்கள். நான் இப் பொழுது எங்கே இருக்கிறேன்? சோழப்படை யோடுதானே இருக்கிறேன். நான் கைதியல் லவே. எனக்குக் கட்டுக்காவலுமில்லையே. அப் படியிருக்கும்போது என்னை விடுவிப்பதென்பது எப்படி? நீங்களே நன்றாகச் சிந்தித்துப் பாருங் கள்" என்றாள் சுகலே. அவள் கூறியது புன்ன னின் மனதில் நன்கு பதிந்தது. தான் இருங்கோ வேளிரோடு சேர்ந்து சோழப்படை முகாமை முற்றுகையிட்டது முறையல்ல, பொருத்தமு மல்ல என உணரத் தொடங்கினான் அவன். இத னால் தன் ஆட்களை உடனே முற்றுகையிலிருந்து விலக்கிக் கொள்ளவும் இணக்கம் தெரிவித்தான்

புன்னன். ஆனால் அதற்கு சுகலை தன் இசைவைத் தெரிவிக்கவில்லை. இருங்கோ அவனை நம்பி முற்றுகையிட்டிருக்கும்போது நம்பினவனை நட்டாற்றில் விடுவதை ஒப்ப நடப்பதும் நல்லதல்ல என புன்னனுக்கு எடுத்துக் கூறினாள் அவள். நம்பினவனல்ல அவன். மோசக்காரன். மோசடியாகத் தன்னை முற்றுகையி லிடுபடுத்திவிட்டதாகக் கூறினான் புன்னன். சுகலை அதற்கு எதுவும் பதில் பேசவில்லை. தன்னைப் பின் தொடர்ந்து வரும்படி அவனை வேண்டிக்கொண்டாள். அவனும் அப்படியே செய்தான். மறுக்கவில்லை.

சுகலை நேரே இருங்கோவின் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்டாள். தன் படைநிலைக்கு அருகேயே மறைவான ஒரு இடத்தில் முகாம் செய்திருந்தார் அவர். சுகலையும், புன்னனும் அங்கு போய் சேரு முன்பே ஜமதக்னி முனிவர், சதானந்தர் சுருளி, மாலவன் நால்வரும் அங்கே அவரோடு பேசிக்கொண்டிருந்தனர். எதற்காக சுகலை புன்னனை அங்கே அழைத்து வந்தாளோ அதே விஷயமாகத்தான் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நக்கன்னையை முதலில் விடுவித்தாகவேண்டும். தன் நாட்டை தன்னிடம் திருப்பித் தந்துவிடவேண்டும். இதற்குச் சோழர்கள் இணங்கினால் தான் போர் நிறுத்தம் செய்யத் தயார். மற்றபடி எக்காரணம் பற்றியும் தான் போர் விலக்கம் செய்வதென்பது சாத்தியமல்ல. தானும் வீணாக உயிர் பலியாவதை விரும்பவில்லை தான். ஆனால் அதைத் தடுப்பது தன் கையில் இல்லை. சோழர் கையில்தானிருக்கிறது. ஆகையால் தன்னை அணுகிப் பயனில்லை. சோழர்களை அணுகினால்தான் பயனுண்டு எனத் தீர்மானமாகக் கூறிவிட்டார் அவர். முனிவர், சுகலை, புன்னன் மூவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தன் தீர்மானத்தை அவர் மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

முனிவர், சதானந்தர், சுகலை, புன்னன் முதலியவர்கள் சோழப்படைத் தலைவனை அணுகிப் பேசிப் பார்த்தனர். மேலிடத்து உத்தரவில்லாமல் தானே சுயமாக நக்கன்னையை விடுவிப்பதென்பதோ போர் நிறுத்தம் செய்வதென்பதோ நடவாத காரியம் என்பதை சந்தேகத்துக்கிடமின்றி கூறிவிட்டானவன். அடுத்த நாள் காலை தன் படைகள் முற்றுகையிலீடுபட்டுள்ள எதிரிப் படைகளைத் தாக்கி முற்றுகையை முறியடிக்கும். இதையும் தன்னால் நிறுத்த முடியாது எனக் கண்டிப்பாக கூறிவிட்டானவன். தானுயிரோடிருக்கும் வரை தான் போர் நடக்க அனுமதிக்கப் போவதில்லை. முதலில் தன்னை பலிகொண்ட பிறகே போருக்குப் புறப்பட முடியும் என சுகலை சோழப்படை தலைவனிடம் தன் தீர்மானத்தை உள்ளக் குமுறலுடன் கூறினாள். அதுவும் பலனளிப்பதாக இல்லை. சுகலையை பலவந்தமாக நான்கு வீரர்கள் சுற்றி வளைத்துக்கொண்டு விட்டால் அவளால் என்ன செய்ய முடியும்? இவ்விதம் ஓடியது சோழப்படை தலைவனின் சிந்தனை.

எந்த விதமோ போர் நடவடிக்கையைத் தடுத்தாகவேண்டும். தன் கண் முன் உயிர்ப்பலி நடக்கக்கூடாது. கோரப் போரை தன் கண்ணால் பார்த்துக்கொண்டிருப்பதைவிட தான் செத்து மடிந்துவிடுவது மேல். இவ்விதம் சிந்தனையோடியது சுகலைக்கு. அவள் தன் தீர்மானத்தை மாலவனிடம் சொன்னாள். தன் மனதிலும் அதே தீர்மானந்தான் உருவாகி இருப்பதாக கூறினான் அவன். சுருளியும் அதேபோல்தான் சொன்னாள். ஆனால் அவள் மனதில் போரைத் தடுக்க தந்திரமான திட்டம் ஒன்றும் உருவாகி விட்டிருந்தது. அதை அவள் சுகலையிடமும் மாலவனிடமும் கூறினாள். முயற்சித்துப் பார்க்க ஏற்ற நல்ல திட்டம்தான் அது என அவர்களுக்கும் பட்டது. மூவரும் தனியாக புன்னனை அணுகி விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். அவனுக்கு அவர்கள் மூவரிடமும் ஒரு அலாதியான அன்பும், பிரியமும் உண்டு. அவை பக்க பலமாக நிற்கவே அவர்கள் வேண்டுகோளுக்கு அவனும் இணக்கம் தெரிவித்தான். இரண்டு படைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாதபடி புன்னனின் ஆட்களும் யானைகளும் இரண்டு படைகளுக்குமிடையே நிலை ஊன்றி நின்றுகொண்டு விடுவது. புன்னன், சுகலை, சுருளி, மாலவன் முதலியவர்களும் அவர்களோடு நிற்பது. எல்லோரும் நிராயுதபாணிகளாகவே நிற்பது. இதுவே அவர்கள் தீர்மானித்த திட்டம். இத்திட்டப்படியே புன்னனின் ஆட்களும், புன்னன், சுகலை முதலியவர்களும் இரவுக்கிரவாகவே இரண்டு படைகளுக்குமிடையில் ஊன்றி நின்றுகொண்டு விட்டனர். அடுத்த நாள் விடிந்ததும் மோத இருந்த இரண்டு படைகளும் படைத் தளபதிகளும் நிலைமையைக்கண்டு திடுக்கிட்டுப் போயினர். எவ்வியின் படைகளைத் தாக்கும்படிதான் சோழப்படை தலைவனுக்கு உத்தரவு. புன்னனின் நிராயுதபாணியான ஆட்களைத் தாக்கும்படி உத்தரவு எதுவுமில்லை. அந்த நிலையை சோழப்படை தலைவனோ, சேனாபதியோ, மகா மந்திரியோ, மன்னனோ, எதிர்பார்த்தவர்களல்ல. ஆகையால் என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் விழித்தான் சோழப்படை தலைவன். எவ்வியும் இதேபோன்ற நிலையில்தானிருந்தனர். புன்னனின் ஆட்களை எப்படித் தாக்குவது? போர் நடவடிக்கைகள் தேக்க நிலையை அடைந்தன. இது இப்படி இருக்க.

சுகலை இருங்கோவேளிரிடம் கைதியாக இருந்தாகவும் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் உறையூரில் சுகதனுக்கு தகவல் எட்டியதும் அவன் திடுக்கிட்டுப்போனான். அதற்குமேல் அவனுக்கு அங்கே நிலைகொள்ளவில்லை. பறந்தோடி வந்தான் சோழப் படைநிலையை நோக்கி. தன் தந்தையிடம்கூட எதுவும் கூறிக்கொள்ளவில்லை அவன்.

சுகலையைப் பற்றிய செய்தி பராந்தகருக்கும் எட்டியது. தன்மகன் தன்னிடம்கூட சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போய்விட்டான்

என்ற செய்தியும் அவர் காதில் பட்டது. அதற்குமேல் அவருக்கும் அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மன்னனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு அவரும் விரைந்தார் மேற்கு மலையைநோக்கி. சுகலைக்கு வால்பிடித்துக் கொண்டு வஞ்சிமாநகருக்கு தன் மகன் போய்விடாதபடி தடுத்துவிடவேண்டும். தான் நேரில் போனாலொழிய அது சாத்தியமில்லை. சோழராஜ குமாரிக்கும், சுகதனுக்கும் முடிச்சுப்போடும் திட்டமும் பிசுபிசுத்துவிடும். இந்த எண்ணமே பராந்தகரை மேற்குமலை நோக்கி அவ்வளவு அவசரமாகப் பறக்கச் செய்தது.

சுகதன், பராந்தகர் இருவரும் சற்று முன் பின்னாக சோழப் படைநிலையை அடுத்தனர். ஆனால் அங்கே அவர்கள் முற்றிலும் எதிர்பாராத நிலை ஒன்று அவர்களை எதிர்கொண்டழைத்தது. எதிரிபடைகள் சோழப்படையை சுற்றிவளைத்து நின்றன. இரண்டு படைகளும் மோதிக் கொள்ளாதபடி நடுவே நிராயுதபாணியான மூன்றாவது படை ஒன்று நின்றுகொண்டிருந்தது. எங்கும் கண்டும் கேட்டுமிராத இந்த விசித்திர நிலையைப் பார்த்த தந்தையும், தனயனும் திகைத்துப்போயினர். என்ன செய்வது என்று அவர்களுக்கு ஒன்றுமே ஓடவில்லை. சோழப்படை நிலையை அடைய வேண்டுமானால் எதிரி படைகளை ஊடுருவி, இடையில் உள்ள மூன்றாவது படையையும் தாண்டிச் சென்றாக வேண்டும். என்ன செய்வது?

பராந்தகரும், சுகதனும் திகைத்து நின்ற சமயம் அப்பக்கமாக முனிவரும், சதானந்தரும் வந்தனர். முனிவரை அவ்விடத்தில் சுகதன் எதிர்பார்க்கவே இல்லை. ஸ்தம்பித்துப்போனான். முனிவரும் சுகதனை அங்கு எதிர்பார்த்தவரல்ல.

முனிவரை சுகதன் வணங்கினான். முனிவர் அவனை ஆசீர்வதித்தார். சுகதன் மூலமாக பராந்தகரும் முனிவரும் பரஸ்பரம் அறிமுகமாயினர். பராந்தகர் சுகதனின் தந்தை மட்டுமல்ல. சோழ மகாமந்திரியும்கூட என்பதையும் கேள்விப்பட்ட முனிவர் தன் எண்ணம் கைகூட நல்லதொரு சந்தர்ப்பம் கிட்டியிருப்பதாக நினைத்தார். முனிவர் மூலமாக சுகதனும் பராந்தகரும் நிலைமையைத் தெரிந்துகொண்டனர். சுகதனையும், பராந்தகரையும் தங்கள் பின்னே ஆசிரமத்திற்கு வரும்படியும் அங்கே எல்லா விஷயங்களும் பேசிக்கொள்ளலாம் எனவும் கூறினார் முனிவர். அவர் விருப்பப்படியே தந்தையும், தனயனும் துறவிகளைப் பின்தொடர்ந்தனர் உடனே புன்னனுக்கும், சுகலைக்கும், இருங்கோவுக்கும் ஆள் போயினர். அவர்களும் உடனே ஆசிரமம் வந்து சேர்ந்தனர்.

சுகலையை துறவிவேடத்தில் பார்க்க சுகதன் மனம் படாதபாடுபட்டு குமுறியது. நெஞ்சத்தில் பலபல சிந்தனைகள் நெளிந்தன. சுகலை எட்டி இருந்தபடியே அவனை வணங்கினாள். அவள் முகம் மலர்ந்தது. துறவி உருவிலும் அவள் நல்ல சோபையுடன்தான் விளங்கினாள். அவன் அவள் அருகே செல்லவில்லை. அவளும் அவனருகே வரவில்லை. வாய்திறந்து ஒருவார்த்தை கூட அவர்கள் பேசிக்கொள்ளவுமில்லை. ஆனால் நயனங்கள் மட்டும் ஏதேதோ பேசிக்கொண்டன. பிரிவால் துடித்த இரண்டு உள்ளங்கள் கட்டித் தழுவத்துடித்தன. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை அதற்குக் குறுக்குச் சுவராக நின்றது. சுகலை கூடவே சுருளியும் வந்திருந்தாள். சுகதன் உத்தரவின்பேரில் நக்கனை விடுதலையாகி அவளும் அவர்களோடு வந்துசேர்ந்துகொண்டு விட்டாள். சுகதனருகே மாலனுவனும், மாலவனருகே மாதவனும், சதானந்தரின் ஏனைய சிஷ்யர்களும் இருந்தனர். சுருளியின் தந்தையான கடம்பனும் அங்கு அவர்களருகேதானிருந்தான். சேர ராஜகுமாரன் மூலம் தன் அருமை மகள் உயிரோடு இருப்பதையும், அவனை சந்திக்க வரும் வழியில் குறுக்கிட்ட தடைபற்றியும் கேள்விப்பட்ட கடம்பன் உவகைப் பெருக்குடன் தன் மகளைத் தேடிக்கொண்டு ஓடோடி வந்தான். அவன் வழியில் குறுக்கிட்ட புன்னனின் ஆட்கள் அவன் சொன்ன கதையைக் கேட்டு பரிதாபப்பட்டு சுருளியிடம் அவனைக் கூட்டிவந்து சேர்ந்தனர். உவகைப் பெருக்கில் அவர்கள் உள்ளங்கள் பொங்கி வழிந்தன.

* * *

“போரால் பிரச்னை எதுவும் தீருவதில்லை. போரால் மக்களிடையே பகைமையும், பூசலும்தான் வளருகிறது. போரில் காணும் பலன் படுகொலையும், படுநாசமும் தவிர வேறில்லை. மனித சமூகத்தை பீடித்துள்ள பீடைகளில் போர்தான் மிகப் பெரியது. மிகக் கொடியது. மனித சமூகம் உய்யவேண்டுமானால் போர் பீடையை முதலில் நாம் ஒழித்தாகவேண்டும்” என்றார் முனிவர்.

“ஆம், அது உண்மைதான் குருதேவா! அதற்குத்தான் வழி தெரியாமல் மனித சமூகம் திண்டாடுகிறது” என்றார் பராந்தகர்.

“சோழ மகாமந்திரி! நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மிழலை கூற்றத்துக்காக முன்பு சோழப்படையும், மிழலைப் படைகளும் மோதிக் கொண்டன. இன்று மறுபடியும் மோதிக் கொள்ள இருக்கின்றன. இனியும் மோதிக் கொண்டேதானிருக்கும். மோதலால் மோதல் தான் வளருகிறது. போரால் போர்தான் வளருகிறது. இன்று சோழப் படையும் மிழலைப் படையும் மோதிக்கொள்ளுகின்றன. சோழப் படையே ஜெயிக்கிறது என வைத்துக்கொள்ளுவோம். இதன் பலன் என்ன? இன்னும் சில ஆண்டுகளிலோ, பல ஆண்டுகளிலோ மிழலைப் படை மறுபடியும் பலம் பெற்று மோதக்கிளம்

பும்; மீண்டும் போர்தான். பிழலைப் படை ஜெயித்தாலும் இதே கதைதான். சோழப் படை பலத்தைத் திரட்டிக்கொண்டு என்ருவது ஒரு நாள் மறுபடியும் மோதவே செய்யும். மனிதன் தன் தோல்வியை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வ தென்பது ஒரு நாளும் கிடையாது. இதனுல் ஒவ்வொரு போர்க்களத்திலும் மற்ருெரு போருக் கான விதைகள் விதைக்கப்பட்டு விடுகின்றன. ஒவ்வொரு போர்க்களத்திலும் பரஸ்பரம் ஒரு வரை ஒருவர் கொன்று குவித்து படுநாசம் விளை வித்துக் கொள்ளுவதோடு நில்லாமல் மறுபடியும் சில நாழிகையிலோ, நாட்களிலோ, வருடங் களிலோ மறுபடியும் பரஸ்பரம் கொன்று குவித்து படுநாசம் விளைவித்துக்கொள்ள வித்தும் ஊன்றி விடுகிருர்கள். போர்களில் நடப்பது இதுதானே? போர்களால் பகைமையும், பூசலும், நாசமும்தான் வளர்ந்துகொண்டே போகின்ற னவேயன்றி வேறு ஏதாவது நல்ல பயனுண்டா?" இவ்விதம் முனிவர் பேசியது புன்னனின் மனதில் ஆழமாகப் பதிந்தது. இருங்கோவேளிர், எவ்வி, பராந்தகர், சுகதன் எல்லோருடைய மனதையும் கூட அவர் அறிவுரை தொடவே செய்தது. அவர்கள் எதுவும் பேசவில்லை. சிந்தனைகள் ஓட் டியபடியே அமர்ந்திருந்தனர்.

"இதனுல் மனித சமூகம் உய்யவேண்டுமானுல், நாசமும், பகைமையும், பூசலும் நீங்கவேண்டு மானுல், போரை முதலில் ஒழித்தாகவேண்டும். இதற்கு வழி வகைகள் எங்கும் இல்லை. மனி தனின் உள்ளத்துக்குள்ளே தானிருக்கின்றன. உலகிலுள்ள மனிதர்கள் அத்தனைபேரும் ஆதியில் தோன்றிய ஒரே மனிதனின் சந்ததிகளே; ஒரே சகோதரர்களே. அவர்களிடையே மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், மொழியின் பெயரால், நாட்டின் பெயரால் பிரிவினையும், பகைமையும், தோற்றுவித்து, அதைப் பேணி வளர்ப்பது அறிவுடைமையாகாது. உலகில் உள்ள நிலமோ, நீரோ, எல்லாம் ஆண்டவனுடையதே. உயிருள் ளவை, உயிரில்லாதவை அத்தனையும் ஆண்டவ னுடையதே. அப்படியிருக்கும்போது என் நாடு, உன் நாடு, அவன் நாடு; என் நிலம், அவன் நிலம், உன் நிலம்; என் மரம், உன் மரம், அவன் மரம்; இதுபோன்று தன்னுடையதல்லாத ஒன்றில் தவ ரானதும், பொய்யானதுமான உரிமை பாராட் டிக்கொண்டு அதற்காகத் தங்களிடையே பிரி வினையும், பகைமையும், பூசலும் வளர்த்துக் கொண்டே போவது மனித சமூகத்துக்குப் புத்தி சாலித்தனமாகாது. இந்தப் பெருந் தவறை என்று ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து தன்னை திருத்திக்கொள்ளுகிருனே அன்றே இவ்வுலகை விட்டு போரும், பகைமையும், பூசலும், பிரிவினை யும் பறந்தோடிவிடும்" முனிவர் பேசிக்கொண்டே போனுர். எல்லோரும் கவனமாகக் கேட்டுக் கொண்டுதானிருந்தனர்.

"உலகில் தனக்குள்ள உரிமை பிறனுக்கும் உண்டு. தானும்தான் வாழவேண்டும். பிறனும் தான் வாழவேண்டும். இவ்விதமான பரந்த மனப்பாங்கு ஒன்றை ஒவ்வொரு மனிதனும் மேற்கொண்டாலே போதும். போரும், பூசலும் நீங்கிவிடும்.

"உலகில் ஆட்டையும், மாட்டையும், கோழி யையும் மனிதன் உணவுக்காக கடவுள் படைக்க வில்லை. மனிதன் உயிர் வாழ புலால் உணவு அவசியமானதல்ல. ஆதி மனிதன் புலால் புசித்தவனல்ல. புலால் உணவு இடையில் புகுந்ததுதான். இந்தப் புலால் உணவால் தான் பாவம் செய்கிருேமே, கொலை செய்கிருேமே என்ற உணர்வுகூட இன்றி ஆட்டின், கோழியின் கழுத்தை முறிக்கக் கற்றுக்கொண்டான் மனிதன். மனிதனை மனி தன் கூசாமல் குத்தவும், வெட்டவும், இந்த இந்த கழுத்தை முறிக்கும் பிரவிருத்திதான் அவனைப் பழக்கிவைத்தது. பிறகு இதுவே போருக்கும் தூண்டுகோலாக அமைந்தது. புலால் மறுப்பவன் போருக்குப் புறப்படமாட் டான். கத்தி எடுக்கவோ கொலை செய்யவோ அவனுக்குத் தோன்ருது. வரவும் வராது. ஆகையால் புலால் மறுத்தால் போர் பிரவிருத்தி யும், கொலை பிரவிருத்தியும் மனித சமூகத்தை விட்டு மறைந்துவிடும்." முனிவரின் இக்கூற்று அங்கு கூடியிருந்த பலருக்கு வியப்பைத் தந்தது. சுகதன் போன்ற சிலருக்கு சிந்தனையைக் கிளறி யது. முனிவர் தொடர்ந்து பேசினுர்

"நான் ஒருசமயம் ஒரு அன்பர் வீட்டுக்கு அதிதியாகப் போயிருந்தேன். அவ்வன்பருக்கு இரண்டு பையன்கள். மூத்தவன் சாது. இளைய வன் அதற்கு மாருனவன். வீட்டருகே ஒரு வேப்ப மரம். அதன் நிழலில் மூத்த பையன் செங்கல்களை அழகாக அடுக்கி வீடு கட்டிக்கொண் டிருந்தான். திடீரென எங்கிருந்தோ வந்தான் சின்னவன். சடாரென ஒரே உதைதான். அத் தனை நேரம் சிரமப்பட்டு பெரியவன் அழகாகக் கட்டியது அத்தனையும் தரை மட்டம். அந்த அழிவைப் பார்த்து கைகொட்டிச் சிரித்து மகிழ்ந் தான் சின்னவன். அதே அழிவைப் பார்த்துக் கண்ணீர் சிந்திப் புலம்பினுன் பெரியவன். போரும் இதேபோல்தான். அழிவையும் படு நாசத்தையும் பார்த்து கைகொட்டிச் சிரித்து வெற்றி கொண்டாடுகின்றனர் சிலர். அதே அழிவைப் பார்த்து அழுது புலம்புகின்றனர் சிலர். போர் என்பது அழிவு. அதில் வெற்றி என்பதும் வெற்றி கொண்டாடுவதும் சிறு பிள் ளைத்தனத்தைத் தவிர வேறில்லை" இவ்விதம் முனிவர் பேசிக்கொண்டிருக்கும்போதே புலிக் கொடி தாங்கிய வீரர் இருவர் அங்கு வந்து நின்றனர்.

## 40

அன்று வைகாசிப் பூர்ணிமை. சதானந்த ரிடமும் சுகதனிடமும் தன் சிஷ்யர்க ளிருவரை முனிவர் விட்டுச் சென்று அன்ேருடு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டிருந்தது.

தங்கள் படை முகாமுக்குப் போயிருந்தனர் பராந்தகரும், சுகதனும். அன்று மாலையே முனிவர், பராந்தகர், சுகதன், புன்னன், இருங்கோ ஆகிய ஐவரும் உறையூர் போய், மன்னனோடு பேசி சமாதானத் தீர்வு காண்பது. அதுவரை இருதரப்பிலும் போர் நிறுத்தம் செய்து வைப்பது என்பது நீண்ட நேர வாதத்துக்குப் பின் இருதரப்பும் இணங்கிச் செய்த முடிவு.

உறையூர் பயணத்துக்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. புன்னனின் ஆட்களும் யானைகளும் தங்கள் கிராமத்துக்குத் திரும்பிப் போய் விட்டன. புன்னன் மாத்திரம் ஆசிரமத்தில் தங்கி இருந்தான். அவனோடு கடம்பனும் சுருளியும் ஆசிரமத்திலேயே தங்கி இருந்தனர்.

முந்தியநாளிரவு. ஆசிரமத்தில் எல்லோருமே உறக்கத்தில் மூழ்கி விட்டனர். அதுவரை உறக்கமின்றி உள்ளத்தில் உளைச்சலோடு தவித்துக்கொண்டிருந்த இரு ஜீவன்கள் ஆசிரமத்திற்கு எட்டி ஒரு மறைவான இடத்தில் ஒன்றுகூடின. பால் நிலவும், இளம் தென்றலும் அவர்களுக்கு துணை நின்றன. மலை மலையாக அவர்கள் பேசினர். என்னதான் அவர்கள் அப்படிப் பேசினர்களோ. விடி வெள்ளியும் முளைத்துவிட்டது. அப்பொழுதும் அவர்கள் பேச்சு முடியவில்லை. கிழக்கே வெளுக்க ஆரம்பித்ததும்தான் அவர்கள் மனமின்றி எழுந்து போகப் புறப்பட்டனர் ஆசிரமம் நோக்கி.

சமாதான தூதுக் குழுவில் பராந்தகர், முனிவர் இருவரின் பலமான வற்புறுத்தலின் பேரிலேயே சுகதன் சேர்ந்தான். சுகலையும், தானும் வஞ்சிமாநகர் திரும்பிவிட வேண்டும் என்பதே அவன் ஆசையெல்லாம். ஆனல் பெரியவர்கள் வற்புறுத்தலின் முன் தன் ஆசையை அவன் மூட்டை கட்டி வைக்க வேண்டியதாகிவிட்டது. ஆனல் சுகலையைப் பிரிந்து செல்ல அவன் மனம் ஒப்புவதாக இல்லை. தன் தந்தை சுகலை தன்னோடு வருவதை விரும்பமாட்டார், தடைகளும் சொல்லக் கூடும் என்பது சுகதனுக்குத் தெரியும். ஆகையால் சுருளி, மாலவன், கடம்பன் முதலியவர்களோடு தனி கோஷ்டியாக முன் கூட்டியே உறையூருக்கு அவளை அனுப்பி விடுவது என்ற முடிவு செய்தான் அவன். ஆசிரமத்திற்கு வெளியே முந்திய நாளிரவு சுகலையும் அவனும் சந்தித்துப் பேசியபோது அவன் தன்னுடைய இத்திட்டத்தை சுகலையிடம் சொன்னன். சுகலையும் அதற்குச் சம்மதித்தாள். சுகலை தன் துறவி வேடத்தைக் கலைத்துவிடவேண்டும், இனி அதற்குத் தேவையுமில்லை, பொருத்தமுமில்லை எனப் பலமாக வற்புறுத்தினன் சுகதன். சுகலை அதற்கும் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

சுகலை, சுருளி, மாலவன், கடம்பன் ஆகிய நால்வரும் அன்று அதிகாலையிலேயே தனி கோஷ்டியாக உறையூர் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தனர். துறவி வேடம் கலைந்த சுகலை ஒரு வகை தனிப் பொலிவுடன் விளங்கினுள். வெறியூட்டும் அவள் மருண்ட பார்வையும் குறைவில்லா அவள் அழகு முகமும் முன்னெப்பொழுதையும் விட விகசித்துத் தோன்றியது.

முனிவர் தனியாக மாலவனைக் கூப்பிட்டனுப்பினர். மாதவனையும் கூப்பிட்டனுப்பினர். இருவரும் வந்து முனிவரை வணங்கி நின்றனர். தன் கரம் உயர்த்தி சிஷ்யர்களிருவரையும் ஆசீர்வதித்தார் முனிவர்.

"மாலவா! இல்லறமா, துறவறமா எது சிறந்தது என உனக்குப் புரிந்து போய் விட்டதா?" எனக் கேட்டார் முனிவர் மாலவனை நோக்கி.

"இல்லையே குரு தேவா!" என்ருன் மாலவன்.

"மாதவா உனக்கு?"

மாதவனும் மாலவனைப்போலவே பதில் சொன்னன்.

"குழந்தைப் பருவம், பால பருவம், குமார பருவம், யுவ பருவம், காளைப் பருவம் இவ்விதம் பிறந்து வளர்ந்து வரும் மனிதன் பிறகு அதே போல் படிப்படியாகத் தேய்ந்து வயோதிகமடைந்து மறைந்து விடுகிருன். ஒவ்வொரு பருவத்திலும் அந்தந்த பருவத்துக்கேற்றபடி அவன் உடல் அமைப்பு மட்டுமல்ல, சிந்தனை, அறிவு வளர்ச்சி, மனப் போக்கு, உள்ள உணர்ச்சி எல்லாமே மாறுபடுகிறது. மனிதன் வளர்ந்து வாலிபமடையும்போது அவன் உள்ளத்தில் புது விதமான ஒரு உணர்ச்சி புதிதாக ஊற்றெடுக்க ஆரம்பிக்கிறது. வாலிப காலத்தில் தோன்றும் இவ்வுணர்ச்சியை வாலிப உணர்ச்சி எனச் சொல்கிருர்கள். தன்னை ஒத்த வாலிபப் பெண் ஒருத்தியோடு கூடி வாழவேண்டு மென்பதே அவ் உணர்ச்சி. இல்லறத்துக்கு அடிப்படையாக அமைவது இவ்வாலிப உணர்ச்சியே.

"இல்லறத்துக்கு அடிப்படையாக அமையும் இவ்வாலிப உணர்ச்சியை உதறி விடுவதே துறவறம் எனப் பலர் நினைக்கிருர்கள். துறவறம் என்பது வாலிப உணர்ச்சியை மட்டும் உதறுவதல்ல. ஐம்புலன் உணர்ச்சிகளையும் பூரணமாக கட்டுப் படுத்துவதே துறவறம். உணர்ச்சிகளுக்கு தடை போடாமல் அவற்றிற்கு நல்ல வழி வகுத்து அவற்றின் போக்குக்கிசைய திருப்பி விடுவதை நோக்கமாகக் கொண்டதே இல்லறம்.

"வாலிப வயதில் மனித உள்ளத்தில் பருவ உணர்ச்சி மழைகால வெள்ளம்போல் பிரவாகமாகப் பெருக்கெடுக்கிறது. அச்சமயம் அவ் உணர்ச்சியை அணை போட்டுத் தேக்கி சுவரச் செய்து விடுவதென்பது சுலப சாத்தியமான காரியமல்ல. வயோதிக காலத்தில் பருவ உணர்ச்-

சிப் பெருக்கு வெகுவாகக் குறைந்து வற்றிவிடும் நிலையை எட்டும். அப்பொழுது அதை குறுக்கே அணையிட்டுத் தடுத்து சுவரச் செய்வது எவ்வளவு சுலபம்? இதனால் வாலிபத்தில் இல்லறமும் வயோதிகத்தில் துறவறமும் மேற்கொள்ளுவதே நல்ல முறையாகும். வாலிபத்தில் துறவு என்பது மழை காலத்தில் அணைபோட முயற்சிப்பதையே ஒக்கும். வயோதிக காலத்தில் இல்லறம் நடத்துவதென்பதும் பொருத்தமற்றதேயாகும். அந்த அந்த பருவத்தில் அந்த பருவத்திற்கேற்றபடி நடந்து கொள்ளுவதே விவேகமாகும். ஆகையால் நீங்களிருவரும் இல்லறம் மேற்கொள்ளுவதே இப் பருவத்திற்கேற்ற விவேகமான செய்கையாகும்" என்றார் முனிவர்.

அச்சமயம் வெளியே ஏதோ அரவம் கேட்டது. முனிவரின் பார்வை அப்பக்கமாகத் திரும்பியது. இளம் பெண் ஒருத்தி சிவிகையிலிருந்து இறங்கினாள். அவள் உடை அலங்காரங்களும் தோற்றமும் அவள் ஒரு ராஜகுமாரி என சங்கூதின. அவளுக்கு காவலாக வந்த வீரர்கள் புலிக்கொடி ஏந்தி நின்றனர். இதனால் சோழ ராஜகுமாரியாகத்தான் அவள் இருக்கவேண்டுமென முடிவு கட்டினார் முனிவர். உண்மையில் சோழ ராஜகுமாரியேதானவளும். சுகலை சோழப்படையிடம் சிக்கி இருப்பது, சுகதன் அச்செய்தி கேட்டு பறந்தோடி வந்தது, பராந்தகர் அவனைத் துரத்திக்கொண்டு கிளம்பியது—இத்தனையும் கேள்விப்பட்ட பிறகு சோழ ராஜகுமாரிக்கும் அங்கு இருப்பு கொள்ளவில்லை. அவளும் புறப்பட்டு வந்துவிட்டாள்.

சுகலை உறையூருக்குப் பயணப்பட்டு தன் குடிசையை விட்டு வெளியேறவும் ராஜகுமாரி தன் சிவிகையை விட்டிறங்கவும் சரியாக இருந்தது. சுகலை ராஜகுமாரியைப் பார்த்தாள். ராஜகுமாரி சுகலையைப் பார்த்தாள். முந்திய நாளிரவு சுகலையோடு பேசிக்கொண்டிருந்தபோது சுகதன் ராஜகுமாரியைப்பற்றியும் தன் தந்தை தன்னைத் தொடர்ந்தோடி வந்திருக்கும் நோக்கம் பற்றியும் விவரமாகச் சொன்னான். எதையும் மறைக்கவில்லை. இதனால் ராஜகுமாரியைக்கண்ட சுகலைக்கு விஷயத்தைப் புரிந்துகொள்ள அதிக நேரமாகவில்லை.

தன் முன் தோன்றிய சுகலையை ஒருமுறை நிமிர்ந்து நோக்கினாள் ராஜகுமாரி. வெறியூட்டும் அவள் அழகைக் காண அவளுக்கே மலைப்பாக இருந்தது. அவ்வளவு சிறந்த அழகியை அதற்குமுன் அவள் எங்குமே கண்டதில்லை. பார்வை விட்டகலாமல் அவளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போலிருந்தது ராஜகுமாரிக்கு.

சுகலையும் ராஜகுமாரியை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். மலரப்போகும் வாழ்வை நினைத்து மகிழும் வயது. கட்டுப்படுத்த முடியாத எண்ணங்கள் மலரும் பருவம்.

முதலில் சுகலைதான் பேசினாள்.

"வரவேண்டும்! வரவேண்டும்! சோழராஜகுமாரிதானே தாங்கள்?" என்றாள் சுகலை.

"ஆமாம், சோழராஜகுமாரி நானேதான். நீங்கள் யார்? சுகலை என்பது நீங்கள்தானோ?" என்றாள் ராஜகுமாரி.

"ஆமாம். சுகலை என்பது நானேதான்"

"நீங்கள் எப்படி இந்தக் காட்டில் வந்து சேர்ந்தீர்கள்?"

"அதெல்லாமிருக்கட்டும் பிறகு பேசிக்கொள்ளலாம். மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே, கனிரசம் கொண்டுவருகிறேன்." எனக் குடிசைக்குள் புகப் புறப்பட்டாள் சுகலை.

"வேண்டாம்! வேண்டாம்! நான் இப்பொழுது தான் பழரசம் பருகிவிட்டு வருகிறேன். நீங்கள் எங்கோ அவசரமாகப் பயணம்போலிருக்கிறதே!" என்றாள் ராஜகுமாரி சுகலையைத் தடுத்து.

"எங்குமில்லை. உறையூருக்குத்தான் பயணப்பட்டேன். அதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள்" என்றாள் சுகலை. அப்பொழுது அங்கே முனிவர் வந்தார். சுகலை அவரை வணங்கினாள். ராஜகுமாரியும் வணங்கினாள்.

"குழந்தாய்! நீயும் உறையூருக்கா வருகிறாய். நாங்கள்தான் ஐவர் போகிறோமே. சேனாபதியும் வருகிறார். நீயும் வந்துவிட்டால் இங்கே சமாதானப் பணிபுரிய யாராவதிருக்கவேண்டாமா? போர் அபாயம் இன்னும் பூர்ணமாக நீங்கிவிடவில்லையே" என்றார் முனிவர் சுகலையை நோக்கி.

"ஆம்! நீங்கள் சொல்லுவதும் சரிதான் குருதேவா! நான் உறையூருக்கு ராஜகுமாரியிடம் தான் ஒரு முக்கிய காரியமாகப் புறப்பட்டேன். அவரே இங்கு வந்துவிட்டார். நான் இனி அங்கு போகவேண்டியது அவசியமல்ல?" என்றாள் சுகலை. முந்தியநாளிரவு சுகதனோடு பேசியதிலிருந்து சோழநாட்டின் நலனுக்குத் தான் குறுக்கே நிற்கக் கூடாது. உறையூருக்குத் தானே நேரில் சென்று, தானே முன்நின்று ராஜகுமாரிக்கும் சுகதனுக்கும் திருமணம் முடித்துவிடவேண்டும் பிறகுதான் சந்நியாசம் ஏற்கவேண்டும் எனத் தீர்மானித்துவிட்டிருந்தாள். தனி ஒருத்தியின் நலனைவிட நாட்டின் நலனே பெரிது. சுகதன் கடமை தவறி நடக்கத் தான் காரணமாக நிற்கக் கூடாது என்பது அவள் செய்திருந்த முடிவு.

"ராஜகுமாரியிடம் உனக்கு என்ன அப்படித் தனிக்காரியம்?" என்றார் முனிவர்.

"ஒரு மனிதன் தன் நாட்டுக்கும், மக்களுக்கும், மன்னனுக்கும், பெற்ற தந்தைக்கும் ஆற்ற வேண்டிய கடமையைக் காற்றில் பறக்கவிடத் தனிப் பெண் ஒருத்தி குறுக்கே நிற்கலாமா? குருதேவா!"

"நிற்கக் கூடாதுதான் குழந்தாய்! மனிதனைப் பிறந்த ஒருவனுக்கு மற்றெதையும் விடக் கடமை தான் பெரிது."

"கடமை பெரிதுதான். ஆனால் கடமையை ஆற்ற உயிர் வேண்டுமல்லவா? உயிர் இல்லாது கடமையை எப்படி ஆற்றுவது? ஒரு பெண்ணின் மீது உயிரை வைத்திருக்கும் ஒருவனை அவளிடமிருந்து பிரித்தால் அவன் உயிரும் போய்விடும். கடமையும் போய்விடும். ஆகையால் அவன் கடமையை ஆற்ற வேண்டுமானால் அவனிடமிருந்து அப்பெண்ணைப் பிரித்தல் கூடாது என்கிறார் அவர்." சுகதன் சொன்னவற்றையே அவள் இவ்விதம் கூறினாள்.

"அதுவும் சரிதான். தான் விரும்பிய பெண்ணோடு வாழ ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு. மனிதனின் ஆதார உரிமை இது. இதில் குறுக்கிட்டு அவன் இன்ப வாழ்வைக் குலைக்கும் உரிமை உலகில் யாருக்கும் கிடையாது. நாட்டின் பெயரால், மன்னனின் பெயரால், மக்களின் பெயரால் தனியொருவன் இன்பத்துக்கும் உரிமைக்கும் உலை வைப்பதென்பதும் கூடாத காரியமேயாகும். தனி ஒருவனுக்கு தான் விரும்பும் பெண்ணோடு வாழ உரிமையளிக்க நாடு கடமைப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை அவனுக்கு மறுக்கும் நாடு அவனிடமிருந்து மட்டும் கடமையை எதிர்பார்ப்பது எங்ஙனம்? மாதர் எப்படியோ அப்படித்தான் மனிதன். மனிதன் எப்படியோ அப்படித்தான் நாடு. மாதர் வழியே மனிதன். மனிதன் வழியே நாடு. மாதர் சுய நலத்தை ஒழிக்கவேண்டும். பிறர் நலத்தைப் பேணவேண்டும். தன் நலத்தைப் பெரிதாக மதித்து பிறர் நலத்துக்கு உலை வைக்கக்கூடாது. நாட்டுப் பெண்களுக்கு அரசிதான் வழிகாட்டி. ஆகையால் ராஜ குடும்பத்துப் பெண்கள்தான் முதலில் தன் நலம் மறுத்து மற்ற மாதருக்கு வழி காட்டவேண்டும். அப்படி வழி காட்டினால் தான் மனித சமூகம் உய்யும்" என்றார் முனிவர்.

"இன்று தான் என் கண் திறந்தது குருதேவா! என் வாழ்வுக்காக சுகலையின் வாழ்வை நான் குலைப்பதாக இருந்தேன். என் சிறுமை செத்தது. இன்றே புது வாழ்வு நான் பெற்றேன். சுகலாதேவி எனக்கு மட்டுமல்ல. மாதர் குலத்துக்கே ஒரு மாணிக்கம். பெண் இனத்துக்கு ஒரு வழிகாட்டி!" என்றாள் ராஜகுமாரி.

முற்றும்.



உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

**பெப்ஸ்** வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டைப்புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன. பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.




**பெப்ஸ்**

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM.

சோல் ஏஜண்டுகள் :-

**தாதா அண்ட் கம்பெனி,**

86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3.

# தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

## மாம்பழப் பப்படம்.

மாம்பழத்தில் நல்ல ரகத்தைத்தான் கத்தியால் சீவித் துண்டு செய்து சாப்பிடலாம். மட்டரகத்தில் உள்ளே சாருக இருக்கும். கடித்து உரிஞ்சி சாப்பிடமட்டுமே பயன்படும். இப்படி உரிஞ்சி சாப்பிடப் பயன்படும் மட்ட ரக பழங்களே பப்படம் செய்ய ஏற்றவை.

முதலில் பழங்களைக் கழுவி காம்பு பக்கமாகச் சீவிப் பிழிந்தால் சாறு எல்லாம் வெளியே வந்துவிடும். அச் சாற்றை கொசுவலைத் துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். இப்படி வடிகட்டிய சாற்றில் நூறு ராத்தல் சாற்றுக்கு ஆறு தோலா அல்லது இரண்டு அவுன்ஸ் எடையுள்ள பொடாசியம் மெட்டபை சல்பைடு அல்லது கால்சியம் மெட்டபை சல்பைடு வீதம் கலக்கவேண்டும். இது பப்படம் நாள்பட கெட்டுப்போகாமல் இருப்பதற்கு சேர்க்கவேண்டும். இப்படிச் சேர்க்கப்படும் மெட்டபை சல்பைடு காய்ந்த புப்படத்தில் பத்து லட்சத்தில் 750 பங்கே இருக்குமாகையால் அது மனித உடல் நலத்துக்கு எவ்வித தீங்கும் விளைவிப்பதில்லை.

இப்படித் தயாரித்த சாற்றை $2 \times 2\frac{1}{2}$ அடி அளவுள்ள நீண்ட சதுர வடிவமான ஈயம் பூசிய தட்டுகளில் ஊற்றவேண்டும். இப்படி ஊற்றுமுன் அவற்றின்மேல் மெழுகு காகிதம், வெண்ணெய் பூசிய காகிதம் அல்லது ட்ரேயோபேன் பேப்பர் பரப்பி அதன்மேல் ஊற்றி அதிகப்படியான சாற்றை சாய்த்து வடித்துவிடவேண்டும். இப்படிச் செய்தால் காகிதத்தில் மெல்லியதாக 'பில்ம்'போன்று சாறு ஒட்டிக்கொண்டிருக்கும். அப்பொழுது தட்டை நயமான ஒரு வலைத் துணியால் மூடி வெயிலில் காயவைக்கவேண்டும். காய்ந்ததும் மறுபடியும் முன் மாதிரியே சாற்றை ஊற்றி வடிகட்டி மற்ரெரு அடுக்கு (layer) அதன்மேல் ஒட்டிக்கொள்ளும்படி செய்து அதையும் முதலில் செய்தபடியே வலைத்துணியால் மூடி வெயிலில் காயவைக்க வேண்டும். இவ்விதம் திரும்பத் திரும்ப 3, 4 முறை செய்தால் பப்படம் $\frac{1}{4}$, $\frac{1}{2}$ அங்குலம் கனத்துக்கு வந்துவிடும். அப்பொழுது அதை எடுத்து விருப்பமான உருவில் துண்டு செய்து மெழுகு காகிதம் அல்லது ட்ரேயோபேன் பேப்பரில் சுற்றி பத்திரம் செய்யலாம் அல்லது வியாபாரத்துக்கு அனுப்பலாம். புளிப்புள்ள பழமாக இருந்தால் சாற்ருேடு இனிப்புக்காக சர்க்கரை அல்லது சாக்ரின் கலந்து கொள்ளலாம், நிறம் கொடுக்க உணவு கலர்களும் கலந்து கொள்ளலாம்.

## நெய்யில் கலப்படமும் அதைக் கண்டறியும்வகையும்.

பெட்ரோலியத்தை சுத்தம் செய்யும்போது அதிலிருந்து லேசான சில கனிஜ எண்ணெய்கள் கிடைக்கின்றன. அவற்றில் ஒயிட் ஆயில் (white oil) என்பதும் ஒன்று. இவ்எண்ணெய் கடைகளில் மிக மலிவான விலைக்கு விற்கப்படுகிறது. இவ் எண்ணெய்க்கு மணமோ, நிறமோ, ருசியோ குணமோ எதுவும் கிடையாது. இவ் எண்ணெயை வாங்கிவந்து மனித உணவுக்கு பயன்படும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் மட்டுமின்றி நெய்யிலும் கலந்து வியாபாரம் நடத்துவது சகஜமாகி இருக்கிறது. இதைக் கண்டறிய சென்னை கார்ப்பொரேஷன் சோதனை நிலையத்தில் சுலபமான முறை ஒன்றை ஆராய்ந்து வெளியிட்டிருக்கிருர்கள். தேவையுள்ளவர்கள் கார்ப்பொரேஷனுக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளலாம்.

## கலர் மத்தாப்பு

தீபாவளி போன்ற விசேஷ தினங்களில் கலர் மத்தாப்பு கொளுத்தி குழந்தைகள் குதூகலிப்பார்கள். ஆகையால் அச் சமயங்களில் இம் மத்தாப்பு (Bengal fire) ஏராளமாக விற்பனையாகும். இம்மத்தாப்பு செய்யும் முறை மிகச் சுலபமானது. கீழ் கண்ட நிற மத்தாப்புக்கள் செய்ய கீழ்கண்ட அளவில் கலவை வேண்டும்.




# துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி



துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ, டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்

TI-3/58

**செந்நிற மத்தாப்பு.**

| | | |
|---|---|---|
| பொடாசியம் குளோரேட் | 78 | பங்கு |
| ஸ்ட்ரோன்டியம் கார்பனேட் | 15 | ,, |
| ஷெல்லாக் (Shellac) | 7 | ,, |

**பச்சை நிற மத்தாப்பு.**

| | | |
|---|---|---|
| பேரியம் நைட்ரேட் | 66 | பங்கு |
| சர்க்கரை | 33 | ,, |
| ஷெல்லாக் | 1 | ,, |

**நீல நிற மத்தாப்பு**

| | | |
|---|---|---|
| பொடாசியம் குளோரேட் | 45 | பங்கு |
| அடுப்புக்கரி பவுடர் | 5 | ,, |
| காப்பர் கார்பனேட் | 10 | ,, |
| மெர்குரியஸ் குளோரைடு | 15 | ,, |
| ஷெல்லாக் | 5 | ,, |

**பிளிச்சிங் பவுடர்**

| | | |
|---|---|---|
| பெராக்ஸ் பவுடர் | 50 | பங்கு |
| சோடா ஆஷ் பவுடர் | 45 | ,, |
| சோடியம் தியோ சல்பேட் பவுடர் | 5 | ,, |

மூன்றையும் கலந்து கொள்ளவும். வேண்டியபோது சுடுநீரில் இப்பவுடரைக் கரைத்து அதில் துணிகளை அமுக்கி அலசி எடுத்தால் அவை மிக நன்ருகச் சுத்தமாகும்.

## விளக்கெண்ணெய் பயன்படும் தொழில்கள்

விளக்கெண்ணெய் தொழில் துறையில் வெகுவாகப் பயன்படும் பொருளாகும். ரசாயனத் தொழிலில் பல விதங்களில் இது உபயோகமாகிறது. சோப்புத் தயாரிப்பில் பயன்படுவது மட்டுமின்றி ஸிபேசிக் ஆஸிட் நார்மல் பிரிமேலிக் ஆஸிட், இனன் தோல், ஆக்டின்-1, சல்போரிஸினேலியேட் முதலியவை தயாரிக்கவும் பயன்படுகிறது. அல்கஹால்கள், குளோரோ ஹைட்ரின், ஹைட்ரோஜெனேடட் பினேல்ஸ், கீடோன் எனிலின் கலர்ஸ் முதலியவற்றிற்கு எமல்ஸிபயர் தயாரிக்கவும் பயனுகிறது. எலெக்டிரிக் இன்சுலேடர் தயாரிக்கும் கலவையிலும் இது சேர்க்கப்படுகிறது. டர்க்கி ரெட் ஆயில் தயாரிக்கவும் இது பயன்படுகிறது. கேசினிலிருந்து தயாரிக்கப்படும் ஒட்டுப் பொருள்களி (adhesives) லும் இது சலக்கப்படுகிறது. பலவித பூச்சி கொல்லிகள் (insecticides) தயாரிப்பிலும் இது இடம் பெறுகிறது. தோல் தொழிலில் பயன்படும் வார்னிஷ்கள், பதனிடும் கலவைகள் (Tanning mixtures) பாதுகாப்பு கலவைகள் (Preserves) மிருதுவாக்கும் கலவைகள் (Softening mixtures) முதலியவைகளிலும் சேர்க்கப்படுகிறது.

இயந்திரத் தொழிலில் இது மோட்டார் கார் இஞ்சின்கள், விமான இஞ்சின்கள், கனரக இயந்திரங்கள் (heavy machinery) முதலியவற்றிற்கு மசிவு எண்ணெய் தயாரிக்கப் பயன்படுகிறது. வாடர் புரூப் கவர்கள், வார்னிஷ்கள், லாகர்கள் தயாரிக்கவும் இது உபயோகமாகிறது. தலை மயிருக்குப் போட பயன்படும் பலவித வாசனை எண்ணெய்கள், தைலங்கள் கிரீம்கள் தயாரிக்கவும் பயனுகிறது. மருந்துகள் தயாரிக்கவும் பயனுகிறது. செயற்கை ரப்பர் தயாரிக்கவும் உபயோகமாகிறது. துணிகளை வெளுக்கப் பிளிச்சிங் ஹோஸ்களில் ஜைலீனேடு கலந்து நிரப்பவும் இது பயன்படுகிறது. மை, காகிதம், வாசனைப் பொருள்கள், பிளாஸ்டிக், ரெஸின், மெழுகு, சோப்பு, நெசவு போன்ற தொழில்களுக்கும் இது பயன்படுகிறது. இதனுல் சர்வ தேச மார்க்கெட்டுகளில் இவ் எண்ணெய்க்கு எப்பொழுதும் நல்ல கிராக்கி இருந்துவருகிறது.

## புது எடை சர்க்கரை மூட்டை

இப்பொழுது சர்க்கரை மூட்டை ஒவ்வொன்றும் 2 மணங்கு 30 சேர் எடையுள்ளதாக இருக்கிறது. (1 மணு=82·28 ராத்தல், 1 சேர்=2·057 ராத்தல்) வருகிற நவம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு மூட்டையும் 100 கிளோகிராம் தானிருக்கும். 100 கிளோகிராம் என்பது சுமார் 2 மணு, 27 சேர் எடையாகும். இப்பொழுதுள்ள எடைக்கு சுமார் 3 சேர் அதாவது 6 ராத்தல்தான் குறைவு.

## நுரைக்கும் ஸ்நாந பவுடர்

| | | |
|---|---|---|
| சபோனின் | 15 | பங்கு |
| சோடியம் லாரைல் சல்பேட் | 82 | ,, |
| விருப்பமான வாசனை அத்தர் அல்லது எஸன்ஸ் | 3 | ,, |

மூன்றையும் ஒன்ருகக் கலந்து கொள்ளவும், இப்பவுடரை உடம்பில் தேய்த்துக் குளித்தால் வாசனை சோப்பைப் போன்று நுரைக்கும். கம கம என மணமும் வீசும். அழுக்கும் நீங்கும். ○


எந்நேரத்திலும்
எவ்விடத்திலும்
எச்சந்தர்ப்பத்திலும்
உங்களை அழகுடன்
காணச்செய்வது
கட்டாவ்
வாயில்கள் !
தி கட்டாவ் மக்கன்ஜீ ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி லிமிடெட்.
மில்ஸ்;- பைகுலா, பம்பாய். ஆபீஸ்:- லக்ஷ்மி பில்டிங், பலார்டு எஸ்டேட் பம்பாய்-1.
SISTA'S KMS-134

# அஸ்தமனம்!

## அரங்காடுபவர்கள்

| | | |
|---|---|---|
| நரசிங்கப்போத்தரையர் (நரசிம்மவர்மர்) | ... | பல்லவ வேந்தர் |
| இரண்டாம் புலிகேசி | ... | மேற்குச் சாளுக்கிய மன்னன் |
| பரஞ்சோதியார் | ... | நரசிம்மவர்மரின் வாள்முனை |
| தேவதச்சன் | ... | கல்-கவிஞன் |
| சாருதத்தன் | ... | தேவதச்சனின் கலைத்திறனுக்கு உரிமையாளர் |
| ராஜசிம்ஹன் | ... | தேவதச்சனின் நண்பன் |
| புகழேந்தி | ... | சொற்-சிற்பி |
| அபராஜிதன் | ... | அவன் தோழன் |
| வேல்விழி | ... | ஒரு வேல்விழியாள்! பல்லவத்தின் ஆடலழகி |
| மேகலா | ... | வேல்விழியின் துணைவிழி! |
| விருபகன் | ... | சிற்பிகளின் தலைவன் |
| சித்திராங்கதன் } வித்தியாதரன் } | ... | பொருமையைச் சிலை வடிப்போர்! |

[வேந்தருக்காக சிந்திக்கும் அமைச்சர், அரசர் தலையசைப்பிற்கு அசையும் சேவகர், போர் முழங்கும் முரசம், அதனை ஒலிப்போர், அறிக்கை படிப்போர், வேற்றுநாட்டவர், வீட்டவர் இவர்களின் இடைவெட்டு!]



# அஸ்தமனம்

## அசேன்ராஜ்

### காட்சி 1

[சரித்திரம் விழுங்கிவிட்ட காலத்தின பெரும் பகுதியில் கி. மு. ஏழாம் நூற்றூண்டு! பல்லவர் கோநகர் காஞ்சியின் பிரதான வீதிகளில் ஒன்று! மின்னும் பொன்னும் மிளிரும் கற்களும் வைத்து இழைக்கப்பெற்ற மாடமாளிகைகள்; வெண்ணிலவும், விண்மீன்களும் தவழ்ந்தாடும் உயர்ந்த உப்பரிகைகள்; மனம் பறிக்கும் கலைச் சிறப்பு வாய்ந்த சாளரங்கள்; எங்கேயும் எழிலின் இசைக்கூத்து! அத்தெருவின் முனையில் இருவர்! நகருக்குப் புதியவர்கள்! உடையால், உரையாடலால் வேற்றுநாட்டவர் என்பது விளங்குகிறது. அவர்கள் வியப்பில் விழிதூக்கி நிற்கின்றனர். ஒருவருக்கொருவர் விநோதமாய்ப் பார்த்தவண்ணம் கலைவீதியைக் கண்ணோட்டம் விடுகின்றனர். அவ்வழியாக ஒரு வாலிபன் செல்கிறான். அவனை இருவரும் நெருங்குகிறார்கள்......]

**வேற்று நாட்டவர் இருவர்:** வணக்கம், ஐயா!

**வாலிபன்:** வணக்கம்.

**வே. நா. இருவர்:** நாங்கள்......

**வாலி:** வேற்று நாட்டவர், அப்படித்தானே! சொல்லாமலே தெரிகிறது. உங்கள் உடையும் உடலமைப்புமே அதைக் கூறி விடுகிறதே...... என்ன வேண்டும் உங்களுக்கு?

**இருவரில் ஒருவன்:** நாடுகாணப் புறப்பட்டோம் நாங்கள்! எத்தனையோ நகரங்களைக் கண்டிருக்கிறோம். ஆனால் இதைப் போன்று எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தது வேறெதுவுமில்லை! விலைமதியாச் செல்வம் விலைபோகா வீதி படைத்த இந்நகரின் பெயர் என்ன!

**வாலி:** காஞ்சி மாநகர்!

**ஒருவ:** புயத்தில் வல்லமை கொண்ட பல்லவரின் தலைநகரோ?

**வாலி:** அதுவேதான்! (பெருமிதம் சிரிப்பாக மலர்கிறது)

**மற்றவ:** கேள்விப்பட்டிருக்கிறோம்.

**வாலி:** கேள்விப்படாமலிருக்க முடியாதே! உலகிற்கே வீரமும் கலையும் வழங்கும் கழனி இதுதானே!

**வே. நா. முதல்வன்:** இன்றைய அரசர் யார் என்று அறியலாமோ?

**வாலி:** இதுவரை அறியவில்லையென்றால் வருந்தத்தக்கதுதான்! இன்றைய எங்கள் கோமான், சிம்மவிஷ்ணு தேவரை முதலாய்க் கொண்ட பெரும் பல்லவர் வழித்தோன்றல்! கல்லிலே கலைகண்ட—குகைக் கோயில்கள் குடைந்து காட்டி அழியாப் புகழை உரிமையாகப் பெற்ற—சித்திரக்காரப் புலி எனும் கலைப் பெயரைச் சூடிக்கொண்ட மகேந்திர வர்மரின் புதல்வர்! மலைத்தோளின் தந்தை; கலைத்திறனின் தாய்; அலைக்கும் பகைக்குப் பகை; நிலைக்கும் இலக்கியத்திற்கு நெடுந் தோழன்!

**வே. நா. இரண்டா:** அவர் திருநாமம்!

**வாலி:** ஸ்ரீ...ஸ்ரீ... நரசிங்கப் போத்தரையர்! ஒரு தரம் சொல்லிப்பாருங்கள்; உதடுகள் உரம் பெறும்! பற்கள் பலம் பெறும்! நாக்கு நலம் பெறும்!

**இருவரும்:** ஓஹோ!...நரசிங்கப் போத்தரையர்! ஆஹா!

[எங்கோ திடீரென்று முரசொலி கேட்கிறது! அமைதியாயிருந்த வீதியில் நெருப்புப் பற்றிக் கொண்டதுபோல் பரபரப்படைகிறார்கள் மக்கள்! மூடிய கதவுகள் வாய் பிளக்கின்றன. வாலிபர், அவர் தம் தோள் தழுவும் மங்கையர், வாலிபத்தை இழந்தோர், அதனைப் பெறும் வழியில் நிற்போர் அனைவரும் எங்கோ விரைந் தோடுகின்றனர்.]

வாலி: மன்னிக்கவும்! சற்றுப் பொறுங்கள், சென்று வருகிறேன்!

(முரசொலி வந்த திக்கை நோக்கித் திரும்புகிறான்)

வே. நா. இரு: (தடுத்து நிறுத்தி) ஆமாம், ஏன் இந்தத் திடீர்ப் புயல் வேகம்? எங்கே செல்கிறார்கள் இவர்கள்? சற்றுக் கூறிவிட்டுச் செல்லுங்கள்...

வாலி: எங்கே செல்வார்கள்? மின்னல் வேகத்தை — மிடுக்கைப் பார்த்துமா உங்களுக்கும் புரியவில்லை? இந்தப் பறையொலி எங்கள் நரம்புகளில் எழுப்பும் எதிரொலியைக் கேட்கும் செவிகள் உங்களுக்கில்லையே! இந்த ஒலி இந்நகர் மாந்தர் செவிப்புலம் பட்டால்போதும்; அதன்பின் அவர்கள் இரை கண்ட புலிதான்; மேகத்தைக் கிழித்தோடும் மின்னல்தான்; மலை வீழ் அருவிதான்...!

வே. நா. முதல்வன்: அப்படியானால், இவர்கள், பாய்ந்து செல்வது...

வாலி: (இடைமறித்து) திமிரைக் களைந்தெறிந்து தீரத்தை விளைவிக்கத்தான்!

வே. நா. இர: அப்படியானால் போர்க்களத்திற்கா?

வாலி: ஆமாம், அதுதான் இந்நாட்டு ஆடவரின் பிறப்பிடம்; மகளிரின் மணமேடை; வாழ்வின் அறுவடைக்களம்!

வே. நா. முதல்: ஆனால் இந்த வயோதிகர்கள் எங்கே செல்கிறார்கள்.

வாலி: நல்ல கேள்வி கேட்டீர்கள்! அவர்கள் மார்பகந்தான் வீரத்தின் பிறப்பிடம்; சிந்தனைதான் சூழ்ச்சியின் உலைக்கூடம்; வயோதிகம்தான் வழிகாட்டி; அவர்தம் அனுபவ அறிவுதான் வெற்றியின் திறவுகோல்; அவர்கள் வாழ்த்துதான் வெளிப்படுத்திய வீரத்தின்



பரிசு!.........சரி, சரி நான் வருகிறேன்
(செல்ல முயல்கிறான்)

வே. நா. இர: ஆனால் இந்தத் தாய்மார்கள்?



வாலி: அவர்கள் வீழ்ந்த காலத்தில் வாழ்ந்த வீரத்தின் அழியா வடிப்பு; நிகழ் காலத்திற்கு படிப்பு!

வே.நா. முதல்: இந்த மங்கையர்கள்......?

வாலி: வாளுக்குக் கூர்மையேற்றும் அவர்கள் விழிகள்; தோளுக்கு வேகம்

தொடுக்கும் அவர்கள் அதரங்கள்; வாளின் வீச்சுக்குப் பயிற்சிக்கூடம் அவர்கள் துடியிடை அசைவு? வேலின் தினவு தீர்ந்தபின் தோளின் தினவுதீர்க்கும் தடாகம் அவர்கள் மார்பகம்!

வே. நா. இர: இந்தச் சிறுவர்கள்......

வே. நா: முதல்: வருங்கால வாட்படை, அப்படித்தானே?

வாலி: ஆமாம்,......நான் சென்று வருகிறேன்! (சென்றுவிடுகிருன்)

வே. நா. முதல்: ஆனல் நாமும் அங்கே போவோமா?

வே. நா. இர: சென்று யாருடன் போர் என அறிவோமே! (செல்கிருர்கள்.)

[திரை]

காட்சி 2

[பண்புள்ள மாந்தரின் பரந்த உள்ளம்போல் விரிந்த மைதானம்! அதன் ஒருபுறத்தே, பெருமையின் நிமிர்வோடு நிற்கும் ஆலமரம்: அம் மாந்தரை நாடிநிற்கும் மனிதர்களைப்போல் எண்ணற்ற விழுதுகள், மரத்தின் பிறப்பை ஆராயப் புகுந்தவைபோல் நிலத்தினுள் புகுந்து நிற்கின்றன. அதன்கீழ் பெரியதொரு முரசம், மேடைமீது! முரசறைவோன் உற்சாகத்துடன் அதனைத் தட்டி ஒலியெழுப்பிக்கொண்டிருக்கிருன். கனிமரத்தை நாடிவரும் புள்ளினங்களைப் போல் ஓடிவந்து நிற்கின்றனர் பல்லவ மக்கள். இப்போதே போர் துவங்கிவிட்டதோ என்று எண்ணும்படி ஆர்வத்துடன் அணிவகுத்து நிற்கின்றனர் இளைஞர்கள்; அவர்கள் மார்பகலத்தை மலைத்தோள்களின் வலிமையைக் கோணப் பார்வையால் அளந்துகொண்டிருக்கின்றன மகளிர் விழிகள்!]

குரல்கள்: போதும், முரசு கொட்டியது! யாருடன் போர்...? எப்போது? அதை முதலில் கூறுங்கள்!

ஆமாம், அதுதான் தெரியவேண்டும்!

முரசின் ஒலி இதற்குள் பகைவர் நாட்டை எட்டியிருக்கும்; போதும், அதை நிறுத்துங்கள்!

எங்கள் பொறுமையைச் சோதிக்காதீர்கள், விரைவில் பகைவரைக் குறிப்பிடுங்கள்!

இந்த நண்பகலையே பகைவரின் அஸ்தமனமாக்கிக் காட்டுவோம்!

[முரசறைவோன் நிறுத்துகிருன். எங்கும் அமைதி. எல்லோர் விழிகளும் மேடையை நோக்கி நிற்கின்றன; சேவகன் செய்தியை வாங்க வளைந்து கொடுக்கின்றன. செய்தியை ஒருவன் படிக்கிருன்.]

"பிரம்ம குலத் தோன்றலும், மூவேந்தரின் முடிகளைக் காலடியில் கொண்ட பல்லவர்குல மாணிக்கமும், மண்ணகத்து மன்னர் இதயம் நடுக்குற ஒலியெழுப்பும் கழலணிந்த வேந்தர் வேந்தரும், வேகமும் வீரமும் ஊட்டிடும் சிம்ம சின்னத்தைச் செம்மையுறக் கொண்டாரும், பொறுமையும் பெருமையும் பெற்ற ரிடபத்தைக் கொடியில் பொறித்துப் புகழ் கொண்டாரும், இத் தொண்டைமண்டல காவலருமாகிய மகாராஜாதிராஜ...ஸ்ரீ...ஸ்ரீ, நரசிங்கப் போத்தரையர் எனும் நம் கோன், தன்னகத்து வீரர்க்கு, கொடும் பகைவர் அடிபட்ட இடத்தை அவர் தம் முடியாலே தூய்மைப் படுத்தும் மான உணர்வு மிக்கார்க்கு களப்புண் ஏற்றுப் புகழ்ப் பெயர் நாட்டிட வாய்ப்பளிக்கும் முறையில் விடுக்கும் செய்தியாவது......

"செருக்கில் இறுமாந்து பல்லவ நாட்டுமக்கள் தம் வலிமையை இகழ்ந்து, அண்டைக் குந்தள நாட்டில் அச்சமின்றித் திரியும் மேற்குச் சாளுக்கியர்கள்மீது போர் தொடுக்கிருர், மக்களின் பெயரால்! தூய்மையும் துணிவும் கொண்ட பல்லவர் கொடிமுன் பன்றிக் கொடி பறந்திடலாமோ எனும் வினவை முன்னிறுத்தித் தீரம் விளைவிக்கத் திறனுள்ளோர் படைக்கலங்கள் ஏற்று அணிவகுக்க வேண்டும்; களத்திற்கு வழிகாட்டுவார் பரஞ்சோதியார்........"

மக்கள்: சாளுக்கியர்கள்! சளுக்கர்கள்! பாடம் புகட்டவேண்டியதுதான்!

நிலமகளின் நெற்றிக்குச் சாளுக்கிய இரத்தத்தால் திலக மிடுவோம்!

வையத்தைச் செவ்வானமாக்கிக் காட்டிடுவோம்!

போர் தந்த எம் கோ வாழ்க!

வேலுக்கிரைதந்த வேந்தர் வாழ்க!

ஏற்றி விளையாட காலுக்குத் தலைகள் தந்த காவலர் வாழ்க! வாழ்க!

(மக்கள் பிரிகின்றனர்)

திருப்புக் காட்சி:

[பல்லவ முரசின் எதிரொலிபோல் அலறுகிறது சாளுக்கிய முரசும், வாதாபிநகரின் வீதியில்! மக்கள் திரண்டு நிற்கின்றனர். அவர்கள் முகத்தில் 'யார் பகைவர்' எனும் வினக் குறிகள் காண்கின்றன, 'இப்படிக் குனிந்து அடி பணிய வைப்போம்' என விற்புருவங்கள் வளைந்து கொடுக்கின்றன. பண்டை நாளில் பகைவரின் ரத்தத்தை உண்டு சிவந்த கண்கள் பின்னும் உணவு கிடைக்கப்போவதை நோக்கி இமையாமல் நிற்கின்றன!]

செய்தி அறிவிப்போன்:

"வாதாபி வீரப் பெருமக்களே!

நம் மன்னர், வேந்தர்க்கு வேங்கை; அடிபணியா முடிகட்டு வாள்; வளையாத உள்ளத்திற்கு வேல்; பகைவரின் எலும்பிற்குச் சம்மட்டி! இவ்வண்ணம் வெற்றிக்கு மறு சொல்

லாய்த் தம் பெயரைக் கொண்டாரும், மைசூர் கன்னட மாவட்டத்துக் கடம்பர்களை வெற்றி கொண்டாரும், மேற்குக் கங்கர்களின் முதுகை அளந்தவரும், ராஜபுதனம், மாளவம், கூர்ஜரம் அத்தனையும் அடிபணிந்திட இறையென வீற்றிருக்கும் வேந்தரும், வடநாட்டு ஹர்ஷவர்த்தனருக்குத் தென்னகத்து வாளின் கூர்மையைக் காட்டி ஓட்டியவரும், பல்லவ மகேந்திர வர்மரின் முதுகெலும்பைப் "புல்லலூர்"க் களத்தில் எண்ணிக் கட்டியனுப்பி வெங்கியை வென்றி கொண்டவரும், கொண்டது கொள்ளும் பன்றியைக் கொடியில் பொறித்தாரும் இக்குந்தள நாட்டின் காவலரும் நம் அன்பிற்குரிய அரசருமாகிய ஸ்ரீ...ஸ்ரீ... இரண்டாம் புலிகேசி விடுக்கும் போர்ச் செய்தி என்னவென்றால்,

"படித்ததை மறந்துவிட்டு மீண்டும் பாடம் கேட்கத் துடித்து நிற்கும் பல்லவர்க்குப் பழைய பாடத்தை இறுதித் தடவையாய் வாள்கொண்டு போதித்திட, தம் மக்கள் பெயரால் பல்லவரின்மீது போர்தொடுத்துள்ளார்! உருக்கு உள்ளம்; முருக்கேறிய தசைக் கூட்டம்; துடிக்கும் தோள்கள்! இத்தனைக்கும் பரிசு நாளை உதயத்தில், களத்தில்!

மக்கள்: மகிழ்ச்சி! மகிழ்ச்சி! மன்னர் வாழ்க! [வாழ்த்தொலியில் விண் மேகங்கள் வெருண்டோடுகின்றன. மக்கள் பிரிந்து செல்கின்றனர்.]

ஒருவன்: (மற்றவனிடம்) என் வாளுக்கு உறை தேவையில்லையென்று கூறிவிட்டேன்! அதற்கு ஏது உறக்கம்? என் உறக்கத்தோடுதானே அதற்கு உறக்கம்!

மற்றவன்: இன்று நான் விழித்த முகம் நல்ல முகம்தான். இல்லாவிட்டால் தீட்டிய என் வாளுக்கு ஊட்டிட இவ்வளவு விரைவில் குருதி கிடைக்குமா?

[இருவரும் சிரித்துக்கொண்டு செல்கிறார்கள். அவர்கள் பின்னே திரை விழுகிறது.]




## காட்சி 3

[மலையடிவாரம்! பெருமையின் தன்னடக்கத்திற்கு எடுத்துக்காட்டாய் அமைந்த சின்னதொரு குடில்! சுற்றிவர மரம், கொடிகள்! அதன் முன்னதாக அற்புதக் கலை வளர்ப்புகள்; கல்லிலும் உயிர் வாழும் விந்தை வடிப்புகள்; உலகையே விலைகேட்கும் உருவங்கள்; சிருஷ்டி ரகசியத்திற்குச் சான்று பகர்ந்துகொண்டு நிற்கின்றன. சற்றுத் தள்ளி வருங்காலப் புகழை எண்ணி மோனக்கனவில் மூழ்கிக் கிடக்கும் கற்கள்......புள்ளினங்கள் தன்னினங்களுடன் கூட்டிலே உரையாடிக் கொண்டிருக்கும் அஸ்தமன நேரம். மங்கல் ஒளிக்கீற்றைக் காலக் கன்னிக்குப் பரிசாய் நீட்டிவிட்டு விடை பெற்றுக்கொண்டிருந்தான் சூரியன்....... வெகு தூரத்தில் தேவதச்சன் ஒளி போதாமையால் உறுத்து நோக்கியவண்ணம் ஏதோ செதுக்கிக் கொண்டிருக்கிறான்]

சாருதத்தன்: (குடிசைக்குள்ளிருந்தவண்ணம்) தேவா! தேவா!... தேவா...! எங்கே போய் விட்டான்? (எழுந்து வெளியே வந்து பார்க்கிறான். தூரத்தில் தேவதச்சன்; அவனிடம் மெல்லச் சென்று,......) தேவா!

தேவதச்சன்: (திரும்பி) ஓ! அப்பா! இதோ வந்துவிட்டேன்! மீண்டும் வேலையில் முனைகிறான்.)

சாரு: தேவா, என்னப்பா இவ்வளவு நேரத்திற்குப் பிறகு......?

தேவ: (குனிந்த தலை நிமிராமல்) ஒன்றுமில்லையப்பா! பிறைசூடும் பெருமானை அமைக்கச் சொன்னீர்களே! இந்தப் பிறையில் சிறிது மெருகேற்ற வேண்டும்......? (முடித்துவிட்டு எழுகிறான்) எப்படியப்பா?

சாரு: உன் பெயர்தான் தேவதச்சனுயிற்றே!

தேவ: (தலை குனிந்த வண்ணம்) புகழ்ச்சி வேண்டாமப்பா!

சாரு: வேண்டாமா? புகழ்ச்சிதானே கலைஞனுக்கு உணவு! எங்கே? உன் கைகளை இப்படிக் கொண்டா! (கைகளை யெடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு கண்ணீர் பெருக்குகிருன்!) வா, அப்பா! (அணைத்துக் கொண்டு குடிசைக்குள் செல்கிருன்)

தேவ: அப்பா, பல்லவநாட்டிற்குச் செல்வதெப்போது?

சாரு: இப்போது முடியாது கண்ணே!

தேவ: ஏனப்பா? என் கலைவளர்ச்சி பல்லவ வேந்தரின் விழிமுதிர்ச்சிக்குப் பொருந்தாதா?

சாரு: அதுவல்ல தேவா! கலை வளர்க்கும் மன்னர்தான் கொலைக் களத்திலிருக்கிருரே! கண்ணே, தேவா, அமைதியும் கலையும் இரட்டைக் குழந்தைகள்! ஒன்று குலைக்கப் பட்டால் மற்றது தானுகவே செத்துவிடும்! கண்ணே, இதையறியாமல் இன்று பல்லவ வேந்தர் சளுக்கிய வேந்தருடன் போர்க் களத்தில் மோதிக் கொண்டல்லவா இருக்கிருர்?

தேவ: ஆனுல் இப்போர்வெறி ஏனப்பா?

சாரு: வெறியில்லாத மனிதரேயில்லை, கண்ணே! மண்ணில், மங்கையின் விழியில், மின்னும் பொன்னில் வெறி கொண்டு மனிதர் திரிவதால் தானே இந்த உலகைச் சோகம் அலைக்கிறது. புகழ் வெறி படைத்த பாவலர்கள்; போர் வெறி படைத்த காவலர்கள், இவர்கள் இல்லாத நாடே இப்புவியில் இல்லை! கலை வெறி கொண்டார் மகேந்திரவர்மர்; போர்க் களவெறி கொண்டான் புலிகேசி! இவை நீயறிந்தது தானே! மன்னர் என்ன? வானத்துக் கடவுள்களும் இந்த வெறிக்கு விலக்கா? சிருஷ்டி வெறி படைத்தான் பிரமன். அதனைச் சிதைக்கும் வெறி கொண்டான் சிவன். இதனைத் தடுக்கும் வெறி பெற்ருன் திருமால்! வானத்துக் கடவுள்களின் வெறியாட்டத்திற்கு மனிதர்கள்தானே பலியாக வேண்டியிருக்கிறது? வெறி வாழாத இடமேயில்லை, கண்ணே!

தேவ: நீங்கள் சொல்வது உண்மைதான் அப்பா! சிற்றுளியும், சீரான கல்லும் சிற்பக் கலை வெறியின் பிறப்பிடங்கள் யாழின் நரம்புகளும், வேய்ங்குழலின் துளைகளும் இசை வெறியின் கூத்தாட்டரங்கம். காலை உதயமும் மாலை வானமும் காணும் காட்சியும் ஓவியனின் விழிகளில் வெறியைத் தேக்குகின்றன. கூரிய வாளும் கொல்லும் வேலும் கொலை வெறியின் சின்னங்கள்தான். குறுநடை காட்டும் குழந்தை தாய்மை வெறியை யூட்டுகின்றது. கன்னியரின் அசையும் இடையும், இசை பாடும் அதரங்களும் காதல் வெறியின் களம்தானே! ஆமாம்! உலகத்துப் பொருள்களிலெல்லாம் வெறியின் உருவம் நிழலிடத்தான் செய்கிறது. ஆனுல், இப்போர் எப்போது முடியுமப்பா?

சாரு: அது அந்த வேந்தர்களுக்கே தெரியாதே! எப்படியும் போர் முடிந்து அமைதி நிலவிய பின் நீ செல்லலாம்; சரிதானே?

தேவ: சரியப்பா!

சாரு: நீ மிகவும் களைத்துவிட்டாய்; முகம் கழுவிக்கொண்டு வா! ஏதாவது உண்டபின் பேசலாம்! (அவன் செல்கிருன்)

[திரை]

### காட்சி 4

[காஞ்சி நகர்! நகரெங்கும் வெற்றி விழாக் கொண்டாட்டம்! இல்லத்தின் வாயில்தோறும் தோரணங்கள்; எங்கும் மக்கள் ஆரவாரம்! அரச கோயிலின் முன்னுள்ள முற்றத்தில் புண்பட்ட வீரர்கள்; அதனுல் புகழ்பெற்ற மங்கையர்கள்; வயோதிகர்கள் மன்னரை வாழ்த்தி நிற்கின்றனர்!]

குரல்கள்: பல்லவர் மணிமகுடம்......

வாழ்க!

வாதாபிகொண்ட நம் வேந்தர்......!

வாழ்க வாழ்க!

வெற்றியெனும் சொல்லை
வீரமார்பில் மறைந்து
கொண்ட நரசிங்கப்
போத்தரையர்......

நெடிது வாழ்க!

மாமல்லர்......

மங்காது வாழ்க!

நீடு வாழ்க!

[உப்பரிகையில் அரசர் தோன்றுகிருர். அவரைச்சுற்றி, அமைச்சர்கள்; சாளுக்கியர்களைச் சவட்டியெறிந்த பரஞ்சோதியார்! இன்னும் பலர்!]

நரசிங்கப்போத்தரையர்: எம் அன்பிற்குரிய பெருமக்களே!

இவ்வெற்றி எம் வெற்றியன்று! உம் வெற்றி; உம் துணைவெற்றி; தோள் வெற்றி; வாள் வெற்றி! அதனுல் வாழ்த்திற்குரியவர் நீங்களே! எனினும், உங்கள் வாழ்த்திற்குப் பல்லவ மகுடத்தின் நன்றி!...... (சற்று நிறுத்துகிருர்.)

பக்கக் காட்சி:

மக்களில் ஒருவன்: அரசர் அரசர்தான்! என்ன பெருந்தன்மை!

மற்றவன்: நாமின்றி அவர் தனியே வெற்றி பெறமுடியுமா?

மூன்றுமவன்: குடியின்றிக் கோனுண்டா...?

நர: காஞ்சிப் பெருமக்களே! மற்றுமொரு களிப்பான செய்தி! இனி நம் எல்லைப் புறத்தே போரின் இரைச்சலுக்கிடமில்லை. வெளி

நாட்டுப் பகை ஓய்ந்தது. அதனால் உள் நாட்டில் தெய்வீக அமைதிநிலைவிடச் செய்வோம், அற்புதக் கலைகட்கு உயிர் அளிப்போம்! உயிர் குடித்தது போதும், உயிர் அளிப்போம் இனி! வன்மைக்கு விடைதந்து மென்மைக்கு வரவு கூற நாமும் நம் அவையும் திட்டமிட்டுள்ளோம்! அமைச்சர் அதனை விளக்குவார்!

[திரும்பி உள்ளே செல்கிறார்.]

பக்கக்காட்சி!

மங்கையொருத்தி: (தன் காதலன் தோளை மெல்லப் பற்றியவண்ணம்) அத்தான் இவை, இனி என் சொத்து!

அவன்: ஊஹூம், அரசர் சொத்து!

அவள்: ஆனால் நான் ஆடும் ஊஞ்சல்!

அவன்: ஆடுதற்குக் கட்டணம் தரவேண்டும், தெரியுமா?

அவள்: எவ்வளவு கட்டணம்?

அவன்: உன் அதரத்தின் முழுப் பதிப்புரிமை!

அவள்: அதில் பங்குகொள்ளத்தான் இன்னொருவர் இருக்கிறாரே! (கண்ணைச் சிமிட்டுகிறாள்.)

அவன்: யார் அவர்?

அவள்: இதோ இவர்தான்! (அருகிலிருந்த பாலனை யெடுத்து அணைத்து முத்தமிடுகிறாள்! பொறாமையுடன் அவன் பார்க்கிறான்.) அதோ, அமைச்சர் பேசவாரம்பித்துவிட்டார்.

அமைச்சர்: பெருமக்களே! நம் அரசர் பெருமான் தம் பெயரால் மாமல்லபுரம் எனும் நகரொன்று அமைத்து அதனைச் சிலைக்குன்றம் ஆக்கி தென்னகத்தின் பெயர் நிலைக்கச் செய்யத் திட்டமிட்டுள்ளார்! போர் மேகத்தின் பின் மறைந்த கலை நிலவு அக்கடல் மல்லையில் கனவு எழுப்பும்! ஆகவே, வேந்தரை நாடிவரக் கலைஞர்க்கு விடுக்கின்ற அழைப்பிதனைப் பரப்பிடுக எங்கும்! (திரும்பிச் செல்கிறார்.)

[வீரர்களின் விழிகளில் கருமை படர்கிறது; காதல் செய்ய நேரம் கண்டதில் கன்னியர் கண்கள் சிரிக்கின்றன; கலைஞர்களின் கண்களில் ஒளி துள்ளுகிறது.]

[திரை]

## காட்சி 5

[தேவதச்சன் குடில் — காலை நேரம்]

தேவ: (வெளியிலிருந்து ஓடிவருகிறான்) அப்பா! அப்பா!

சாரு: என்ன தேவா? ஏன் இந்த ஓட்டம்?

தேவ: பல்லவம் வென்றது; சளுக்கியம் தோற்றது; மன்னரும் தலைநகர் திரும்பிவிட்டார்...

சாரு: அப்படியானால் நீயும் செல்லவேண்டும், உம்......?

தேவ: வேண்டாமா அப்பா?

சாரு: யார் சொல்லுவார்கள்? தாகமுள்ளவனைத் தடாகத்தைத் தேடாதேயென்று யாராவது சொல்வார்களா? இப்போதே புறப்படு......... இப்போது மகிழ்ச்சிதானே?

தேவ: இருக்காதா அப்பா? (ஓடி உள்ளே சென்று கலைக்கருவிகளை மூட்டை கட்டிக்கொண்டு கிளம்புகிறான்) நான் சென்று வருகிறேன்! ஆசி கூறுங்கள்! (தந்தையின் பாதத்தைத் தழுவி நிற்கிறான்.)

சாரு: (கண்களில் நீர்மல்க) கண்ணே, தேவா! எல்லா வெற்றியும் உன்னதாகவே யிருக்கட்டும்! (தூக்கி நிறுத்தித் தழுவிக்கொள்கிறார்.)

தேவ: என்ன பேராசையப்பா உங்களுக்கு?

சாரு: இது பேராசையல்ல கண்ணே! நேர்மையான ஆசைதான்! நிச்சயம் பலிதமாகும்!... (திடீரென்று நினைவு வந்தவனாய்) சற்றுப் பொறு தேவா! (உள்ளே சென்று பழைய பெட்டியினின்று பதக்கம் ஒன்றைக் கொணர்கிறான்) இந்தா, இந்தப் பதக்கம் இம் மன்னரின் தந்தை மகேந்திரவர்மர் எனக்கு வழங்கியது, பத்திரமாய் வைத்துக்கொள். மன்னரிடம் இதைக்காட்டு. மன்னர் உன்னைப் புரிந்துக்கொள்வார்!

தேவ: அதை மறக்காமல் சொல்வேன் அப்பா; நான் வருகிறேன்!

(வெளியேறுகிறான். சாருதத்தன் அசையாமல் நிற்கிறான்)

[திரை]

## காட்சி 6

[வேந்தர் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கிறார். அவரையடுத்து வரிசையாய் உரிய ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர் அமைச்சர் முதலானோர். எதிரே ஆடலரங்கு, கலைக்கோயில்! பளிங்கு மலர்கள் பதிக்கப்பெற்ற ஆடுதரை, நீலவிதானம், நெடிய தூண்கள், அங்கங்கே நிறுத்திவைக்கப்பெற்ற பாவை விளக்குகள். பெருவானும் பிறை நிலவும் தீட்டப் பெற்ற பின் திரை. அந்த அரங்கினையொட்டி ஆசனங்களில் அமர்ந்த வடமொழிப் புலவர்கள்; கவிஞர்கள்! கலைஞர்கள்!... சிறு குழந்தையின் கையசைவைப்போல் மெல்ல நடந்து வருகிறாள் வேல்விழி. அவள் பாத சதங்கைகள் கலீரென ஒலிக்கின்றன. அவள் கைவீச்சில் எழும் வளையொலி அவள் வரவுக்கு கட்டியம் கூற மெதுவாக ஆடலரங்கின்மீது ஏறி நிற்கிறாள்!... அரசர்க் கொரு வணக்கம்! அறிஞர்க் கொரு வணக்கம். 'கலீ' ரெனப் பின் வாங்குகிறாள்! எண்ணற்ற மனித உள்ளங்கள் அவள் பாதத்தினடியில் துவண்டு விழுகின்றன. அன்றைய அவள் அற்புதமான அலங்காரம் கண்டவர்களை ஊமையாயிருக்கச் செய்துவிட்டது! அவள் இசையின் துவக்கத்திற்குச் சைகை காட்டுகிறாள். குழல்! யாழ்! இழையத் துவங்கின்றன.]

நரசிம்மவர்மர்: (மென்மையான குரலில்) அமைச்சரே, இன்று வேல்விழியின் அலங்காரம்.........?

அமைச்சர்: அற்புதம் அரசே! காவியம் காணாத ஓவியம்தான்!

நர. பல்லவநாட்டின் பாக்கியம் என்று சொல்லும்!

அமைச்சர்: ஆம், ஆம்!

நர. இந்தக் கலைச்சுடர் காலப் பேய்க் காற்றில் அணையாமலிருக்க வேண்டுமே! ......... அதோ, அதோ! அவள் ஆடத்துவங்கிவிட்டாள்....... அங்கே பாரும், பூங்காற்றின் அசைவிற்குப் புதுப் பாடம் புகட்டும் அவள் விரலின் அசைவு கல் மனதையும் துண்டாடும் கண் வெட்டு... கண்ணைப் பறித்தோடும் அந்தக் கலைவாணின் மின்னல்...அமைச்சரே, அவள் ஆட்டம் ஏன் முடியவேண்டும்? அதோ, கலைஞர்களின் தலையாட்டத்தைப் பாருமே (தன்னையறியாமல் கைகளைத் தட்டுகிறார்; உடனே சபையில் பெருங் கைதட்டல் எழுகிறது, வேல்விழி அத்தனைக்கு ஒரு தலையசைப்பில் நன்றி கூறித் தொடர்ந்து ஆடுகிறாள். சபையில் கவிஞர் வரிசையில்)

புகழேந்தி. (தன் அருகிலிருந்த தோழனிடம்) அபராஜிதா, இனி வேல்விழி பல்லவநாட்டிற்கில்லை!

அபராஜிதன். ஏன் அப்படிச் சொல்கிறாய்.

புக. வானவர் வந்து பறித்துக்கொண்டு சென்றிடுவர்! அவளுக்குப் பதிலாக ஊர்வசியைப் பேரம் பேசுவர். ஆனால்,

அப: ஆனல், என்ன?

புக: வேல்விழியைக் கண்டனுபவித்த பல்லவம் ஊர்வசியை ஏறிட்டும் பாராதே!

அப: ஆமாம், ஆமாம்... இன்று வேல்விழியின் ஆட்டம் தெய்வீக ஆட்டம்தான்...

புக: இன்றென்ன? என்றுமே அப்படித்தானே? தினம் தினம் நான் செத்துப் பிழைக்கிறேன்!

அப: உன்னுடைய உலகமே வேல்விழிதானே? உன் வாழ்வின் சமாதியும் அவள் உள்ளம் தான்......?

புக: ஹ்உம்...... (பெருமிதத்தோடு மனதுக்குள் சிரித்துக்கொள்கிறான்.)

[தூரத்தில் தூணுக்குப் பின்னே நின்று ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் தேவதச்சன்...... ஆடல் முடிகிறது.]

தேவ: (தன்னை மறந்து) ஆஹா! என்ன ஆடல், என்ன ஆடல்!

நர: யார்...? (கண் சாடையால் அவனை முன்னால் வரப் பணிக்கிறார்.)

தேவ: வணக்கம் வேந்தே! என்னை மன்னிக்க வேண்டும். ஆட்டத்தில் என்னையே மறந்து கூவிவிட்டேன்! (ஓரப் பார்வையில் வேல்விழியின் விழி மோதுகிறது.)

நர: யார் நீ?

தேவ: தங்கள் தந்தையிடம் பொற்பதக்கம் பெற்ற சிற்பி என் தந்தை!

நர: ஆனல், நீ சாருதத்தன் புதல்வனா?

தேவ: (மகிழ்ச்சி பொங்க) ஆம், அரசே!

நர: காணும் கல்லெல்லாம் கவிபாடச் செய்தவனின் புதல்வனா?

தேவ: அவனேதான், வேந்தே!

நர: பெருமலையில் புதைந்துள்ள அருங்கலையைத் திறந்துகாட்டிய பேதையின் மகன், நீ...உம்?

தேவ: ஆம், மன்னா!

நர: மண்ணுலகின் தெய்வதச்சனின் புதல்வன், ஆஹா!

தேவ: என் பெயரே அதுதான், அரசே!

நர: எது?

தேவ: தேவதச்சன்! அதுதான் என் பெயரும்! (பொற்பதக்கத்தை எடுத்து நீட்டியவண்ணம்) இதோ, என் தந்தைக்கு இந்நாட்டின் கலைத் தந்தை வழங்கிய பரிசு!

நர: எங்கே? (அமைச்சர் அதனை வாங்கி அரசரிடம் காட்டுகிறார்) அதுவேதான்! தேவதச்சா, நல்ல தருணத்தில்தான் நீ வந்திருக்கிறாய். உன் தந்தை என் இளம் இதயத்தில் கலைக் கனவுகளையெழுப்பியவர். இன்று அந்தக் கனவுகளை நினைவாக்க உன்னை அனுப்பிவிட்டார்! என்ன பொருப்புணர்ச்சி! (சபையை நோக்கி) சிற்பக் கலைஞர்களே! நம் கடல் மல்லைக்கனவின் சுமையைப் பகிர்ந்துகொள்ள மற்றுமொரு கலைஞன். சாருதத்தன் எனும் கலைவாணின் இந்த இளம் பிறை நம் கடல்மல்லையில் பவனி வரும்! தேவதச்சா, இனி உன் உளி, பல்லவத்தின் ஒளி! உன் கலை இந்நாட்டின் உரிமை! என்ன?

தேவ: (நாதழுதழுக்க) நன்றி! நன்றி! நன்றியரசே!

(சபை கலைகிறது)

[திரை]

காட்சி 7

[புதிதாய் நிறுவப்பெற்ற மாமல்லபுர மெனும் கடல்மல்லை! முத்து கொண்டதால் கத்தும் கடல்! அதன் அலைவீச்சில் கரையில் ஒதுங்கிய சங்கினங்களை உதயசூரியன் ஆராய்ந்து கொண்டிருக்கிறான். அங்கங்கே சிறு சிறு கூடங்களில் பல சிற்பிகள் தொழில் செய்து கொண்டிருக்கின்றனர்! கல்லிலே உளி தொடும் ஒலி கடலலையோடு இழைகிறது. வேந்தர் குழாத்துடன் சுற்றிவருகிறார். சிற்பிகளின் தலைவர் விருபகர் ஒவ்வொரு சிற்பத்தையும் விளக்கிக் கொண்டு வருகிறார்.]

நர. பரஞ்சோதியாரே! பார்த்தீரா இந்தத் திருமூர்த்தியை!

பரஞ்: ஒரே கல்!

விருபகர்: (முன்வந்து தாழ்மையுடன்) இதுவும் தேவதச்சனின் வார்ப்புதான் அரசே!

நர: நினைத்தோம், நினைத்தோம். பரஞ்சோதியாரே, உண்மையில் அவன் தேவதச்சன்தான். சிருஷ்டியைக் கொண்டுதான் கர்த்தாவைத் தெரிந்துகொண்டுவிடலாமே!

பர: எல்லாம் பெருமானின் அருள்!

நர: அதிலென்ன ஐயம்? ஆஹா, ஒவ்வொரு மூர்த்தியிலும் என்ன காம்பீர்யம்! என்ன நுண்ணிய வேலைப்பாடு! நிலவுக் கதிரைச் சிக்கெடுத்து உதறியது போன்ற அந்த விரித்த சடையும் வீரியம் துள்ளும் விழிகளும்...மண்ணகத்துப் பிரமன் கையில் உருவாகிய அந்த விண்ணகத்துப் பிரமன் முகத்தில் என்ன பெரு

பீதம்? ஜீவகளை குமிழிடுகிறதே! விருபகரே, எங்கே தேவதச்சன்?

விரு: அவன் கலைக்கூடத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறன்!

[வேந்தர் புடைசூழ, அங்கு செல்கிறர். தேவ தச்சன் அமைதியாய்ச் செதுக்கிக்கொண்டிருக் கிறன்.]

விரு: தேவதச்சா, மன்னர்!

தேவ; (திடுக்கிட்டுத் திரும்பி) வணக்கம், வேந்தே! (எழுகிறன்.)

நர: வாழ்க! தேவதச்சா என்ன உருவாகிறது?

தேவ: பிறக்குமுன் குழந்தைக்குப் பெயரிட லாகுமா, பேரரசே!

நர: ஆனல் உள்ளத்தில் பிறந்துவிட்ட கருத்தின் உருவம்தான் என்ன?

தேவ: மன்னிக்கவேண்டும், மன்னர் மன்ன! பூரணத்துவம் பெறுமுன் புரியவைக்க முடியாதே!

நர: ஆனல் முற்றுப்பெற முடித்தவுடன் நாம் தான் முதலில் காணவேண்டும்.

தேவ: அதுவும் கூடாத காரியம்.

நர: ஏன்......?

தேவ: முற்றுப்பெற முடிப்பவனே நான்; முதலில் காண்பவனும் நான்தானே!

நர: ('கலகல'வென சிரித்தவண்ணம்) ஆமாம். அது சரி! இரண்டாவது நாம்! என்ன?

தேவ: முற்றுப் பெறட்டும்.

நர: ஆனல் எம் உள்ளத்தில் முற்றுப்பெற்று விட்ட கருத்தைக் கூறவேண்டாமா?

தேவ; கேட்கக் காத்திருக்கிறேன்.

நர: இன்றுமுதல் இந்தச் சிற்பிகளின் தலைவன் நீ! என்ன, விருபகரே, சரிதானே?

விரு: முற்றிலும் சரிதான்... தேவதச்சா, தயங்காமல் ஏற்றுக்கொள். என் துணை எப்போதும் உண்டு.

தேவ: ஆனல் நான் இளைஞனயிற்றே......

நர: உருவில்தான்; கலையில் முதியவன், நீ! ஏற்றுக்கொள். உன் தந்தைக்கும் மகிழ்வூட்டும்.

தேவ: ஆனலும்......

பரஞ்: தேவதச்சா, பெருமானின் அருள்! ஏற்றுக்கொள்!

தேவ: பிறகு, தங்களிஷ்டம்!

நர: ஆம், அதுதான் வேண்டும்! இதோ, அடுத்த பௌர்ணமிக்குள் எல்லாம் முடிய வேண்டும்.

தேவ: முயற்சிக்கிறேன்!

நா: நிச்சயமாய் வெற்றிகிட்டும்.

பரஞ்: எல்லாம் அந்த ஆலமுண்ட ஈசனின் அருள்!

(எல்லோரும் செல்கிறர்கள்)

[திரை]

காட்சி 8

[புகழேந்தியின் மாளிகை! மாலை நேரம்! தூரத்து மரக்கிளைகளில் தொங்கும் கூடுகளில் புள்ளினங்களின் காதல் பேச்சு! கோயில் கோபுரத்தின்மீது குரங்குகளின் கொஞ்சல்! எதிர்மாடத்து புருக்களின் தழுவல்... புகழேந்திக்கு அத்தனையும் போதையேற்றுகின்றன. வேல்விழியின் நினைவு பளிச்சிடுகிறது...... பாய்ந்து சென்று யாழை எடுத்துவந்து மாடத்தில் நிற்கிறன்! காட்சியின் அலைப்பில் பாடுகிறன்]

புகழேந்தி: "மானுக்கு விழிதந்து
மயிலுக்கு நடைதந்து
கானுக்கு முல்லை தந்து
கடலுக்கு நெளிவு தந்து
வானுக்கு நிலவு தந்து
வன்கவிக்கு னவுதந்து
ஊனுக்கு உயிர்தந்து
உலவுகின்றய், வேல்விழியே!

வேல்விழி! வேல்...வி...ழி! எழுத்தெல்லாம் இனிக்கிறதே! வேல்விழி! (பெருமூச்சு)

அபராஜி: (நுழைந்து கொண்டே) வேல்விழி, வேல்விழி!...புகழேந்தி, எப்போதும் இந்த ஜபம்தான?

புக: முக்திக்கு வழியது தானேடா?

அப: மோகத்தில் பிதற்றதே!

புக: நீ இந்த மதுவை அருந்திப் பார்த்ததில்லை! ஹூம், அனுபவமில்லாதவன்!

அப: குடி அளவுக்கு மீறினல் குடியே கெட்டு விடும்! நினைவில் கொள்!...... சரி, சரி, நாளைப் புலவரவையில் உன் காவியம் அரங்கேற வேண்டுமே, அதுவாவது நினைவிலிருக்கிறதா?

புக: பார்த்தாயா, இதற்குத்தான் நண்பன் வேண்டும்! வேல்விழியின் நினைவு வந்தாலே போதும், எனக்கெதுவும் மறந்துவிடுகிறது... வா, அதைக் கவனிப்போம்! (இருவரும் செல்கிறர்கள்.)

[திரை]

காட்சி 9

[அதே மாலை நேரம். சிருஷ்டி கூடங்களுக்கப்பால் விதவைக் கோலத்தில் ஒதுங்கி நிற்கும் மண்டபம். அதனுள் தேவதச்சனைத் தவிர எல்லாச் சிற்பிகளும் கூடியிருக்கின்றனர்]

சித்திரகுப்தன்: விருபகரே, மன்னர்களுக்கே மூளை ஒரு நிலையிலிருக்காதுபோலிருக்கிறதே?

விருபக: மன்னரைச் சொல்லி யென்ன?

வித்தியாதரன்: சொல்லின் வன்மை கல்லுக்கில்லை தெரியுமா, உமக்கு?

சித்தி: ஆனல் விருபகருக் கெதிராக அரசரிடம் சொல்ல வல்லவன் பல்லவத்திலிருக்கிறன?

வித்தி: ஏனில்லை? தேவதச்சனே அன்று என்னிடம் வெளிப்படையாகக் கூறினனே!

எல்லோரும்: என்ன சொன்னன் சொல்லு! நம் விருபகருக் கெதிரே இன்னெருவன? விழுதோடிய ஆலிற் கெதிரே வளைந்தாடும் புல்

நிமிர்ந்து நிற்பதா? முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.........அவன் என்ன சொன்னான்? அப்படியே சொல்லு?

**விரு:** ஆமாம், சொல்லு.

**வித்தி:** 'இன்று விருபகர் இருக்கவேண்டிய இடத்தில் யார் இருக்கவேண்டும் தெரியுமா?' என்று கேட்டான், முதலில்.

**ஒரு சிற்பி:** நீ என்ன சொன்னாய்?

**வித்தி:** தெரியாதென்றேன். உடனே விழிகளில் சிவப்பேற, உதடுகள் துடிக்க, 'வித்தியாதரா, என் தந்தை இருக்கவேண்டிய இடத்தை இன்று விருபகன் அபகரித்துக்கொண்டான். மகேந்திரவர்மரிடம் வீரப்பதக்கத்தை என் தந்தை பெற்றதிலிருந்து கறு வைத்துக் கொண்டு என் தந்தை தான் வளர்த்த கலையை, தன் கலையை வளர்த்த பல்லவத்தைப் பிரிந்து சென்று மலையடிவாரத்தில் தனித்து வாழச் செய்துவிட்டான், இந்த விருபகன். நாளையே இந்தத் தலைமைப் பதவியை நான் கைப்பற்றிக்கொண்டுவிடுகிறேன்' என்று சவால்விட்டான். எண்ணியதை எவ்வளவு எளிதாக முடித்துவிட்டான்!

**விரு:** யார் முடித்தது? நானாக விட்டுக்கொடுத்தேன்.

**வித்தி:** விருபகரே, அன்று அரசர் கேட்டபோது நீங்கள் சரியென்று சொல்லியிருக்கக் கூடாது. உங்களைவிட அந்தச் சிறுபயல் என்ன மேல்? உளியின் ஒலியைக்கொண்டே நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்று கூறிவிடலாமே!

**ஒரு சிற்பி:** சிற்பத்திற்குரிய கற்களைத் தெரிந்தெடுப்பதில் வைரக்கல் தெரிந்தெடுக்கும் வணிகர்கூட நம் விருபகரிடம் பாடம் கேட்க வேண்டுமே!

**வித்தி:** விருபகரே! உங்களை வைத்துக்கொண்டே புகழக்கூடாது. கல்லெல்லாம் உங்கள் கை பட்டால் கவிபாடும்; விழிபட்டால் விலை பெறும்; உளிபட்டால் உயிர்பெறும். இல்லையென்று தென்னகத்தில் மறுப்பவருண்டோ?

[விருபகர், மௌனமாய்க் கர்வத்துடன் தலையசைக்கிறார். நரை படிந்த தலையில் கருமை படிந்து விட்டதுபோல் ஒரு தன்னேமாற்ற நிலை; உட்குழிந்த கண்களில் இளமையின் தீக்ஷண்யம் ஏறிவிட்டதுபோல் ஒரு அலக்ஷியப் பார்வை!]

**சித்:** நம்மைப் போன்ற எண்ணற்ற சிற்றோடைகளின் உற்பத்திக் களமான பெருமலையின்று சிற்றுளியால் தகர்க்கப்பட்டுச் சிதறுவதா? அவமானம், பெருத்த அவமானம்!

**விருப:** கலைஞர்களே புகழ்க்கிறுக்குகள்; தேவதச்சனோ இளைஞன். அரசன் புகழ்ச்சியால் சற்று உயர்வடையட்டுமே என்று, விட்டுக் கொடுத்தேன். நான் சற்று விலகி வழி விடாவிட்டால் புகழ் ஏணியில் இன்று அவன் உயரே ஏற முடியுமா?

**சித்:** உங்கள் பெருந்தன்மைதான் உங்கள் புகழுக்குக் கல்லறையாயிற்று.

**வித்தி:** புகழ் என்றால் என்ன, விருபகரே? ஒருவர் சமாதிமேல் மற்றொருவர் நட்டுவளர்க்கும் பயிர். உங்களைச் சமாதி வைத்து அந்தக் காளான் முளைக்க முயல்கிறது. அதை வேரோடு கெல்லியெறிய வேண்டாமா?

**விருப:** பாவம், சிறுவனென்று பார்க்கிறேன். கல்லிலே விளையாடும் என் உளி அவன் கண்ணிலே விளையாட எவ்வளவு நேரமாகும்? ஹூம்! நான் இட்ட பிச்சையை விழுங்கி விட்டு என்னையே எதிர்க்கிறானே?

**வித்தி:** எதிர்ப்பது மட்டுமல்ல; உங்களைத் திருத்தவும் துவங்கி விட்டானே!

**விருப:** என்ன?

**வித்தி:** உங்கள் படைப்புகளில் திருத்தம் செய்யப் புகுந்து விட்டானே?

**விருப:** அப்படியா? நீ கண்டாயா?

**வித்தி.** தங்கள் சிற்பங்களைக் கண்டு கண்டு ஒளி பெற்ற இந்தக் கண்களால் கண்டேன். நீங்கள் செதுக்கியுள்ளீர்களே, அந்த பிரமாண்டமான யானை?

**சித்:** ஆமாம், அதற்கென்ன? அதிலுள்ள உயிர்த் துடிப்பு தேவதச்சனின் எந்த சிற்பத்திலாவது காணமுடியுமா?

**வித்தி:** புலி கண்டால் பாய்ந்தோடித் தாக்கும் அத்தனை ஜீவ களையின் நிறைவு பெற்ற அந்த சிற்பத்தில் நேற்று அவன் திருத்தம் செய்கிறான், அதன் வலிமையை எல்லாம் காலின் தசைச் சுருட்டில் நிறுத்திவைத்துக் காட்டியிருந்தீர்களே? இப்போது சென்று பாருங்கள், தேவதச்சனின் எதிர்காலம்போல் தேய்ந்து விட்டது; வளையவிழந்த பெண் கரம் போலாகி விட்டது.

**விருப:** அவ்வளவு தூரம் ஆகிவிட்டதா? கண்களைக் கட்டிக்கொண்டு கல்லிலே உளியைத் துள்ளவிட்டு உயிருடன் நடமாடச் செய்யும் என் வார்ப்புகளில் இந்தச் சிறு பயல் திருத்தம் செய்வதா? இனியும் அந்தச் சுண்டெலியின் துள்ளாட்டத்திற்கு முடிவு கட்டாமல் இந்தப் பழஞ் சிங்கம் விடாது!

**வித்தி:** பழஞ் சிங்கம், பல்போன சிங்கம் என்றல்லவா கேலி செய்கிறான்!

**விருப:** அதையும் காட்டுகிறேன் ... (விருட்டென்று எழுந்து செல்கிறார்...பின்னாலேயே ராஜசிம்ஹன் ஓடுகிறான்...)

**ராஜ:** விருபகரே, தயைகூர்ந்து ஒரு நிமிடம்! வித்தியாதரன் கூறியதை எண்ணிப் பாருங்கள், "புகழ் என்பது ஒருவர் சமாதிமேல் மற்றொருவர் நட்டுவளர்க்கும் பயிர்." அதை சொன்னவர்களும் கலைஞர்கள்; சிற்பிகள்; புகழ் விரும்பிகள். அதை எண்ணிப் பார்த்து எதுவும் செய்யுங்கள். பொறாமை வைத்த தீயில் உங்கள் பெருமையைப் பொசுங்க விட்டு விடாதீர்கள் எதையும் தேவதச்சனிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?...

**விருப.** எனக்குப் புத்திமதி கூறவந்துவிட்டாயா? தேவதச்சனின் துணைபோனவன் தானே? (செல்கிறார்)

(தொடரும்)

# சுடச் சுட

திருமால்

கோயமுத்தூரிலே தமிழ் எழுத்தாளர்களின் மகாநாடு நடைபெற்றது. தலைவர் வ. ரா. திறப்பாளர் டி. எஸ். சொக்கலிங்கம். சென்னை எழுத்தாளர்கள் பலர் ஒரு பிரத்யேக ரயில் பெட்டியிலே பிரயாணம் செய்தார்கள். அரக்கோணம் தாண்டியவுடனே ஒரு பிலிப்பனோ மூட்டை முடிச்சுகளுடன் எழுத்தாளர்கள் ஏறியிருந்த வண்டியிலே ஏறிக்கொண்டார். இது 'பிரத்தியேக வண்டி' என்று எவ்வளவோ சொல்லியும் அவர் பொருட்படுத்தவே இல்லை! படுக்கையையும் விரித்துப் படுத்துக்கொண்டும் விட்டார்.

'நாரதர்' சக்ரவர்த்தி ஐயங்காரவர்களுக்கு இது பொறுக்கவில்லை. நாம் இவ்வளவு தூரம் சொல்லியும் இவன் அடம்பிடிப்பதா? என்று அவருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. "இவன் எங்கேடா இங்குவந்து நம் கழுத்தை அறுக்கிறான் பாவிப்பயல்!... என்று வாயார திட்டினார். அவர் ஓய்ந்ததும், அதுவரை மௌனம் சாதித்துவந்த பிலிப்பனோ படுக்கையிலே எழுந்து உட்கார்ந்தார். "என்ன அவ்வளவுதானா? இன்னும் பாக்கி இருக்கிறதா?" என்று கொச்சைத் தமிழிலே கேட்டார். "நானும் என்னுடைய நாட்டிலே ஒரு எழுத்தாளன்தான்" என்று கூறிவிட்டு எனக்கும் இந்த வண்டியில் வர உரிமை உண்டு என்று சுடச்சுடக் கூறினார். எழுத்தாளர்கள் எல்லாரும் பிரமித்துவிட்டார்கள்.

* * *

ஆசார்ய வினோபாபாவே ஒரு கூட்டத்திலே அற்புதமான கேள்வியைக் கேட்டார். "கிராமம் கிராமமாக பஜனை நடக்கிறது. இது நல்லதுதான். ஆனால் பகவான் எங்கிருக்கிறார்? காசியிலும் கைலாசத்திலும் இருக்கிறாரா? நமது மந்திரிகளும் அதிகாரிகளும் நீலகிரி, கொடைக்கானல் முதலிய இடங்களுக்கு சுக வாழ்க்கைக்குப் போவது போல கடவுளும் வெயில் காலத்தில் கைலாசத்திற்கும் மாரிகாலத்தில் காசிக்கும் வருகிறாரா? அல்லது நம் நாட்டில் குழந்தைகளுக்கு பால் இல்லாதிருக்கும்போது அவர் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறாரா?" என்று கேட்டார்.

யாருமே பதில் சொல்லவில்லை! "நீங்கள் தான் சொல்லவேண்டும்" என்று பெரியவர் ஒருவர் கூறவே வினோபாபாவே சுடச்சுட பதிலளித்தார். "கடவுள் நம் சமீபத்திலும் சமீபமாக இருக்கிறார். நமது புத்தியே கைலாசம்! விசாலமான இருதயமே திருப்பாற்கடல்! எதற்கும் அசையாத கைலாசகிரியைப் போல ஸ்திரபுத்தியுடையவர்களாக, கடலைப் போல விசால இதயமுடையவர்களாக இருக்கவேண்டும். அப்போது நம் அறிவிலும் உள்ளத்திலும் சச்சிதானந்த சொரூபியாகிய ஆண்டவன் அமர்ந்திருக்கிறார்". இதைக் கேட்ட எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

* * *

"எந்த நிலைமையிலும் மன அமைதியை இழந்துவிடாமல் நடக்கிறீர்களே சார்! எந்தப் பள்ளிக்கூடத்திலே பயிற்சி பெற்றீர்களோ" என்றார் திரு. வி. க.

"என் வீட்டைவிடவா ஒரு பள்ளிக்கூடம்? என் மனைவி, மாமியார், ஏழு குழந்தைகள், இரண்டு மாடுகள், ஒரு குச்சுநாய், வாயாடி வேலைக்காரன் ஒருவன்" என்றார் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை!

* * *

ஜான்சன் துரைக்கு ஏராளமான ஆஸ்தி இருந்தது. அதனால் அவர் மிகவும் வயதடைந்தும் மேரிபோர்டு என்ற ஒரு இளநங்கையை இரண்டாந்தாரமாக மணம் செய்து கொண்டார். இரண்டு வருஷ காலம் அவளுடன் வாழ்க்கை நடத்துவதற்குள் ஜான்ஸனுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. அப்படி மேரி ஜான்சனைப் பாடாய்ப்படுத்திவிட்டாள். மேரியின் தொல்லைப் பொறுக்க முடியாததால் தானோ என்னவோ திடீரென்று ஜான்சன் வியாதியுற்று மரணத் தருவாயை அடைந்தார்; உடனே அவர் வக்கில் நார்ட்டன் துரையை அழைத்து உயில் எழுதச் சொன்னார்.

நார்ட்டனும், ஜான்சன் கூறியபடி தர்ம ஸ்தாபனங்களுக்கு எவ்வளவு வைக்கவேண்டும் என்பதைக் கண்டு எழுதிவிட்டு "தங்கள் மனைவிக்கு எவ்வளவு வைக்கவேண்டும்?" என்று கேட்டார்.

ஜான்சன்: என் மனைவி மேரிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று எழுதும்.

நார்ட்டன்: தங்கள் மனைவிக்கு 25 வயதுகூட ஆகவில்லையே; அவள் ஒரு சமயம் மறுமணம் செய்துகொள்ளக் கூடுமே!

ஜான்சன் மறந்துவிட்டேன். அவள் மறுமணம் செய்துகொண்டால் லட்ச ரூபாய் கொடுக்க வேண்டும் என்று எழுதும்!

நார்ட்டன்: அதெப்படி? அவள் மறுமணம் செய்து கொண்டால் தொகையைக் குறைப்ப தல்லவா வழக்கம்?

ஜான்சன்; எனக்கு அந்த விஷயம் தெரியும். ஆனல் பாவம்! அவளுக்கு இரண்டாம் கணவனுக அவாய்க்கும் துரதிர்ஷ்டசாலிக்கு நஷ்ட ஈடாக இருக்கட்டும் என்றுதான் சொன்னேன் என்ருர் சுடச்சுட!

* * *

பிரபல ஜெர்மன் அறிஞர் ஜோகன் கிறிஸ்தோபர் காட்ஷட், பிரிட்டிஷ் ஸ்தானுதிபதியாகிய மிட்ஷெலுடன் ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். "நாடகத்திற்கு அரிஸ்டாட்டில் சொன்னதுதான் சட்டம். ஒரு நாடகத்திற்கு ஐந்து அங்கங்கள் இருக்கவேண்டுமென்று அவர் சொல்லி இருக்கிருர். ஷேக்ஸ்பியருக்கு அது தெரியவில்லை, மனம் போன போக்கில் எழுதியிருக்கிருர்'' என்ருரவர்.

மிட்ஷெல் சிரித்துக்கொண்டே "நல்லது அரிஸ்டாட்டில் ஒரு வேதாந்தி என்பதை மறந்துவிட்டு, அவரை ஒரு தையல்காரராக வைத்துக் கொள்வோம். சட்டையும் கோட்டும் நிஜாரும் ஐந்து கஜத்துக்குள்ளேயே தைக்கவேண்டும் என்று அவர் சொல்கிருர். ஆனல் நீர் சற்று உயரம். பருமனுங்கூட. அவர் விதியை மீற உமக்கு தைரியமில்லையானல் உமக்குக் கோட்டும் சட்டையும் மாத்திரமே கிடைக்கும், அரிஸ்டாட்டில் சொல்கிருரே என்பதற்காக நிஜார் இல்லாமல் திரிவீரா?'' என்று கேட்டார் சுடச்சுட!

* * *

சென்னையிலுள்ள சினிமா ஸ்டுடியோ ஒன்றில் ஆசிரியர் வ. ரா. தம்முடைய அபிமானி ஸ்ரீ நீலகண்டன் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"பதினெட்டு வருஷமாச்சு நானிந்தப் பத்திரிகைத் தொழிலுக்குக் கொஞ்சங்கூடத் தகுதியில்லாதவன் என்று கண்டு பிடிப்பதற்கு" என்ருர் பத்திரிகாசிரியர் வ. ரா.

நீலகண்டன் கண்களை ஆச்சரியத்தால் உருட்டி விழித்து "ஓஹோ! அப்படியானல் இந்தத் தொழிலையே விட்டுவிடலாமே! என்ருர்.

"அதற்குள்ளே நான்தான் பிரசித்திபெற்ற பத்திரிகைக்காரனுகிவிட்டேனே!" என்ருர் வ. ரா. எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

* * *

மறதியுள்ள பேராசிரியர் எடிசன் தமது பழைய நண்பரான குடும்ப வைத்தியர் பீடஸ்டாவைப் பார்க்கப்போனுர். இரண்டு மணி நேரம் இருவரும் அளவளாவினர். விஞ்ஞான ஆராய்ச்சிகளின் போக்கைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு வைத்தியர் பேராசிரியருடன் வாசல்வரை வந்தார். 'கை' குலுக்கினர். சொல்லிவிட்டு "விரைவில் மறுபடியும் சந்திப்போம்! குடும்பமெல்லாம் க்ஷேமம்தானே" என்ருர்.

"ஓஹோ! நல்லவேளை ஞாபகம் வந்துவிட்டது. நண்பரே! என் மனைவிக்கு விடாமல் ஜுரம் அடிக்கிறது. உங்களை அழைத்துப்போக வல்லவா வந்தேன்! என்ருர் பேராசிரியர்! அருகிலிருந்தவர்கள் பக்கென்று சிரித்துவிட்டார்கள்.

* * *

வடக்கேயிருந்து ஒரு மடாதிபதி தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர் ஸ்ரீ வைகுண்டம் என்ற ஊருக்கும் வந்தார். அங்கே அபிமானிகள் எல்லோரும் கூடினுர்கள். அவர்களை நோக்கி மடாதிபதி "நீங்கள் வைகுண்டத்தை அடைய விரும்புகிறீர்களா அல்லது நரகத்தை அடைய விரும்புகிறீர்களா? வைகுண்டத்தை அடைய விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்" என்ருர். ஒரே ஒருவர் தவிர எல்லாரும் எழுந்து நின்ருர்கள்.

பிறகு மடாதிபதி "நரகம் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்" என்ருர். ஒருவரும் எழுந்திருக்கவில்லை.

அப்போதும் எழுந்திராமல், இப்போதும் எழுந்திராமல் சும்மா இருந்த ஆசாமியை நோக்கி மடாதிபதி "உனக்கு எங்கே போக இஷ்டம் அப்பா? வைகுண்டத்திற்கா, நரகத்திற்கா?" என்று கேட்டார்.

அதற்கு அவர் சொன்னுர் "எனக்கு வைகுண்டமும் போகவேண்டாம், நரகமும் போகவேண்டாம். இந்த ஸ்ரீ வைகுண்ட நகரத்தில்தானே இருந்துவிடுகிறேன்" என்ருர் சுடச்சுட!

* * *


கொரியா யுத்தத்திலேயுள்ள ராணுவத்தில் ஒரு டிவிஷனின் கமாண்டிங் ஜனரல் சார்ஜனுடன் பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று அவர் தலைக்குமேலே இரண்டு தோட்டாக்கள் வெடித்தன. வெடி சப்தம் கேட்டதும் பக்கத்திலிருந்த குழியிலே குதித்து விட்டார். ஆனல் இந்த சமயத்தில் சார்ஜன்ட் ஒன்றும் அதிர்ச்சியடையாமல் இருப்பதைப் பார்த்து கமாண்டிங் ஜனரல் கேட்டார்.

"குதித்து விடுங்கள்! எதிரி யாரோ மறைவிலிருந்து சுடுகிருன்.

சார்ஜன்ட்: அது யார் சுடுவது என்பது தெரியும். அதோ அந்த மலையில் அவனிருக்கிருன்.

க. ஜெனரல்: தெரிந்தும் ஏன் சுடாமல் வைத்திருக்கிறீர்கள். இப்பொழுதே அவனைச் சுட்டு வீழ்த்துங்கள்.

சார்ஜன்ட்: அவன் ஒரு வாரமாக சுட்டுக்கொண்டுதான் இருக்கிருன். அதனல் ஒருவருக்கும் ஆபத்தில்லை. நாம் அவனைச் சுட்டு வீழ்த்திஞல் அவனுக்குப் பதில் அங்கு வேறு யாரையாவது எதிரிகள் போடுவார்கள். அவனுக்குப் பதிலாக வருகிறவன் ஒருக்கால் கெட்டிக்காரனுக இருந்துவிட்டால்? அதனல்தான் அவனை விட்டு வைத்திருக்கிறேம்" என்ருன் சுடச்சுட. O




நமது விசேஷ நிருபர்

பட விமர்சனம்

# பொம்மைக் கல்யாணம்

அருணா பிலிம்ஸாரின் "பொம்மைக் கல்யாணம்" திவ்யமான மேளதாளத்துடன் ஆரம்பமாவதுடன் சரி. மற்றபடி கல்யாண ஊர்வலக் கார் மாதிரி கதை தயங்கித் தயங்கி நகர்ந்து போய் நின்று விடுகிறது. சாந்தாராம் வரதக்ஷிணைக் கொடுமையைக் கண்டிப்பதற்காக எடுத்த ஹிந்தி படத்தைத் தழுவியதே இப்படம். ஹிந்தி படம் துக்ககரமாக முடிகிறது. ஆனால் இதுவோ சுபமாக முடிவடைகிறது.

இப்படத்தில் எஸ். வி. ரங்கராவின் நடிப்பு மிகவும் பிரமாதம். அடுத்தபடி, நாகய்யாவின் நடிப்பைக் குறிப்பிடவேண்டும்.

ஜமுனா திருத்தமாக தமிழ் பேச மிகவும் பிரயாசைப்பட்டுள்ளார். நடிப்பு சுமாராக இருக் இருக்கிறது. சிவாஜி கணேசன் காதல் ஸீன்களில் இயற்கையாக நடித்துள்ளார். மொத்தத்தில் அவரது நடிப்பு உயர்வாக இல்லை.

மைனாவதி அசட்டுப் பெண்ணாக அழகுற நடித்துள்ளார். காகா ராதாகிருஷ்ணன் தேவலை. பிரண்ட் ராமசாமி, பி. டி. சம்பந்தம் சுமாராக நடித்துள்ளனர். "உங்கள் பாயிண்டுக்கு ஒரு சின்ன ஜாயிண்டு" என்று பி. டி. சம்பந்தம் அடிக்கடி சொல்லுவதால் ஹாஸ்யச் சுவையில் அலுப்புத் தட்டிவிடுகிறது.

வசனங்கள் எளிய நடையில் அமைக்கப்பட்டுள்ளன. 'பல்லக்குப் பெருமை' தவிர கதை அமைப்பில் மாதிரிக்குக்கூட புதுமை இல்லை. மாமியார், மருமகள் சண்டை மூர்க்கத்தனமாக நடக்கிறது. ஆகவே பெண்கள் ஒருதடவையாகிலும் இப்படத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

---



ஜுபிடரின் 'தங்கப்பதுமை'யில் நம்பியார், டி. பாலசுப்பிரமணியம் தோன்றும் காட்சி.



'செஞ்சுலக்ஷ்மி'யில் தங்கவேலுவின் நாரத கானத்தை கேட்டு மகிழுகிறார் அஞ்சலி.



அஞ்சலியை அணைத்து கண்ணோடு கண் ஒன்று படுகிறார் 'செஞ்சுலக்ஷ்மி'யில் நாகேஸ்வர ராவ்.

# வளருகின்றன

## நான் வளர்த்த தங்கை.

சரவணபவா அண்ட் யூனிடி பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்துக்கான வசனங்களை ரா. வேங்கடாசலம் எழுதுகிறார். இதில் மைனாவதி, பண்டரிபாய், ராஜசுலோசனா, சுந்தரிபாய், சூர்யகலா, நாகையா, பிரேம் நஸீர், சுப்பய்யா முதலியோர் நடிக்கின்றனர். நெப்டியூனில் இதை சி. எச். நாரயணமூர்த்தி டைரக்ட் செய்து வருகிறார்.

## கல்யாணிக்குக் கல்யாணம்.

டி. எஸ். பாலய்யா, தங்கவேலு, பிரேம்நஸீர், வி. கே. ராமசாமி, எம். என். ராஜம், மைனாவதி, ஜி. சகுந்தலா, லட்சுமி பிரபா தோன்றும் 'கல்யாணிக்குக் கல்யாண'த்தில் எஸ். எஸ். ராஜேந்திரன் கதாநாயகனாக வருகிறார். இதற்கு டைரக்டர் எ. எஸ். எ. சாமி: கதை வசன கர்த்தா அரு. ராமநாதன், நெப்டியூனில் வளர்ந்துகொண்டிருக்கிறது

## ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொருபெண்ணும்

ஏ. பி. நாகராஜன் திரைக் கதை வசனங்களை எழுதிவரும் இப்படம் பிலிம் சென்டரில் உருவாகிறது. எம். என். ராஜம், வி. கே. ராமசாமி, ஏழுமலை, பி. டி. சம்பந்தம் முதலியோரை இதில் சந்திக்கலாம். பாடல்களை மருதகாசி எழுதுகிறார், கே. சோமு டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ளார்.

## உலகம் சிரிக்கிறது

வாஹினியில் பிரபு பிலிம்ஸார் தயாரிக்கும் சமூகப்படமாகும் இது. எம். ஆர். ராதா புதுமுகம் முத்துராமன் முதலியோர் பங்கு கொள்கிறார்கள் துறையூர் மூர்த்தி கதை வசனம் எழுதியுள்ளார்.

## அவள் யார்?

கே. ஜே. மகாதேவன் ஜெமினி ஸ்டியோவி விருந்து விலகி, சுதர்சனம் பிக்சர்ஸ் என்கிற கம்பெனியொன்றை ஸ்தாபித்துள்ளார். அதன் முதல் தயாரிப்பாக 'அவள் யார்' என்கிற படத்துக்கான பூஜை ஏப்ரல் 30ந்தேதி நடைபெற்றது. ஜெமினி கணேசன், சாவித்திரி முதலியோர் இதில் நடிப்பார்கள். கே. ஜே. மகாதேவன் டைரக்ட் செய்வார்.

## மங்கையர் உலகம்

வாஹினி ஸ்டுடியோவில் சங்கர் புரொடக்ஷன்ஸார் வளர்த்து வருகிறார்கள் 'மங்கையர் உலக'த்தை. புது முகங்கள் நிறைந்த படம். பண்டரிபாய், சாரங்கபாணி, கே. ஆர். செல்லம், மனோஹர், வாதிராஜ் ஆகிய பழைய முகங்களுக்கும் குறைவில்லை

Edited & Published by N. R. Ramanujam, B.A., & Printed by S. Rangaswami, B.A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# ஏன் நம்பிக்கையை விடுகிறீர்கள்!



அது இயற்கை, நரை மயிர் உங்களுடைய தோற்றத்தைக்கெடுக்கிறது. ஆனால் நீங்கள் நம்பிக்கையை விட வேண்டாம். ஆயிரக்கணக்கான ஜனங்களைப் போல் நீங்களும் லோமா உபயோகித்து அமைதியுடனும் தகுதிவாய்ந்த தோற்றத்துடனும் இருங்கள்.

## லோமா

கருமையையும்
வனப்பையும் தருபவை




ஸோல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத் I
ஏஜெண்டுகள் :
ஸி.நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575

MPS-TAM.

மதராஸ் ஏஜண்டுகள் :
மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்.

ஸிலோன் ஏஜண்டுகள் :
மெஸர்ஸ் சிர்ருல் காதிர் & கோ. 41 & 43, 2-வது கிராஸ் தெரு,
கொழும்பு-11.

Regd. No. M. 4405 CAUVE




The Cauveri Colour Press Kumbakonam.